வரு. 75 இல. 50 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමන්ජරී

2023 டிசம்பர் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

December 17 Sunday, 2023








/ Thinakaran.lk / ThinakaranLK













### இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன்

# மலையகத்தில் 10,000 வீட்டுத் திட்டம் ஆரம்பம்

## அமைச்சர் ஜீவனிடம் இந்திய அதிகாரிகள் உறுதி

### காணி உரிமை வழங்க தோட்ட கம்பனிகளும் இணக்கம்

ஹற்றன் சுழற்சி நிருபர்



இந்திய அரசின் நிதி உதவியுடன் மலையக பெருந் தோட்டப்பகுதிகளில் நிர்மாணிக்கப்பட வுள்ள 10,000 வீட்டுத் திட்டம் வெகுவிரைவில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான இறுதி இணக்கப்பாடு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் (15) நடைபெற்ற சந்திப்பில் எட்டப்பட்டுள்ளது.

06

**ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட காணிகளில் முதற்கட்டமாக 1,300 வீடுகள் ஓரிரு வாரங்களில் அமைப்பு**

### நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும்

# பாதுகாப்பு படைகளின் பொறுப்பை எவராலும் மட்டுப்படுத்த முடியாது

### தியத்தலாவையில் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும், அதில் தலையிடவோ அல்லது கட்டுப்படுத்தவோ எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

மக்களின் இறைமையையும் நாட்டின் தனித்துவத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு பாதுகாப்புத் தரப்பினருக்கும் உண்டு எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன மற்றும் மத ரீதியாக

06

## சிறி ரணசிங்க பாராட்டு விழா புதன்கிழமை



இலங்கைப் பத்திரிகைத்துறை வரலாற்றில், 33 வருடங்கள் தொடர்ச்சியாகப் பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றிய லங்கா தீப பிரதம ஆசிரியர் சிறி ரணசிங்கவுக்கான பாராட்டு விழா

06

### நாடு முழுவதும் 23ஆம் திகதி வரை சுற்றிவளைப்புகள்

# போதைப்பொருட்களை முற்றாக ஒழிக்க திட்டம்

### 'நீதி' என்ற பெயரில் பொலிஸ், STF அதிரடி நடவடிக்கை




நாட்டிலிருந்து போதைப்பொருட்களை முற்றாக இல்லாதொழிக்கும் பொருட்டு, போதைப் பொருட்களை சுற்றிவளைக்கும் நோக்கில் இன்று (17) ஞாயிற்றுக்கிழமை முதல் பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் 'நீதி' ('யுக்திய') (Justice) என்ற பெயரில் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை கைது செய்தல், போதைப்பொருள் பாவனையை அடக்குதல் மற்றும் அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது இதன் முதன்மை நோக்கமாகும்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் ஆகியோரின் முழுமையான மேற்பார்வையின் கீழ்,

06

**பொதுமக்களிடமிருந்து தகவல்களைப் பெற அழைப்பவரின் இலக்கம் பதிவாகாத தனியான விசேட 45 கைத்தொலைபேசி இலக்கங்களும் அறிமுகம்**

## SLPP யின் இரண்டாவது தேசிய மாநாட்டு நிகழ்வு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாடு நேற்று முன்தினம் 15 வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நடைபெற்றது. கட்சியின் புதிய தலைவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள், மாகாண மற்றும் பிராந்திய தலைவர்கள், நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான கட்சி உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்டனர். கட்சிகளின் தலைவர்களான பிரதமர் தினேஷ் குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, டிரான் அலஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். (படம்: விமல் கருணாதிலக்க)

## டிஜிட்டல் NIC ஜனவரியில் ஆரம்பம்



டிஜிட்டல் அடையாள அட்டை வழங்குவது தொடர்பான அடிப்படை விடயங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்க இந்தியா மற்றும் இலங்கை அரசுகளுக்கிடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதியின்

06

## இந்து சமுத்திரப் பிராந்திய பாதுகாப்பு தலைமையகம்

### இலங்கையில் அமைக்கும் ஏற்பாடுகள் பூர்த்தி



இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு பிராந்திய நாடுகள் தீர்மானத்துக்கு வந்துள்ளன.

மொரிஷியஸில் நடைபெற்ற பாதுகாப்பு ஆலோசகர்களின் மாநாட்டில் இத்தீர்மானம் எட்டப்பட்டது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின்

06

## அவுஸ்திரேலியாவின் தூதுவராக கோபால்

### புதிய தூதுவராக சந்தோஷ் ஜா



இலங்கைக்கான இந்திய தூதுவராக பணியாற்றிய கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஸ்தானிகராக

06

### சிறுவர், பெற்றோரது மன அழுத்தத்தை குறைக்க

## இலகுவாக்கப்படவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை

### அடுத்த வருடம் முதல் திட்டம்



சிறுவர் மற்றும் பெற்றோரது மன அழுத்தங்களை குறைக்கும் வகையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, அடுத்த வருடம் முதல் இலகுபடுத்தப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பல முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்

06

## எங்கள் கருத்து...

# நல்லிணக்க விரோதிகள்!

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வு இதுவரை எட்டப்படாமைக்கு அரசியல்வாதிகளே காரணகர்த்தாக்களாவர். இறுதித்தீர்வுக்கான முயற்சிகளை அரசியல்வாதிகள் பலர் முளையிலேயே கிள்ளியெறிகின்ற காரணத்தினால், இணக்கப்பாட்டுக்கான தீர்வே கைகூடாமல் போய்விடுகின்றது.

இவ்வாறான அரசியல் குழப்பவாதிகளின் காரியங்களால் இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் பல தடவைகளில் சாத்தியப்படாமல் போயுள்ளன என்பது நாம் சந்தித்துள்ள வரலாறு ஆகும். இவ்வாறான அரசியல்வாதிகள் பெரும்பான்மை தரப்பினர் மத்தியில் மாத்திரமன்றி, சிறுபான்மை தரப்பினர் மத்தியிலும் உள்ளனர்.

'அரசியல் தருமம்' மறந்தவர்கள் எமது நாட்டில் பலர் உள்ளனர். அவர்கள் இனநல்லிணக்கத்தையும், அரசியல்தீர்வையும் ஒருபோதுமே விரும்புவதில்லை. அவர்களது நோக்கம் ஒன்றேயொன்றுதான்!

இலங்கையில் இனஐக்கியம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதும், சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வு ஒருபோதும் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதுவுமே அவர்களது எண்ணமாகும்.

இறுதித்தீர்வு வந்துவிடுமானால், அரசியல் பிழைப்பு நடத்துவதற்கு வழியில்லாமல் போய்விடும்.

06



## 06 நானுஓயா ரதல்லயில் சொகுசு கார் விபத்து

தம்பதிகள் மயிரிழையில் உயிர் பிழைப்பு



### ரயில்வேயின் வருடாந்த வருவாயை

## 06 2024ஆம் ஆண்டு முதல் ரூ. 500 கோடியால் அதிகரிக்க திட்டம்

## கேரளாவில் மீண்டும் கொரோனா பரவல்

### 280 பேர் பாதிப்பு, இருவர் பலி



இந்தியாவின் கேரள மாநிலத்தில் மீண்டும் கொரோனா தொற்று பாதிப்பு அதிகரித்துள்ளது. இதனால் நேற்று முன்தினம் மாத்திரம் 207 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. கடந்த 12 மணி நேரத்தில் மேலும் 280 பேர் கொரோனா தொற்றில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் தற்போது கொரோனா

06

# சீரற்ற காலநிலையால் வடக்கு மாகாணம் அதிகளவு பாதிப்பு

### வான் கதவுகள் திறப்பு; பல பகுதிகள் வெள்ளத்தில்

கிளிநொச்சி, மன்னார், வவுனியா முல்லைத்தீவு நிருபர்கள்



சீரற்ற காலநிலையால், நாடளாவிய ரீதியில் 02 ஆயிரத்து 271 குடும்பங்களைச் சேர்ந்த 07 ஆயிரத்து 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி, வட மாகாணத்திலேயே அதிகமானோர்

06



## 06 பாராளுமன்றில் ஆவேசமாக பேசிய MP மாரடைப்பால் பலி

துருக்கியில் சம்பவம்

### விக்கல் வீராச்சாமி



"எல்லா ஓட்டப் போட்டிகளிலை– யும் உங்களுக்குத்தான் விருது கிடைச்சிருக்கு போல...."

"இல்லாம, எனக்கு பின்னா– லதான் எவருமே ஓடவில்லையே, ஓடி வந்தாலும் நாங்க எந்தவிரு– தையும் வழங்க விடமாட்டோமே!!!!"

# உலகத் தமிழர்கள் ஒன்றிணையும் சிறு குறுந்தொழில் மாநாடு




ஜனவரி 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கும், பத்தாம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில், உலகத் தமிழர்களை ஒன்றிணைத்து சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோருக்கு ஏற்றுமதி இறக்குமதி வாய்ப்புகள் கிடைக்கவுள்ளன.

தமிழர்கள் வேலை தேடுவாராக அல்லாமல் வேலை கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், இந்தியா மற்றும் தமிழக அரசு சிறு குறுந் தொழில்அமைச்சகத்தின்ஆதரவில் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சிறு குறுந் தொழில் முனைவோர் ஒன்றிணைத்து கருத்து பரிமாறி தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தைப்படுத்தவும், காட்சிப்படுத்தவும் வாய்ப்பாக இவ்விழா அமைய உள்ளது. மேலும், தொழில் முனைவோர் பல்வேறு நாட்டு வாய்ப்புகளை பெறவும், அரசாங்கங்கள் வழங்கும் கடன் வசதிகள், மானியங்கள் மக்களை சென்றடையும் வகையிலும் தொழில் முனைவோருக்கு தொழில் வளங்களை பெருக்குவதற்கான வழிமுறைகளை வழங்கவும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் தொழில் வல்லுநர்கள் கருத்தரங்கம் நடத்த உள்ளனர். இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வர்த்தக ஆணையங்கள், துணைத் தூதர்கள், மாநில, மத்திய அமைச்சர்கள் கலந்துகொண்டு கருத்துரைக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் 'வளரும் தமிழகம்' என்ற கண்காட்சியும் நடைபெற உள்ளது. பெண் தொழில் முனைவோருக்கும், முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கும் MBA மாணவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட உள்ளது என உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

தொடர்புக்கு +60166167708

# "கீத்ராத் 60 "





தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் "கீத்ராத் 60" மாபெரும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் ஜனவரி 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30க்கு கொழும்பு 07 ஜே. ஆர். ஜெயவர்த்தன மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த 60 ஆவது நிகழ்ச்சியை முன்னிட்டு 60 மாணவ, மாணவியருக்கு புத்தகப் பரிசு வழங்கப்படவுள்ளது.

நம்நாட்டு முன்னணி பாடக, பாடகிகளுடன் சிங்கப்பூர் பிரபல பாடகர் ஹாஜி பஃரிஹூல்லாஹ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.



தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் பன்விலை கோட்டத்துக்குட்பட்ட ஆகல தமிழ் வித்தியாலயத்தில் முதன் முறையாக 33 வருடங்களுக்குப்பிறகு இரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஜே.நதின் ஜெனிபர் 173 புள்ளிகளையும், ச. பவிகரன் 149 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். மாணவர்களோடு அதிபர் ஆர். பிரபாகரன், வகுப்பாசிரியர் திருமதி ஆர். சுதர்சனி ஆகியோரையும் காண்கிறீர்கள். இரா.அ.இராமன்

# பொத்துவில் அஸ்மின் வரிகளில் தேவாவின் அசத்தல் ஆல்பம்!



தனியிசை பாடல்கள் மூலமாகவும் தமிழ் திரைப்பட பாடல்கள் வாயிலாகவும் உலகெங்கும் உள்ள தமிழர்கள் மனங்களில் இடம் பிடித்துள்ள இலங்கை கவிஞர் பொத்துவில் அஸ்மின் தனது அடுத்த ஆல்பத்துக்காக 'தேனிசைத் தென்றல்' தேவா மற்றும் ஸ்ரீகாந்த் தேவா உடன் இணைந்துள்ளார்.

லண்டனைச் சேர்ந்த தொழிலதிபரும் சமூக சேவகருமான DR. மாலா குமார் தனது மாலாகுமார் படைப்பகத்தின் சார்பில் தயாரித்துள்ள இந்த பாடல் விரைவில் வெளியாக உள்ளது. சமீபத்தில் தேசிய விருது பெற்ற ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்துள்ள இந்த உற்சாகமிக்க பாடலை அவரது தந்தையும் பிரபல இசையமைப்பாளருமான தேவா தனது காந்த குரலில், பிரத்யேக ஸ்டைலில் பாடியுள்ளார்.

விஜய் ஆண்டனி நடித்த' நான்' திரைப்படத்தில் இடம்பெற்ற 'தப்பெல்லாம் தப்பே இல்லை' பாடலின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான கவிஞர் பொத்துவில் அஸ்மின், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'அண்ணாத்த', அஜித் குமார் நடித்த 'விஸ்வாசம்' உள்ளிட்ட படங்களுக்கு எழுதிய புரோமோ பாடல்கள் ரசிகர்களால் கொண்டாடப்பட்டன.

தமிழ் சினிமாவில் 25க்கும் மேற்பட்ட படங்களுக்கு இதுவரை பாடல்கள் எழுதியுள்ள அஸ்மின், இலங்கையிலும் தமிழகத்திலும் 'மோஸ்ட் வான்டட்' பாடலாசிரியராக கவனம் ஈர்த்திருக்கிறார்.

'முத்து முத்து கருவாயா' மூலம் ஏற்கனவே வெற்றிப் பாடலைக் கொடுத்துள்ள ஸ்ரீகாந்த் தேவா, அஸ்மின் கூட்டணியில் உருவாகியுள்ள புதிய பாடல் இசை ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பேசிய கவிஞர் பொத்துவில் அஸ்மின், "தேவாவின் குரலில் அமைந்த ஹிட் பாடல்கள் வரிசையில் இந்தப் பாடலும் இடம் பிடிக்க தயாராகி வருகிறது. பாடல் தலைப்பையும் புரோமோவையும் மிக விரைவில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன," என்று கூறினார்.



முல்லைத்தீவு மாவட்ட செயலகமும், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், முல்லைத்திவு மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகமும், இணைந்து (15) முல்லைத்தீவு மாவட்ட செயலக மண்டபத்தில் நடத்திய பண்பாட்டு பெருவிழாவில். "முல்லை இளம் சுடர்" விருதினை கலைஞர் கு.யோகேஸ்வரனுக்கு முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர்.எம் வேதநாயகம் மற்றும் தற்போதைய அரசாங்க அதிபர் உமா மகேஸ்வரன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



யாழ். சங்கானை மெதடிஸ் மிசன் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன், மெற்றுலான் மீடியா ஊழியர்களின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கியதுடன் நிகழ்வுக்கான அனுசரணையும் வழங்கினார்.

படம் – வேலணை குறுப் நிருபர்

# NAMS உயர்கல்வி நிறுவனத்தின் 04ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா



நம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா 2023.12.12 ஆம் திகதி மாலை 2.30 மணியளவில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கலாநிதி நஜிமுதீன் முஸ்தாக் முகம்மது தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

12 வருடங்களாக பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா உயர்கல்விக்கென இயங்கி வருகின்ற NAMS உயர் கல்வி நிறுவனத்தினூடாக இந்தியா தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் கம்போடியாவின் IIC தொழிநுட்பப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்புகள் மற்றும் IVQ தரத்தில் HND என இரு பிரிவிலும் 112 மாணவர்கள் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறிப்பாக நம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பங்காற்றி வருகின்ற 30 பேருக்கு நம்ஸ் உயர் கல்வி நிறுவனத்தின் கல்வித் தூதுவர்களுக்கான கௌரவம் விழாவின் போது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பட்டமளிப்பு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வட மத்திய மாகாணத்தின் முன்னாள் ஆளுநரும் முன்னாள் விஞ்ஞான தொழிநுட்ப அமைச்சரும், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ விதாரண கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான பிரேம்நாத் சி தொலவத்தவும், SAARC கலாசார நிலையத்தின் பிரதிப் பனிப்பாளரும் விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் இந்திய புராதான கலாசாரம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களத்தில் உதவி பேராசிரியராக பணியாற்றி வரும் கலாநிதி பினா காந்தி தியோரியும், உலகளாவிய முன்னோடிகள் மற்றும் சர்வதேச கல்வியலாளர்கள் சங்கத்தின் தலைவரான கலாநிதி கேரி கௌல் ஸூடனும் கலந்து கொண்டார்.

# கில்மிசா வெற்றிபெற வாழ்த்துகள்



தமிழ்நாடு ஜீ தொலைக்காட்சியில் ஒளிபரப்படும் "சரிகமபா" சிறுவர்களுக்கான பாடல் போட்டியின் பிரமாண்டமான இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்ட இளம் பாடகர்கள் ஆறு பேரில் ஒருவரான கில்மிசா வெற்றிபெற்று தாயகத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென பொன்னாடை போர்த்தி, வாழ்த்துத் தெரிவித்து ஆசிவழங்கி கடந்த வியாழனன்று சென்னைக்கு வழி அனுப்பி வைத்தார், மலையக மக்கள் முன்னணியின் சர்வதேச உறவுகளுக்கான செயலாளரும் தமிழ்நாடு மகா சித்தர்கள் அறக்கட்டளை இலங்கைக்கான தர்மகர்த்தாவுமான எச்.எச்.விக்கிரமசிங்க.

படத்தில், நீர்கொழும்பு கொச்சிக்கடை பரிசுத்த ஆவி தேவாலய அருட்தந்தை கே.ஜி. ரெஜினோல், கில்மிசாவின் தாயார் திருமதி. தர்மினி உதயசீலன் மற்றும் இசைநிகழ்ச்சிகள் ஒருங்கிணைப்பாளர் இ.சுகந்திரன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

இறுதிப் போட்டி இன்று 17ஆம் திகதி நடைபெறுகின்றது.


# இலங்கை கடற்படை

தீவைச் சுற்றி தங்கத்திலான வேலி

டிப்ளோமா பெற்ற கடலோடி ஒருவராக இலங்கை கடற்படையில் (நிரந்தர கடற்படை) ஓர் அங்கமாகுக. இலங்கை கடற்படை க.பொ.த (உ/த) இல் கணிதம், உயிரியல் அல்லது தொழில்நுட்பத்தில் சித்தியடைந்த மாணவர்களைக் கோருகின்றது.

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

வயது - 18 - 24 வருடங்கள்

வெற்றிடங்கள் (ஆண்/ பெண)

- கப்பல் கட்டும் கைவினைஞர்
- பொறி அறை கைவினைஞர்
- மோட்டார் வாகன தொழில்வினைஞர்
- மின் கைவினைஞர்
- வானலை தொழில்வினைஞர்

மேலதிக விபரங்கள்

011-7195155, 011-7195162
nhqssorec@gmail.com
www.navy.lk/joinus
Sri Lanka Navy
Scan Me



விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் இறுதி திகதி 2024 ஜனவரி மாதம் 17 ஆம் திகதி

மேலதிக விபரங்களுக்கு QR குறியீடு அல்லது தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.


# பாரம்பரியம் நிகழ்ச்சியில் சுக்ரி நினைவுகள்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சிதொடரில் காலஞ்சென்ற கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரியின் நினைவுகள் பரிமாறப்படவிருக்கின்றன. இந் நிகழ்ச்சியில், அஷ்ஷேக் எம். நவாஸ் ஸனூர்தீன் (நளீமி) அதிதியாக கலந்து இவரது நினைவுகளை நினைவு கூருகிறார். கலாநிதியின் பாசறையில் வளர்ந்த அவரது மாணவரும், இளம் கல்வியாளருமான, எம்.எம்.அஹ்மத் பிஸ்தாமியும் ஓர் ஆசான் என்ற பார்வையில் தன் கருத்தைப் பதிவு செய்கிறார். கலாநிதி சுக்ரி 1980 களில் அப்போதைய பணிப்பாளர் வீ.ஏ.கபூரினால், முஸ்லிம் சேவைக்கு உள்வாங்கப்பட்டார். இந் நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்து வழங்குகிறார்.



மும்பையை தளமாகக் கொண்ட Population First ஏற்பாடு செய்த, 2023 ஆம் ஆண்டுக்கான (Laadli Awards), லாட்லி விருதுகள் வழங்கும் நிகழ்வில் பெண்ணியக் கண்ணோட்டத்தில் சமூகப் பிரச்சினைகளை அணுகுதல் மற்றும் அது சார்ந்த ஊடக அறிக்கையிடலுக்காக இலங்கையின் பத்திரிகையாளர்களான வினிதா எம். கமகே (அச்சு ஊடகம்) மற்றும் ஊடகவியலாளர் சுனந்த ஹெட்டியாராச்சி (இலத்திரனியல் ஊடகம்) ஆகியோர் விருது பெற்றுள்ளனர். கடந்த 12 ஆம் திகதி இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. இலங்கைக்கு இவ்விருது கிடைப்பது இதுவே முதல்தடவையாகும்

(படம் இ.கே.ஜி. கபில)

# ஊடகவியலாளர் கௌரவிப்பு விழா



இந்த ஆண்டின் சிறந்த செய்தி அறிக்கையிடலுக்கான விருதை சிலுமின செய்தி ஆசிரியர் தாரக விக்கிரமசேகர, சுதந்திர பத்திரிகை இயக்கத்தின் ஏற்பாட்டாளர் ஹனா இப்ராஹிமிடமிருந்து விருது பெறுகின்றார்.



விஜய பத்திரிகை நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் விஜேவர்தன, சிறந்த கட்டுரைக்கான தகுதி விருதை சிலுமின பத்திரிகை ஊடகவியலாளர் வஜிர லியனகேக்கு வழங்கினார்.



இந்த ஆண்டின் சிறந்த சுற்றாடல் அறிக்கையிடலுக்கான விருதை சிலுமின கட்டுரை ஆசிரியர் சுபாஷினி ஜயரத்ன, அருண பத்திரிகையின் ஆசிரியர் மஹிந்த இலேபெருமவிடமிருந்து பெறுகின்றார்.



சிலோன் டுடே ஆசிரியர் விந்தியா அமரநாயக்க, சிலுமின பத்திரிகையின் ஊடகவியலாளர் டானியா மோசஸுக்கு இவ்வாண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி அறிக்கையிடலுக்கான விருதை வழங்கினார்.



சிலுமின பத்திரிகையின் பௌஸ் மொஹமட்டுக்கு வருடத்தின் சிறந்த விளையாட்டு அறிக்கைக்கான விருதை இலங்கையின் தொழில்சார் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத்,வழங்கினார்.

### லேக் ஹவுஸ் நிறுவனத்தில் இடம்பெற்ற

## முஸ்லிம் மஜ்லிஸின் நாட்காட்டி விநியோகமும் விடை பெற்றுச் செல்லும் உறுப்பினர் கௌரவிப்பும்











லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டுக்கான இஸ்லாமிய நாட்காட்டி வழங்கும் நிகழ்வு புதன்கிழமை லேக்ஹவுஸில் இடம்பெற்றது. இதற்கு அமானா வங்கி மற்றும் தாருல் ஈமான் நிறுவனம் ஆகியன அனுசரணை வழங்கியிருந்தன. குறித்த நிகழ்வில், விடை பெற்றுச் சென்ற மஜ்லிஸ் உறுப்பினர்களான எம்.ஏ. அமீனுல்லா மற்றும் எம்.எம். பிர்தௌஸ் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர் எம்.எஸ். சம்ஸ் பாஹிம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், செயலாளர் றிஸ்வான் சேகு முகைதீன், பொருளாளர் எம்.என்.ஏ. றிஸ்வான் தலைமையிலான செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மஜ்லிஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஆசிரியர் தே. செந்தில் வேலவருக்கு, லேக் ஹவுஸ் முஸ்லிம் மஜ்லிஸ் இஸ்லாமிய நாட்காட்டியின் பிரதியொன்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### மகியாவ காட்டுமாரியம்மன்

## மகர ஜோதி பெருவிழா

கண்டி, மகியாவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ காட்டுமாரியம்மன் திருக்கோயிலில் மகியாவ ஐயப்பா சேவா சங்கம் நடாத்தும் மகர ஜோதி பெருவிழா எதிர்வரும் 30.12.2023ஆம் திகதி சனிக்கிழமை காலை 06.00 மணிக்கு மகா கணபதி ஓமத்துடன் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து விஷேட அபிஷேகம், சக்தி பூஜை என்பன நடைபெறும்.

அன்று மாலை 06.00 மணிக்கு சத்தியமான பொன் 18ஆம் படி பூஜையும், விஷேட பஜனையும் வழிபாடும் நடைபெறும். இப்பூஜைகளில் அனைத்து மெய்யன்பர்களும் கலந்து கொண்டு ஐயன் ஐயப்ப சுவாமிகளின் திருவருள் கடாட்சத்தை பெற்றுய்யுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## தம்பிலுவிலில் திருவாசக மாநாடு



அம்பாறை மாவட்ட இந்துஸ்வயம் சேவா சங்கம் ஏற்பாடு செய்துள்ள திருவாசக மாநாடு 2023 தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய சிதம்பரம் அரங்கில் இன்று (17.12.2023) 3ஆம் நாள் நிகழ்வாக காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. நேற்றும், நேற்றுமுன் தினமும் தொடர்ந்து நடைபெற்ற இவ்விழாவின் இன்றைய மாநாட்டில் தமிழ்நாடு தவத்திரு சிவாக்ர தேசிக சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்துக் கொண்டு உரையாற்றி அடியார்களுக்கு ஆசி வழங்கி திருவாசகத்தையும் பாடிடுவார். இறைபணிச் செம்மல் கண இராசரெத்தினம் தலைமையில் சிவசிறி. நீ.அங்குசநாத குருக்கள், ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜீ மகராஜ் (தலைவர் இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு), ஸ்ரீமத் சுவாமி அச்சராத் மானாந்தாஜீ மகராஜ் (தலைவர் இராமகிருஷ்ண மிஷன் கொழும்பு) ஆகியோர் அருளாசி வழங்க, தொடர்ந்து கிழக்கு மாகாண இந்துஸ்வயம் சேவா சங்க தலைவர் அரவிந்தன் தலைமையில் திருவாசக நூல் வெளியிடப்படும்.

எச்.எச்.விக்கிரமசிங்க


# சேல் சேல் சேல்

## கையிருப்பை விற்றுத் தீர்த்தல்

| | | | |
|---|---|---|---|
| 60’ பொலியெஸ்டர் துணி | | | |
| Printed & Plain | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| 60’ லேஸ் | 05 மீற்றர் | ரூபா | 2,000.00 |
| வெள்ளை சேர்ட் பட்டன் | 01 கி.கி. | ரூபா | 250.00 |
| புளொட்டர் பேப்பர் | 01 கி.கி. | ரூபா | 1,000.00 |
| பேப்பர் இன்டர்லைனிங் | | | |
| கறுப்பு வெள்ளை | 01 யார் | ரூபா | 100.00 |
| Boys Shirt | 01 துண்டு | ரூபா | 250.00 |

சில்லறை மற்றும் மொத்த விற்பனை அனைத்து வாடிக்கையாளர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

**“விலைக்குறைப்பு சேல்” இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு**

**2023 டிசம்பர் 11ஆம் திகதி முதல்**
**2023 டிசம்பர் 21ஆம் திகதி வரை**

**எமது தொழிற்சாலை:**

**ஜனதா கார்மன்ட்ஸ் (பிரைவட்) லிமிடெட்,**
**இல. 17,**
**விவேகானந்த மேடு, கொழும்பு-13.**


National Lotteries Board
வியாழன் 2023.12.14
www.nlb.lk

மஹஜன சம்பத 5328 — ரூ. 25,277,416.00
J 5 5 8 6 2 8

3570 — 2023.12.14 — ரூ. 70,317,375.60
V 03 08 76 79 V — 38417

Mega Power 1676 — 2023.12.14 — 41733 — ரூ. 417,897,604.00
E 18 24 26 42 55 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

VIP 2023.12.14 — 0154
Q 1 9 7 4 2 1
Q
ரூ. 21,470,474.28

2023.12.14 — 637 — ரூ. 4,648,321.40
08 14 45 61 — 34343 — 19

தன நிதானய 1358 — 2023.12.14 — ரூ. 125,222,993.20
Y 48 60 62 71 Y — 20731


**BUILDING WANTED**

இலங்கையில் முன்னணியான சர்வதேச உணவு உரிமம் கொண்ட நிறுவனத்திற்கு 4000-5000 Sqft பரப்பளவு கொண்ட கட்டிடம் ஒன்று வாடகைக்கு தேவை. கட்டிடம் கீழ்வரும் இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. Hospital ஒழுங்கை. Circular ஒழுங்கை, யாழ்ப்பாணம் காங்கேசன்துறை ஒழுங்கை, மகாத்மா காந்தி ஒழுங்கை

If you are interested, please call or whatsapp on
**0763826643**

**VEHICLE VALUATION REPORTS**

ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS

AA CEYLON

CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)



இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
கல்வி அமைச்சு

வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**ஆர்வ வெளிப்படுத்தல்கள் (EOI)**
**வீதி பாதுகாப்பு தொடர்பிலான சவால்களினை வெற்றி கொள்வதற்கான புத்தாக்கம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு மற்றும் வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை ஆகியவை இணைந்து வீதி தொடர்பான விபத்துகளைத் தடுப்பதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு உள்ளூர் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புத்தாக்குனர்களிடமிருந்து சாத்தியமான புது வகை தீர்வுகள் மற்றும் கருத்துக்களினை முன்வைக்கும்படி அழைப்பு விடுக்கின்றன.

**வர்த்தகரீதியாக,பொருளாதார ரீதியாக சாத்தியம் மிக்க வகையில் தெரிவு செய்யப்பட்ட புது வகை தீர்வுகளுக்கு கிடைக்கப்பெறக்கூடிய நன்மைகள்**

- காப்புரிமை பெற்ற விண்ணப்பங்களுக்கு தொழில்நுட்பவியல் மற்றும் நிதியியல் ரீதியில் ஆதரவு.
- எண்ணக்கருத்துக்களினை உற்பத்திகளாக மாற்றுவதற்கு தொழில்நுட்பவியல் ரீதியில் ஆதரவு.
- செயற்படக்கூடிய முன்மாதிரிகளினை விருத்தி செய்வதற்கான உதவி.
- செயல் முறை ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் நியமங்களுக்கு உட்பட்டதுமான தீர்வுகள் அரசினால் பாவனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஆரம்ப நிலையில் உள்ள முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கல்
- சாத்தியம் மிகுந்த புதுக்கண்டுபிடிப்புக்களுக்கும் புத்தாக்கங்களுக்கும் உலகளாவிய சந்தையில் வாய்ப்பு

60 km/h

ROAD SAFETY !

முடிவுத்திகதி - 2024 பெப்ரவரி 14
**www.slic.gov.lk/roadsafety**
எனும் விலாசத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்

Road Safety

**மேலதிக தகவல்களுக்கு**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
தொலை பேசி - 0112676650
மின்னஞ்சல் - info@slic.gov.lk
இணையத்தளம் - www.slic.gov.lk/roadsafety

வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை
தொலை பேசி - 011 2687109
மின்னஞ்சல் - ncrstransport@gmail.com
இணையத்தளம் - www.roadsafety.gov.lk

# ஊடகத்துறை மேம்பாட்டுக்கு வழிகோலிய ஐந்தாவது உலக ஊடக மாநாடு






**(தினுலி பிரான்சிஸ்கோ 'உலகளாவிய நம்பிக்கையை அதிகரித்தல், ஊடக வளர்ச்சியை ஊக்குவித்தல்' என்ற தொனிப்பொருளில் ஐந்தாவது உலக ஊடக உச்சி மாநாடு (WMS) சீனாவின் குவாங்சோவில் இம்மாதம் 3ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நடைபெற்றது.)**

அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிடெட் (ANCL) தலைவர், பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி உச்சி மாநாட்டில் கலந்து கொண்டார். புதிய சகாப்தத்தில் சர்வதேச கலாசார தொடர்புகளின் அவசியத்தை சுட்டிக்காட்டி பேராசிரியர் உரையாற்றினார். அவர் சீனாவையும் இலங்கையையும் இணைக்கும் ஆழமான வரலாற்றுப் பிணைப்புகளை எடுத்துரைத்தார்.

"பழங்காலம் தொட்டே பட்டுப் பாதை நமது நாகரிகங்களுக்கிடையில் கருத்துக்கள் கலை மற்றும் தத்துவ பரிமாற்றத்துக்கான ஒரு பாலமாகச் செயற்பட்டது. கடல்சார் பட்டுப் பாதையானது இந்த இணைப்புகளை மேலும் ஆழப்படுத்தியது. கலாசாரங்களின் வளமான பிணைப்பை உருவாக்கியது.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சீன கலைப்பொருட்கள் மற்றும் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இலங்கை தொல்பொருட்கள் என்பன இந்த வரலாற்று பரிமாற்றத்திற்கு சான்றாகும். இது பரபஸ்பரம் ஒவ்வோர் பாரம்பரியத்துக்கும் இரு நாடுகளிலும் பரபஸ்பரம் நிலவிய கௌரவத்தையும் ஆழமான மதிப்பீட்டை பிரதிபலிக்கிறது. 21 ஆம் நூற்றாண்டில் சர்வதேச கலாசார தொடர்பு மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் முன்னெப்போதையும் விட அதிகமாக எதிரொலிக்கின்றது. நமது இரு நாடுகளும் ஊடகங்களிடையேயான உலகளாவிய ஒத்துழைப்பின் மூலம் வளர்ச்சியடைவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன" என்று அவர் கூறினார்.

அண்மைய காலங்களில் மனித சமூகத்தில் உலகமயமாக்கலின் போக்கை துரிதப்படுத்தும் முக்கிய சக்தியாக சமூக ஊடகங்களின் விரைவான வளர்ச்சி உள்ளது. சமூக ஊடகங்கள் மக்கள் ஒருவரோடொருவரும் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்துடன் இணைவதையும் எளிதாக்கியுள்ளது. நாம் அனைவரும் ஒன்றை உணர்கிறோம். செய்திகளை உருவாக்குவதும் அதனைப் பரப்புவதும் கட்டுப்படுத்துவதும் இனிமேல் நிறுவனமயப்பட்டதாக இருக்காது. மாறாக அது இப்போது ஒவ்வொரு நபரின் கரங்களிலும் உள்ளது " என்று பேராசிரியர் காரியவசம் மேலும் கூறினார்.

சர்வதேச ஊடக பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்புக்கான முக்கிய தளமான உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் சீன மத்திய அரசு மற்றும் குவாங்டாங் மாகாண அரசாங்கத்தின் அதிகாரிகள் முன்னிலையில் பங்கு கொண்டனர். மேலும் சின்ஹுவா செய்தி நிறுவனத் தலைவர் ஃபூ ஹுவா, ஐ.நா.வின் உலகளாவிய தொடர்புகளுக்கான துணைச் செயலர் மெலிசா பிளெமிங் ஆகியோர் உச்சி மாநாட்டில் உரையாற்றினர்.

5வது WMS 101 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இருந்து 450 பங்கேற்பாளர்களை கொண்டிருந்தது. இதில் 197 முக்கிய ஊடகங்கள், சிந்தனையாளர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சீனாவிற்கான இராஜதந்திரிகள் மற்றும் ஐ.நா மற்றும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். நவீனமயமாக்கலுக்கான சீனாவின் அணுகுமுறை மக்களை மையமாகக் கொண்ட தத்துவார்த்த செயற்பாடுகள் மற்றும் புதுமைக்கான முக்கியத்துவம் ஆகியவற்றை தனிப்பட்ட முறையில் அனுபவிக்கும் வாய்ப்பை இந்த உச்சி மாநாடு வழங்கியதாக பேராசிரியர் காரியவசம் கூறினார்.

"சீன நவீனமயமாக்கலின் முக்கிய அடையாளம் மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சிக்கான அதன் அர்ப்பணிப்பு அதன் குடிமக்களின் நல்வாழ்வுக்காக அதிகாரமளித்தலுக்கும் மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கும் முன்னுரிமை அளிக்கிறது" என்று அவர் மேலும் கூறினார். "உலகளாவிய நம்பிக்கையை ஊக்குவித்தல் ஊடக மேம்பாட்டை ஊக்குவித்தல்" என்ற கருப்பொருளின் கீழ் பங்கேற்பாளர்கள் நான்கு தலைப்புகளில் விரிவான மற்றும் ஆழமான விவாதங்களை நடத்தினர். "நம்பிக்கையை வலுப்படுத்துதல்: மனித வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் ஊடகங்களின் பங்கு" "மாற்றங்களைத் தழுவுதல்: ஊடகங்களின் பதில் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகள் மற்றும் சவால்கள்" "முன்னோடி கண்டுபிடிப்பு: டிஜிட்டல் யுகத்தில் ஊடகத்தின் புதிய சந்தைகள்" மற்றும் "வளர்ச்சியை நாடுதல்: சிறந்த எதிர்காலத்திற்கான ஊடகங்களின் உலகளாவிய ஒத்துழைப்பு" என்பனவே அவையென உலகளாவிய சவால்களை எதிர் கொள்ளும் வகையில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. Xinhua News Agency, Associated Press, Reuters, TASS மற்றும் Kyodo News உள்ளிட்ட முன்னணி உலகளாவிய ஊடக நிறுவனங்களின் கூட்டமைப்பால் 2009 இல் நிறுவப்பட்ட WMS ஆனது உலகெங்கிலும் உள்ள ஊடக நிறுவனங்களிடையே ஒத்துழைப்பு மற்றும் உரையாடலை வளர்ப்பதற்கான இன்றியமையாத அமைப்பாக உருவெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








# 114 வருடங்களை பூர்த்தி செய்யும் தினமின




அச்சு ஊடகத்தின் தனித்துவமான பாத்திரங்களில் ஒன்று நாட்டின் கலாசார மற்றும் கலை உருவாக்கம் தொடர்பில் ஒரு பிரதிநிதியாக முன்நிற்பதாகும். இலக்கியக் கலைஞர்களுக்கு நட்புறவுத் தளத்தை உருவாக்குவதும் ஒரு பாத்திரமாகும். இதில் தினமின பத்திரிகை ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக செய்திருக்கும் அளப்பறிய சேவைகள் அளவிடமுடியாதவை. குறிப்பாக தனது மொழியைப் பாதுகாக்கும் பணியோடு நின்றுவிடாத தினமின, சிங்கள மொழியின் தொடர்பாடல் திறனை வளர்ப்பதிலும் தனித்துவமான பங்கை ஆற்றியுள்ளது.

நாளிதழ்களுக்கு ஏற்ற வழியைத் தயாரித்துக் கொண்டு பத்திரிகையின் துல்லியத்தைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு பொறுப்புடன் நடந்து கொண்டதன் காரணமாக சிங்கள எழுத்து விதிகள் மற்றும் பாணிக்கான முன்மாதிரிகளை வழங்குவதற்கு இந்தக் காலம் முழுவதற்கும் தினமினவினால் முடிந்ததுள்ளது. இதன் காரணமாக, மொழிப் பயன்பாடு பற்றிய விவாதங்களில் எந்தப் பிரிவினருக்கும் சாதகமாக இல்லாமல், அந்த அனைத்து மொழி உரையாடல்களுக்கெல்லாம் ஒரு சிறந்த தளமாக மாற முடிந்தது. முக்கியமாக சிங்கள இலக்கியத்தின் முன்னோடி மொழியியலாளர்கள் மற்றும் மொழியை நேசிக்கும் பல ஊடகவியலாளர்கள் ஆரம்பம் முதல் தினமினவில் பணியாற்றி வருகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. தினமினவின் முன்னாள் ஆசிரியர் எச். எஸ். பெரேரா, தொடன்துவே தர்மசேன பண்டிதுமா, எம். சி. எப். பெரேரா, அலக்ஸான்டர் வெலிவிட்ட, பியசேன நிஸ்ஸங்க, மார்டின் விக்ரமசிங்க, விக்டர் டி. லெனரோல், டீ. டப்ளிவ். சேனாதீர, டீ. எப். காரியகரவன, பீ. ஏ. சிரிவர்தன, டீ. பீ. பெரமுனேதிலக, தர்மபால வெத்தசிங்க, சுதாஸ் மாசகோரள, எல்பர்ட் வெலிவிட்ட, அனந்தபிரிய குடாதிகி, விமல் அபேசுந்தர போன்றோர் அவர்களுள் சிலராகும்.

1950ஆம் 60 ஆம் ஆண்டுகளில் தினமின வாசகர்களிடையே அதீத பிரபல்யத்தை வெற்றி கொள்வதற்கு அதன் இலக்கிய பங்களிப்புகள் முக்கிய காரணமாக அமைந்தது என்பது இரகசியமானதல்ல. புதிய எழுத்தாளர்களின் கவிதைகள், சிறுகதைகள் மற்றும் பல்வேறு படைப்புகளுக்கு அதில் தாராளமாக இடம் ஒதுக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் அப்பத்திரிகையில் எழுதியவர்களிடையே அதீத தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்கள் பலர் உள்ளனர்.

அக்காலப்பகுதியில் பிரபல்யமான இலக்கிய அங்கமாக விளங்கிய கவிதை, சிறுகதைகளைச் சிங்கள வாசகரிடம் கொண்டு சேர்ப்பதில் தினமின அளவிட முடியாத பணியினையும் செய்தது. ஆரம்ப காலத்தில் மேற்கத்திய இலக்கியப் பண்புகள் நிரம்பிய சிறுகதைகள் நாளிதழ்களில் பிரசுரிக்கப்படாத நிலையில் அதற்கான முதல் அடியை எடுத்தது தினமினவாகும். 1924ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மார்ட்டின் விக்கிரமசிங்கவின் முதல் சிறுகதை 'அபிராஹாச' தினமினவில் பிரசுரமானது. அப்போது ஒவ்வொரு சனிக்கிழமையும் "சனி தின கதாந்தர" என்ற சிறுகதை வெளியாகியது.

பிற்காலத்தில் சிறுகதை எழுத்தாளராக சிறந்து விளங்கிய தினமினவின் உதவி ஆசிரியரான ஜி.பி. சேனநாயக்கா இலக்கியத் துறைக்கு பங்களித்ததும் தினமினவின் ஆசிரியராக இருந்த விக்கிரமசிங்கவின் தலையீட்டின் ஊடாகவாகும்.

விருது பெற்ற நாவலாசிரியரும் தொலைக்காட்சி நாடக எழுத்தாளருமான சோமவீர சேனாநாயக்க, மொழிபெயர்ப்பாளர் கே. ஜி. கருணாதிலக்க, மூத்த எழுத்தாளர் சோமாதேவி பரண யாப்பா, சுனில் மாதவ பிரேமதிலக்க, விருது பெற்ற எழுத்தாளர் பந்துபால குருகே போன்றோர் தினமினவின் வழியில் வந்தவர்களாகும்.

விருது பெற்ற கிவியர தயாசேன குணசிங்க, தனது அபூர்வ கவிதைகளை முதன் முதலாக வாசகர் உலகிற்கு வழங்கியது தினமின உதவி ஆசிரியராக இருந்த சமயத்திலாகும். ஜாம்பவான்களான மீமன பிரேமதிலக, எச். எம். குடலிகம, சிசிரகுமார மாணிக்காராச்சி மற்றும் கௌடானே பியதாச பெரேரா, தயா சோமசிறி போன்றவர்களும் தினமினவை ஒளிரச் செய்த ஏனைய மூத்த கவிஞர்களாகும். முன்னோர்களின் வழியைப் பின்பற்றிய பல கவிஞர்கள் தினமினவில் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர். தினமினவின் முன்பக்கத்தை அலங்கரித்த பெரும்பாலோர் சிறந்த பாடல்களின் அற்புதமான வரிகளுக்குச் சொந்தக்காரர்களாகும். தெல்தோட்டை சந்திரபால, தர்மசிறி கமகே, டபிள்யூ. ஏ. அபேசிங்க, திலகரத்ன குருவிட்ட பண்டார, கலாநிதி அஜந்த ரணசிங்க, சமன் சந்திரநாத் வீரசிங்க போன்றவர்கள் அவர்களில் ஒரு சிலர் மாத்திரமாகும்.

தினமினவிலிருந்து தோன்றிய மாணிக்கங்களாக சிறப்பானவர்கள் பலர் காலத்திற்குக் காலம் பல்வேறு நிகழ்ச்சிகளின் ஊடாக வெளிவந்து இந்த நாட்டில் அறிவு சார் உரையாடலுக்கு புதிய உயிர் கொடுத்ததை இந்த தருணத்தில் நாம் நினைவில் கொள்ளாவிட்டால் அது தவறாகும். பேராசிரியர் விமல் திஸாநாயக்க, பேராசிரியர் ஆனந்த குலசூரிய, பேராசிரியர் கே. என். ஜயதிலக, பேராசிரியர் அஜந்த ஹப்புஆராச்சி, கலாகீர்த்தி எட்வின் ஆரியதாச ஆகியோர் அவர்களில் சிலராகும்.

பின்னாளில் தலைசிறந்த பல்கலைக்கழக விரிவுரையாளராக விளங்கிய பேராசிரியர் எம். எச். குணதிலக்க தினமின சினிமா பக்கத்தின் ஸ்தாபகராக வரலாற்றில் இணைந்துள்ளார். அதன் ஊடாக வெளிவந்த ஜெயவிலால் விலேகொடவின் அபிதாஅதீன திரைப்பட விமர்சனங்கள் சிங்கள சினிமாவின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவியது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். சில காலங்களுக்கு முன் மார்ட்டின் விக்ரமசிங்க 'மயூரபாத' என்ற பெயரில் திரைப்பட விமர்சனத்தில் ஈடுபட்டாலும், இந்நாட்டு சினிமா தயாரிப்புக்கும் தினமினவுக்குமிடையிலான பிரிக்க முடியாத உறவு கட்டியெழுப்பப்பட்டதும் இரகசியமானதல்ல.

நாட்டின் முதல் திரைப்பட விருது வழங்கும் விழாவை நடத்திய பெருமை தினமினவுக்கு உள்ளது. அது இடம்பெற்றது 1956 மார்ச் 2ம் திகதியாகும். சிங்கள சினிமாவை ரசிகர்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அது மட்டுமின்றி சிங்கள சினிமா, மேடை மற்றும் தொலைக்காட்சி நாடகத்துறைக்கு தினமின வழங்கிய பங்களிப்புகள் ஏராளமானவை. தினமினவின் வரலாற்றுப் பயணத்தை ஆராயும் இவ்வேளையில், கலாநிதி சரத் அமுனுகம ஒருமுறை செய்த விபரிப்பை நினைவு படுத்துவது பெறுமதிமிக்கதாகும். அவரது கருத்துப்படி, சுதந்திரத்திற்கு முன்னைய யுகத்தில் இலங்கையை ஆண்ட நான்கு நிறுவனங்கள் இருந்தன. அதில் ஒன்று தினமின அலுவலகம் எனப்படும் பிரபலமான லேக்ஹவுஸ் நிறுவனம். அதன் மூலம் பல அரசியல் தலைவர்கள் உருவாக்கியுள்ளனர்.

அரசாங்கத்தை மையப்படுத்திய செய்திப் பத்திரிகையாக மாறிய பின்னரும், அதற்கு முன்னரும் தினமின பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளானது என்பதை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். என்றாலும் அது எப்போதும் தனது தேசியப் பொறுப்புகளையும் கடமைகளையும் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்பட்டது என்பது இரகசியமான விடயமல்ல. அதுபோலவே, நாட்டின் மரபுகளைப் பாதுகாத்து அதனை வளர்ப்பதற்கும் உறுதுணையாக நின்றது. யுகத்திற்கு யுகம் பெரிய மனிதர்களை உருவாக்கியது.













சம்பத் திப்பிட்டிகொட
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

## அரசியல் அரங்கம்

அர்ஜுன்



# கடன் மறுசீரமைப்பு முன்னேற்றம் இலங்கைக்கு கிடைத்த பெருவெற்றி

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு

**கடினமான பயணத்தில் வெற்றியுடன் முன்னேறியுள்ளோம்**

'கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் ஏற்பட்ட முன்னேற்றமானது இலங்கை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு இது வழியேற்படுத்தும்' என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் சர்வதேச ரீதியில் நாட்டுக்குக் கிடைத்துள்ள வரவேற்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

**கே: ஜனாதிபதி அண்மையில் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்குக் கிடைத்துள்ள சாதகமான பதில்கள் பற்றி விளக்க முடியுமா?**

பதில்: பரிஸ் கிளப்பின் 14 நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான், சீனா போன்ற நாடுகளின் கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் இதுவரை எங்களுக்குக் கிடைத்துள்ள மிகப்பெரிய சாதகமான சர்வதேச பதிலாகும். இது ஒரு முக்கிய மாற்றமாக சர்வதேச அளவில் பார்க்கப்படுகிறது. ஒரு நீண்ட செயல்முறையை மிகக் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்ய முடிந்தது. இது நம் நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி. மேலும் பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்கத்தேய நாடுகளுடனும், மத்திய கிழக்கில் ஈரான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளுடனும் நல்ல இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. அதன் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது. சுற்றுலாத்துறைக்கு களம் அமைக்கும் விமானங்களுக்கான வாய்ப்புகள் விஸ்தரிக்கப்படுகின்றன. ஜனாதிபதி இந்த விவகாரங்களைச் சர்வதேச ரீதியில் சிறப்பாக நிர்வகித்து வருகின்றார். அவரது தலைமைத்துவம், சர்வதேச சட்ட அறிவு மற்றும் சர்வதேச உறவுகளில் அவரது அனுபவம் இவை அனைத்தையும் சரியாக நிர்வகிக்கப் பெரிதும் உதவியது.

**கே: ஜனாதிபதி அண்மையில் துபாய்க்கு விஜயம் செய்து சர்வதேச மாநாட்டில் பங்கேற்றிருந்ததுடன், பல்வேறு அரச தலைவர்களைச் சந்தித்திருந்தார். இது பற்றி தகவல் கூற முடியுமா?**

பதில்: இந்தப் பயணத்தில் நமக்குக் கிடைத்த நன்மைகள் ஏராளம். கடுமையான பிரச்சினையான காலநிலை மாற்றம் குறித்து பலராலும் விவாதிக்கப்பட்டும் தீர்வு கிடைக்கவில்லை. காலநிலை மாற்ற நீதிமையத்தை நாங்கள் முன்மொழிந்தோம். அதன் மூலம் அனைத்து நாடுகளையும் ஒன்றுதிரட்டி அதற்காக குரல் எழுப்ப வேண்டும். 1983 இற்கு முன்பிருந்தே இதற்காகக் குரல் கொடுத்து வந்த நாடு எமது நாடாகும். அதைப் போன்ற ஒன்றைப் பெறுவதற்கு இந்தப் பயணத்தில் எங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. அங்கு, உலக சமூகத்தினால் நாம் அவதானிக்கப்பட்டோம். பிரேசில் ஜனாதிபதி, பிரான்ஸ் ஜனாதிபதி, கிரேக்க ஜனாதிபதி உள்ளிட்ட பல உலகத் தலைவர்களை எமது ஜனாதிபதி சந்தித்தார். மேலும், துபாயில் உள்ள முதலீட்டுச் சமூகங்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு இலங்கையில் உள்ள வாய்ப்புகள் குறித்து விளக்கமளிக்க முடிந்தது.



**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம். வரிசைகள் போய்விட்டன. சுற்றுலாப் பயணிகள் மீண்டும் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது**

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை அரசாங்கம் பெறுவதற்கான முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இரண்டாவது தவணை எப்பொழுது இலங்கைக்குக் கிடைக்கும்?**

பதில்: சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை இந்த மாதம் நிச்சயம் கிடைக்கும் என நம்புகிறேன். இதன் மூலம் சர்வதேச சமூகத்துக்கு எமது நாட்டின் மீது நம்பிக்கை ஏற்படும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். சென்ற வருடத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் கடந்து வந்த பாதை சரியானதா இல்லையா என்பதை எவராலும் ஒப்பிட்டுப் பார்க்க முடியும். ஏப்ரலில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, எரிபொருளைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட நாட்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை காணப்பட்டது. 13 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மின்சாரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறையால் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டிற்கு வரவில்லை. உரப்பற்றாக்குறை நிலவியது. டொலர் இல்லாமல் எரிவாயுவை இறக்குமதி செய்ய முடியாது போனது. ஆனால் இன்று நிலைமை முற்றாக மாறியுள்ளது. இன்று பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம். வரிசைகள் போய்விட்டன. சுற்றுலாப் பயணிகள் மீண்டும் வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**கே: இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவின் சாதகமான பதில்களைக் குறிப்பிடுவதாயின், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக்கு இந்தச் சூழ்நிலை எந்தளவுக்கு ஒத்துழைப்பு வழங்கும்?**

பதில்: முதல் கடன் தவணை தொடக்கம் இரண்டாவது கடன் தவணை வரை மிகவும் கடினமான பயணத்தை கடந்தே வந்துள்ளோம். இப்படி ஒரு கடினமான பயணத்தை கடந்து வந்த வெனிசுலா, ஆர்ஜென்டினா, ஜிம்பாப்வே, லெபனான் போன்ற நாடுகள் சுமார் 10_15 வருடங்களாக சரிவான நிலையிலேயே காணப்படுகின்றன. அவர்களால் இன்னும் வெளியே வர முடியவில்லை. அந்தப் பார்வையில், நாங்கள் வெற்றி பெற்றுள்ளோம். கடினமான பயணத்தை சரியாக நிர்வகித்து அந்த வழியில் பயணித்து வந்துள்ளோம்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை மூலம் நமது நாட்டின் பொருளாதாரம் எத்தகைய பலத்தைப் பெறும்?**

பதில்: முதலாவது, இரண்டாவது தவணையைப் பெறுவதன் மூலம் நாம் சரியான பாதையில் செல்கிறோம் என்ற செய்தியை சர்வதேச நாணய நிதியம் உலகுக்கு அனுப்புகிறது. இந்தப் பணம் கிடைத்தவுடன் உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் தங்கள் பணத்தைக் கொடுக்கத் தொடங்கும். பின்னர் திறைசேரியில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையைப் பயன்படுத்தலாம். இது சாத்தியமானால், அதிக வட்டிக்கு பத்திரங்களை வாங்குவதற்குப் பதிலாக, குறைந்த விலையில் கடன்களைப் பெற முடியும். அப்போது வணிக வட்டி வீதங்கள் கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கிறோம். வட்டி வீதத்தை 10_11வீதமாகக் குறைக்க முடிந்தால், கடன் பெறவும், நிதி வசதிகள் மூலம் தொழில் தொடங்கவும் வாய்ப்பு வழங்கப்படும். இரண்டாவது கடன் தவணை பொருளாதாரத்தை வலுப்படுத்த பெரும் உதவியாக உள்ளது.

**கே: வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இப்போது எந்தக் கட்டத்தில் உள்ளது?**

பதில்: இதற்கு இதுவரை நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை முடித்துள்ளோம். சர்வதேசக் கடனின் இரண்டு முக்கிய வகைகளான இருதரப்பு கடன் மேலாண்மையின் அடிப்படையில் நாங்கள் நல்ல பதிலைப் பெற்றுள்ளோம். அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில், கடன் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, நாடு மீண்டும் கடனைச் செலுத்த முடியும். அப்போதுதான் திவால் நிலையில் இருந்து மீள முடியும். எனக்கு இதுவரை கிடைத்த தகவல்களின்படி, ஜப்பான் நம் நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்யத் தயாராக உள்ளது.

**கே: கடனைத் திருப்பிச் செலுத்துவது தொடர்பாக அரசு குறிப்பிட்ட காலக்கெடுவை அறிவிக்க முடியுமா?**

பதில்: கடன் மறுசீரமைப்பு முடிந்தவுடன், கடனை முதலில் செலுத்த வேண்டும். அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் கடன் மறுசீரமைப்பை முடித்து, இரண்டாவது காலாண்டில் முதலில் குறைந்த வட்டியுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட கடனைச் செலுத்தி, இரண்டாவதாக இருதரப்புக் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவோம். அந்த வகையில் தனிநபர் கடனை குறைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரத்தை மீண்டும் உயர்த்துவதன் மூலம் மீண்டு வர முடியும் என நம்பப்படுகிறது.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மேற்கோள்காட்டி அரசாங்கம் மக்களை ஒடுக்குவதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டுகிறது. இது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் அல்ல என்று அரசாங்கம் சொல்கிறதா?**

பதில்: சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகள் கொடுத்தாலும் இல்லாவிட்டாலும் எங்களுக்கு வேறு வழியில்லை. வருமானம் செலவுக்கு பொருந்தவில்லை என்றால், பணத்தை வார்ப்பதே நமக்கு இருக்கும் ஒரே வழி. அதனால் 200 ரூபாயில் இருந்த டொலர் 400 ரூபாவுக்குச் சென்றது. பணவீக்கம் அதிகரித்து பொருளாதாரம் சரிந்தது. எங்களுக்கு கடினமான தேர்வுகள் விடப்பட்டன. எதிர்க்கட்சிகள் எல்லாவற்றையும் விமர்சித்தாலும், அவர்களின் தீர்வு என்ன?

# இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய பரபரப்பு தீர்ப்பு!

## ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த 370 ஆவது பிரிவை அரசாங்கம் ரத்து செய்தமை சரியானது!




இந்திய உச்சநீதிமன்றம் கடந்த திங்கட்கிழமையன்று பரபரப்பான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. இந்திய அரசியல்பரப்பில் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட தீர்ப்பு இதுவாகும்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவு மத்திய பா.ஜ.க அரசால் ரத்து செய்யப்பட்டமை செல்லுபடியாகும் என்பதே அந்தத் தீர்ப்பாகும்.


அதேசமயம் ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியென்பதுடன் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை 2 யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்ததும் செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இந்தியாவின் விடுதலைக்குப் பின்னர் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக ஜம்மு காஷ்மீர் இணைக்கப்பட்டது. அப்போது ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு இரட்டைக் குடியுரிமை, தனி அரசியல் சாசனம் உள்ளிட்ட சிறப்பு அந்தஸ்து வழங்க வகை செய்யும் 370 ஆவது பிரிவும் உருவாக்கப்பட்டது. ஆனால் 1950 களில் இருந்தே இந்த 370 ஆவது பிரிவுக்கு எதிரான குரல்கள் ஒலித்து வந்தன.

இந்த நிலையில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவானது 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5ஆம் திகதியன்று மத்திய பா.ஜ.க அரசால் ரத்து செய்யப்பட்டது. மேலும் 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9 ஆம் திகதி ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் ஜம்மு காஷ்மீர் மாநிலம் என்பது ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம், லடாக் யூனியன் பிரதேசம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

அப்போது ஜம்மு காஷ்மீர் மாநில அரசியல் தலைவர்கள் பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு ஓராண்டு வரை சிறையில் அடைக்கப்பட்டனர். ஜம்மு காஷ்மீரில் முற்றாக அரசியல் நடவடிக்கைகள் முடக்கப்பட்டன.

இந்த நிலையில், ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவை மத்திய பா.ஜ.க அரசு நீக்கியதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஏராளமானோர் வழக்குகள் தொடர்ந்தனர். ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சித் தலைவர், வழக்கறிஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் போன்றோர் இந்த வழக்குகளைத் தொடர்ந்தனர்.



370 ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டதற்கு எதிராகவும், ஜம்மு காஷ்மீர் இரண்டாகப் பிரிக்கப்பட்டதற்கு எதிராகவும் இந்த வழக்குகள் தொடரப்பட்டன.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் எஸ்.கே.கவுல், சஞ்சீவ் கண்ணா, பி.ஆர். கவாய், சூர்யகாந்த் ஆகியோர் அடங்கிய அரசியல் சாசன பெஞ்ச் இந்த வழக்கை விசாரித்து கடந்த திங்கட்கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது. மத்திய அரசின் 370 ஆவது பிரிவு ரத்து நடவடிக்கையானது செல்லுபடியாகும் என்று அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளது உச்சநீதிமன்றம்.

மொத்தம் 16 நாட்கள் உச்சநீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது. அனைத்து தரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில் விசாரணை திகதி குறிப்பிடாமல் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது. 370 ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டதற்கு எதிரான வழக்கில் டிசம்பர் 11ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது.

இதனையடுத்து ஜம்மு காஷ்மீர் வழக்கில் உச்சநீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை வரலாற்று சிறப்பு மிக்க இறுதித் தீர்ப்பை அளித்துள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய 370 ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்டமை செல்லுபடியாகுமென்றும், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை 2 யூனியன் பிரதேசங்களாக மத்திய அரசு பிரித்ததும் செல்லுபடியாகும் எனவும் எனவும் உச்சநீதிமன்றம் அத்தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

அதேசமயம் ஜம்மு காஷ்மீரில் தேர்தல் நடத்துவதற்கான காலக்கெடுவையும் உச்சநீதிமன்றம் நிர்ணயித்திருக்கிறது.

இத்தீர்ப்பில் முக்கியமாகக் கருதப்பட வேண்டியது, ஜம்மு காஷ்மீரில் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் என்பது குறித்து உச்சநீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவாகும். அதாவது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல் நடத்த வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையத்திற்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏற்கெனவே தேர்தல் நடத்துவதற்கான பணிகளில் தேர்தல் ஆணையம் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது என்று மத்திய அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து தற்போது தேர்தல் நடத்துவதற்கான காலக்கெடுவை நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது. அதேபோல, யூனியன் பிரதேசமாக இருக்கும் ஜம்மு காஷ்மீரை முடிந்தவரை விரைவாக மாநிலமாக மாற்ற வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதனையடுத்து 2024 செப்டம்பர் மாதத்திற்கு ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட்டு முழு மாநிலத்திற்கும் தேர்தல் நடத்தப்படுமா? என்கின்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

இத்தீர்ப்பை வாசிப்பதற்கு முன்பாக, இந்த வழக்கில் 3 விதமான தீர்ப்பு உள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.வை. சந்திரசூட் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அவர் தீர்ப்பை வாசித்தார்.

தீர்ப்பில் அவர் கூறியதாவது:

**ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்துமாறும் உத்தரவு**

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் சட்டப்பிரிவு 370 தற்காலிகமானதேயாகும். சட்டப்பிரிவு 1 மற்றும் 370 இன்படி ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. சட்டப்பிரிவு 370 ஏற்படுத்தப்பட்டது ஒரு இடைக்கால ஏற்பாடு. சட்டப்பிரிவு 370 ஐ ரத்து செய்வதற்கு இந்திய குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது. ஜம்மு காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்த பிறகு அது தனித்த இறையாண்மையைக் கொண்டிருக்கவில்லை.

ஜம்மு காஷ்மீரை இந்தியாவுடன் ஒருங்கிணைக்கவே சட்டப்பிரிவு 370 இருந்தது. இந்தியாவில் இருந்து அதனைப் பிரிப்பதற்காக அல்ல. சட்டப்பிரிவு 370 ஐ ரத்து செய்வதற்கான அறிவிப்பை வெளியிடும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உண்டு. இதற்காக அவர் சட்டப்பிரிவு 370(3) ஐ பயன்படுத்தியதில் தவறு இல்லை. குடியரசுத் தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது செல்லுபடியாகும்.

சட்டப்பிரிவு 370(1)(d)இன்படி அரசியலமைப்பின் அனைத்து விதிகளையும் ஜம்மு காஷ்மீருக்குப் பயன்படுத்தலாம். ஜம்மு காஷ்மீர்மீருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்ய மாநில அரசின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை. சிறப்பு அந்தஸ்து ரத்து செல்லும்.

ஜம்மு காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்க மத்திய அரசுக்கு உரிமை உள்ளது. மாநிலம் தொடர்பாக மத்திய அரசு எடுக்கும் முடிவுகளை ரத்து செய்யக் கோர முடியாது. இதில் தலையிடுவது, குழப்பத்தையும் நிச்சயமற்ற நிலையையுமே ஏற்படுத்தும். மேலும், நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அந்த வகையில், லடாக்கை யூனியன் பிரதேசமாக அறிவித்தது செல்லும்.

அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதிக்குள் இந்திய தேர்தல் ஆணையம் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைக்குத் தேர்தல் நடத்த வேண்டும். ஜம்மு காஷ்மீர் மறுசீரமைப்பு தொடர்பான மத்திய அரசின் அறிக்கையின்படி, விரைவில் ஜம்மு காஷ்மீருக்கு மத்திய அரசு மாநில அந்தஸ்து அளிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

முன்னதாக தீர்ப்பு வெளியாவதை முன்னிட்டு ஜம்மு காஷ்மீரில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்.சாரங்கன்...

## அவுஸ்திரேலியாவின்...

நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், இலங்கைக்கான இந்தியாவின் புதிய உயர் ஸ்தானிகராக சந்தோஷ் ஜா பொறுப்பேற்கவுள்ளார். கோபால் பாக்லே கடந்த 2020 மேயில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராக பொறுப்பேற்றார். இவரது பதவிக் காலம் இருதரப்பு கூட்டுறவில் பல ஒப்பிடமுடியாத மைல்கற்களைத் தொட்டிருந்தது.

இந்தியாஇலங்கை உறவுகளில் பல மகுட சாதனைகளை நிகழ்த்துவதில் அவர் முக்கிய பங்காற்றினார். 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சவால்களுக்கு உதவும் வகையில் 04 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை நாட்டுக்குப் பெற்றுக்கொடுத்திருந்தார். திருகோணமலை எண்ணெய் தாங்கி மற்றும் கூட்டு முயற்சியின் அபிவிருத்தி மற்றும் பாவனைக்கான வழிமுறைகள் ஜனவரி 2022 இல் CPC & LIOC க்கு இடையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதை ஒரு சிறப்பம்சமாக குறிப்பிடலாம். அவரது கண்காணிப்பின் கீழ், கோவிட்19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்த இந்தியா 25 தொன்களுக்கும் அதிகமான மருந்துகளை, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவிட் தடுப்பூசி, ரேபிட் ஆன்டிஜென் சோதனை கருவிகள், திரவ மருத்துவ ஆக்சிஜன் ஆகியவற்றை இலங்கைக்கு வழங்கியது. மேலும், இந்த காலகட்டத்தில் இலங்கைக்கான மனிதாபிமான விநியோகங்களை விரைவுபடுத்துவதற்காக இந்திய கடற்படை மற்றும் விமானப்படையின் பங்களிப்பு சிறப்பாக பயன்படுத்தப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வணிக ஈடுபாடு அவரது பதவிக்காலத்தில் பெரும் ஊக்கத்தை பெற்றது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் ஒத்துழைப்பு, இன்டர்கிரிட் இணைப்பு, திருகோணமலை அபிவிருத்தி, UPIவிண்ணப்ப ஏற்பு மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகள், INR குறிப்பிடப்பட்ட வர்த்தக தீர்வுகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

2021 அக் டோபர் மாதம் குஷிநகரில், சுமார் 100 துறவிகளை அழைத்துச் செல்லப்பட்டனர். சென்னையாழ்ப்பாண விமானங்கள் மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் படகுச் சேவைகளை மீண்டும் ஆரம்பித்தல் போன்ற பல்வேறு பரிமாணங்களின் இணைப்பானது வலுவடைந்தது.

இந்தியாவின் அடுத்த உயர் ஸ்தானிகராக சந்தோஷ் ஜா பொறுப்பேற்கிறார். சந்தோஷ் ஜா, தற்போது பெல்ஜியம், லக்சம்பர்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்திய தூதராக பணியாற்றி வருகிறார்.

## இந்து சமுத்திரப் பிராந்திய...

பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கொழும்பு பாதுகாப்பு அறிக்கையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது. இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் கடல் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க, மேற்படி பிரேரணையை முன்வைத்துள்ளார்.

மாநாட்டில் பங்குபற்றிய அனைத்து நாடுகளும் அதற்கு இணங்கியுள்ளன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சகல நடவடிக்கைகளும் இலங்கையை மையமாகக் கொண்டு செயற்படுத்தப்படவுள்ளன. இந்தியப் பெருங்கடல் பாதுகாப்புத் தலைமையகம் எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நிறுவப்பட்டு, பின்னர் நிரந்தரக் கட்டடத்தில் நிறுவப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் மீண்டும்...

தொற்றால் கேரள மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,144 ஆக அதிகரித்துள்ளது. தற்போது கேரளாவில் பரவும் கொரோனா தொற்றினால் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். கேரளாவில் முதல்முறையாக ஜேஎன் 1 வகை கொரோனா பரவுவது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வகை கொரோனா தொற்று வேகமாக பரவக்கூடியது என்பதால், பரிசோதனையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தொற்று பரவலை கட்டுப்படுத்த மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## இலகுவாக்கப்படவுள்ள...

இது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக மாணவர் மற்றும் பெற்றோர் பாரிய சிரமங்களையும் மன அழுத்தங்களையும் எதிர்நோக்கி வருவதாக கல்வியாளர்களும் மனநல நிபுணர்களும் நீண்டகாலமாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.அடுத்த வருடம் முதல் கல்வி முறைமையில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார்.

## எங்கள் கருத்து...

# நல்லிணக்க விரோதிகள்!

இனமுறுகல்கள் எக்காலமும் தொடர்ந்தாலேயே அரசியலை தொடர்ந்து நடத்த முடியும்.

இவ்வாறுதான் அவர்கள் நினைக்கின்றனர். இனநல்லிணக்கத்துக்கான அத்தனை தீர்வு முயற்சிகளையும் அவர்கள் எதிர்க்கின்றனர். இனவாதத்தையும், மதவாதத்தையும் தூண்டும் வகையில் அவர்கள் அறிக்கைகளை வெளியிடுகின்றனர். மக்களை எக்காலமும் கொதிநிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதே அவர்களது திட்டம்!

இனநல்லிணக்கத்துக்கான தீர்வு முயற்சியொன்று ஆரம்பிக்கப்படுகையிலேயே, அதன் சாதகபாதகங்களை ஆராய்ந்து பார்க்காமல் எதிர்ப்புக் கருத்து வெளியிடுவது எவ்வகையில் நியாயம்? அவ்வாறானால் இனப்பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வு முயற்சியுமே ஆரம்பிக்கப்படலாகாது என்று அவர்கள் விரும்புகின்றனரா?

ஐக்கியத்துக்கான முயற்சிகளைக் குழப்புவதற்கென்றே பெரும்பான்மையினத் தரப்பிலும், சிறுபான்மையினத் தரப்பிலும் அரசியல்வாதிகள் பலர் உள்ளனர். எமது நாட்டின் இன்றைய நெருக்கடிகளுக்கெல்லாம் உண்மையான காரணகர்த்தாக்கள் அவர்களேயாவர்.

இது இவ்வாறிருக்க, தற்போதும் ஐக்கியத்துக்கான முயற்சியொன்று மேற்கொள்ளப்படுவதைக் காண முடிகின்றது.

உலகத் தமிழர் பேரவையினரும், பௌத்த சங்கத்தினரும் இணைந்து இனஐக்கியத்துக்கான முன்னெடுப்பொன்றை ஆரம்பித்திருக்கின்றனர். இது தொடர்பாக பௌத்தமத பீடாதிபதிகள் மற்றும் ஏனைய மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள் போன்றோரை உலகத்தமிழ் பேரவையினர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

‘இமயமலைப் பிரகடனம்’ என்பதை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுகின்ற இம்முயற்சிக்கு வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் ஆரம்பத்திலேயே தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர். அம்முயற்சியின் உள்ளடக்கத்தை ஆராய்ந்து பார்க்காமலேயே அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை வேடிக்கையானது. நாட்டில் இனஐக்கியம் தோன்ற வேண்டுமென்று அவர்கள் உண்மையிலேயே விரும்புவார்களானால், இத்தகைய அபத்தமான அறிக்கைகளை கைவிட வேண்டியது முதலில் அவசியம்!

## போதைப்பொருட்களை...

எதிர்வரும் டிசம்பர் 23 வரை இந்த விசேட நடவடிக்கை பரந்த அளவிலான நடவடிக்கையாக அமுல்படுத்தப்படும்.

சிரேஷ்டபிரதி பொலிஸ் மாஅதிபர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான அனைத்து பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு (14) அழைக்கப்பட்டு, இதுகுறித்து விரிவாக தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய விசேட நடவடிக்கைக்கென பொலிஸ் தலைமையகத்தில் விசேட நடவடிக்கை அறையொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், மாகாணங்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களின் மேற்பார்வையில் 24 மணிநேரமும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 45 பொலிஸ் பிரிவுகளிலுமுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு விசேட கைத் தொலைபேசியொன்று வீதம் வழங்கப்பட்டுள்ளது. அந்த தொலைபேசிக்கு அழைப்பவர் அடையாளம் காண முடியாததால், போதைப்பொருள் தொடர்பான எந்தவொரு தகவலையும் அச்சமின்றி அறிவிக்க முடியும்.

நம்பகத்தன்மையுடன் வழங்கப்படும் தகவலுக்கமைய இந்த விஷேட நடவடிக்கைகளுக்காக, பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து செயற்படுத்தப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் ஆயுதப்படைகளின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படும்.

பொலிஸ் தலைமையக விசேட நடவடிக்கை அறை தொலைபேசி இலக்கம் – 071 8598800 ஊடாக பொதுமக்கள் தகவல்களை வழங்க முடியும். மேலும் போதைப்பொருள் தொடர்பான விபரங்களையும் வழங்க முடியும். அதே போன்று இவ்விசேட நடவடிக்கைக்காக தயார் நிலையிலுள்ள நாடுமுழுவதுமுள்ள பொலிஸ் பிரிவுகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் பின்வருமாறு.

01. கொழும்பு வடக்கு: 0718598801,
02. கொழும்பு தெற்கு : 0718598803,
03. கொழும்பு மத்தி: 0718598804,
04. நுகேகொடை : 0718598805,
05. கல்கிஸ்ச: 0718598806,
06. கம்பஹா : 0718598807,
07. நீர்கொழும்பு : 071 8598808,
08. களனி : 0718598809,
09. பாணந்துறை : 0718598810,
10. களுத்துறை : 0718598811,
11. மாத்தறை : 0718598812,
12. தங்கல்லை : 0718598813,
13. காலி : 0718598814,
14. எல்பிட்டி : 0718598815,
15. கண்டி : 0718598816,
16. மாத்தளை : 0718598817,
17. தெல்தெனிய : 0718598818,
18. கம்பளை : 0718598819,
19. நுவரெலியா : 0718598820,
20. ஹற்றன் : 0718598821,
21. குருணாகல் : 0718598822,
22. குளியாபிட்டி : 0718598823,
23.நிகவெரட்டி :0718598824,
24. புத்தளம் :0718598825,
25. சிலாபம் : 0718598826,
26. அனுராதபுரம் : 0718598827,
27. பொலன்னறுவை : 0718598828,
28. கெபிதிகொல்லாவை : 0718598829,
29. இரத்தினபுரி : 0718598830,
30. எம்பிலிபிட்டி : 0718598831,
31. கேகாலை : 0718598832,
32. சீதாவக்கபுர : 0718598833,
33. யாழ்ப்பாணம் : 0718598834,
34. காங்கேசன்துறை: 0718598835,
35. வவுனியா : 0718598836,
36. மன்னார் : 0718598837,
37. கிளிநொச்சி : 0718598838,
38. முல்லைத்தீவு : 0718598839,
39. மட்டக்களப்பு : 0718598840,
40. அம்பாறை : 0718598841,
41. திருகோணமலை : 0718598842,
42. கந்தளாய் : 0718598843,
43. பதுளை : 0718598844,
44. பண்டாரவளை : 0718598845,
45. மொனராகலை : 0718598846 ஆகியற்றுடன்

ops.narcotics@police.gov.lk என்ற மின்னஞ்சலுக்கும் தகவல்களை வழங்க முடியுமென்றும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சுற்றிவளைப்புகளுக்கு மேலதிகமாக சமூக பொலிஸ் குழுக்களும் பலப்படுத்தப்படுமென்றும் பலமிழந்துள்ள சமூக பொலிஸ் குழுக்களை மறுசீரமைக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களுக்கு அதிக முக்கியத்துவம் செலுத்தப்படுமெனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்.நிஹால் தல்துவா தெரிவித்தார்.

இந்த மாகாணங்களில் போதைப்பொருள் கடத்துபவர்கள் மற்றும் விற்பனையாளர்களின் தகவல்களையும் தரவுகளையும் பொலிஸ் புலனாய்வு அமைப்புகள் ஆவணப்படுத்தியுள்ளதாகவும் போலீசார் தெரிவித்தனர். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் எண்ணக்கருவுக்கமைய பதில் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனின் மேற்பார்வையின் கீழ் இந்த நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுகிறது.

## சீரற்ற காலநிலையால்...

பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில், ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 04ஆயிரத்து 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் 892 குடும்பங்களைச் சேர்ந்த 02 ஆயிரத்து 780 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தின் தாழ்நில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் சாத்தியம் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## டிஜிட்டல் NIC...

தலைமை அதிகாரியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்கவுக்குமிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

400 கோடி (04 பில்லியன்) ரூபா இந்திய நிதிப் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்படும் இந்த அடையாள அட்டையில், கண்ணின் நிறம், கை ரேகைகள் மற்றும் இரத்த வகை போன்ற நபரின் உயிரளவியல் (Biometric) தகவல்களின் தரவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

முன்னதாக, டிஜிட்டல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது 76 உயிரியல் தரவுகளின் விபரங்கள் கோரப்பட்டன. ஆனால் புதிய டிஜிட்டல் அடையாள அட்டையைப் பெற ஆறு உயிரியல் தரவுகளின் விபரங்கள் மட்டுமே தேவை.

இதன்படி, புதிய டிஜிட்டல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது, பெயர், முகவரி, பிறந்த திகதி, பாலினம், தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை கட்டாயம் வழங்க வேண்டும்.

புதிதாக அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்க ளுக்கு இந்த புதிய டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்படும். ஏனையோருக்கு அதன் பின்னர் கட்டம் கட்டமாக டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதே அரசின் நோக்கமாகுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு படைகளின்

எவரேனும் செயற்பட முற்பட்டால் அது இலங்கையின் தனித்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தினார்.

தியத்தலாவ இலங்கை இராணுவ கல்வியிற் கல்லூரியின் கெடட் அதிகாரிகள் விடுகை அணிவகுப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக (16) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தியத்தலாவை இராணுவ கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராணுவ மரியாதை வழங்கி பெருமையுடன் வரவேற்கப்பட்டார்.

தேசத்திற்கும் இலங்கை இராணுவத்திற்கும் வீரமிக்க தலைவர்களை உருவாக்கிய இராணுவத்தின் சிறந்த உத்தியோகத்தர் பயிற்சி நிறுவனமான தியத்தலாவ இராணுவ கல்வியற் கல்லூரியின் 98 ஆவது விடுகை அணிவகுப்பு நிகழ்வு இதுவாகும். மேலும் பயிற்சியை நிறைவு செய்த 274 கெடட் உத்தியோகத்தர்கள் இன்று அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த 06 கெடட் உத்தியோகத்தர்களும் பயிற்றுவிக்கப்பட்டு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு கெடட் உத்தியோகத்தர்களின் விடுகை அணிவகுப்பை பார்வையிட்டதுடன், திறமை வாய்ந்த கெடட் அணிக்கு விருதினையும், கெடட் வீரர்களுக்கு வாளையும் வழங்கினார்.

## மலையகத்தில் 10,000...

இதற்கமைய 10,000 வீட்டுத்திட்டத்தின் முதற் கட்டமாக 1,300 வீடுகளை அமைப்பதற்கான பணி இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வீடுகளை நிர்மாணிப்பதற்கான இடங்களை அடையாளம் காணும் பணி ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளது. காணி உரிமையை வழங்குவதற்கு பெருந்தோட்ட கம்பனி தரப்பிலும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள 10,000 வீட்டுத் திட்டம் தொடர்பில் அனைத்து பங்குதாரர்களுக்கும் இடையிலான சந்திப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள நீர்வழங்கல் அமைச்சில் நடைபெற்ற சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன், இலங்கைக்கான இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்யன்ஜல் பாண்டே, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, பெருந்தோட்ட கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், முகாமைத்துவ பணிப்பாளர்கள், அரச பெருந்தோட்ட யாக்கங்களின் தலைவர்கள், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள், தோட்ட உட்கட்டமைப்பின் அமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட அதிகாரிகள், பெருந்தோட்ட அமைச்சின் அதிகாரிகள், நிதி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் இலங்கை பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகங்கள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

எனவே, 10 பேர்ச்சஸ் காணி உரிமையுடன் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கிய வகையில் இவ்வீட்டு திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது மலையக மக்களுக்கான 10,000 வீட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அப்போது ஒரு வீட்டுக்கு சுமார் 10 இலட்சம் ரூபா மதிப்பிடப்பட்டது. எனினும், கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் வீட்டு திட்ட பணிகள் தாமதமாகின.

இந்நிலையில் தற்போதைய நிலைமையில் ஒரு வீட்டுக்கு சுமார் 28 இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. இது தொடர்பில் இந்திய அரசுடன் பேச்சு நடத்தி, அதற்கான அனுமதியையும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.

### ரயில்வேயின் வருடாந்த வருவாயை

# 2024 ஆம் ஆண்டு முதல் ரூ. 500 கோடியால் அதிகரிக்க திட்டம்



ரயில்வே திணைக்களத்தின் வருமானத்தை அடுத்த வருடம் முதல் 500 கோடி ரூபாவினால் அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர் எச். எம். கே. டபிள்யூ பண்டார தெரிவித்தார். இதன்படி, ரயில் பாதைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் திணைக்களத்துக்கு சொந்தமான அனைத்து பயன்படுத்தப்படாத கட்டடங்கள் மற்றும் காணிகளை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

திணைக்களத்தின் வருமானத்தை 33 வீதத்தால் அதாவது 500 கோடி ரூபாவினால் அதிகரிக்க திணைக்களம் செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய பொது முகாமையாளர், ரயில்வேயின் வருவாயை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

எதிர்காலத்தில் மேலும், ஏற்கனவே வெளித் தரப்பினர் வரி செலுத்தாமல் பயன்படுத்திய அனைத்து காணிகளும் திரும்பப் பெறப்பட்டு, அவையும் நிர்ணயிக்கப்பட்ட வரி முறையின் கீழ் குத்தகைக்கு விடப்படுமென்றார்.

# பாராளுமன்றில் ஆவேசமாக பேசிய MP மாரடைப்பால் பலி



இஸ்ரேலை ஆதரிக்கும் துருக்கி அரசாங்கத்தின் போக்கை கண்டித்து ஆவேசமாக பேசிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் பிட்மெஸ், மாரடைப்பு காரணமான உயிரிழந்துள்ளார். மேற்காசிய நாடான துருக்கியில், ஜனாதிபதி எர்டோகன் தலைமையில் ஆட்சி நடைபெற்று வருகிறது. துருக்கியின் அண்டை நாடான, இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையே போர் நடைபெற்று வருகிறது. இருப்பினும், இஸ்ரேலுடனான வர்த்தக உறவை துருக்கி பின்பற்றி வருகிறது.

இது தொடர்பாக எதிர்கட்சியினர் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இரண்டு நாட்களுக்கு முன், துருக்கி பாராளுமன்றத்தில் நடந்த பட்ஜட் விவாதத்தில், எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் பிட்மெஸ் பங்கேற்று ஆவேசமாக பேசினார்.

அப்போது, 'இஸ்ரேலுக்கு கப்பல்களை அனுமதிக்கிறீர்கள்; அதனை வர்த்தகம் என வெட்கம் இல்லாமல் கூறுகிறீர்கள். நீங்களும் இஸ்ரேலின் கூட்டாளி தான். காசா மீது இஸ்ரேல் வீசும் ஒவ்வொரு வெடி குண்டுக்கும் உங்கள் பங்கு உண்டு' என பேசிவிட்டு, இறங்குகையில் மயக்கமடைந்து சரிந்தார்.

அவரை மருத்துவமனையில் சேர்த்து பரிசோதித்ததில், இதயத்துக்கு செல்லும் இரத்தக் குழாயில் இரு இடங்களில் அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தீவிர சிகிச்சையில் இருந்த அவர், நேற்று முன் தினம் உயிரிழந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# நானுஓயா ரதல்லயில் சொகுசு கார் விபத்து

### மயிரிழையில் உயிர் தப்பிய தம்பதிகள்



நானுஓயா, ரதல்ல குறுக்கு வீதியில் பயணித்த சொகுசு காரொன்று சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று சனிக்கிழமை (16) காலை இவ்விபத்து இடம்பெற்றது.

காரில் பயணித்த கணவன், மனைவி மயிரிழையில் காயங்களின்றி உயிர்தப்பினர்.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கி வந்த போது, நானுஓயா ரதல்ல வீதியில் பயணித்த சொகுசு கார், வீதியில் சிந்திக்கிடந்த ஓயிலில் வழுக்கி இழுத்துச்செல்லப்பட்டது.

இதனால், கட்டுப்பாட்டையிழந்த கார், பாதுகாப்பு வேலியில் மோதி கவிழ்ந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நானுஓயா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# லியூகேமியா நோய் நிலைமை உதவி கோருகிறார் தந்தை

### அவசர சத்திர சிகிச்சைக்கு

அளவ்வ, மிரிஹெலிய, இலக்கம் 27 என்னும் முகவரியில் வசிக்கும் டி.எம். ஜயதிஸ்ஸ என்பவரின் மகனான இமன்ஜித் தென்னக்கோன் லியூகேமியா நோயால், மகரகம அபேக்ஷா வைத்தியசாலையில் 15 சிவார்டில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

வெயாங்கொட பண்டாரநாயக்க மத்திய மகா வித்தியாலயத்தில் தரம் பத்தில் கல்வி பயிலும் இவருக்கு, ஒரு மாத காலத்துக்குள் எலும்பு மச்சை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டுமென வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர். இதற்கு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு வர்த்தகராக இவரது தந்தை இருப்பதுடன் தாயார் தபால் அதிகாரியாக பொல்கஹவெல தலைமை தபாலகத்தில் கடமை புரிகின்றார்.


2002 நவம்பர் மாதம் இவரது நோய் அடையாளம் காணப்பட்டது. அன்று தொடக்கம் இதுவரை காலமும் சிகிச்சைக்காக பெருமளவு பணத்தை பெற்றோர் செலவிட்டுள்ளனர். தற்போது சிகிச்சைக்கான ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாவை இவர்களால் பெற முடியாத நிலைமை காணப்பட்டுள்ளது. அதனால் நல்லிதயம் கொண்டவர்கள், தனவந்தர்கள், கொடை வள்ளல்களிடமிருந்து உதவி கோருகிறார். உதவி வழங்க முன்வருவோர் அளவ்வ மக்கள் வங்கியில் தென்னகோன் முதியான்சலாகே ஜயதிஸ்ஸ என்பவரது கணக்கில் வைப்பு செய்யுமாறும் சிறுவனின் தந்தை ஜயதிஸ்ஸ கோரி நிற்கின்றார்.

## சிறி ரணசிங்க...

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு கொழும்பு 07 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

# 45 வருடங்களாக ஆட்டமிழக்காத வீரர்



27 நாட்களாக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதம் எதிர்க்கட்சியின் பாரிய எதிர்ப்புக்கள் இன்றி நிறைவடைந்தது. வரவு செலவுத் திட்ட காலம் முழுவதும் ஜனாதிபதி பாராளுமன்றத்திக்கு விஜயம் செய்ததால் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்பவற்றின் போட்டி நாயகனாக இருந்தது ஜனாதிபதி ரணிலாகும்.

“வரவு செலவுத் திட்டத்தையும் வென்றாகி விட்டது. வற் வரியினையும் வெற்றி. ஐ.எம்.எப் ஐயும் வெற்றி பெற்றுவிட்டோம். இனி இருப்பது நாட்டைக் கட்டியெழுப்புவது மாத்திரமேயாகும்“ என பாராளுமன்ற ஜனாதிபதி ரணில் கூறினார்.

நிதி அமைச்சராக அதிக நாட்கள் பாராளுமன்றத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ஏனைய பணிகளையும் இடையூறின்றி முன்னெடுத்துச் செல்லச் சிரமமப்படவில்லை. ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்த ரணில், அன்றைய தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வற் வரியினை 3 வீதமாக அதிகரிக்கும் விவாதம் தொடர்பில் அவதானத்துடன் இருந்தார்.

**ஜனாதிபதியிடமிருந்து பிரசன்னவுக்கு தொலைபேசி அழைப்பு**

வற் வரி விவாதம் கோரமின்மையால் இடைநடுவில் நிறுத்தப்பட்ட செய்தியை வழங்கியது பேராசிரியர் ஆசு மாரசிங்கவாகும். அதையடுத்து உடனே ஆளுங்கட்சி அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்கவை தொடர்பு கொண்ட ஜனாதிபதி ரணில், “எதிர்க்கட்சி கோரிய விவாதத்தை அவர்களே வேண்டாம் எனக் கூறினால் நாம் இதனை நாளையே பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதமின்றியே நிறைவேற்றிக் கொள்வோம்“ எனக் கூறியுள்ளார். அமைச்சர் பிரசன்னவும் இதற்கு இணங்கியதோடு, திங்கட்கிழமை விவாதமின்றியே வற் வரிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

திங்கட்கிழமை காலை ஜனாதிபதி NSBM பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக ஹோமாகம பிடிபனவுக்குச் சென்றார். பல்கலைக்கழகக் கல்வியை நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என உரையாற்றிய ஜனாதிபதி ரணில், மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இன்னும் சில நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு தொடர்பில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கு அதன் நிறைவேற்றுக்குழு கூட்டம் கடந்த 12ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற இருந்ததோடு, நிதி அமைச்சின் அதிகாரிகளுடனான சந்திப்பை திங்கட்கிழமை நடாத்துவதற்கு ஜனாதிபதி ஏற்பாடு செய்திருந்தார்.

**ஷெஹான் மற்றும் சியம்பலாபிட்டிய நன்றி கூறிய ஜனாதிபதி**

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது தொடர்பில் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே வழங்கிய அர்ப்பணிப்புக்காக ஜனாதிபதி நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். அத்துடன் நிதி இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோருக்கும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் வைத்து தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். ஜனாதிபதியின் திட்டமே இதனைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக அமைந்தது என அவர்கள் கூறினர்.

முன்னாள் ஆளுநரும், பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலாளர் பதவிகளை வகித்த சிரேஸ்ட நிருவாக சேவை அதிகாரியுமான ஒஸ்டின் பெர்னாண்டோவின் வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீட்டு விழா கொழும்பு பீ. எம். ஐ. சீ. எச் மண்டபத்தில் இடம்பெற்றது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்கா மற்றும் தலதா அத்துகோரளவும், முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்த கொண்டிருந்தனர். ஜனாதிபதி ரணிலுக்கு இந்நிகழ்வுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்குப் பதிலாக இந்நிகழ்வில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கா கலந்து கொண்டிருந்தார்.

**ஜனாதிபதியின் வரலாற்றுப் பாடம்**

ஜனாதிபதி அமைச்சரவைக்கு புதிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். அது ஆங்கிலேய ஏகாதிபத்தியங்களால் அநியாயமாகக் கொல்லப்பட்ட ஹென்றி பேதிரிஸின் கொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கான குழு நியமிப்பது தொடர்பான பத்திரமாகும். இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினவிய போது அவர்களின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரியுமளவுக்கு அவரைப் பற்றிய வரலாற்றை ஜனாதிபதி கூறினார்.

“அவரது சந்ததியினர் வஹும்புரா சாதியில் உயர்நிலையில் இருந்தவர்களாகும். அன்று சிங்கள முஸ்லிம் கலவரத்தில் அவர் கலந்து கொண்டிருக்கவில்லை. எனினும் அவரது தந்தை தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவரைக் பழிவாங்கவே பேதிரிஸ் கொல்லப்பட்டிருக்க வேண்டும். மறுபுறத்தில் வனவாசல, ஹுனுப்பிட்டிய பிரதேசங்களிலும், களனி, பேலியகொட பிரதேசங்களிலும் இந்த சாதியைச் சேர்ந்த பலர் இருந்தனர். அவர்கள் வெளியில் வருவார்கள் என்ற அச்சமும் வெள்ளையர்களுக்கு இருந்தது” எனக் கூறிய ஜனாதிபதி அத்தோடு நின்றுவிடாமல் தனது வரலாற்று அறிவு எப்படிப்பட்டது என்பதைக் காட்டும் வகையில் நீண்ட விளக்கமளித்தார்.

வரவு செலவுத் திட்ட காலத்தில் பிரதமரால் பாரம்பரியமாக வழங்கப்படும் இராப்போசன விருந்து கடந்த செவ்வாய்கிழமை இரவு பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் இடம்பெற்றது. ஜனாதிபதி ரணிலும் அங்கு வந்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

**ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்திக்கு பாராட்டு**

ஜனாதிபதி புதன்கிழமை பாராளுமன்றத்திற்குச் சென்றது நல்லதொரு செய்தியுடனாகும். அது IMF இரண்டாவது தவணைக்கான அனுமதி தொடர்பான செய்தியாகும். ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உள்ள தனது அலுவலகத்திற்குச் சென்றடைந்தவுடன் அங்கு சென்ற அமைச்சர் நிமல் சிறிபால மற்றும் பேராசிரியர் ஆஷு மாரசிங்க ஆகியோர் தேசத்தைக் கட்டியெழுப்பும் எதிர்காலப் பணிகள் வெற்றியடைவதற்காகத் தமது வாழ்த்துக்களை ஜனாதிபதிக்கு தெரிவித்தனர். இதனை வெற்றியடையச் செய்வதற்கு அமெரிக்காவிலிருந்து உதவிய அமெரிக்காவின் இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்கவையும் ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

சபைக்குள் சென்று நாட்டின் பொருளாதார நிலை குறித்து விசேட அறிக்கையொன்றை விடுத்த ஜனாதிபதி ரணில், வீழ்ச்சிப் பாதையின் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக தெரிவித்ததுடன், இன்னும் கடக்க வேண்டிய தூரம் உள்ளதை நினைவு கூர்ந்தார். பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிலியர்ட், கெரம், செஸ் மற்றும் ஸ்னூக்கர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சியில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

**45 வருடங்களாக ஆட்டமிழக்காமல் இருக்கும் வீரர் யார்?**

“நளீன் பண்டார பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியை கடுமையாக விமர்சிக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகும். என்றாலும் அவர் அவ்வாறு நடந்து கொண்டாலும் சபையை விட்டு வெளியே வந்து குரோதத் தன்மையுடன் நடந்து கொள்ளமாட்டார். இந்த பாரம்பரியம் அனைத்து ஜனநாயக நாடுகளிலும் உள்ளது. விமர்சனமும் விவாதமும் சபையில் மட்டுமே இருக்க வேண்டும். விளையாட்டு என்பது மனதை இலகுபடுத்தும் ஒன்றாகும். எனவே இங்கு நல்ல வீரர்கள் உள்ளனர். நான் அரசியல் விளையாட்டைச் சிறப்பாக விளையாடுவேன். ஏனெனில் நான் சுமார் 45 வருடங்களாக ஆட்டமிழக்காமல் விளையாடி வருகிறேன்” என ஜனாதிபதி சொன்னதும் எல்லோராலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இந்நிகழ்வில் பரிசில்களை வழங்கிக் கொண்டிருந்த ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவும் தற்செயலாக நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். “இந்த வரவு செலவுத் திட்ட விவாதங்களில் நீங்கள் பேசுவதை நான் பார்க்கவே இல்லையே? முன்னர் நீங்கள் நன்றாக தயாராகி பேசும் நாடாளுமன்ற உறுப்பினர். இந்த முறை என்ன நடந்தது" என ஜனாதிபதி கேட்டபோது, “இன்று பேசப் போகிறேன்”. எனக் கூறிவிட்டு அவர் அங்கிருந்து விலகிச் சென்றார்.

ஜனாதிபதி அவரைக் கடந்து சென்றது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் லொபியின் பக்கத்திற்காகும். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான கபீர் ஹாசிம், ரஞ்சித் மத்தும பண்டார, ஹர்ஷ டி சில்வா, காமினி வலேபொட உள்ளிட்டோர் இருந்த இடத்திற்குச் சென்ற ஜனாதிபதி, அங்கு கதிரை ஒன்றில் அமர்ந்து அவர்களுடன் உரையாடலில் கலந்து கொண்டார். அப்போது அவ்வழியே சென்ற அநுர குமார திஸாநாயக்கவைப் பார்த்து ஜனாதிபதி, “உங்களின் உரையைக் கேட்கவே வந்தேன். எங்கே நீங்கள் பேசவில்லையே?” எனக் கேட்ட போது, பதிலளித்த அநுர, “அனைத்துக்குமாகப் பேசுவதற்கு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எங்கள் நேரத்தையும் எடுத்து பேசுவார். அவர்தான் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிக்காகவும் பேசுவார்'' என்றார்.

“அப்படியாயின் நாம் அவரை வடகொரியாவுக்கு அனுப்புவோம். ஏனெனில் அங்கு உரையாற்றுவது ஒருவர் மாத்திரம்தானே” என ஜனாதிபதி கூறிய போது அங்கிருந்தவர்களால் சிரிப்பை அடக்க முடியாது போனது.

**ரணில், சஜித் சந்திப்பு**

தனது அணியினருடன் இருந்த ஜனாதிபதியைக் கண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் அவரை நோக்கி வந்தபோது ஜனாதிபதி ரணில், “நாங்கள் உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்” என்று கூறியது அனைவரையும் சிரிக்க வைத்தது.

“நான் மக்களுக்காக எதிர்க்கட்சித் தலைவருக்கான பணிகளைச் செய்கிறேன்” என சஜித் கூறிய போது, “என்றாலும் உங்களின் அரசாங்கத்தின் நிதி அமைச்சர் நாலக கொடஹேவாதானே" என ஜனாதிபதி கூறியதையடுத்து, "இல்லை, இல்லை, இன்னும் அவ்வாறில்லை" என பதிலளித்த சஜித் அங்கிருந்து விலகிச் சென்றார்.

**ஆனந்த தேரர் மற்றும் பெல்லன்வில தேரர் ஆகியோர் அரசாங்கத்துக்கு வாழ்த்து**

இதேவேளை, முருத்தெட்டுவே ஆனந்த தேரர் மற்றும் பெல்லன்வில தம்மரதன தேரரை சாகல ரத்நாயக்க ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார். இதன் போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டத்தை பாராட்டிய இரு தேரர்களும், அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் அரசாங்கம் செயற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பில் தவறான புரிதலை மக்களுக்கு ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் செயற்படுவதால் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெரிவிக்குமாறும் சாகலவிடம் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

**அடுத்த தடை தாண்டல்**

கடந்த 14ம் திகதி இரவு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் முக்கியஸ்தர்கள் பலர் அமர்ந்திருந்த ஒரு மேசையின் மீது அனைவரின் கவனமும் சென்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர, முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரான ஆர். பல்லேவெல, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன உள்ளிட்டோர் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். இதன்போது கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, “எப்படியும் எதிர்வரும் தேர்தல்களில் மொட்டுக் கட்சியே தீர்க்கமான காரணியாக அமையும்” எனத் தெரிவித்துள்ளார்.

**ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் வஜிர கூறியது,**

இந்த மேசையில் அதிக ஜனாதிபதிகள் உள்ளார்கள் என வஜிர கூறிய போது அனைவரும் சிரித்தார்கள்.

“இந்த முறை ஜனாதிபதி வேட்பாளர்கள் அதிகரித்துள்ளார்கள் என அறியக் கிடைத்துள்ளது” என்றவாறு பேச்சில் இணைந்து கொண்டார் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. அரசியலுக்கு மேலதிகமாக, வேறு பேச்சுக்களாலும் அந்த வட்டமேசை நிரம்பியிருந்ததால், பலரது கவனம் அதன் பக்கம் திரும்பியது.

எம். எஸ். முஸப்பிர்

---

# தவிச்ச வடக்கிற்கு தண்ணீர் வழங்கும் பாலியாறு

மு.தமிழ்ச்செல்வன்

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் சிறுவர் அமைப்பின் தகவல்களின் படி உலகில் வாழ்கின்ற சுமார் 8 பில்லியன் மக்களில் 2.2 பில்லியன் மக்கள் சுத்தமான மற்றும் போதுமான குடிநீர் இன்றி காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதாவது உலகில் வாழ்கின்ற மக்களில் மூன்று பேரில் ஒருவருக்கு பாதுகாப்பான குடிநீர் இல்லை.



இன்னும் சில வருடங்களில் இந்த 2.2 பில்லியன் மக்களுடன் யாழ்ப்பாண மக்களும் இணைந்துகொள்வார்கள் என்ற நிலைமையை தற்போது தடுத்திருக்கிறது பாலியாறு. பாலியாறு குடிநீர் திட்டமானது வடக்கிற்கு தண்ணீர் வழங்குகின்ற ஒரு பாரிய திட்டமாக காணப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் வவுனியா மாவட்டத்தை தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களுக்கும் பாலியாறு குடிநீர் திட்டம் மூலம் நீர் வழங்கல் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் ஏனைய நான்கு மாவட்டங்களில் உள்ள சனத் தொகையை விட யாழ்ப்பாணத்திலேயே அதிகமான மக்கள் வாழ்கின்றனர். அங்கு சுமார் 6 இலட்சத்து 26 ஆயிரம் பேர் உள்ளனர். இங்குள்ள மக்கள் முழுக்க முழுக்க தங்களது நீர்த் தேவையினை நிலத்தடி நீரின் மூலமே பூர்த்தி செய்து வருகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரோ பாதுகாப்பற்றதாக மாறிச்செல்கிறது. குடாநாடு என்பதனால் நன்னீர் உவராக மாறும் தன்மை அதிகரித்து செல்வது, அதிக சனத்தொகை என்பதனால் அடர்த்தி மிக்க குடியிருப்புகள் காரணமாக நிலத்தடி மாசுப்படுதல் (மலக்கழிவுகள் நிலத்தடி நீரில் அதிகம் கலந்திருப்பது), நிலத்தடி நீர் குறைவடைந்து செல்வது போன்ற நிலைமைகளால் யாழ்ப்பாணத்தின் குடிநீர் என்பது இன்னும் சில வருடங்களில் கேள்விக்குள்ளாகும் நிலையிலேயே இருக்கிறது.

வடக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களில் குளங்கள், ஆறுகள் என்பன அதிகமாக காணப்படுகிறது. அதனால் அந்தந்த மாவட்டங்களில் மக்கள் தங்களது நீர்த்தேவைக்காக நிலத்தடி நீரை மட்டுமன்றி ஆறுகள், குளங்களையும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த நிலைமை இல்லை. இதன்காரணமாக யாழ்ப்பாணத்தின் குடிநீர் உள்ளிட்ட நீர்த்தேவை தொடர்பில் பல காலங்களாக அதிகம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தின் நீர்த்தேவையினை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ள போதும் அவற்றின் சாதக, பாதக காரணிகளை கருத்தில் கொண்டு பாலியாறு திட்டத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 2024ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் அரசு முன்னாய்ந்த நடவடிக்கைகளுக்கு 250 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.



**பாலியாறு**

இலங்கையின் வடக்கே வட மாகாணத்திற்குள் காணப்படுகின்ற ஓர் ஆறு. 68.4 கிலோ மீற்றர் நீளமுள்ள பாலியாறு வவுனியா மாவட்டம் புளியங்குளத்தில் ஆரம்பித்து வடக்கு மற்றும் வடமேற்கு திசை நோக்கி முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை கடந்து கடலுக்குள் கலக்கிறது.

**பாலியாறு குடிநீர் திட்டம்**

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாற்றை வழி மறித்து 4.6 கிலோமீற்றர் நீளமும், 41 அடி உயரமும் கொண்ட மண் அணைக்கட்டு அமைக்கப்பட்டு உருவாக்கப்படவுள்ள நீர்த் தேக்கமாகும்.

1 இலட்சத்து 18363 ஏக்கர் (479 சதுர கிலோ மீற்றர்) பரப்பளவு நீரேந்து பிரதேசங்களில் வருடந்தோறும் 1317 மில்லி மீற்றர் சராசரி மழைவீழ்ச்சியிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற நீரைக்கொண்டு 2562 ஏக்கர் பரப்பளவில் இந்த நீர்த்தேக்கம் அமைக்கப் படவுள்ளது. தற்போது இவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற மழை நீரானது வருடத்திற்கு 151 எம்சிஎம் அளவு எந்தவித பயனும் இன்றி வீணாக கடலில் சேர்கிறது.

பல மில்லியன் ரூபா செலவில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியாறு நீர்த்தேக்கத்திலிருந்து வருடம் ஒன்றுக்கு 41.2 எம்சிஎம் அளவு நீர் குடிநீருக்கு பெறப்படும் அதாவது நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் மீற்றர் கியூப் நீர் குடிநீருக்காக பெறப்படும்.

**பயன்பெறும் பிரதேசங்கள்**

அமைக்கப்படவுள்ள பாலியாறு குடிநீர் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண மாவட்டமும், கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளும், இத்திட்டத்தின் மூலம் குடிநீர் பெறவுள்ளன.

**திட்டத்தின் ஏனைய நன்மைகள்**

பாலியாறு குடிநீர் திட்டத்தினால் பின்வரும் நன்மைகள் ஏற்படும் என திட்டம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

358 ஹெக்ரெயருக்கு விவசாய நடவடிக்கைகளுக்கான நீர்ப்பாசனம்.

வருடம் ஒன்றுக்கு 800,000 மெட்றிக்தொன் மீன் பிடி.

சுற்றுலா பயணிகள் வருகையின் மூலமான வருமானம்.

மிதக்கும் சூரிய சக்தி மூலமான மின்சார உற்பத்தி.

சுற்றுச்சூழல் நன்மை கருதி செக்கனுக்கு 08 மீற்றர் கியூப் நீர் வெளியேற்றப்படுகின்றமை.

நிலம் உவராகி வருகின்றமையினை தடுத்தல்.

நீரை தேக்குவதன் மூலம் ஏற்படும் மக்களின் குடிபெயர்ச்சி இன்மை.

**திட்டத்தின் சவால்கள்**

பாலியாறு திட்டம் நடைமுறைக்கு வருகின்ற போது நீர் சேமிக்கப்படுகின்ற 2562 ஏக்கர் நிலப்பரப்பில் காணப்படுகின்ற அடர்த்தியற்ற ஒதுக்கப்பட்ட காடுகள் நீருக்குள் சென்றுவிடுகின்ற நிலைமை ஏற்படும்.

நீர்த்தேக்க பகுதிகள் ஒதுக்கப்பட்ட காடுகள் என்பதனால் வனவளத் திணைக்களத்தின் அனுமதி பெறுவது மற்றும் இப்பாரிய முதலீட்டுத் திட்டத்திற்கான நிதி மூலங்களை கண்டுபிடித்தல் என்பன சவால்களாகக் கருதப்படலாம்.



**வடக்கு குடிநீருக்கான பொருத்தமான திட்டம்**

இந்தத் திட்டமானது ஒப்பீட்டு ரீதியில் வடக்கின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு பொருத்தமான திட்டமாக காணப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கான குடிநீருக்கு ஆறுமுகம் திட்டம், இரணைமடு திட்டம், கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம், வடமராட்சி நீர்த்தேக்கம், பாலியாறு திட்டம் என பல திட்டங்கள் ஆராயப்பட்டன. ஆனால் அந்த திட்டங்களில் எல்லாம் பல்வேறு சவால்கள், பிரச்சினைகள் ஏற்பட்டன. நடைமுறைப்படுத்துவதில் சமூக பொருளாதார நெருக்கடிகள் உருவாகின.

ஆனால் பாலியாறு திட்டத்தின் மூலம் அவ்வாறான எந்தப் பிரச்சினைகளும் ஏற்படவில்லை, அனைத்து தரப்பினரதும் கருத்துக்களும், உள்வாங்கப்பட்டு அவர்களது ஒப்புதலுடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டதே இதன் வெற்றியாகும். பாலியாறு திட்டத்தின் ஊடான நீர் பங்கீட்டில் கூட எவ்வித சவால்களும் உருவாகவில்லை. ஆகவே பாலியாறு திட்டம் குடிநீருக்கு தவிச்ச வடக்குக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு தண்ணீர் வழங்கும் ஒரு பொருத்தமான திட்டமே.

# இணக்கப்பாட்டுக்கு வழியேற்படுத்துமா இமயமலை பிரகடனம்?

**பொருளாதார ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை படிப்படியாக அதிலிருந்து மீண்டெழுந்து வருவதற்கு அரசாங்கம் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகிறது. நாட்டின் மீட்சிக்குப் பொருளாதார ஸ்திரத்தன்மை மாத்திரமன்றி, அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையும் மிகவும் அவசியம் என்ற விடயம் பல்வேறு தரப்பினரால் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

குறிப்பாக பல்வேறு தசாப்தங்களாக இழுபறியில் இருந்து வருகின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அரசியல் ஸ்திரத்தன்மைக்கு முக்கியம் என்பதுடன், இனங்களுக்கிடையில் சந்தேகங்கள் நீக்கப்பட்டு நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதும் காலத்தின் தேவையாகும்.

இந்த அடிப்படையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட முயற்சியொன்று அரசியல் அரங்கத்தில் தற்போது பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

'உலகத் தமிழர் பேரவை' எனப்படும் புலம்பெயர்ந்துவாழ் தமிழர் அமைப்புக்கும், சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் பௌத்த தேரர்கள் அமைப்புக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள 'இமயமலைப் பிரகடனம்' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மகாசங்கத்தினர், அனைத்து அரசியல் கட்சிகள், சர்வமதத் தலைவர்கள் எனப் பல்வேறு தரப்பினரிடமும் கையளிக்கப்பட்டிருந்தது.

உலகத் தமிழர் பேரவைக்கும் சிறந்த இலங்கைக்கான சங்க அமைப்பின் பௌத்த தேரர்கள் குழுவுக்கும் இடையில் கடந்த ஏப்ரல் மாதம் நேபாளத்தில் இந்த 'இமயமலைப் பிரகடனம்' கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைத் தீர்வு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் பொறிமுறை உள்ளிட்ட பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் பிரகடனம் அமைந்துள்ளது.

இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற இனப்பிரச்சினைத் தீர்வுகள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும் தரப்பினராக பௌத்தமதத் தலைவர்கள் காணப்படுகின்றனர். இவ்வாறான முயற்சிகளுக்கு அவர்களே குழப்பம் விளைவிக்கின்றனர் என்ற சந்தேகம் தமிழ் சமூகத்தின் மத்தியில் காணப்படுகிறது.

அதேநேரம், 'டயஸ்போரா' என அழைக்கப்படும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் எப்பொழுதும் பிரிவினைவாதத்தை விரும்பும், இலங்கையின் ஐக்கியத்தைக் குலைக்கும் நிலைப்பாட்டைக் கொண்ட தரப்பினர் என்ற பாரியதொரு அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இவ்வாறு இரண்டு தரப்புக்கும் இடையில் காணப்படும் சந்தேகங்களை நீக்கி, இடையூறு விளைவிப்பவர்கள் எனக் குற்றம் சாட்டப்படும் இரண்டு தரப்பினரும் முன்வந்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருப்பது சிறந்ததொரு ஆரம்பமாக இருக்கும்.

இந்த இமயமலைப் பிரகடனம் ஆறு முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

(1) எந்தவொரு சமூகமும் அதன் அடையாளத்தையும் பெருமையையும் இழக்க நேரிடும் என்ற அச்சுறுத்தலை உணராத வகையில் நாட்டின் பன்முகத் தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

(2) பொருளாதார நெருக்கடியை முறியடித்து, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருத்தமான அபிவிருத்தி மாதிரியைத் தேர்ந்தெடுப்பது, கடல்கடந்துள்ள இலங்கையர்கள் மற்றும் பிறரிடமிருந்து ஈடுபாடு மற்றும் முதலீட்டை எளிதாக்குதல், நாடு வளர்ச்சிப் பாதையில் இருப்பதை உறுதிசெய்து, இலங்கையை நடுத்தர வருமானம் கொண்ட நாடாக மாற்றுதல்.

(3) தனிநபர் மற்றும் கூட்டு உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் மற்றும் அனைத்து மக்களிடையே சமத்துவம் மற்றும் சமமான குடியுரிமையை ஊக்குவிக்கும் புதிய அரசியலமைப்பை உருவாக்குவது, பொறுப்புக்கூறும் நிறுவனங்களை உறுதிசெய்து, மாகாணங்களுக்கு போதுமான அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துவது. அதுவரை தற்பொழுதுள்ள அரசியலமைப்பில் காணப்படும் அதிகாரப் பகிர்வு விதிகளை உண்மையாக செயல்படுத்துவதில் கவனம் செலுத்தல். (4) ஒன்றுபட்ட மற்றும் பிரிக்கப்படாத நாட்டில் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல். மக்களின் மத, கலாசார மற்றும் பிற அடையாளங்களை ஏற்றுக்கொண்டு அந்த அடையாளங்களை மதித்து, இனக்குழுக்கள் மற்றும் மதக்குழுக்களுக்கு இடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதில் பணியாற்றுதல்.

(5) நல்லிணக்கமும் அதன் கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வதற்கும் அர்ப்பணிப்பும் உள்ள இலங்கையை கற்பனை செய்து, அத்தகைய துன்பங்கள் மீண்டும் ஏற்படாதவாறு பொறுப்புக்கூறல் உள்ளிட்ட நடவடிக்கைகளை உருவாக்குதல்.

(6) இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச கடமைகளுக்கு இணங்குதல், சுதந்திரமான மற்றும் ஆற்றல்மிக்க வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் உலகின் ஜனநாயக, அமைதியான மற்றும் வளமான நாடுகளின் மத்தியில் நாடு அதன் பெருமையைப் பெறுவதை உறுதி செய்தல்.

## உலகத் தமிழர் பேரவையும், பௌத்த சங்கத்தினரும் இணைந்து முன்னெ–டுக்கும் இனஐக்கியத்துக்கான முயற்சி!





## தீர்வுகளைக் குழப்புவதற்கு வழமை போன்று மறைமுகத் திட்டங்கள்!

இத்தகைய விடயங்களுக்கே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கடந்த கால அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டிருந்த உலகத் தமிழர் பேரவையின் மீதான தடை நீக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் இலங்கைக்கு வருவதற்கான சாதகமான வழி ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறந்தொரு ஆரம்பமாக அமைகிறது.

அது மாத்திரமன்றி, இந்தப் பிரகடனத்தை இரு தரப்பினரும் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்திருந்ததுடன், இதன் பின்னர் மக சங்கத்தின் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக வடக்கிற்குச் சென்று அங்குள்ள சர்வமதத் தலைவர்களிடமும் இந்தப் பிரகடனம் கையளிக்கப்பட்டிருந்தது. அது மாத்திரமன்றி பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்த இந்தக் குழுவினர், இமயமலைப் பிரகடனத்தைக் கையளித்திருந்ததுடன், ஒட்டுமொத்த அரசியல் கட்சிகளினதும் ஆதரவு இதற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்களுக்கும் இதன் பிரதிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

இது தவிரவும் குறித்த பிரகடனத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கையளிக்கும் நிகழ்வில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டிருந்த பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த முயற்சிக்கு ஆதரவாகக் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களை 'டயஸ்போரா' என அழைப்பதை விடுத்து, அவர்களையும் எமது நாட்டின் ஒரு சமூகத்தினராக ஏற்றுக்கொள்ளும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இதில் சரத் வீரசேகர போன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமது சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டிருந்தனர். இந்தக் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரும், சிரேஷ்ட தமிழ் தலைவருமான இரா.சம்பந்தனையும் சந்தித்து இதனைக் கையளித்திருந்தனர். இந்த முயற்சியை ஒரு ஆரம்பமாகக் கருதி இதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

தாம் எடுத்திருக்கும் இந்த முயற்சியை அரசியல் கட்சி என்ற சார்பில் அணுகாது பொதுமக்கள் சார்பில் அதாவது இனங்கள் சார்பில் எடுக்கப்படும் முயற்சியாகப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பயனளிக்காது போன நிலையில் மற்றுமொரு முயற்சியாக இதனை முன்னெடுத்திருப்பதாக உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த முயற்சி வெற்றியளிக்குமா இல்லையா என்பது தெரியாதபோதும் இதய சுத்தியுடன் தாம் முயற்சியை எடுத்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதும், இந்த முயற்சிக்கு அரசியல் சாயம் பூசுவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முயற்சிக்கின்றனர். கடந்த காலத்தில் பல்வேறு முயற்சிகளுக்கு எதிர்ப்பினைத் தெரிவித்துவரும் தரப்பினராக இவர்கள் காணப்படுகின்றனர். மக்களை உருவேற்றி அதன் ஊடாக தமது அரசியலைக் கொண்டு செல்வதே அவர்களின் நோக்கமாகும்.

இந்தப் பிரகடனம் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் கையளிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களும் இந்த முயற்சியை வரவேற்றுள்ளனர். இந்த முயற்சி இதய சுத்தியுடன் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி நாட்டை சரிவிலிருந்து மீட்க முடியும் என்றே கருதப்படுகின்றது.

பி.ஹர்ஷன்...

# ஐ.நா செயலாளரின் விசேட அதிகாரத்தை தகர்த்தெறிந்த அமெரிக்க Veto Power!




**காஸா மீது 68 நாட்களுக்கும் மேலாக இஸ்ரேல் முன்னெடுத்து வரும் யுத்தமானது உலகின் கவனத்தை உச்சளவில் ஈர்த்துள்ளது. இந்த யுத்தத்திற்கு எதிராக உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கபட்டுவரும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் மாத்திரமல்லாமல், ஐ.நா. தீர்மானங்களும் நாடுகளின் வலியுறுத்தல்களும் இதற்கு நல்ல சான்றுகளாக அமைந்துள்ளன.**

இந்நிலையில், காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மற்றொரு தீர்மானத்தை கடந்த செவ்வாயன்று (12.12.2023) நிறைவேற்றியுள்ளது. சுமார் 100 நாடுகளின் ஆதரவுடன் எகிப்து கொண்டு வந்த இத்தீர்மானத்திற்கு 153 நாடுகள் ஆதரவளித்துள்ளன. 10 நாடுகள் எதிராக வாக்களித்த இத்தீர்மானத்திற்கு வாக்களிப்பதில் இருந்து 23 நாடுகள் தவிர்ந்து கொண்டன.

இத்தீர்மானமானது ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.ஈ) தலைமையில் ஐ.நா பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு கடந்த 08 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா செல்லுபடியாக்கியதைத் தொடர்ந்து, 4 நாட்களுக்குள் ஐ.நா பொதுச்சபைக்கு கொண்டு வரப்பட்டு அறுதிப் பெரும்பான்மையுடன் இதேவிதமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதி ஐ.நா. பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட, காஸாவில் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானத்திற்கு 120 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 45 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள யுத்தநிறுத்த தீர்மானத்திற்கு 153 நாடுகள் ஆதரவளித்துள்ளதோடு, வாக்களிப்பில் கலந்து கொள்ளாத நாடுகளின் எண்ணிக்கை 23 ஆகக் குறைவடைந்துள்ளது.

இப்போருக்கு எதிராக இஸ்ரேல் ஐ.நாவில் எதிர்கொள்ளும் அழுத்தங்களும் நெருக்குதல்களும் அதனை சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுவதை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதே இராஜதந்திர நிபுணர்களின் கருத்தாகும்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர், 'சர்வதேசஆதரவு கிடைக்கின்றதோ இல்லையோ யுத்தநிறுத்தத்திற்கு இடமில்லை' என்றுள்ளார். இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேல் உலக நாடுகளின் ஆதரவை இழந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபையில் பெரும்பான்மை ஆதரவுடன் உடனடி யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், யுத்தம் நிறுத்தப்பட்டதாக இல்லை.




23 இலட்சம் பலஸ்தீன மக்களைக் கொண்ட காஸாவில் 19 இலட்சம் மக்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் பனியிலும் குளிரிலும் மழையிலும் நனைந்தபடி போதிய அடிப்படை வசதியற்ற முகாம்களில் தங்கியுள்ளனர். 18,500 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்களைக் காவு கொண்டுள்ள இப்போரினால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள காயமடைந்துள்ளனர். 135 ஐ.நா. ஊழியர்களும் 87 ஊடகவியலாளர்களும் கூட இந்த யுத்தம் காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் ஒரு இலட்சம் கட்டடங்கள் சேதமடைந்தும் அழிவுற்றும் உள்ளதாக ஐ.நா மதிப்பிட்டுள்ளது.

காஸா மக்களுக்கான குடிநீர், மின்சாரம், மருந்துப் பொருட்கள், உணவு என்பவற்றைத் தடுத்து நிறுத்தியபடி முன்னெடுக்கப்படும் இப்போரில் மக்கள் குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், ஐ.நா நலன்புரி நிலையங்கள், வைத்தியசாலைகள், பொதுக்கட்டடங்கள் என அனைத்தும் இலக்காகியுள்ளன.

இதனால் மரணங்களும் காயங்களும் இழப்புக்களும் நிறைந்த பூமியாகியுள்ளது காஸா. மக்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர். உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உடுத்த உடையுடன் பரிதவித்துத் திரிகின்றனர். இந்த யுத்தத்தினால் காஸா மக்கள் முகம்கொடுத்துள்ள அவலம், நெருக்கடி உலகின் அனைத்து மக்களையும் கவலைக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியுள்ளன. அதன் விளைவாக யுத்தத்தை உடனடியாக நிறுத்தக் கோரி உலகெங்கிலும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன. ஐ.நா. செயலாளர் நாயகம், பாப்பரசர் உள்ளிட்ட உலகத் தலைவர்களும் இப்போரை நிறுத்தக் கோரி வருகின்றனர். அமெரிக்காவின் மாநாட்சி மன்றங்கள் பலவும் இது தொடர்பில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

## 39 வருட காலத்துக்குப் பின்னர் பயன்படுத்தப்பட்ட ஆர்டிகல் 99!

இவை எதனையும் இஸ்ரேல் கண்டு கொள்வதாக இல்லை. இந்நிலையில் ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டடெஸ் ஆர்டிகல் 99 ஐ பிரகடனப்படுத்தி ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு எழுத்துமூலம் அறிவித்தார். ஐ.நாவின் ஆர்ட்டிகல் 99 என்பது ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அடிப்படையில் செயலாளர் நாயகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களில் ஒன்றாகும். உலகின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எதுவொன்றைக் குறித்தும் ஐ.நா உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவர செயலாளர் நாயகம் இதனைப் பயன்படுத்துவது வழமை.

ஐ.நா.வின் உண்மையான அதிகாரம் பாதுகாப்பு சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளிடம் உள்ளது. என்றாலும் கூடுதல் அதிகாரத்தை செயலாளர் நாயகத்திற்கு ஆர்டிகல் 99 வழங்கியுள்ளது. அதற்கேற்ப காஸாவில் மனித பேரழிவுக்கான அபாயம் நிலவுவதாகக் குறிப்பிட்டு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு எழுத்துமூலம் அழைப்பு விடுத்துள்ள அவர், மனிதாபிமான போர்நிறுத்த தீர்மானம் அவசரமாக நிறைவேற்றப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வதிகாரம் மிகவும் அரிதாக பயன்படுத்தப்படுவது வழமையாகும். இற்றைவரையும் நான்கு தடவைகள்தான் இவ்வதிகாரம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

உலகின் பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் யு.ஏ.ஈ 100 நாடுகளின் இணை அனுசரணையோடு காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்திற்கான பிரேரணை ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலுக்கு 2023.12. 08 ஆம் திகதி கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பிரேரணைக்கு 13 நாடுகள் ஆதரவளிக்க, பிரித்தானியா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்பிரரேரணையை செயலிழக்கச் செய்தது. அதன் ஊடாக உடனடி யுத்தநிறுத்த முயற்சி தகர்ந்து போனது.

அமெரிக்காவின் இச்செயற்பாடு உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாகியது. அமெரிக்கர்கள், இஸ்ரேலியர்கள் உட்பட உலகெங்கிலும் இந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரிவரும் சூழலில், அமெரிக்காவின் இச்செயற்பாடு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமது நட்பு நாடுகளான சவுதி, யூ.ஏ.ஈ போன்றவற்றின் வேண்டுகோளையும் மீறி அமெரிக்கா இதனைச் செய்துள்ளது.

காஸாவிலுள்ள பலஸ்தீன மக்கள் இவ்வாறு தண்டிக்கப்படுவதற்கு அவர்கள் செய்த குற்றம்தான் என்ன? ஹமாஸை தண்டிப்பதற்காக் கூறி பொதுமக்களை தண்டிப்பதற்கு எவ்வாறு அனுமதிக்கப்படுகிறது என்ற கேள்வியும் உலக மக்கள் மத்தியில் காணப்படுகிறது.

அதனால் ஜனநாயகத்திற்காகவும் மனித உரிமைகளுக்காககவும் அதிகம் குரல் கொடுக்கும் அமெரிக்கா, காஸா மீதான யுத்தத்திலும் அதனை வலியுறுத்தவும் யுத்தநிறுத்தம் ஏற்படவும் வழிவகுக்கவும் வேண்டும். அதுவே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.



மர்லின் மரிக்கார்...





## காஸாவில் உடனடி யுத்தநிறுத்தம் கோரும் ஐ.நா. தீர்மானங்களை அலட்சியப்படுத்தும் இஸ்ரேல்!

**நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழுந்து வருவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ், முதலாவது மீளாய்வுக்குக் கிடைத்திருக்கும் அங்கீகாரம் இதனைப் பறைசாற்றுகின்றது.**




**2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை அரசுக்கு கிடைத்துள்ள வெற்றி!**

# அரசு முன்னெடுக்கும் மறுசீரமைப்புகளுக்கு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் அங்கீகாரம்!




48 மாத காலத்தைக் கொண்ட இத்திட்டத்தில் இரண்டாம் தவணையாக 337 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்குவதற்கான இணக்கப்பாடு வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் திருப்திகரமாக அமைந்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருப்பதானது நாடு சரியான பாதையை நோக்கி நகர்ந்து வருகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

தாம் மேற்கொண்ட மீளாய்வில் வரி வருவாயை அதிகரிக்கும் விடயம் தவிர்ந்த ஏனைய அனைத்துக் குறிகாட்டி இலக்குகளும் ஜூன் மாத இறுதியில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது. ஒக்டோபர் மாத இறுதியளவில் எட்டப்பட வேண்டிய கட்டமைப்புசார் அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, ஆளுகையினைக் கண்டறிகின்ற அறிக்கையை அதிகாரிகள் வெளியிட்டு, ஆசியாவில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையினைக் கண்டறிகின்ற செயற்பாட்டினை மேற்கொண்ட முதலாவது நாடாக இலங்கையினைத் தடம்பதிக்கச் செய்திருப்பதையும் சர்வதேச நாணய நிதியம் வெகுவாகப் பாராட்டியுள்ளது.



படுகடன் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினை மீட்டெடுத்தல், அரசிறையினை அதிகரித்தல், ஒதுக்குத் தாங்கியிருப்புக்களை மீள்கட்டமைத்தல், பணவீக்கத்தினைக் குறைத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல் என்பவற்றை நோக்கி அதிகாரிகள் பாராட்டத்தக்க முன்னேற்றத்தினை மேற்கொண்டிருப்பதாக சர்வதே நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் முதலாவது தவணை ஏற்கனவே கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இரண்டாவது தவணையைப் பெறுவதற்கு கடன் மறுசீரமைப்பில் இணக்கப்பாடு அவசியம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைக்குப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்த நிலையில், கடந்த வாரம் சர்வதேச கடன்படுனர்களும் கடன்மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்தனர்.

'உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு மற்றும் சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி என்பவற்றுடனான படுகடன் கையாளல் குறித்த இலங்கையின் கோட்பாட்டு ரீதியிலான உடன்படிக்கைகள் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி இலக்குகளுடன் இசைந்து காணப்படுகின்றன. அவை இலங்கையின் படுகடனை நிலைபேறான பாதையை நோக்கிச் செலுத்துவதில் முக்கியமானதொரு மைல்கல்லாகும்.

உத்தியோகபூர்வ கடன்வழங்குநர்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை விரைவாக நிறைவு செய்தல் மற்றும் கையொப்பமிடுதல் என்பன முக்கியமானதொன்றாகும். ஒப்பிடத்தக்க நியதிகள் தொடர்பில் வெளிநாட்டுத் தனியார் கடன்வழங்குநர்களுடன் தீர்மானமொன்றினை எட்டுதலுடன் இணைந்து உடன்படிக்கைகளின் காலந்தவறாத நடைமுறைப்படுத்தலானது இலங்கையின் படுகடன் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையினை நடுத்தர காலத்தில் மீட்டெடுக்க வேண்டும்' என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கெஞ்சி ஒகாமுரா தெரிவித்திருந்தார்.

முழுமையான மற்றும் விரைவான மீட்சியினை நிச்சயப்படுத்துவதற்கு மறுசீரமைப்பு உத்வேகத்தினையும் மறுசீரமைப்புக்களின் வலுவான உரித்தினையும் நீடித்துநிலைபெறச் செய்வதானது மிக முக்கியமானதொன்றாகும்.

அரசிறைத் திரட்சியினை மேம்படுத்தல், செலவினங்களுடனான வலு விலையிடலை ஒத்திசைவாக்குதல், சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை வலுப்படுத்தல், வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீளுருவாக்குதல், நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாத்தல், ஊழலை ஒழித்தல் மற்றும் ஆளுகையினை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு முக்கிய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் அரசிறை வருமானத்தை அதரிக்க வேண்டியதன் அவசியத்தை சர்வதேச நாணய நிதியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. நிறைவேற்றப்படாத இலக்குகளில் வரி வருமானமே காணப்படுகிறது. இதனை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாட்டை மீட்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு முக்கியமானதாக அமையும் என்று வலியுறுத்தியுள்ள சர்வதேச நாணய நிதியம், பணவீக்க இலக்கிடல் முறையில் மத்திய வங்கி தொடர்ந்தும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்பட வேண்டிய தன் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது.

'வங்கி மீள்மூலதனவாக்கத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிதியியல் மேற்பார்வை மற்றும் நெருக்கடி முகாமைத்துவக் கட்டமைப்பை வலுப்படுத்தல் என்பன நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு அத்தியாவசியமானவை. சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களை மேலும் வலுப்படுத்தல் மற்றும் சமூகச் செலவிடுதலைப் பேணுதல் என்பன வறிய மற்றும் பாதிப்படையக் கூடியவர்களைப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்தும் இன்றியமையாதது' என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கெஞ்சி ஒகாமுரா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அறிவிப்பானது இக்கட்டான நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அங்கீகாரமாகவும், உத்வேகமாவும் அமைந்துள்ளன. இலங்கை அரசாங்கத்தின் அரசிறை அதாவது வரி வருவாயை அதிகரிக்க வேண்டும் என்ற விடயத்தை சர்வதேச நாணய நிதியம் மீண்டும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இதற்கான நடவடிக்கையை ஏற்கனவே எடுத்துள்ளது. குறிப்பாக சேர்பெறுமதி வரி 15 வீதத்திலிருந்து 18 வீதமாக எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து அதிகரிக்கப்படுகின்றது. கடந்த காலத்தில் சேர்பெறுமதி வரி அல்லது வற் வரி விலக்களிக்கப்பட்டிருந்த பல பொருட்களுக்கு வரி விலக்களிப்பு நீக்கப்படுகிறது.

## ஆசியாவில் பன்னாட்டு நாணய நிதியத்தின் ஆளுகையைக் கண்டறியும் செயற்பாட்டை மேற்கொண்ட முதலாவது நாடான இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இது மேலும் சுமையை அதிகரிப்பதாக இருந்தாலும், நாட்டைப் பாதிப்பிலிருந்து மீட்பதற்கு இன்றியமையாத நடவடிக்கையாக அமைகிறது. இலங்கை வரி விடயத்தில் நீண்டகாலமாக சரியாகச் செயற்பட்டிருக்காமையே இந்த நிலைமைக்குக் காரணமாகும். உறுதியான வரிக்கொள்கையொன்றுஇல்லையென்பது கடந்த பல வருடங்களாகச் சுட்டிக்காட்டப்பட்டு வந்தபோதும், அவ்வப்போது ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் தம்மை ஜனரஞ்சகமாக்கிக் கொள்வதற்காக வரி என்ற விடயத்தை ஆயுதமாகப் பயன்படுத்தினர். உதாரணமாகக் கூறுவதாயின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், தமது அரசியல் நிலைப்பை வெளிக்காட்டுவதற்காக வற் வரியை குறைத்தது. நாடு படுமோசமாகப் பாதிக்கப்படுவதற்கு இது பிரதான காரணமாக அமைந்தது.

## உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைக்குப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்த நிலையில், கடந்த வாரம் சர்வதேச கடன்படுனர்களும் கடன்மறுசீரமைப்புக்கு இணக்கம்

இவ்வாறான பின்னணியில் விரும்பியோ விரும்பாமலோ அரசாங்கம் தனது வரி வருவாயை அதிகரிக்க வேண்டிய கடப்பாட்டுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த வலயத்தில் ஒப்பிடுகையில் இலங்கையே குறைந்த வரி அறவீட்டைக் கொண்ட நாடாக இருக்கின்றது. வரி வருவாயைப் பொறுத்தவரையில் இலங்கையானது நேரடி வரிகளை விட மறைமுக வரிகளையே அதிகம் கொண்டுள்ளது.

அது மாத்திரமன்றி, கடந்த காலங்களில் செல்வந்தர்கள் மற்றும் அதிக பணமீட்டுபவர்களுக்கு ஏற்ற வகையில் வரி அறவீடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக அனைத்து மட்டங்களிலும் உள்ளவர்களுக்கு சமமான வரி அறவீட்டையே மேற்கொண்டு வந்தது. இதனால் வருமானம் குறைந்தவர்கள் அதிகம் பாதிக்கப்பட்டதுடன், நடுத்தர வருமானம் ஈட்டும் தரப்பினரும் சவால்களுக்கு முகங்கொடுத்தனர்.




இவ்வாறான நிலையில், அரசாங்கம் தற்பொழுது வற் வரியை அதிகரிக்க எடுத்திருக்கும் நடவடிக்கையும் விலைவாசி அதிகரிப்புக்கு வழிகோலும் என்பது பலருடைய கருத்தாக இருக்கின்றது. எனவே, நாடு பொருளாதார ரீதியில் ஓரளவுக்கு ஸ்திரமான நிலையை எட்டியதும் இவ்வாறான வரி முறைகள் மறுசீரமைக்கப்பட்டு நாட்டுக்கு நிலையான வரிக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதேநேரம், அரசாங்கம் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் நோக்கில் முன்னெடுக்கும் மறுசீரமைப்புக்களை எதிர்க்கட்சிகள் தமது சொந்த அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப் பார்க்கின்றன. இதனால் மக்கள் மத்தியில் தேவையற்ற சந்தேகங்களை அவர்கள் உருவாக்கிவிடுகின்றனர். இவ்வாறான தனிப்பட்ட அரசியல் காய்நகர்த்தல்கள் ஒட்டுமொத்த நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்துவதைவிட தேவையற்ற குழப்பங்களுக்கே வழிவகுக்கும்.

இது இவ்விதமிருக்க, 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாவது மதிப்பீடு கடந்த நவம்பர் 21ஆம் திகதி நிறைவேற்றப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது மதிப்பீடு கடந்த புதன்கிழமை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும், எதிராக 81 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது நடுநிலை வகித்திருந்தார். இதற்கு அமைய 41 மேலதிக வாக்குகளால் வரவுசெலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

மக்களுக்குப் பெருமளவு மானியங்களை வழங்கும் வரவுசெலவுத் திட்டமாக இது அமையாத போதும், நீண்டகால ஸ்திரத்தன்மையை நோக்காகக் கொண்டு இதனை அரசாங்கம் தயாரித்துள்ளது. அடுத்த வருடம் நடைபெறக்கூடிய தேர்தல்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்டம் என எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றபோதும், அவ்வாறான முன்மொழிவுகள் எதனையும் இதில் காணக்கூடியதாக இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகாலக் கொள்கைத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில், கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் முன்னேற்றத்தை எட்டுவதற்கான முன்மொழிவுகளைக் கொண்டதாக இது அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வரவுசெலவுத்திட்டத்துக்கு அரசாங்கம் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையும் கிடைக்கவுள்ளது. அரசாங்கம் முன்னெடுத்துள்ள மறுசீரமைப்புப் பணிகளுக்கு இவை இரண்டும் நிச்சயம் பக்கபலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எதுவாக இருந்தாலும், ஊழல் மோசடிகள் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இது விடயத்தில் அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு மக்களின் நம்பிக்கையை வெல்லக் கூடிய வகையில் ஊழல் ஒழிப்பு விடயத்தை அரசாங்கம் கையாளுமாயின் நாட்டை அனைவரும் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்ப முடியும் என்பதே மக்களின் நம்பிக்கையாகும்.

**வரி விடயத்தில் இலங்கை நீண்டகாலமாக சரிவர செயற்பட்டிருக்காமையே நெருக்கடிக்குக் காரணம். உறுதியான வரிக்கொள்கை அவசியம். அவ்வப்போது அதிகாரத்துக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் தம்மை ஜனரஞ்சகமாக்-கிக் கொள்வதற்காக வரி என்ற விடயத்தை ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர்**



# வெள்ளத்தில் மூழ்கும் கிளிநொச்சி, முல்லைத்தீவு

## விவசாயமும் முற்றாக அழிவடையும் நிலையில்

## திறக்கப்பட்டுள்ள இரணைமடுவின் 14 வான் கதவுகள்

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதாவது கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய இரு தினங்களிலும் பல கிராமங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருக்கின்றது.



விவசாய நிலங்கள் பல வெள்ளத்தில் மூழ்கி இருக்கின்றது. அது மட்டுமல்லாது பலரது வாழ்விடங்கள் பாதிக்கப்பட்டும் உள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்துக்கான நீர்வரத்து மேலும் அதிகரிப்பதனால் அதன் 14 வான் கதவுகளும் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

இதனால் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. தற்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக 394 குடும்பங்களைச் சேர்ந்த 1234 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் தற்காலிகமாக உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் உலர் உணவு வழங்குவதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதே போன்று கடந்த வெள்ளிக்கிழமை நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு, துணுகாய் ஆகிய பிரதேசங்களிலே அதிகளவான மழை பதிவாகி இருக்கின்றது.









இதனால் குறித்த பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்புகள் அதிக அளவில் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக மாந்தை கிழக்கையும் துணுக்காய் பிரதேசத்தையும் இணைக்கின்ற தரைவழிப்பாதைகளான விநாயகபுரம், பாண்டியன் குளம், சிவபுரம், பாண்டியன் குளம் வீதிகளை குறுக்கறுத்து பாலியாற்று நீர் பாய்வதனால் பாதைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.



இரண்டு நாட்களுக்கு மேலாக குறித்த வீதிகள் துண்டிக்கப்பட்டு காணப்படுகின்றன. இதைவிட பாதிக்கப்பட்ட சிலர் உறவினர், நண்பர்கள் வீடுகளிலே தங்கி இருக்கிறார்கள் கடந்த காலங்களிலும் வெள்ளம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இவ்வாறான பாரதூரமான அளவில் எதுவும் ஏற்படவில்லை நான்கு வருடத்துக்கு ஒரு தடவை இவ்வாறான வெள்ளப் பாதிப்புகள் ஏற்படுவதாக குறித்த பகுதிகளில் உள்ள வயோதிபர்கள் பலர் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் நீர்த் தேக்கங்களில் இருந்து நீர் வெளியேறுதல், வான் பாய்தல் மற்றும் வெள்ள அனர்த்தங்களை பார்வையிடுவதற்கு செல்வோர், தங்களுடைய பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு அவதானமாக செயல்படுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இதே நேரம் தற்போது குறித்த சில பிரதேசங்களில் குளங்களில் நீர்க்கசிவுகளை கட்டுப்படுத்தும் வகையில் ஆபத்தான நிலையில் உள்ள குளங்கள் படையினரின் உதவியுடன் மீளமைத்து உடனடி தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**யது பாஷ்கரன்**

# "உறங்கும் உண்மைகள்" (பாகம் I&II) வெளியீட்டு விழா






வாழ்வின் அனுபவங்களிலிருந்து கனடா எஸ்.ரி. நாதன் எழுதிய ஆக்கங்களின் தொகுப்பான "உறங்கும் உண்மைகள்" (பாகம் I & II) நூல் வெளியீட்டு விழா இன்று 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.31க்கு வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையிலுள்ள கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஓய்வுபெற்ற கல்வி அமைச்சு செயலாளர் எஸ். தில்லைநடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் நூலாசிரியர் எஸ்.ரி. நாதன், வேல் விவேகானந்தன், எஸ். பத்மநாதன், துவாரகன், சஞ்ஜீவன், செல்வி மனுஜா, கோதை அமுதன், ஆத்தி தனுஷன், யோகா பத்மநாதன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். மேலும் பலர் சிறப்பு விருந்தினர்களாக பங்குபற்றி சிறப்பிக்கவுள்ளனர்.

# கனேடிய பல்லின பத்திரிகையாளர் கழகத்தின் விருது விழா





கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 15ஆம் திகதி கனேடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சமூக சேவையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் களுக்கான விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் தனது குழுவினருடன் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

இவ்வருடத்தின் சமூகசேவையாளர்களுக்கான விருதுகளைப் பெற்ற 'கனடா உதயன்' நண்பர்களான தொழிலதிபர் தேவதாஸ் சண்முகலிங்கம் (தாஸ்) மற்றும் மொன்றியால் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா ஆகியோரை அங்கு கூடியிருந்த நண்பர்கள் அனைவரும் வாழ்த்தினர்.

குறிப்பாக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் 'உலகத் தமிழர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கமலவாசன் ஆகியோர் சகிதம் அங்கு கூடியிருந்த பத்திரிகைத்துறை, வானொலி மற்றும் தொலைக்காட்சித்துறை நண்பர்கள் அனைவரும் விருதுகளைப் பெற்ற இரு வெற்றியாளர்களையும் வாழ்த்தினர். மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சின் இணை அமைச்சருமான விஜே தணிகாசலமும் அங்கு வருகைத் தந்திருந்தார்.

அங்கு வருகை தந்திருந்த தமிழ் பேசும் ஊடக நண்பர்கள் அனைவருக்கும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவருமான லோகேந்திரலிங்கம் நன்றி தெரிவித்தார்.




## ஓஷன் வியுடெவலப்மெண்ட் கம்பனி (பிவீடி) எல்டிடீ

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

### பின்வரும் முன்மொழிவுகளுக்கான தேவைப்படுத்தல்

**A) மாதாந்த வாடகை அடிப்படையில் 10 வருட கால எல்லைக்கு 3 மாடி கட்டிடத்தை (மேடைப் பிரதேசம்) தரை மாடிக்கான வாடகை – Ref No.: OVDC/Podium/G/02**

**B) மாதாந்த வாடகை அடிப்படையில் 10 வருட கால எல்லைக்கு 3 மாடி கட்டிடத்தை (மேடைப் பிரதேசம்) 1 ஆம் மாடிக்கான வாடகை – Ref No.: OVDC/Podium/01st floor/03**

1. ஆர்வமுள்ள விலைமனுதாரர் Ref No.: OVDC/Podium/G/02 மற்றும் Ref No.: OVDC/Podium/01st floor/03 ஆகியவற்றிற்கு தனித்தனியான விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள விலைமனுதாரர் முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் ஆவணத்தை 2023.12.18 ஆம் திகதியிலிருந்து 2024.01.05 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் ஒரு விலைமனுவிற்கு வரிகள் அடங்கலான ஐந்தாயிரம் இலங்கை ரூபாவை (5000 இ.ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் டவர் கட்டிடம் 19 ஆம் மாடியிலுள்ள ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவீடி) எல்டிடீ, நிதிப் பிரிவில் செலுத்திய பின்னர், கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் டவர் கட்டிடம் 19 ஆம் மாடியிலுள்ள ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவீடி) எல்டிடீ, இன் பராமரிப்பிற்கான முகாமையாளரிடமிருந்து முன்மொழிவுகளுக்கான ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.
3. 2024.01.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவிடீ) எல்டிடீ, 19 ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
4. விலைமனுப் பாதுகாப்பு உத்தரவாதமாக இரண்டு இலட்சத்து இலங்கை ரூபாவை(200,000 இ.ரூபா) செலுத்துதல் வேண்டும்.
5. விலைமனுவிற்கான (நிதியிடல் ஆற்றல்) தகுதித்தன்மைக்காக கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 1 வருடத்திற்காவது வருடாந்த நிதிப்புரள்வு 30 மில்லியன் ரூபாவாகவிருத்தல் (விலைமனுதாரர் கடந்த 5 வருட கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் கூறுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்)
6. முன்மொழிவிற்கான ஆவணமானது பதிவுத் தபாலில் 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவிடீ) எல்டிடீ, 19 ஆம் மாடி, ஓஷன் டவர் கட்டிடம், புகையிரதநிலைய வீதி, கொழும்பு-04 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் டவர் கட்டிடம், 25 ½, ஓஷன் டெவலப்மெண்ட கம்பனி (பிவிடீ) எல்டிடீ, இன் சந்தைப்படுத்தல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனு குறிப்பீட்டு இலக்கமானது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024.01.09 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மூடப்பட்டு மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவிடீ) எல்டிடீ, 19 ஆம் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது (ஆண்/ பெண்) சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
8. மேலதிக தகவலானது கொழும்பு-04, புகையிரதநிலைய வீதி, ஓஷன் டவர் கட்டிடம், 19 ஆம் மாடியின் ஓஷன் வியு டெவலப்மெண்ட் கம்பனி (பிவிடீ) எல்டிடீ, பராமரித்தல் பிரிவு, பராமரிப்பிற்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 011-2058226, 011-2058260. அலைபேசி: 077-6210466. தொலைநகல்: 011-2507495. மின்னஞ்சல்: ovdc123@sltnet.lk

* நிபந்தனைகள் பிரயோகப்படுத்தப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு, ஓஷன் டெவலப்மெண்ட கம்பனி (பிவிடீ) எல்டிடீ**
**25 ½, 19 ஆம் மாடி, ஓஷன் டவர் கட்டிடம், புகையிரதநிலைய வீதி, கொழும்பு-04.**


# தமிழ் மொழிக்கான சம உரிமையை வலியுறுத்தும் லங்கா சமசமாஜக் கட்சி

லங்கா சமசமாஜக் கட்சியின் 89 ஆவது சம்மேளன கூட்டம் இன்று 17 ஆம் திகதி மத்துகம பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறுகிறது. 1935 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி லங்கா சமசமாஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

ல.ச.ச.கட்சியானது இன்று வரையில் அனைத்து இன மக்களையும் அரவணைத்து நேர்வழியில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

அமரர் என்.எம். பெரேரா தலைமையில் கட்சி உருவாக்கப்பட்ட பிறகு இந்த நாட்டில் ஆட்சி செய்த பிரிட்டிஷாருக்கு எதிராக சுதந்திரம் வேண்டி போராட்டத்தை முன்னெடுத்த போது அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ல. ச. ச கட்சியை தடை செய்து அக்கட்சியின் பிரதானிகளை சிறையில் அடைத்தனர்.

சிறையில் அடைக்கப்பட்டவர்கள் அங்கிருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்று நேரு, என்.எம் பிலிப் போன்றவருடன் இணைந்து போராடினார்கள்.

எமது நாட்டின் தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து போராடியதன் விளைவாக தோட்டத் தொழிலாளர்களுக்கு எட்டு மணித்தியால வேலையும் ஊழியர் சேமலாப நிதி போன்ற சலுகைகளும் கிடைத்தன. 1956 ஆம் ஆண்டு இந்த நாட்டின் சிங்கள மொழி அரசகரும மொழியாகக் கொண்டுவரப்பட்டபோது அதற்கு எதிராக அன்று பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தவர் என். எம். பெரேரா ஆவார்.

சிங்கள மொழிக்கு எவ்வாறான உரிமை இருக்கின்றதோ தமிழ் மொழிக்கும் அவ்வாறான முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். லங்கா சமசமாஜக் கட்சி இனவாதத்தை என்றும் எதிர்த்து வந்தது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று லங்கா சமசமாஜ கட்சி அரசுகளுக்கு பல முறை கோரி வந்த போதிலும், அரசுகள் அதற்கு செவிசாய்க்கவில்லை இந்த நாட்டில் தமிழ் மக்களை ஒதுக்கி விட்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதால் நாட்டில் நிரந்தர சமாதானத்தை எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் போது தமிழ் மக்களையும் அரவணைத்து செயல்பட்டால் தான் நாட்டில் அபிவிருத்தி ஏற்படும். தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்.

அதிகமாக தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் அரச அதிகாரிகளாக தமிழ் மக்களை நியமிக்க வேண்டும்.

அப்போதுதான் எமது நாட்டில் தமிழ், சிங்கள மக்களுக்கு இடையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்.

தற்போதைய லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ வித்தாரணவின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

**சி. நித்தியானந்தன்**

## வலம்புரி கவிதா வட்டத்தின் 95 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 95 ஆவது கவியரங்கம் இம்மாதம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.

சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி கவியரங்குக்கு தலைமை தாங்குகிறார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்)077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்)071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பத்தரமுல்லையில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டைச் சுத்தம் செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள பணியாள் (கோகி/அப்பு) அல்லது பணிப்பெண் தேவை. வயது 2540 க்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. ரூபா. 35,000/=, 40,000/= சம்பளம் வழங்க ப்படும். தொடர்புக்கு. 0777362495. 083272

வீ ட்டுப்பணிப்பெண் மற்றும் சுத்தி கரிப்பாளர் தேவை. வயது 17 முதல் 35 வரை. சம்பளம் 25000 மற்றும் உணவு, தங்குமிடம் வழங்க ப்படும். தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06. தொ.பே. இல. 0012591169, 0777 4 524 47, 0755091379 077316

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

கண்டி உள்ளூர் வெளிநாட்டு சுற்றுலா ஹோட்டலுக்கு கோக்கிமார் உடன் தேவை வயது 2445 (Eastern, Western, Chinese) 02 வருட அனுபவம் மாத்திரம் தேவை. தொ. பே 0773123135 080438

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கமத்தொழில் தெரிந்த ஊழியர்கள் தேவை 0769492285, 0765917760. 082824

### 325 தொழில்துறை பொது

பஸ்ஸர மடுல்சீம தேயிலைத் தோட்டத்தில் தங்கி வேலை செய்ய தேயிலை கொழுந்து பறிப்போர் (ஆண்), சாரதிகள் தொழிலாளர் தேவை . 076 2907712 தர்ஷி 083047

முன் அலுவலக வரவேற்பாளர் ஆண்/ பெண் சிறந்த ஆங்கில அறிவுடைய சுறுசுறுப்புள்ள நபரொருவரை நாம் தேடுகிறோம். ★ சிறந்த தொடர்பாடல் ஆற்றல். ★ ஆண்/ பெண் வாடிக்கையாளர்கள்/ சுற்றுலாப் பயணி களு டன் வேலை செய்த அனுபவம். ★ வயது 40 இற்கு குறைவானது. ★ உபசார சேவை பதிவுடனான முன்னைய அனுபவம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தயவு செய்து c1 forthotel@gmail.com என்ற மின் னஞ்சலு டன் அல்ல து +94112389695 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 081862

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அலுவலகத்தில் வேலை செய்ய அலுவலக உதவியாளர் (Office Peon) தேவை. இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவு வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொலைபேசி 0766200300 083027

வீட்டுப் பேணல் பதவி வெற்றிடம் ஆண்/ பெண் ★ அனுபவமுள்ள வீட்டுப் பேணல் பணியாளர் குழுவினர் தேவை. ★ தேவைப்படின் தங்குமிடம் வழங்கப்படும். ★ ஆகக் குறைந்தது 3+ வருட அனுபவம் முன்னைய பதிவுடன். ★ வயது 40 இற்கு குறைவானது. ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தயவு செய்து c1forthotel@gmail.com என்ற மின்னஞ்சலுடன் அல்லது +94112389695 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 081863

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

அநுராதபுர நகரிற்கு 7km, தூரத்தில் அநுராதபுரம் யாழ்ப்பாணம் பி ராதன வீதிக்கு முகப்பாக கொடுப்பனவு பத்திரத்துடன் 4 ஏக்கர் 1 ரூட் காணி விற்பனைக்கு வியாபாரத்திற்கு மிகவும் பொருத்தமானது. 0723783400. 082820

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொள்ளுப்பிட்டி ஸ்ரீ முஹந்திரம் வீதி, 03 அறைகள் மற்றும் 02 குளியலறைகளுடன் இருமாடி வீடு. விற்பனைக்கு உண்டு. 0775262362 079115

நுகேகொடை கட்டடக்கலைஞரால் வடிவமைக்கப்பட்ட இரண்டரை மாடி அரைவாசி தளாபடங்களுடன் 12.5 பேர்ச் 4500 சதுர அடி வீடு அலுவலகமாக பயன்படுத்த முடியும். அழையுங்கள் 0760499501 082953

நுகேகொடை மஹரகமவிற்கு இடையில் பழைய வீதியில் உடஹமுல்ல சந்திக்கு அருகில். மஹரகம ஜயகத் வீதியில் 6 பேர்ச் காணி. ஒரு பேர்ச் 17/50 இலட்சம். தரகர் வேண்டாம். 0714427338 082969




நுகேகொட மஹரகமவுக்கு இடையில் பழைய வீதியில் ஜுபி லிதுான் சந்தியில் பிரதான பஸ் பாதைக்கு முகப்பாக 33 பேர்ச். 1 பேர்ச் 52 இலட்சம் தரகர் வேண்டாம். 0714472338, 0771132338. 17 பே ர்ச் ஆகவும் கொள்வனவ செய்யலாம். 082968

நெதிமால, கடவத்த வீதி, ஆறாம் ஒழுங்கையில் பதினாறு பேர்ச் காணி. 31 அடி முகப்பாக, மின்சார, மற்றும் நீர் உண்டு. தொடர்பு 0779944866 082090

8.7 பேர்ச் சதுர வடிவ காணி நுகேகொ டை, ஜம்புகஸ்முல்ல, மாவத்தையில் வர்த்தக / குடியிருப்புக்கு. அழையுங்கள் 0760499501 082957

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கந்தானை நகரிற்கு அருகில் அமைதியான பிரதேசத்தில் 9 பேர்ச் காணி விற்பனைக்கு. நீர், மின்சாரம், பாதைகள், சி க்கலற்ற உறுதி. தொடர்புகள் 0773993796, 0112071455 083177

ராகம நகர எல்லையில் பெறுமதியான காணி மற்றும் வீடு விற்பனைக்கு. ராகம அரலிய உயன ரம்மியமான சூழலில் அமைந்துள்ள 23 பேர்ச் விசாலமான காணியில் மூன்று படுக்கையறையுடன் சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு. இப்பிரதேசத்தில் ஒரு பேர்ச் பத்து இலட்சம் தேவையெனில் வீட்டின் பொருட்களுடன் பெற்றுக்கொள்ளலாம். ரயில் நிலையம், வைத்தியசாலை, நகரத்திற்கு 3 விநா டிகள். உரிமை யாளர் வெளிநாடு செ ல்கிறார் பெறுமதி 300 இலட்சம். 0724351579, 0718257102 082664

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

இரண்டு படுக்கையறைகள் மற்றும் சிறிய அறை, பென்றி, இரண்டு கழிப்ப றைகளுடன் அப்பாட்மென்ட் வாடகைக்கு உண்டு. டயமன்ட் அப்பாட்மென்ட், கொழும்பு09 தொ. பே 0777320422. 24 மணிநேர பாதுகாப்பு. கார் நிறுத்துமிடம் உண்டு 082346

## திருமண சேவைகள்

### மணமகன்

கொழும்பு சோனகப் பெற்றோர் தமது 25 வயது திருமணமாகி ஒரு வருடத்தில் தலாக் பெற்றுக் கொண்ட அழகான தோற்றமுடைய மகனுக்கு மார்க்கப்பற்றுள்ள, அழகான தோற்றமுடைய பொருத்தமான மணமகளை தேடுகின்றனர். 011 3 608999, 075 6019424 . தரகர் வேண்டாம். ம ணமகளுக்கு தாய் இருத்தல் கட்டாயமானது. மணமகனுக்கு சொந்த வீடு உள்ளது. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. ஏனைய முக்கியமான விடயங்கள் நேரில். G210456



# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067























**Advertise Here**

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com














பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# புடினின் செய்தியாளர் மாநாடும் பூகோள அரசியல் நகர்வும்!



யதார்த்தவாதிகள் வலியுறுத்தும் அரசுகளுக்கிடையிலான உறவானது தேசிய பாதுகாப்பு மற்றும் இருத்தலியலை மையப்படுத்தி அராஜக சூழலுக்குள் கட்டமைக்கப்படுவதாகவே சமகால சர்வதேச அரசியல் நடப்புகள் காணப்படுகின்றன. 2023ஆம் ஆண்டு போர்கள் தீவிரமடைந்துள்ளன. ஒக்டோபர் 07க்குப் பின்னர் பொது அரங்கில் சூடான விவாதத்தை இஸ்ரேல், ஹமாஸ் போர் ஏற்படுத்தியிருந்தது. அதற்கு முன்னர் கடந்த ஒரு வருடமாகவே ரஷ்ய, உக்ரைன் போர் முழுஉலகையும் நெருக்கடிக்குள் தள்ளியிருந்தது.

இந்நிலையிலேயே தனது வருடாந்த செய்தியாளர் மாநாட்டில் உரை நிகழ்த்தியுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், "உக்ரைனில் ஒரு வருடத்துக்கு முன்பு தொடங்கிய தாக்குதலினை நியாயப்படுத்தி தீவிரப்படுத்துவதாக உறுதியளித்துக் கொண்டு, பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேலின் இடைவிடாத குண்டுவீச்சைக் கண்டித்துள்ளார்." அரசியல் தலைவர்கள் தமது அரசின் நலன்களுக்குள் ஒவ்வொரு போர்களை வியாக்கியானப்படுத்துகையில், தவிர்க்கப்பட்டிருக்கக்கூடிய போர்களால் அப்பாவி பொதுமக்கள் உயிர்களை மற்றும் வாழ்விடங்களை இழக்கும் துயரமே தொடர்கின்றது. இக்கட்டுரை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் வருடாந்த உரையின் பிரதான அரசியல் செய்திகளை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

1989ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தில் கோர்பச்சோவால் மேற்கொள்ளப்பட்ட கிளாஸ்நோட்ஸ் மற்றும் பெரஸ்ரொய்கா என்பவற்றால் ரஷ்யாவின் சோசலிச அரசியல் பொருளாதார கட்டமைப்பு தகர்க்கப்பட்டது. எனினும் விளாடிமிர் புடினின் ஆட்சியில் ரஷ்யா மீள சோசலிச பொருளாதாரக் கட்டமைப்புக்குள் நகர முடியாவிடிலும், இரும்புத்திரை அரசியல் இயல்புகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறான சூழலிலேயே ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் டிசம்பர் 14அன்று நான்கு மணி நேரத்துக்கும் மேலாக தனது ஆண்டு இறுதி செய்தியாளர் மாநாட்டில் கேள்விகளுக்கு பதிலளித்தமை முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக 2022 பெப்ரவரி ரஷ்யா, உக்ரைன் போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்கத்திய ஊடகங்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்ட புடினின் முதல் முறையான செய்தி மாநாடாக இது அமைந்துள்ளமை அதிக கவனத்தை பெறுகின்றது.

புடினின் செய்தியாளர் மாநாடு என்பது பகுதியளவில் புடின் உலகத்துக்கு தெரிவிக்க விரும்பும் கருத்துக்களை பகிரங்கப்படுத்தும் களம் எனும் நிலைமைகளையே கொண்டிருக்கின்றது. இப்பின்னணியிலேயே செய்தியாளர் மாநாட்டு விடயங்களை நுணுக்கமாக புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

முதலாவது, இஸ்ரேல், ஹமாஸ் போரை உலகின் பார்வைக்குள் முதன்மைப்படுத்துவதற்கான செய்தியை வழங்கியுள்ளார். காசாவில் நடந்த போருடன், புடின் ஒரு வாய்ப்பைப் பார்க்கிறார். காசாவில் ஹமாஸுக்கு எதிரான இஸ்ரேலின் போரில் பெருமளவிலான பொதுமக்களின் மரணம் சர்வதேச கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. குறிப்பாக டிசம்பர்12 அன்று ஐ.நா பொதுச்சபையில் இஸ்ரேல், ஹமாஸ் போர் வெடித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், உடனடி மனிதாபிமான போர்நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்கக் கோரி தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பொதுச்சபை அவசரகால சிறப்பு அமர்வில் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆதரவாக 153 நாடுகள் வாக்களித்ததுடன், 10 எதிராக வாக்களித்ததுடன், 23 வாக்களிக்கவில்லை. ஆசிய நாடுகள் முழுமையாக தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. இந்நிலையிலேயே, புடின், ரஷ்ய இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கும் இஸ்ரேலிய படைகளின் நடவடிக்கைகளுக்கும் இடையில் வேறுபாடு காட்ட முயன்றுள்ளார். உக்ரைனில் நடக்கும் போர் தொடர்பிலான வினாவுக்கான புடினின் பதிலாக, "இஸ்ரேலின் சிறப்பு இராணுவ நடவடிக்கையைப் பாருங்கள்.

மற்றும் காஸாவில் என்ன நடக்கிறது என்பதைப் பாருங்கள், வித்தியாசத்தை உணருங்கள். உக்ரைனில் அப்படி எதுவும் நடக்கவில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். இது ரஷ்யா மீதான அமெரிக்கா தலைமையிலான மேற்கின் குற்றச்சாட்டுக்கு பதிலளிப்பதாகவே அமைகின்றது.

மேலும், ஒக்டோபர் 07 அன்று இஸ்ரேல், ஹமாஸ் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து சில மேற்கு ஊடகங்களும் அரசியல் தலைவர்களும் ஹமாஸின் போரியல் செயற்பாடுகளை விமர்சிக்கையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரியல் நடவடிக்கைகளையும் ஒப்பிடும் நிலைமைகள் காணப்படுகின்றது.

ஒக்டோபர் 09 அன்று நேட்டோவின் நாடாளுமன்றக் கூட்டத்தில் உரையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, "ஹமாஸும் ரஷ்யாவும் ஒரே தீமைதான். ஒரே வித்தியாசம் என்னவென்றால், இஸ்ரேலைத் தாக்கிய ஒரு பயங்கரவாத அமைப்பு உள்ளது. இங்கே உக்ரைனைத் தாக்கிய ஒரு பயங்கரவாத அரசு உள்ளது" எனக்குறிப்பிட்டிருந்தார். இவ்வாறான உரையாடல்களுக்கான பதிலாகவே காசா மீதான இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையினை புடின் திசை திருப்பியுள்ளார்.

இரண்டாவது, சர்வதேச ரீதியாக ரஷ்யா மீது அமெரிக்கா மேற்கொண்ட தனிமைப்படுத்தலை இஸ்ரேல், ஹமாஸ் போரை பயன்படுத்தி ரஷ்யா விலகிக்கொள்ள முற்படுகின்றது எனும் செய்தி புடினின் செய்தியாளர் மாநாட்டு உரையிலும் நடைமுறை அரசியலிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

செய்தியாளர் மாநாட்டில், "ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் நாங்கள் எல்லாவற்றையும் சரியாகச் செய்கிறோம் என்று நிறைய பேர் நினைக்கிறார்கள்" என அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ரஷ்யா, உக்ரைன் போர் மற்றும் இஸ்ரேல், ஹமாஸ் போர் நிலைப்பாட்டின் மாறுபட்ட தன்மைகளை சாடியிருந்தார்.

ஒக்டோபர் 07க்கு முன்னர் அமெரிக்காவின் நெறியாள்கையில் ரஷ்யா – உக்ரைன் போரை மையப்படுத்தி சர்வதேச அரங்கில் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்ட நிலை காணப்படலாயிற்று. 2022ஆம் ஆண்டில் ஐ.நா அரங்கில் ரஷ்யாவை கண்டித்து அதன் அனைத்துப் படைகளையும் திரும்பப் பெறக் கோரி ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

2022அக்டோபரில் ரஷ்யாவின் சட்டவிரோத இணைப்பு முயற்சியை கண்டித்த தீர்மானம் 143 அரசுகளின் ஆதரவுடன் வென்றது. இதற்கு பின்னால் ஐ.நா பாதுகாப்பு சபை அங்கத்துவம்பெற்ற அமெரிக்காவின் ஆதிக்கமும் காணப்பட்டது. தற்போது அமெரிக்கா, இஸ்ரேலை ஐ.நா பொது அரங்கில் பாதுகாப்பதற்கான கவசமாக செயற்பட்டு வருவதனையே புடின் சாடியிருந்தார். மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் லூயிஸ் சார்போனோ அமெரிக்காவின் இரட்டை நிலைப்பாட்டை குறிப்பிடுகையில், "உக்ரைன் மற்றும் இஸ்ரேலில் ரஷ்யா மற்றும் ஹமாஸின் அட்டூழியங்கள் வரும்போது, அமெரிக்காவும் பிற மேற்கத்திய அரசாங்கங்களும் மனித உரிமைகள் மற்றும் போர்ச் சட்டங்களுக்கு ஆதரவாக தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. ஆனால் சர்தேச சட்டம் அனைவருக்கும் சமமாக பொருந்தும்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்றாவது, ரஷ்யா அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை சந்திக்க உள்ள நிலையில் புடின் ரஷ்ய தேசியவாதத்தை முதன்மைப்படுத்தும் வகையில் உக்ரைன் மீதான ரஷ்யா போரை வெளிப்படுத்தியுள்ளார். தொடர்ச்சியாக உக்ரைன் மீதான போரில் ரஷ்யாவின் தேசிய பாதுகாப்பு தேவையை வலியுறுத்தியுள்ளதனூடாக ரஷ்யா தேசியவாதத்துக்கான அறைகூவலை விடுத்துள்ளார். உக்ரைனில் மாஸ்கோ தனது "சிறப்பு இராணுவ நடவடிக்கை" என்று அழைக்கும் உக்ரைன் மீதான படையெடுப்பின் வெற்றிகளையும், கியேவின் நட்பு நாடுகளின் கொடிய ஆதரவையும் புடின் பிரதானப்படுத்தியிருந்தார். குறிப்பாக, "எங்கள் இலக்குகளை நாங்கள் அடையும்போது அமைதி இருக்கும்" என்று புடின் கூறினார். மேலும், "இன்று உக்ரைன் ஏறக்குறைய எதையும் உற்பத்தி செய்யவில்லை, அவர்கள் எதையாவது பாதுகாக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் நடைமுறையில் எதையும் உற்பத்தி செய்வதில்லை மற்றும் எல்லாவற்றையும் இலவசமாகக் கொண்டு வரவில்லை. ஆனால் இலவசங்கள் ஒரு கட்டத்தில் முடிவடையும் மற்றும் வெளிப்படையாக அது சிறிது சிறிதாக முடிவுக்கு வருகிறது" என உக்ரைனின் மேற்கு ஆதரவு நிலைப்பாட்டை சுட்டிக்காட்டியிருந்தார். இது முழுமையான ரஷ்ய உள்நாட்டு மக்களுக்கான தேர்தல் பிரச்சாரத்தின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது.

நான்காவது, அமெரிக்காவுடனான சாதகமான உறவுக்கான சமிக்ஞையை புடின் வழங்கியிருப்பது தந்திரோபாய ரீதியாக முதன்மையானதாக அவதானிக்கப்படுகின்றது. ரஷ்யா மீதான சர்வதேச நாடுகளின் தனிமைப்படுத்தல் மற்றும் பொருளாதார தடைகள் என்பவற்றை அமெரிக்கா முதன்மைப்படுத்தும் சமாந்தர சூழலில் புடினின் அறிவிப்பு அதிக கவனத்தை பெறுகின்றது. புடின், "அமெரிக்காவைப் பொறுத்தவரை, அவர்களுடன் உறவுகளை உருவாக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

உலகிற்கு அமெரிக்கா தேவை என்று நாங்கள் நம்புகிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் ட்ரம்ப் போன்ற ஆட்சியாளர்களை அமெரிக்கா ஜனாதிபதியாக்குவதில் புடினின் பங்களிப்பின் பின்னிருந்த தந்திரோபாயத்தின் பிரதிபலிப்பாக அமையுமா என்பது தொடர்பில் அரசியல் ஆய்வாளர்கள் சந்தேகிக்கின்றனர். குறிப்பாக ரஷ்யா அமெரிக்காவை அங்கீகரிப்பதான உரையாடல், ரஷ்யா சர்வதேச ரீதியாக மேல்நிலையில் இருப்பதானதொரு தோற்றப்பாட்டை வெளிப்படுத்த புடின் பயன்படுத்தும் உத்தியாகவும் அவதானிக்கப்படுகின்றது.

இந்த பின்னணியிலேயே, கடந்த மார்ச் மாதம் உளவுக் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தி வால் ஸ்ட்ரீட் ஜேர்னலின் நிருபர் இவான் கெர்ஷ்கோவிச் பற்றி முதன் முறையாக புடின் கருத்துத் தெரிவித்துள்ளர். இவரது விடுதலை தொடர்பில் அமெரிக்காவுக்கு புடின் நிபந்தனை அழைப்பை விடுத்துள்ளார். "நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்ய விரும்புகிறோம், ஆனால் அது இரு தரப்பிலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார். எனவே, புடினின் வருடாந்த செய்தியாளர் மாநாடு திசைதிரும்பும் ரஷ்யாவுக்கான வாய்ப்புக்களை அறிவிப்பதற்கான களமாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக சர்வதேச அரங்கில் தமது மேலாண்மையை வெளிப்படுத்தும் அதே வேளை ரஷ்யாவுக்குள் இருப்பை பலப்படுத்தும் வகையில் தேசியவாத தலைவராக மீளெழுவதற்கான வியூகத்தையே தனது செய்தியாளர் மாநாட்டு உரையில் தொகுத்துள்ளார். மார்ச் மாதம் நடக்கவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக தனது அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக புடின் இதனைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.



பாராளுமன்ற விவாதங்களிலிருந்து...

## 2024 வரவு செலவுத் திட்டம்:

# வடக்கு, கிழக்கு, மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளித்த வாதங்கள் பாராளுமன்றில்

லோரன்ஸ் செல்வநாயகம்







2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் மீதான விவாதங்கள் பாராளுமன்றத்தில் கடந்த சுமார் ஒரு மாத காலமாக இடம்பெற்றன. இந்த விவாதமானது வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு உட்பட அதற்கு வெளியிலும் வாழும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கான தேவைகள், எதிர்காலத்தில் அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், அது தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கும் தெளிவுபடுத்துவதற்கும் கருத்துக்களை முன் வைப்பதற்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் கேள்விகளை எழுப்பி அவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பாக அமைந்து விட்டதை குறிப்பிட வேண்டும்.

வடக்கு, கிழக்கு, மலையகத்தைப் பொறுத்தவரை அங்குள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகள், தேவைகள் எதிர்பார்ப்புகளுடனேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக வடக்கு, கிழக்கில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் காணி பிரச்சினைகள், காணாமற் போனோர் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வாழ்வாதார பிரச்சினைகள், மீனவர்களின் பிரச்சினைகள், கல்வி, சுகாதாரம், விவசாயம் உள்ளிட்ட கைத்தொழில் சார்ந்த பிரச்சினைகள் என பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

அதேபோன்று மலையக பெருந்தோட்ட மக்கள் சம்பளப் பிரச்சினை, குடியிருப்பு பிரச்சினை, காணிப் பிரச்சினை, கல்வி சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை தேவைகள் தொடர்பிலும் நெடுங்காலமாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் வரவு செலவுத் திட்டத்தில் அமைச்சுக்களுக்கான குழுநிலை ஒதுக்கீட்டு விவாதம் தனித்தனியே ஒவ்வொரு அமைச்சுக்கும் என இடம்பெற்றதுடன் அந்தந்த துறை சார்ந்த பிரச்சினைகளை முன் வைப்பதற்கு வடக்கு கிழக்கு மலையக பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்யும் மக்கள் பிரதிநிதிகளுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது.

அதனை சிலர் பயன்படுத்தியும் சிலர் பயன்படுத்தாமலும் விட்டாலும் முக்கியமான பல பிரச்சினைகள் இந்த விவாதங்களில் உள்ளீர்க்கப்பட்டு சில பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்களினால் தீர்வுகளும் முன் வைக்கப்பட்டன என்பதை குறிப்பிட வேண்டும்.

அந்த வகையில் அந்தப் பிரதேசங்களை சார்ந்த அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் எம்பிக்கள் பலரதும் விவாதங்களைப் பார்ப்போம்.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை நெடுங்காலமாக தொடர்கின்றது. எம்மைப் பொறுத்தவரை நாம் அதற்காக இரண்டு விதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். முதலாவது நடவடிக்கை இராஜதந்திர ரீதியில் அதனை முன்னெடுப்பது. அந்த வகையில் ஏற்கனவே இராஜதந்திர ரீதியாக பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அவை பயனளிக்கவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். இரண்டாவதாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்தல். அந்த வகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம் பெற்று வருகின்றன. இத்தகைய கைது தொடர்பான செய்திகள் தமிழ் நாட்டில் பரப்பப்படும் போது அது பிரச்சினைக்குரியதாகின்றது. தமிழ்நாட்டிலுள்ள மீனவர்கள் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் தொழில் அது எனவும் இலங்கை கடற்படையே அவர்களை முறையற்ற விதத்தில் கைது செய்கின்றது என்றும் அங்குள்ளவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். அதற்கிணங்க ஒரு புதிய வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் நான் சிந்தித்துள்ளேன். வடக்கிலுள்ள கடற் தொழிலாளர்கள் ஒரு குழுவாக தமிழ்நாட்டுக்கு சென்று அங்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அங்குள்ள ஊடகங்களுக்கும் இங்குள்ள உண்மை நிலையை தெளிவுபடுத்த முடியும். இந்திய மீனவர்கள் அத்துமீறியே இலங்கை கடற்பரப்பில் பிரவேசித்து வளங்களை அழிக்கின்றார்கள் என்றும் அதனால் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்து அதன் காரணமாகவே கடற்படையினர் அவர்களை கைது செய்வதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி வட மாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்களிடம் இந்த பிரச்சினைகள் தொடர்பில் பேச முடியும். அத்துடன் அங்குள்ள ஊடகங்களுக்கும் அது தொடர்பில் தெளிவுபடுத்த முடியும். இந்த செயற்பாட்டுக்கு வடக்கிலுள்ள எம்பிக்கள் சிலர் இணக்கம் தெரிவித்துள்ளார்கள். எனினும் சார்ள்ஸ் எம்பி அதற்கு இணக்கம் தெரிவிக்காமல் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரை அழைத்து பேசலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

அது ஒரு பிரச்சினை இல்லை. எனினும் அடிக்கடி இந்தியத் தூதுவர்கள் மாற்றமடைந்து செல்வதால் அதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது. எனினும் இந்திய தூதுவர்களுக்கு இந்த விவகாரம் அத்துப்படி. அவர்கள் ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் முழுமையாக அறிந்துள்ளார்கள் என்பதால் அவர்களும் கூட தமிழ்நாட்டுக்குச் சென்று அங்குள்ள அரசியல்வாதிகளுடன் பேசலாம் அதன் மூலம் தான் நிரந்தர தீர்வு காண முடியும் என்ற யோசனையையே முன் வைப்பார்கள்.

**இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்**

வீதி அபிவிருத்தி அதிகார சபையில் ஒப்பந்த அடிப்படையில் ஐந்து வருடங்களுக்கும் மேல் பணி புரியும் ஊழியர்களுக்கு அடுத்த வருடத்தில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை அடுத்த வருடத்தில் நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். எமது நாட்டின் வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு துறையினரும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

அந்த வகையில் இம்முறை வரவு செலவு திட்டத்தில் கிராமிய வீதிகள் அபிவிருத்திக்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அனர்த்தங்களின் போது பாதிக்கப்பட்டுள்ள கிராமிய பாலங்கள் மற்றும் ஏனைய கிராமப்புற பாலங்கள் அபிவிருத்திக்காக 3 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அவற்றில் மிக முக்கியமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அத்துடன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள கிராமிய வீதிகள் மற்றும் பாலங்களை அடுத்த வருடத்தில் நிறைவு செய்வதற்கும் எதிர்பார்த்துள்ளோம். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வாங்கியுடன் இணைந்து நாட்டின் கிராமிய வீதி கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

**குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்த காலங்களில் பாதிக்கப்பட்ட கைத்தொழில் துறைகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக பரந்தன் இரசாயன தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலை, ஓட்டுத்தொழிற்சாலை என பல தொழிற்சாலைகள் வடக்கு, கிழக்கில் இருந்தன. அவை இன்று செயலிழந்துள்ளன. வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிந்து 14 வருடங்களாகிவிட்டபோதும் இவ்வாறான தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான எந்த வித நடவடிக்கைகளையும் காண முடியவில்லை. உப்பள தொழிற்சாலை மட்டுமே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை விஸ்தரிக்க நாம் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த தொழிற்சாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் எமது மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புக்கள் கிடைப்பதுடன் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் முடியும்.

வடக்கு கிழக்கில் மூடப்பட்டுள்ள இத்தகைய தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பித்து செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லையென்றால் முதலீடுகளை மேற்கொள்வதற்கு வடக்கு, கிழக்கில் உள்ள பலர் தயாராகவுள்ளனர்.

**ரவூப் ஹக்கீம் எம்பி**

பொதுத்துவிலுக்கான தனியான கல்வி வலயம் அமைக்கப்படுவதாக ஆரம்பத்திலிருந்து தெரிவிக்கப்பட்டு வருகின்றபோதும் அது இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. அதனால் அவசரமாக அதனை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கிறேன். பொதுத்துவிலுக்கான கல்வி வலயம் அக்கரைப்பற்றில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதால் பொத்துவிலுக்கு தனியான கல்வி வலய தேவைப்பாடு இருக்கிறது. பந்துல குணவர்தன கல்வியமைச்சராக பதவி வகித்த காலத்திலும் அவர் நேரில் விஜயம் செய்து அதற்கு தீர்வு பெற்று தருவதாக தெரிவித்தபோதும் எதுவும் இடம்பெறவில்லை.

அதேநேரம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான முக்கியமான சில பீடங்கள் அவசியமாக இருக்கின்றன. அட்டாளைச்சேனையில் இருக்கின்ற ஆசிரியர் கல்வி கலாசாலையில் பல கட்டடங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றன. அந்தக் கட்டடங்களை பயன்படுத்தி அங்கு கல்வி பீடத்தை அமைக்கலாம் என்றும் அதேபோன்று மல்வத்தை பிரதேசத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு இருக்கின்ற காணியை பாவித்து அங்கு விவசாய பீடத்தை அமைக்கலாம். ஏனெனில் நெல் உற்பத்தியில் ஆகக்கூடுதலாக வருமானங்களை ஈட்டித்தரக்கூடியதாக அந்தப் பிரதேசம் காணப்படுகிறது.

மேலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவின் விருப்பமாக இருப்பது, அங்கு உல்லாச பயணத்துறைக்கான ஒரு பீடம் அமைக்கப்பட வேண்டும் என்பதாகும். பொத்துவில் அறுகம்பை, பாசிக்குடா பிரதேசங்களுக்கும் அங்கிருக்கின்ற ஹோட்டல்களுக்கும் தேவையான ஊழியர்களை பயிற்றுவிப்பதற்குமான பல்கலைக்கழக கற்கை நெறிகளைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஒரு பீடம் அமைக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி**

தமிழ் அரசியல் கைதிகள் 70 பேர் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவித்து வந்த நிலையில் விஜேதாச ராஜபக் ஷ நீதியமைச்சராக பொறுப்பேற்றதும் அந்த எண்ணிக்கை 14 ஆக குறைந்துள்ளது. அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விடயத்தில் பெரும் ஆர்வத்துடனும் மனிதாபிமானத்துடனும் நீதியமைச்சர் செயற்பட்டு நடவடிக்கை எடுத்துள்ளமைக்கு பாராட்டுக்கள். எஞ்சியுள்ள 14 பேரையும் விடுவிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்படும் நிலையில் புதிதாக பலர் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதாகி வருவதை குறிப்பிட வேண்டும். யுத்தம் நிறைவடைந்த போது 5 வயதாக இருந்த சிறுவனுக்கு கூட புலிகளுடன் தொடர்பு உள்ளதாகக் குறிப்பிட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலைகளில் எஞ்சியுள்ள 14 பேரை விடுவிப்பதற்கும் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வரவு செலவு திட்டம் மீதான விவாதங்களில் முன்வைக்கப்பட்ட மேற்படி விடயங்கள் நியாயமானவை என்பதுடன் விரைவில் தீர்த்து வைக்கப்பட வேண்டியவை. வாத விவாதங்களுக்கு அப்பால் நடைமுறையில் அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவற்றுக்கு போதுமான நிதியை அரசாங்கம் பெற்றுக் கொடுக்கவும். வேண்டும் . அப்போதுதான் இந்த விவாதங்கள் அர்த்தம் பெறும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

# 200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி...

## இம்மாதம் 24ஆம் திகதி பிரமாண்ட நிகழ்வு

நுவரெலியா தினகரன் நிருபர்

'200 இல் மலையகம் மாற்றத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையகம் 200 எனும் தொனிப்பொருளில் பல்வேறு நிகழ்வுகள் தற்பொழுது இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் நடைபெற்று வருகின்றன. அநேகமான நிகழ்வுகளில் எமது பின்னடைவுகள், குறைபாடுகள் தொடர்பாகவுமே அதிகமாக பேசப்படுகின்றது.

இது சர்வதேசத்திற்கு எமது மலையக மக்கள் தொடர்பாக தவறான புரிதல்களை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக இலங்கையில் மலையக மக்கள் என்றால் அவர்கள் தொழிலாளர்கள் என்றும் வீடுகளில் வேலை செய்வதற்காக இருக்கின்ற ஒரு சமூகம் என்ற புரிதலே இருக்கின்றது. எனவே இந்த மனநிலையை மாற்ற வேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அதனை செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுடையது. இதனை வேறு யாரும் எமக்காக செய்யமாட்டார்கள். எனவே இந்த நிகழ்வு என்பது தனியே எங்களுடைய கட்சிக்கானதோ அல்லது தனிப்பட்ட என்னுடைய நிகழ்வோ அல்ல. இது நம் அனைவருடையதுமான நிகழ்வு. இது மலையக மக்களுடைய நிகழ்வு என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த நிகழ்வின் முக்கிய நோக்கம் மலையக சமூகமாக நாம் இந்த நாட்டிற்கு வருகை தந்து 200 வருடங்களை கடந்துள்ள இந்த நிலையில், நாம் பெற்ற வெற்றிகள் நமது சாதனைகள் சர்வதேசத்தில் எமது சமூகத்தின் பங்களிப்பு போன்ற விடயங்களை வெளியுலகத்திற்கு கொண்டு செல்வதே. எமது சமூகத்தை சார்ந்தவர்கள் நீதித்துறையில், வைத்தியத்துறையில், பொறியியல்துறையில், காவல்துறையில், கல்வித்துறையில், ஊடகத்துறையில் என அனைத்து துறைகளிலும் உயர்ந்த இடங்களையும் உயர்பதவிகளையும் வகிக்கின்றார்கள். இவர்களை அடையாளப்படுத்த வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது.





இந்த நிகழ்வில் இந்த அனைத்து துறைகளையும் சார்ந்தவர்களை ஒரே மேடைக்கு கொண்டுவந்து அவர்கள் பெற்ற வெற்றிகளுக்காக அவர்களை கௌரவிப்பதும் அவர்களை உலகறியச் செய்வதுமே முக்கிய நோக்கம்.

எனவே, அரசியல்கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று நாம் அனைவரும் இணைந்து ஒரு குடையின் கீழ் ஒன்றினைய வேண்டும் என்பதே எமது நோக்கமாகும். இதற்காக உங்கள் அனைவரையும் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு நாம் வேண்டுகின்றோம்.

குறிப்பாக இந்த நிகழ்வின் மூலமாக கடந்த 200 வருடத்தில் எங்களுடைய வளர்ச்சிக்காக உயிர் நீத்த மலையக தியாகிகளை நினைவு கூர வேண்டியதும் அண்மைய காலங்களில் அரசியலில் தொழிற்சங்க செயற்பாடுகளில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து உயிர் நீத்த தலைவர்களையும் நினைவு கூர்ந்து அவர்களை எங்களுடைய எதிர்கால சமூகத்துக்கு அடையாளப்படுத்த வேண்டிய பொறுப்பும் எம்முடையது.

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜாராம்**

இந்த நிகழ்வில் மலையக தியாகிகள் சுமார் 36 பேர் இனம் காணப்பட்டுள்ளார்கள். எங்களுடைய சமூகத்தின் சார்பாக பல துறைகளிலும் உயர் பதவிகளை வகிக்கின்றவர்களை கௌரவிப்பதற்காக 'மலையக தியாகிகள்' என்ற பட்டம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏனெனில் மலையகத்தில் இன்று இருக்கின்ற இளைஞர் சமூகம் எங்களுடைய மலையக தியாகிகள் தொடர்பாக அறிந்திருக்க வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் மலையக தியாகிகள் தொடர்பாக வெளியான புத்தகங்களும் மிகவும் குறைவாகவே இருக்கின்றது.

எனவே, மலையக தியாகிகள் என்பவர்கள் அன்று செய்த தியாகத்தின் பலனாகவே நாம் இன்று இந்த அளவிற்கு முன்னேற்றமடைந்திருக்கின்றோம் அவர்கள் இல்லை என்றால் எமது நிலை இதைவிட மிகவும் மோசமாக இருந்திருக்கும்.

மேலும், இந்த நாட்டில் நாம் அனைவரும் ஏனைய சமூகங்களுக்கு இணையாக வாழ வேண்டுமானால் எங்களுடைய சமூகத்தில் இன்று உயர்ந்த நிலையில் இருக்கின்ற அனைவரையும் கௌரவப்படுத்த வேண்டிய பொறுப்பு எம்முடையதாகும்.

நாம் இந்த நாட்டுக்கு கடந்த 200 வருடங்களாக என்ன செய்திருக்கின்றோம் என்பதை இன்றுள்ள அநேகமான பெரும்பான்மை சமூகத்தினர் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அதனை நாம் அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய ஒரு தேவை எமக்கு இருக்கின்றது. ஏனெனில் நாங்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை அன்றும் இன்றும் செய்து கொண்டிருப்பவர்கள். இதனை இந்த நாட்டு மக்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கான ஒரு இடமாக இந்த நிகழ்வு அமைய வேண்டும்.

குறிப்பாக நாம் மலையக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய காலம் இது. நாம் இணைந்து செயற்படாவிட்டால் என்றுமே எமது வெற்றிகளை நாம் அடைய முடியாது. இந்த நிகழ்வில் எமது ஒற்றுமையையும் எமது பலத்தையும் எடுத்துக்காட்ட வேண்டும். எனவே நிகழ்வில் அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு:

- கம்பனி தரப்புக்கு மூக்கணாங் கயிறாக அமையுமா?
- அதிரடி மாற்றங்களுக்கு அத்திவாரமாக இருக்குமா?

'கம்பனி தரப்பை பேச்சுவார்த்தை மேசைக்கு எப்படி அழைப்பது என விழித்துக் கொண்டிருந்த சங்கங்களுக்கு ஆறுதலாக அமைந்த ஜனாதிபதியின் அறிவிப்பு!'

கடந்த எட்டாம் திகதி ஜனாதிபதி ஊடகம் வெளியிட்ட ஒரு செய்தி முக்கியமானது. டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பாக, பெருந்தோட்ட கம்பனிகள் தொழிலாளர் வேதன அதிகரிப்பு தொடர்பாக ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டுமென கம்பனி தரப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டிருப்பதாகவும், தொழிலாளர்களுக்கான தின வேதனம் தற்போதைய ஆயிரம் ரூபாவில் இருந்து எழுநூறு ரூபாவினால் அதிகரிக்கப்பட வேண்டும் என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு என்றும் அச்செய்தியில் கூறப்பட்டிருந்தது.

மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தத்தில் 15, 20 ரூபாவை சம்பள அதிகரிப்பாக பெற்றுக் கொள்வதற்காக எவ்வளவோ போராட்டங்களை ஒப்பந்த மேசையிலும் வெளியிலும் செய்ய வேண்டியிருந்தது. 2021ஆம் ஆண்டு ஆயிரம் ரூபா கோரிக்கையை அனைத்து தொழிற்சங்கங்களும் உறுதியாக முன்வைத்த போதிலும் தோட்ட கம்பனிகள் அத்தொகைக்கு இணங்க மறுத்துவிட்டன. இதையடுத்தே சம்பள நிர்ணய சபைக்கு தொழிற்சங்கங்கள் செல்ல வேண்டியதாயிற்று. அங்கு, கம்பனிகள் 900 ரூபாவும் வரவுசெலவு திட்ட ஒதுக்கீடான நூறு ரூபாவுமாக சேர்த்து, ஆயிரம் ரூபா தினசரி வேதனம் என்பது முடிவாயிற்று. இதையும் கம்பனி தரப்பு ஏற்கவில்லை. கம்பனிகள் நீதிமன்றம் சென்றன. ஆயிரம் ரூபா தொகையை நீதிமன்றம் அங்கீகரிக்கவே, கம்பனி தரப்பு உயர்நீதிமன்றம் சென்றது. அங்கும் தொழிலாளர் தரப்புக்கு ஆதரவாக தீர்ப்பு வந்த பின்னரேயே ஆயிரம் ரூபா வேதனம் நடைமுறைக்கு வந்தது.

தாம் ஒரு விடாக் கண்டன் கொடாக் கண்டன் என்பதை கம்பனி தரப்பு இதற்கு முன்னரும் பல தடவைகள் நிரூபித்துள்ளது. இந்தப் பின்னணியில், தொழிலாளரின் தினசரி வேதனம் ஒரே தடவையில் எழுநூறு ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என்று வெளியான அறிவித்தலை கம்பனி தரப்பு எப்படி எடுத்துக் கொள்ளும் என்பதில் எமக்கு தெளிவு இல்லை.

அதே சமயம், இது சாத்தியப்படுமா என்ற சந்தேகத்தையே தொழிலாளர் மட்டத்தில் ஏற்படுத்தி இருக்கிறது. இந்த வேண்டுகோள் அல்லது அறிவித்தல் ஜனாதிபதியிடமிருந்து வந்திருப்பதால் கம்பனி தரப்பில் இருந்து இதுவரை எந்த பதிலும் வெளியிடப்படவில்லை.

இக் கோரிக்கையை தொழிற்சங்கத் தரப்பு விடுத்திருந்தால் கம்பனி தரப்பு பேச்சாளர் ரொஷான் ராஜதுரை, முற்றிலும் சாத்தியப்படாத ஒன்று என்று கூறி அதை நிராகரித்திருப்பார்.

அடுத்த சில மாதங்களில் ஜனாதிபதித் தேர்தலும் பின்னர் பாராளுமன்றத் தேர்தலும் வரவிருக்கும் நிலையில், மலையக வாக்காளர்களைக் கவர்வதற்கான ஒரு முயற்சி என சில தரப்பினரால் பார்க்கப்படுவதைப் போலவே, கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கியிருக்கும் ஒன்றரை லட்சத்துக்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்களின் வறுமையைப் போக்கும் ஒரு நியாயமான முயற்சியாகவே இதைப் பார்க்க வேண்டும் என இன்னொரு தரப்பு மற்றொரு பார்வையை முன்வைக்கிறது.

யார் குற்றினால் என்ன, நெல் மணிகள் அரிசியானால் சரி என்பதே தொழிலாளர் தரப்பின் எதிர்பார்ப்பு. நியாயமாகப் பார்த்தால் இரண்டாயிரம் ரூபாவாக வேதனம் அதிகரிக்கப்பட வேண்டும். இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் ஒப்பிட்டால் இரண்டாயிரமும் போதாது. ஏனெனில் அரசு ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா படியாக வழங்கப்படவுள்ள நிலையில் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரிக்கும் வாய்ப்புகளே அதிகம்.

இவ்விடயத்தில் தொழிலாளர் தரப்பின் நிலைப்பாடு எவ்வாறு இருப்பினும், கவனிக்க வேண்டியவை கம்பனி தரப்பின் நகர்வுகள் தான், ஜனாதிபதியின் அறிவிப்போடு நின்று விடாமல் கம்பனிகளின் தலைவர்களை தனது செயலகத்துக்கு அழைத்து அவர்களுடன் உரையாடியிருக்கிறார். சம்பளத்தை 700 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பாக தமது தீர்மானத்தை 31ஆம் திகதிக்கு முன்பாக தமக்கு கம்பனிகள் அறிவிக்க வேண்டும் என்பதை அங்கே அவர் வலியுறுத்தினார். தொழிலாளரின் வீடமைப்பு தொடர்பாக தான் குழுவொன்றை நியமிக்க உள்ளதாகவும், மற்றொரு குழு, தொழிலாளர் மற்றும் நிர்வாகங்களை இணைக்கும் வகையில் நியமிக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார். மேலும் பெருந்தோட்டத் துறை செயற்பாடுகளில் நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட வேண்டுமெனவும், அது தொடர்பாக நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பயன்படுத்த நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் மற்றொரு அறிவுரை, கூட்டு ஒப்பந்த முறைமைக்கு திரும்பும்படி கம்பனிகளைக் கேட்டுக் கொள்வதாக இருந்தது.

இங்கே மூன்று விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டியவை.

முதலாவது, தொழிலாளர் குடும்பங்களுக்கு காணி உரிமையை அளிப்பது. கொழும்பில் நடைபெற்ற 'நாம் 200' விழாவில் கலந்து கொண்டு இந்திய நிதியமைச்சரின் முன்னிலையில் உரையாற்றுகையில், காணி உறுதியுடன் கூடிய 10 பேர்ச் காணியில் வீடுகள் அமைக்கப்படும் என்றார் ஜனாதிபதி. சிங்களவர்களைப் போலவே தமிழ்த் தோட்டத் தொழிலாளரும் சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றப்படுவார்கள் என்பதையும் குறிப்பிட்டார். சொந்தக் காணி, அதில் சொந்த வீடு மற்றும் சிறுதோட்ட உரிமையாளர் என்ற அந்தஸ்து என்பன தொழிலாளர் சமூகத்துக்கு மிகப் பெரிய விஷயங்கள் தான்!

இரண்டாவது, தின வேதனம் ஆயிரத்தில் இருந்து 1,700 ஆக அதிகரிக்கப்படுவது.

மூன்றாவது, சம்பள நிர்ணய சபை முறையை விடுத்து பழைய கூட்டு ஒப்பந்த முறைக்குத் திரும்புவது.

நிச்சயமாக இம் மூன்றும் கம்பனி தரப்பின் ஒத்துழைப்போடு நடைமுறைக்கு வருமானால், அது பெருந்தோட்ட வரலாற்றில் அதிரடித் திருப்பு முனையாகவே அமையும். ஆனால் முதலில் ஜனாதிபதித் தேர்தலும் பின்னர் பாராளுமன்றத் தேர்தலும் வரவிருப்பதால், இத் திருப்புமுனை மாற்றங்கள் எவ்வளவு தூரம் வேகமெடுக்கும்; சாத்தியமாகும் என்பதை தேர்தல்களின் பின்னரான சூழல்களே தீர்மானிக்கப் போகின்றன.

தோட்டங்களை நிர்வகிக்கும் பெருந்தோட்ட கம்பனிகள் தேயிலை, இறப்பர் ஏற்றுமதிகள் மூலம் நல்ல இலாபம் அடைகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. ஏனெனில் இக் கம்பனிகளின் செயற்பாடுகள். அவற்றின் செலவு செய்யும் திறன், நிர்வாக செலவுகள் என்பன உயர் மட்டத்திலேயே இன்றளவும் பேணப்படுகின்றன. எனினும் ஆயிரம் ரூபா சம்பளத்தை நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகவே வழங்குகின்றன. தேயிலையை நிறுக்கும்போது கொழுந்து அல்லாத இலைகளும் இருப்பதாகவும், நிறை குறைவென்றும், கூடை பாரத்துக்காக மூன்று கிலோ கழித்துக் கொள்ளப்படுவதாகவும் (பிளாஸ்டிக் சாக்கு 250 கிராம் எடை கூட இருக்காது) எனவும் பல காரணங்கள் தெரிவிக்கப்பட்டு கொழுந்தின் எடையும், தரமும் குறைக்கப்படுகிறது. கம்பனிகள் தொழிலாளர்களை இப்படியும் ஏமாற்றி வஞ்சிக்கின்றன. வெளிநாட்டு நிறுவனங்களின் பராமரிப்பிலும் பின்னர் அரசின் நிர்வாகத்தின் கீழும் தோட்டங்கள் இருந்தபோது வழங்கப்பட்ட வசதிகள் மற்றும் சலுகைகள் தற்போது வழங்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனி, கம்பனி தரப்பு நியாயங்களைப் பார்ப்போம்.

கம்பனிகளின் கடந்த கால போக்கைக் கவனிக்கும் போது, 700 ரூபாவாக வேதன உயர்வுக்கு அவ்வளவு எளிதில் அவை இணக்கம் தெரிவிக்கும் என எதிர்பார்க்க முடியாது. உலக தேயிலை சந்தை எக்காலமும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஏற்ற இறக்கத்துடன் கூடியது. உலகளாவிய இளைய தலைமுறை எப்போதும் தேனீரை விரும்பி அருந்தும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்தப் பின்னணியில் தேயிலை ஏற்றுமதியை நம்பி தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது எத்துணை சாத்தியமானது?.

தோட்ட நிர்வாக செலவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரித்து செல்கிறது. வரி அதிகரிப்பு, போக்குவரத்து என்பனவற்றையும் ஈடுசெய்ய வேண்டும். எனவே, சம்பள அதிகரிப்பு சாத்தியமானதல்ல. தொழிலாளர்களுக்கான சம்பளத்துடன், இலவச தங்குமிட வசதி, தொழிலுக்கான போக்குவரத்து செலவின்மை, தண்ணீர் வசதி, மருத்துவ – ஆஸ்பத்திரி வசதி, விறகு வசதி போன்றவையும் உள்ளடக்கப்பட வேண்டும். ஏனைய தொழிலாளர்களுக்கு இத்தகைய வசதி கிடையாது.

நூற்றாண்டு பழைமையான தினச் சம்பள முறை மாற்றப்பட வேண்டும். நேரத்துக்கமைவான சம்பளம் என்பதற்கு பதிலாக உழைப்புக்கேற்ற சம்பளம் என்ற புதிய சம்பளமுறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட வேண்டும். கை விரல்களை இயந்திரம் போல பாவித்து மிக வேகமாக கொழுந்து பறிக்கும் பெண்களில் எண்பது ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபாவரையில் மாத வருமானம் பெறுவோர் உள்ளனர். இத்தகையோர் ஊக்குவிக்கப்பட வேண்டும். எமது சம்பளத் திட்டம் தினத்துக்கு இவ்வளவு ரூபா என்பதற்கு பதிலாக உழைப்புக்கு ஏற்ற சம்பளமாக அமைய வேண்டும்.

இவை, பெருந்தோட்ட முகாமையாளர் சங்கம் தெரிவிக்கும் தம்பக்க நியாயங்கள். முகாமையாளர் சங்கம் 2021 சம்பள பேச்சுவார்த்தை இழுபறியின் போது கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொண்டது. இது தோட்டக் கம்பனிகளுக்கும் வாய்ப்பாகிப் போனது. அவற்றால் சுதந்திரமாக, தன்னிச்சையாக செயல்பட முடிகிறது. சங்கங்களுடன் எந்த உடன்பாட்டிலும், பேச்சுவார்த்தையிலும் அவை இல்லை. சம்பள உயர்வு வேண்டுமானால் சம்பள நிர்ணய சபையைத்தான் அணுக வேண்டும். இச்சபையும் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பாகவே நடவடிக்கை எடுக்க முடியும். தவிர, தொழிலாளர்களின் ஏனைய உரிமைகள், சலுகைகள், புதிய வசதிகள் அல்லது குறைபாடுகள் தொடர்பாக பேச முடியாது.

இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சாதுரியமாக செயல்பட்டு, ஒருநாள் வேதனம் 700 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பான முடிவொன்றை 31ஆம் திகதிக்கு முன்பாக அறிவிக்கும்படியாகவும் மேலும் கூட்டு ஒப்பந்த முறைக்கு திரும்பிச் செல்லும்படியும் கம்பனி தரப்பை, நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்ற வகையில் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதே சமயம் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் இந்த அறிவிப்புக்கு ஆர்ப்பாட்டமான வரவேற்பை வெளிக்காட்டாதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஏனெனில் பெருந்தோட்ட தொழிற்சங்கத் தரப்பு ஜனாதிபதியிடம் வைத்த கோரிக்கைக்கு ஏற்பவே ஜனாதிபதியால் கம்பனி தரப்புக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என நம்புவதற்கு இடமிருக்கிறது. ஏனெனில் சம்பள அதிகரிப்பு, கூட்டு ஒப்பந்தத்தை ஏற்படுத்துதல், புதிய விஷயங்கள் பற்றி பேசுதல் என்பன வற்றை கம்பனி தரப்புடன் எவ்வாறு ஆரம்பிப்பது. வழிக்குக் கொண்டுவருவது என்று தெரியாமல் தொழிற்சங்கங்கள் நின்றிருந்த வேளையில் தான் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

தினசரி வேதனம் 1,700 ரூபாவா அல்லது இரண்டாயிரமா என்ற பிரச்சினை ஒருபக்கமிருக்க, பெருந்தோட்டத் தொழில் காலத்துக்கேற்ற மாற்றங்களுக்கு உட்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. கம்பனி தரப்பு சொல்வதைப் போல, பழைய தின சம்பள முறையைத் தொடரமுடியாது. ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளபடி, சிறு தனியார்க் காணிகளாக, ஒரு குடும்பத்துக்கு அரை ஏக்கரோ ஒரு ஏக்கரோ தேயிலைக் காணி பிரித்து வழங்கப்பட்டு சிறுதோட்ட உரிமையாளர்களாக தொழிலாளர்களை மாற்ற வேண்டிய அவசியம் உள்ளது. அக்காணிகளை மேற்பார்வை செய்து உற்பத்திகளை கொள்வனவு செய்யும் பணியை கம்பனிகள் செய்யலாம்.

இத்தகைய மாற்றங்களை சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தொழிலாளர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய வசதிகள் இத்திட்டத்தின் கீழ் நிறுத்தப்பட்டு விடலாம். தற்போது கிடைக்கும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம் என்பன இல்லாமல் போய்விடலாம். எனவே மாற்று நலத்திட்டங்கள் பற்றி யோசிக்க வேண்டியிருக்கும். தொழிலாளர்களுக்கு காணி உறுதியுடனான 10 பேர்ச் காணித்துண்டு, சொந்த வீடு என்பனவற்றை வழங்குவதுடன் தினசரி வேதனத்தில் அதிகரிப்பு செய்வது என்பன தனியாக பார்க்கப்பட வேண்டும். அவர்களுக்கு தேயிலைக் காணி வழங்கப்பட்டு உற்பத்தியில் ஈடுபடச் செய்வது முற்றிலும் வேறானது என்பது உணர்ந்து கொள்ளப்பட வேண்டும். எனவே இச்சிக்கல்களை சுமுகமாக தீர்ப்பதற்காக அதிகாரம் கொண்ட ஒரு குழு அமைக்கப்படுவது அவசியம். மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதால் அவை ஒழுங்கு முறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஆயிரம் ரூபா எழுநூறினால் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை என்பது தேர்தல் கோஷம்போல மேலோட்டமாகத் தெரிந்தாலும், இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் உண்மையாகவே ஆரம்பிக்கப்படும் போதுதான் கம்பனிகளின் உண்மை சொரூபம் எமக்குத் தெரியரும். அவை நிபந்தனைகளையும், தமது யோசனைகளையும் முன்வைக்கும். எனினும் பேச்சுவார்த்தைகள், நாம் மேலே பார்த்த சம்பளம், காணி, வீடு மற்றும் சிறு தோட்ட உரிமை ஆகிய மாற்றங்களுக்கு வித்திடுபவையாக அமையும் என எதிர்பார்க்கலாம்.

அருள் சத்தியநாதன்



பாவேந்தல் பாலமுனை பாறூக் எழுதிய 50 எழுத்து ஆளுமைகள் நூல் அறிமுகவிழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நேற்று நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலை வகித்து அறிமுக விழாவில், முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார். ரவூப் ஹக்கீம் எம்பியும் அருகில் காணப்படுகின்றார்.




# நிலா

வண்ண நிலா வானத்திலே வன்முகத்தை காட்டும்....
வாசலிலே மரம் கொடிகள் ஓவியங்கள் தீட்டும்.....
எண்ணமெல்லாம் எங்கெங்கோ எட்டி நடை போடும்....
ஏட்டினிலே எழுதுகோலும் கவிபுனைய நாடும்...!!

இளையநிலா என் மீது எறியும் நிலா...
இனிய நிலா இளையோரின் வசந்த நிலா....
மழை போல மண் மீது பொழியும் நிலா...
மழலைகளின் கண்களுக்கும் சொரியும் நிலா.!!

பாடும் நிலா பாவையர்கள் தேடும் நிலா....
பாசாங்கு பண்ணும் நிலா பாவலர்கள் நாடும் நிலா.....
ஓடும் நிலா உடல் மறைத்து உருகும் நிலா....
ஒதுங்கும் நிலா இதயங்களில் தேன் ததும்பும் நிலா..!!

பூவில் நிலா புதுக்கவிகள் புனையும் நிலா....
பூ விழிகள் நனையும் நிலா...
புன்னகையில் தெரியும் நிலா....
பாவில் நிலா பல கதைகள் சொல்லும் நிலா.....
பாலில் நிலா பழக்கலவை தோய்த்த நிலா.!!

கற்பனையில் பருகும் நிலா...
கற்கண்டு பாகு நிலா...
புற்தரையில் புகுந்த நிலா....
பூமியில் முத்தம் பதித்த நிலா.!!

மேகத்திரையில் முட்டும் நிலா...
முழுமதியாய் மனதில் நிறைந்த நிலா...
தாகம் தணித்த நிலா தரணியில் வென்ற நிலா...
சோகம் களைந்த நிலா சோலைக்குள் புகுந்த நிலா..!!

**மாஜிதா தவ்பீக்**
மருதமுனை



# காற்றில் அகப்பட்ட படகு

கடிகார முட்கள் கண்ணில் படாத
பொழுதொன்றில்
காற்றில் அகப்பட்ட படகாய்
கதை திசை திரும்பியது

அதிகம் பேசுவதைப் பார்த்து
அதிசயத்துப் போய்
கேட்டேன்

அப்பொழுதே இந்தத் துணிவு
இருந்திருந்தால்
ஆளுக்கொரு பக்கம் வாழ்க்கை
திசை மாறி இருக்காது

அங்க மட்டும் என்னவாம்
அவர் ஏதோ சொன்ன மாதிரி

கடந்து போன
கறுப்பு நிறக் காதலுக்கு
காலம் கடந்து வண்ணம் பூசுகிறாள்

என்ன சொல்வதென்று
தெரியாமல்
எனது இயல்பான சிரிப்பு
வெளிப்பட்டு விடுகிறது

"சமாளித்தது போதுமென்றாள்"

அந்த நொடி அப்படியே
உறைந்து போக ஒட்டிக்கொள்கின்றன
உதடுகள்

மனம் மட்டும் அந்த
மௌன வாழ்க்கைக்குள்
சென்று திரும்புகிறது

"என்ன" என்று மீண்டும்
என்னை அதட்டி
அவளுக்கு தெரிந்த பதிலை
என்னிடமும் எதிர்பார்க்கிறாள்

"நீ நல்லா இருக்கட்டுமென்று"
உங்கள் ஆசைப்படியே
நான் நல்லா இருக்கிறேன்
கொடுப்புக்குள் சிரிக்கிறாள்

சிரிப்பின் ஆழம், நீளம் தெரியாத
சிறுவன் நானில்லை அதை
அவள் நன்கறிவாள்

இதற்குமேல் பேசினால்
இருவரும் தோற்று விடக்கூடும்
நேரம் போய்விட்டதாக
காற்றில் அகப்பட்ட படகு
கரை சேருகிறது

அந்தக் காற்று இனி
எப்போது வீசுமோ

**பெரியமடு நிஹ்ரி**

# தன்னலம்

அகமெல்லாம் அல்லல்கள் சுமந்து
புறமெல்லாம் இன்முக மாயை

தன்னை அறியார் தான் அறியார்
தன்னை உணரார் தான் உணரார்
தன்னை அறிந்தால் தான் அறிவர்
தன்னை உணர்ந்தார் தான் உணரும்

தன்னலம் கருதியே வாழ்வர் வாழ்வு
தன்னலம் கருதாத வாழ்வென்பர்
தன்னலம் கருதும் மாந்தர் வாழ்வு
தன்னலமின்றி வாடுவர் தனியாக

அகமெங்கும் அழுக்காறு இருள்
புறமெங்கும் அகவொளி பூச்சு

**இணுவில் வாகீசன்**



# இல்லாள்...

உயிரால் ஒன்றாகி உன்னையே
கதியென்று பாதம் சுற்றி கொடியாய்
படர்ந்து உற்றமும் சுற்றமும் துறந்து
பிணக்குகள் களைந்து மனையோடு
இயைந்து மன்னவனை நெஞ்சில்
சுமந்து கட்டிக்
காக்கும் இல்லாள்......!

குடும்ப சுமையறிந்து சிக்கனமாய்
செலவு செய்து கண்கள்
புகை சூழ்ந்து
கண்ணீர் சொட்ட அன்பு கலந்து
உணவு சமைத்து
கணவன் உண்டு மகிழ
தன் பசி மறந்து
இன்புறும் இல்லாள்.....!

வழியனுப்பி வைத்த கணவனை
நினைத்து உருகி ஏக்கங்களோடு
வாசலில் தவம்கிடந்து
காணும் போது
முகம் மலர்ந்து கணவன்
சிந்தை குளிர புன்முறுவல்
பூத்திடும் இல்லாள்....!

விதண்டாவாதம் தவிர்த்து
பொறுமை காத்து
வாழ்க்கைச் சக்கரம் சுழல
மெழுகாய் உருகி
அன்பால் அணைத்து
கலக்கம் நீக்கி
தெளிவை
கொடுக்கும் இல்லாள்......!

இறை வார்த்தைகளை
கனிவாய் உரைத்து
இறை அருளை
சிந்தையில் விதைத்து
பிரார்த்தனைகள் செய்து
பாவங்களை தவிர்த்து
நன்மை ஊட்டும் இல்லாள்.....!

**தௌபீக் நவீத்**
(புல்மோட்டையூரான்)

# ஒரு அறைகூவல்

தங்கமான அரிவை ஆயினும்
தக்ககாலம் வதுவை ஆகிட
அங்கமணி இன்றியே வீணாய்
அல்லலுறும் இழிவைக் கேளாய்

சிங்கநாதம் செய்தே தோழா
சிந்தையோடு எய்வோம் வாராய்
மங்கையர்கள் மன்றல் புரிந்தே
மகிழ்வோடு வாழ்தல் நிலைக்க

பங்கமான எண்ணம் களைந்து
பகலவன் கண்ட பனிபோல்
அங்கமணி அறவே ஒழித்தால்
அகிலம் நம்மை வாழ்த்துமே

**சம்மாந்துறை ஏ.ஆர்.ஏ.கபூர்**

# எப்போதும் இன்பமே...!!!

செண்பக பூவின் வாசம் வரும்
அது தென்றலை தாங்கி தூதுவரும்
நெஞ்சினில் எப்போதும்
உன் நினைவு
கவிதைகளாய் மாறி
இன்பம் தரும்
தேன் மொழி பேசும் உன் பேச்சு
பேரானந்தமே என்
வாழ்வில் தரும்
செவ்வரத்தம் பூவின்
வாசம் வரும்
அது எப்போதும் இன்பம் தரும்
என் வாழ்க்கையில்
மாற்றம் வரும்
அது எப்போதுமே ஏற்றம் தரும்
கண்கள் இரண்டிலும்
கண்ணீர் வரும்
அதில் என் கவலைகள் யாவும்
தொலைந்து விடும் .....!!!!!



**சி.மௌநேஷ்**
மட்டக்களப்பு

# தாயன்பு

பச்சைப் பாலகனாக தவழ்ந்து
பீறிட்டுக் கதறி அழுத போது
பாலாட்டி தாலாட்டி சீராட்டி
உறங்க வைப்பவள் தாய்

ஓடி ஆடி வாடிய போது
தேடி வந்தென்னை அரவணைத்து
ஊட்டி உண்ணத்தந்து
நாடி வருடுபவள் அம்மா

பாலூட்டி பகலிரவாய்
கண்ணிமைபோல் வளர்த்தெம்மை
உணவூட்டி காத்து
நலம் காப்பவள் அன்னை

பள்ளி செல்ல பாதை காட்டி
பாங்கோடு பாதுகாத்து
தாங்கொணா துயரங்கள் தாங்கி
பாசம் பொழிபவள் மாதா

நோய் வந்த போதெல்லாம்
துடிதுடித்து துவண்டு
எம் வலியை தன்வலியாக
அரவணைப்பவள் மாதா

பாசம் பொழிந்து உணர்வோடு
நேசம் பூண்டு நெக்குருதியுடன்
பாசம் இல்லா விருப்போடு
வாசம் கொள்வாள் அம்மா

முகவரியின்றி தவித்தபோது
தனிவழி போக வேண்டி
நல்வழி காட்டியெம்மை
நல்லவராக்கியவள் அன்னை

தொழிலின்றி தவித்த வேளை
வழி தெரியாமல் வாழ்ந்த போதும்
வழிகாட்டி வாழ வைத்து
சாதனை புரிய வைத்தவள் தாய்

வறுமை எம்மை வாட்டிய போதும்
நிலைமையை உயர்த்தி
சிறுமை காணாத சிறப்பை
சிறபபோடு உழைத்தவள் மாதா

கல்யாண சந்தையிலே
விலை பொருளாகாமல்
கன்னிகாதானம் பூணும் கன்னியை
கரம்பிடித்து சொன்னவள் அம்மா

காதல் போதையில் மதிமயங்கி
கருத்தொருமித்த காதலாக
சாதனை புரிய வேண்டி
வாழ வைத்தவள் அன்னை

அன்னையை ஆதரிப்போம்
மாதாவை மதிப்போம் உள்ள
அம்மாவை அரவணைப்போம்
தயவுடன்
தாயைப்போற்றி மகிழ்வோம்

**உடப்பூர் வீரசொக்கன்**

# கடலே...



உன்னை நாடி...
விண்மகளின் வடிவம்
நீள் கடலில் இறங்கும்
விஞ்சி நிற்கும் பொழிவில்
நீண்ட உரை பகரும்...

இன்னலுற்ற மானிடரும்
இங்கே வருவர்
இன்சுகத்தை நாடுவாரும்
இங்கே இருப்பர்...

கல்மனம் கொண்டாரும்
கற்கண்டாய் இனிப்பாரும்
குஞ்சு குருத்தோடு
கூடி விளை யாடிடுவர்...

பட்டம் பறக்குங்கால்
மிட்டாயும் தீர்ந்திடும்
பந்துடனே எறிபடும்
பந்துக்களின் சீற்றம்...

மீனினத்தின் அழகில்

மீண்டிடும் மோகம்
கப்பல் தவழும் கதியில்
கவிவரியும் ஊறும்...

முத்தெடுக்க மூழ்கியவர்க்கு
முடிந்திடாத சொர்க்கம்
புத்தாக்க கருவிகளும்
தந்துதவும் விளக்கம்...

நாண வரும் கதிரவனின்
நன் நயனக் காட்சி
இன்பத் திகைப் பூட்டும்
இறை அத் தாட்சி...

சிறுநண்டு கீறும் படம்
சிந்தனையைத் தூண்டும்
சிப்பிகள் சிதைந்த தடம்
சித்தாந்தம் பேசும்...

நீள் நிலப்போர்வை
நின்றவுடன் பொங்கும்
கொந்தளிப்பில் நொந்தவை
காந்தமென இழுக்கும்...

நெஞ்சகத்தில் அச்சமெனும்
பஞ்சணைகள் இருந்தும்
களித்து வர கையிடுக்கில்
குழந்தை மனம் ஏங்கும்....

**என்.நூர்**
தர்கா நகர்

# தேவ பாலனே வருக!

வையகத்தை மேவிய
துன்பம் அகன்றிட
மானிடர் இதயத்தில்
உவகை பொங்கிட
வாழ்வில் குறுக்கிடும்
துயரங்கள் ஒழிந்திட
தேசமெங்கும் மனித
அறிவு மேலோங்கிட
யேசு பாலனே வருக! வருக!

மாதம் மும்மாரி
பொழியவேண்டும்
கொடிய வெயிலின்
சீற்றம் குறையவேண்டும்
செய்பயிர் மண்ணில்
விளைந்திடவேண்டும்
இயற்கையும் சீற்றம்
கொள்ளாதிருக்க
மீண்டும் கர்த்தரே வருக! வருக!!

விண்ணில் விண்மீன்கள்
புன்னகைக்க
மண்ணில் பயிர்கள்
செழித்து வளர்ந்திட
வறுமையும் துன்பமும்
விலகி ஓடிட
எல்லா உயிர்களும்
நல்லபடி வாழ்ந்திட
மீட்பரே இந்த உலகம்
சிறக்க வருக! வருக!

புதுமைகள் ஆயிரம்
தோன்றட்டும்
அது சமூகத்தை
நல்வழிப்படுத்தட்டும்
முதுமையிலும் இளமை
மிளிரட்டும்
மனித இதயத்தில்
அன்பு வளர்ந்திட
தேவபாலனே வருக! வருக!!

**கலாபூசணம் கு. சண்முகம்**
வந்தாறுமூலை

# புன்னகை கலந்த வலி



அடிக்கடி ஞாபகப்படுத்தி
கடந்து செல்ல
மறுக்கிறது
புன்னகையுடனான
கண்ணீர் கலந்த
வறுமை.

பசியோடு பழகி
முதுமையோடு விளையாடி
நினைவோடு உரையாடி
அநாதையெனக் கூறி
யாசகம் கேட்க
தயார் ஆகிறது
கைகளுடன் முதுமை.

அன்பான உறவுகளால்
அழகான வாழ்வினை
பரிசாகத் தந்து
போகிறது துரோகம்
நிறைந்து போன
ஏமாற்றங்கள்.
அளவாய் வைத்திருந்த
பணம் அழகாய்
கூறிப் போகிறது
உன்னை விட
எனக்கு மரியாதை
அதிகமென நான்
ஈன்றெடுத்த மழலையோடு
ஆனந்தமாய்.

மனதோடு பலவாயிரம்
வலிகளிருந்தும்
வறுமையோடும்
தனிமையாக நாட்களைக்
கடந்து போகிறேன்
நாளையொரு நாளிருக்க
கூடாதென்று தினமும்
பிரார்த்தனையுடன்.

**பொத்துவில் அஜ்மல்கான்**

# தியாகம்



யார் யாருக்காகவோ
தியாகம் செய்திட
பழகி விட்டது இந்த மனது...

பேருந்தில் நிற்க
சிரமப்படும் பெண்
பேராபத்துக்கு மட்டும்
நட்பை நினைவுறுத்தும் நண்பன்

மிகப் பிடித்த ஒன்றை
அடுத்தவருக்கு
கையளிக்கும் தருணம்

விழி நிறைந்த தூக்கத்திலும்
நம்மை எதிர்பார்க்கும்

ஒருவருக்கு கொடுக்கும் நேரம்
பரிசளித்த துரோகத்தை மறந்து
புன்னகைக்க முயற்சிக்கும் நொடி
பேச்சுத் துணைக்கென மட்டும்

தரப்படும் உபசாரம்
அவர்களாய் உடைத்தாலும்
நாமே வலிந்து சென்று
மன்னிப்பு கேட்கும் நிலை

நம்மை போல யாருமில்லையென
மனதைத் திருப்தி
செய்து கொள்ளும் பக்குவமென

யார் யாருக்காகவோ
தியாகம் செய்திட
பழகி விட்டது இந்த மனது...
இருந்தும் நம் மனதுக்காய்

நம் ஆறுதலுக்காய்
நம் சோகங்களையும்
நம் கண்மூடித்தனமான
நம்பிக்கைகளையும்

வேண்டாத எதிர்பார்ப்புகளையும்
மறந்தும் ஒதுக்கியும்
தியாகம் செய்தல்
எத்தனை நலம்
அது தான்
நமக்கு நாமே செய்யும்
பெரும் நன்றிக் கடனும் கூட!

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

# மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் விருதை வென்றுள்ள நெஸ்லே லங்கா நிறுவனம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற 25 வது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் தேங்காய் கொப்பரைத் துறையில் 2021/2022 மற்றும் 2022/2023 நிதியாண்டுகளுக்கான மிகச் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதை நெஸ்லே லங்கா பெற்றுள்ளது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மதிப்பிற்குரிய விருதுகள், நாட்டின் ஏற்றுமதித் துறையில் மிகச் சிறந்த பங்களிப்புக்களை வழங்கியுள்ள நிறுவனங்களுக்கு அங்கீகாரமளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றன.

1986 ஆம் ஆண்டில் மெகி தேங்காய்ப் பால்மாவை அறிமுகப்படுத்திய நெஸ்லே, அன்றுதொட்டு 37 ஆண்டு கால செயற்பாடுகளின் மூலமாக இலங்கையில் 6,000 க்கும் மேற்பட்ட இலங்கை விவசாயிகளுக்கு ஆதரவளித்துள்ளதுடன், அவர்களது நலனை தொடர்ச்சியாக மேம்படுத்தி வந்துள்ளது. கடந்த ஆண்டில் 96 மில்லியனுக்கும் மேற்பட்ட தேங்காய்களை இந்நிறுவனம் கொள்வனவு செய்துள்ளதுடன், ரூபா 6.2 பில்லியன் தொகையை அதற்காக செலுத்தி கிராமிய சமூகங்களை மேம்படுத்தியுள்ளது. மேலும், இலங்கையில் தேங்காய்ப் பால்மாவை ஏற்றுமதி செய்யும் மிகப் பாரிய நிறுவனங்களில் ஒன்றாக, 2022/23 ஆண்டில் ஏற்றுமதி வருவாயாக ரூபா 10.72 பில்லியன் தொகையை இலங்கைப் பொருளாதாரத்திற்கு பங்களித்துள்ளது.

மேலும், நெஸ்லே தெங்கு அபிவிருத்தித் திட்டத்தினூடாக, சமூகத்தின் நலனை மேம்படுத்தும் அதன் முயற்சியில் 4,500 கிராமிய குடும்பங்களுக்கு தனது ஆதரவை இந்நிறுவனம் வழங்கியுள்ளதுடன், இலவச கலப்பு தென்னம்கன்றுகள், தொழில்நுட்ப வழிகாட்டல், விரிவான பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

# உணவுத் தொழில் வல்லுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வை நடத்திய HNB

இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, உணவுப் பாதுகாப்பு தரங்களை உயர்த்துவதற்கும் ஏற்றுமதி துறையை வலுப்படுத்துவதற்குமான குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, உணவு தொழில் வல்லுநர்களுக்கான Preventive Controls தகுதி பெற்ற தனிநபர் (PCQI) பயிற்சிப் பாடநெறியை முடித்த பங்கேற்பாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வை அண்மையில் நடத்தியது.

HNB வழங்கும் சான்றிதழ் அளிக்கும் நிகழ்வு, ஒழுங்குமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமன்றி இலங்கையின் ஏற்றுமதி நற்பெயரை உயர்த்துவதற்கும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இலங்கையின் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் (NCE) இணைந்து நடத்தப்பட்ட இந்த சிறப்புப் பயிற்சித் திட்டம், உணவுத் துறையில் Preventive Controls நடைமுறைப்படுத்தத் தேவையான நிபுணத்துவத்துடன் தனிநபர்களை தயார்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. சான்றிதழானது ஒரு ஒழுங்குமுறைத் தேவை மட்டுமல்ல, உணவு ஏற்றுமதியில் தரம் மற்றும் பாதுகாப்புக்கான இலங்கையின் அர்ப்பணிப்புக்கான சான்றாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

HNB மற்றும் NCE இடையேயான இந்த ஒத்துழைப்பு, இலங்கை பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கான அவர்களின் உறுதியை பிரதிபலிக்கிறது. குறிப்பாக ஏற்றுமதித் துறையில் இயங்கும் வணிகங்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு HNB உறுதிபூண்டுள்ளது.

# இரட்டை இலக்கப் பெறுமதி வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் முன்னணி செயற்பாட்டாளரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2023ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

துரித வளர்ச்சியை வெளிப்படுத்தி, 2022ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் தேறிய செலுத்திய கட்டுப்பணப் பெறுமதியில் 14% அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. இது துறையின் வளர்ச்சி வீதமான 11% விட உயர்வாக பதிவாகியிருந்தது.

குறிப்பாக, ஆயுள் காப்புறுதித் துறையில் 4ஆவது மாபெரும் சந்தைச் செயற்பாட்டாளர் எனும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லை நிறுவனம் எய்தியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் 12% மொத்த சந்தைப் பங்கை கொண்டிருந்தது. மிகைப் பெறுமதி மாற்றங்களை தவிர்த்து, வரிக்கு பிந்திய இலாபம் 74% இனால் அதிகரித்திருந்தது. இதில், 2022ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் திரட்டப்பட்ட உயர் முதலீட்டு வருமானங்களினூடாக பெருமளவு பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் சந்தை மூலதனவாக்கம் 2023 மூன்றாம் காலாண்டில், 46% வளர்ச்சியை பதிவு செய்து, ரூ. 23.9 பில்லியனாக பதிவாகியிருந்தது.

மூலோபாய ரீதியில் சொத்துக்களை ஒதுக்கீடு செய்திருந்ததனூடாகவும், உயர் வட்டி வீதங்கள் நிறைந்த சூழலிலும், நிறுவனத்தினால் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், முதலீட்டு வருமானத்தில் 54% எனும் உயர் வளர்ச்சியை எய்த முடிந்திருந்தது.

# SLT–MOBITEL இரத்தினபுரி கிளை புதிய முகவரிக்கு மாற்றம்





வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற உயர்தரமான சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்து, தேசிய தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குரான SLTMOBITEL, தனது இரத்தினபுரி கிளையை புதிய முகவரிக்கு இடமாற்றியுள்ளது.

இல. 428, பிரதான வீதி, இரத்தினபுரி எனும் முகவரியில் அமைந்துள்ள இந்தப் புதிய கிளை, வாடிக்கையாளர்களுக்கு இணைப்பை நெருக்கமடையச் செய்வதில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. நவீன வசதிகளைக் கொண்டு, பெருமளவு உள்ளக இடவசதிகளுடனான இந்தக் கிளை, வாடிக்கையாளர்களுக்கு நட்பான வகையில் உள்ளம்சங்களைக் கொண்டுள்ளது.

SLTMOBITEL flagship stores களில் கிடைக்கும் சகல பிரதான சேவைகளையும் புதிய இரத்தினபுரி கிளை வழங்கும். வாடிக்கையாளர் சேவை, புதிய இணைப்புகளை வழங்கல், கட்டணப் பட்டியல் உதவிகள் மற்றும் கோரிக்கைகள் போன்ற அனைத்தும், வாடிக்கையாளரின் சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

குறிப்பிட்ட வாழ்க்கை முறைகளுக்கு பொருத்தமான தீர்வுகள், பிரத்தியேகமான கவனிப்புகள் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகள் போன்றவற்றை அர்ப்பணிப்பான கிளை ஊழியர்கள் வழங்குவார்கள். அதனூடாக சாதாரண கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட வாடிக்கையாளர் உறவுகளை கட்டியெழுப்ப SLTMOBITEL எதிர்பார்த்துள்ளது.

மேலும், இலங்கையின் இல்லங்கள் மற்றும் வியாபாரங்களில் அதிகரித்துச் செல்லும் டிஜிட்டல் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சாதனங்கள், புதிய இணைப்புகள் மற்றும் eSIM சலுகைகள் போன்ற ஊக்குவிப்பு அம்சங்களையும் இந்தக் கிளை கொண்டிருக்கும்.

# Microsoft Imagine Cup 2024 இலங்கையில் அறிமுகம்




தூர நோக்குடைய மாணவர் தொழில்முயற்சியாளர்களுக்கு Microsoft AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புத்தாக்கமான தீர்வுகளை வழங்கக்கூடிய சர்வதேச ரீதியிலான தொழில்நுட்பத் திறன் காண் போட்டியான Microsoft Imagine Cup, 2024 ஆம் ஆண்டுக்காக இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Microsoft Imagine Cup தற்போது 22 ஆவது ஆண்டாக ஏற்பாடு செய்யப்படுகின்றது. தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தொழில்நுட்ப ரீதியான தீர்வுகளை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தப் போட்டி அமைந்துள்ளதுடன், இந்த ஆண்டு AI இல் புதுப்பிக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்டிருக்கும். இந்தப் போட்டியில் பங்கேற்பதனூடாக மாணவர்களுக்கு, USD 1,000 Azure Credits மற்றும் USD 2,500 OpenAI Credits ஆகியவற்றுடன், நிபுணர்களின் வழிகாட்டல்களைப் பெற்று நவீன AI தொழில்நுட்பத்தை அணுகும் வாய்ப்பு கிடைப்பதுடன், தமது AI பயணத்தை துரிதப்படுத்திக் கொள்ள முடியும். நிபுணத்துவ தொழில்நுட்ப மற்றும் தொழில் முயற்சியாண்மை ஆலோசனை வழங்கலுடன், USD 100,000 தொகையை வெல்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.

மேலும் Microsoft தவிசாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சத்யா நதெல்லாவுடன் ஆலோசனை வழிகாட்டல் அமர்வில் பங்கேற்கவும் முடியும்.

சுமார் இரு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் இந்தப் போட்டித் தொடர் ஆரம்பமானதுடன், இலங்கையின் மாணவர்களுக்கும் உலகளாவிய போட்டியின் இறுதிச் சுற்றுக்கும், ஆசியாவின் வெற்றியாளர்களாகவும் தெரிவாகியிருந்தனர்.

# இலங்கையில் வெதுப்பக பணிகளுக்காக புதிய தேசிய தரநிலையை உருவாக்கும் ஏபி மௌரி



மதுவம் மற்றும் வெதுப்பக மூலப்பொருட்களுக்கான தீர்வுகளில் முன்னணியில் திகழும் ஏபி மௌரி லங்கா பிரைவேட் லிமிடெட், அதன் ஊழியர்களுக்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழில் (NVQ) புதிய உச்சத்தை அடைந்துள்ளது .

அண்மையில், இரண்டு டசினுக்கு மேற்பட்ட ஊழியர்கள் விசேட தொழில் முறைகளில் தனிப்பட்ட திறன்கள் மற்றும் ஆற்றல்கள் போன்றவற்றை பல நிலைகளில் வழங்கும் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்தகைமை சான்றிதழ் பயிற்சிநெறியை [NVQ ] வெற்றிகரமாக பூர்த்தி செய்திருந்தனர், "உயர்தரமான பூர்த்தி செய்யப்பட்ட வெதுப்பக பொருட்களை வழங்க உதவுவதன் மூலம், இலங்கையில் வெதுப்பக தொழிலை மேம்படுத்துவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்" என, ஏபி மௌரி லங்கா பிரைவேட் லிமிடெட்டின் பணிப்பாளரான , சூரஜ்தீன் செய்யத் கூறினார். "எமது குழுவானது உயர் தரங்களைப் பேணி வருவதுடன் இந்த சான்றிதழ் பயிற்சிநெறியானது எங்கள் ஊழியர்களின் தொழில் வாழ்க்கையிலும் எங்கள் வாடிக்கையாளர்களின் வணிகங்களிலும் நாம் முயற்சி செய்த சிறப்புகளின் பிரதிபலிப்பாகும் ''. பாரம்பரிய கல்வித் தகைமைகள் போலன்றி, NVQ ஆனது அனுபவங்களில் கவனம் செலுத்துவதுடன், இந்த திறன்களும் நிபுணத்துவமும் வெதுப்பக துறை போன்ற தொழில்களுக்கு சிறந்த தெரிவாக அமைகின்றன .

# கூட்டாண்மையை புதுப்பித்துள்ள Coca-Cola மற்றும் Sathosa



இலங்கை முழுவதும் CocaCola தயாரிப்புகளின் கிடைக்கும் தன்மை மற்றும் அணுமுறையை மேம்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, CocaCola Beverages Sri Lanka (CCCBSL) மற்றும் Lanka Sathosa Limited ஆகியவை அக்டோபர் 30, 2023 முதல் தங்களது கூட்டாண்மையை புதுப்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. Sathosaவின் பரந்த வலையமைப்பான 430+ நாடு முழுவதிலுமுள்ள விற்பனை நிலையங்களில் பல்வேறு வகையான CocaCola தயாரிப்புகள் கிடைப்பதை இந்த கூட்டாண்மை உறுதி செய்கிறது.

இந்த கூட்டாண்மை புதுப்பிப்பதற்கான கையொப்பமிடும் நிகழ்வில் CocaCola Beverages Sri Lanka (CCBSL) மற்றும் Sathosa Lanka Limited ஆகிய இரு நிறுவனங்களின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர், இது புதுப்பிக்கப்பட்ட கூட்டாண்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

CCBSLஐ பிரதிநிதித்துவப்படுத்தி முகாமைத்துவ பணிப்பாளர் – Pradeep Pandey, பணிப்பாளர் நிதி – Rajeev Tandon, வர்த்தக பணிப்பாளர் – Prashant Kumar, முக்கிய கணக்குகள் மற்றும் நவீன வர்த்தகம், WS & Southern Region தலைவர் – Tania Karunaratne, முக்கிய கணக்கு முகாமையாளர் – Chamil De Silva மற்றும் உதவி வர்த்தக சந்தைப்படுத்தல் முகாமையாளர் – Oshani Ganegoda. Sathosa நிறுவனத்தின் தலைவர் Pasanda Yapa Abeywardena, பிரதம நிறைவேற்று அதிகாரி Sampath Senawatte, பிரதிப் பொது முகாமையாளர் கொள்வனவு – Roshari Sahajeewani மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் நிதி – Channa Kevitiyagala ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்களின் இருப்பு இந்த கூட்டாண்மையின் தொடர்ச்சியான வெற்றிக்கு இரு அமைப்புகளின் கூட்டு மனப்பான்மை மற்றும் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

# அசட்லைன் லான்ட்ஸ் நீர்கொழும்பில் விஸ்தரிப்பு




டேவிட் பீரிஸ் குழும கம்பனிகளின் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனமான அசட்லைன் லான்ட்ஸ் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் நீர்கொழும்பில் புதிய கிளையைத் திறந்து தனது செயற்பாடுகளை விஸ்தரித்துள்ளது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வகையில் நகரின் மையப்பகுதியில் 394, கொழும்பு வீதி, நீர்கொழும்பு என்ற முகவரியில் இந்தக் கிளை அமைந்துள்ளது.

இந்தக் கிளையின் திறப்பு விழாவை நினைவுகூரும் வகையில் மாரவிலவில் அமைந்துள்ள ‘த மரைன்’ காணிக் குடியிருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் வாடிக்கையாளர்கள் தமது காணிகளுக்கான ஆவணங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த மூலோபாய நகர்வானது நிறுவனத்தின் வளர்ச்சிப் படியை வெளிப்படுத்தியிருப்பது மாத்திரமன்றி வாடிக்கையாளர்களின் சௌகரியம் தொடர்பில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த அசட்லைன் லான்ட்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு.கலும் கட்டிப்பெராச்சி குறிப்பிடுகையில், “சீதுவவில் முன்னெடுக்கப்படும் எயார் டெரஸ் மற்றும் மாரவிலவில் உள்ள த மரைன், திவுலப்பிட்டியவில் உள்ள கிரீன் சிட்டி மற்றும் மதுரங்குளியில் ஏர்பன் பார்க் போன்ற திட்டங்கள் மூலம் அசட்லைன் லான்ட்ஸ் நிறுவனம் ஆதன அபிவிருத்தித் திட்டத்தில் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதைப் பறைசாற்றுகிறது” என்றார்.

# வெற்றியாளராக தெரிவான ஆர்பிகோ இன்சூரன்ஸ் பிஎல்சி



நாட்டின் புத்தாக்கமான மற்றும் நம்பிக்கையை வென்ற ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரும், முன்னணி பொதுப் பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான ரிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி பி.எல்.சியின் துணை நிறுவனமுமான ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சி இந்தியாவின், மும்பை நகரில் நடைபெற்ற நான்காவது Emerging Asia காப்புறுதி ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் 2023 நிகழ்வில், காப்புறுதி பரவலாக்கத்துக்காக சிறந்த தந்திரோபாயங்கள் – இலங்கை எனும் விருதை சுவீகரித்தது.

இந்திய வர்த்தக சம்மேளனத்தினால் (ICC) ஏற்பாடு செய்யப்பட்ட Emerging Asia காப்புறுதி ஒன்றுகூடல் மற்றும் விருதுகள் நிகழ்வினூடாக, ஆசியாவின் சிறந்த காப்புறுதி சேவை வழங்குநர்களின் சாதனைகளை கௌரவிக்கப்படுகின்றது. பிராந்தியத்தில் காப்புறுதியை ஊக்குவிப்பதற்கு பங்களிப்பு வழங்கும் முயற்சிகளை ஊக்குவிப்பதாகவும் அமைந்துள்ளது. கிளைகளின் எண்ணிக்கை, முகவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் வளர்ச்சி வீதம், CAGR திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் சமூகத்தினுள் காப்புறுதி அணுகலை அதிகரிக்கச் செய்வதற்காக டிஜிட்டல் செயற்பாடுகளை பின்பற்றல் போன்ற பல்வேறு முக்கியமான காரணிகளை கவனத்தில் கொண்டு கடுமையான வினைத்திறன்சார் மதிப்பீட்டைத் தொடர்ந்து, ஆர்பிகோ இன்சூரன்ஸ் பி.எல்.சிக்கு இந்த விசேட ICC விருது வழங்கப்பட்டது.

**கலாசார திணைக்களமும் குண்டசாலை பிரதேச செயலாளர் காரியாலயமும் இணைந்து நடத்திய கலாசார விழா 2023 இல் முதலாவது இடம் பிடித்த சிறுகதை**

# துளிர்



தியா வேகமாக நடந்து கொண்டிருந்தாள். இதமாக வீசிக் கொண்டிருந்த காற்று குளிர் காற்றாக மாறியது. குளிர்காற்றாக மாறியதும் அல்லாமல் வேகமாகவும் வீசத் தொடங்கியது. பாதையின் இரு மருங்கிலும் இருந்த நிழல் தரும் மரங்களின் இலைகளையும் சருகுகளையும் காற்று சுழற்றியடித்தது.

மழைதூரத் தொடங்கியது. மெல்ல மெல்ல பெய்த மழை ஆலங்கட்டியாக உடலில் பட்டு வேதனையை தந்தது. மழைக்கு ஒதுங்கி நிற்கக் கூட மனது இடம் தரவில்லை. ஏனென்றால் அவளுக்கு விரைவாக வீடு செல்ல வேண்டும். பசியுடன் காத்துக் கொண்டிருக்கும் மகனுக்காக பால்மா வாங்கிச் செல்ல வேண்டும். இன்று அவளுக்கு சம்பள நாள்.

அவள் தான் வேலை செய்யும் ஆடைத் தொழிற்சாலையில் இருந்து வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குப் போகவே நடந்து வந்து கொண்டிருந்தாள். மழையால் அவளுடைய நடையின் வேகத்தை குறைக்க முடியவில்லை. அவளது எண்ணமெல்லாம் வீட்டிலிருக்கும் தனது பச்சிளம் குழந்தை சுரேஷை சுற்றியே இருந்தது.

தியா அழகான ஒரு இளம் தாய் அவளுக்கும் ஒரு இனிமையான மகிழ்ச்சியான வாழ்க்கை ஒன்று இருந்தது. அவளது தந்தை ஒரு வர்த்தகர். தாயார் வீட்டிலிருந்தவாறே அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு ஆடைகளை தைத்துக் கொடுத்து சிறிது வருமானம் ஈட்டி வந்தார்.

அவர்களின் ஒரே மகள் தியா. அவளின் அப்பா அன்பானவர். அம்மா கண்டிப்பானவர். ஆனால் தியா தைரியமான பெண்ணாக வளர காரணமானவர் அம்மாதான். அவரவர் வேலையை அவரவர் தான் செய்யவேண்டும். நேரம் தவறாமை, சுத்தம் சுகம் தரும். எதிலுமே ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டும்.

தவறு செய்தால் மன்னிப்பு கேட்கவும், அதனை திருத்திக் கொள்ளவும் அறிவுரை கூறுவார். தியாவுக்கு இயற்கையை ரசிக்க கற்றுத் தந்தார். வெண்பஞ்சு மேகங்கள் உருவாக்கும் கோலங்களை ரசிப்பது. இரவின் சில்வண்டு இசை. மின்மினிப் பூச்சிகளின் கண்சிமிட்டல், வானத்து வேடன், தனுசு என நட்சத்திரங்களை அடையாளம் காண்பது, அதிகாலை புல்வெளியில் நடப்பது மாத்திரமல்ல மார்கழி பனியில் வாசலில் கோலம் போடவும் கற்றுத் தந்தாள். இன்றும் தியாவின் சமையலில் அம்மாவின் கைப்பக்குவம் உள்ளது என்ற பாராட்டும் அவளால் தான். இவையெல்லாம்தான் தியாவின் அழகான இளமைக் காலம்.

காலம் ஒருவரது வாழ்க்கையை எப்படிப் புரட்டிப் போடுகிறது என்பதற்கு தியாவே உதாரணமாக வாழ்கிறாள்.

வாழ்க்கையில் மறக்க முடியாத எவ்வளவு இனிமையான காலம். விதி எவ்வளவு கொடியது. முழு உலகத்தையுமே ஆட்டிப்படைத்த கொரோனா என்னும் அரக்கன் தியாவின் வாழ்க்கையிலும் விளையாடிவிட்டான்.

தியா அந்நேரம் மாதவனை திருமணம் செய்து வெறும் ஆறு மாதங்களே ஆகியிருந்தன. நாடு முழுவதும் லொக்டவுன் என ஸ்தம்பித்துப் போயிருந்தது. அப்பாவின் கடையும் மூடப்பட்டது. மாதவன் வேலை பார்த்து வந்த நிறுவனமும் இழுத்து மூடப்பட்டது. அனைவரும் வீட்டுக்குள் முடங்கிப் போனார்கள். அவர்கள் உயிர்வாழ்வார்களா? என்பதே கேள்விக்குறியாகப் போய்விட்டது. பசி ஒருபுறம் வாட்டி வதைத்தது. அவர்களுக்கும் நோய் தொற்றி விடுமோ என்ற பயம் அவர்களை ஆட்டிப் படைத்தது. அரசாங்கமும் நல்ல இதயம் கொண்ட மனிதர்களின் உதவியாலும்தான் ஒரு நேர உணவுடன் அவர்கள் காலத்தை கடத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்த சூழ்நிலையில் தான் தியா கர்ப்பமானாள். என்ன செய்வதென்றே யாருக்கும் புரியவில்லை. எவ்வளவு மகிழ்ச்சியான தருணம். ஆனால் அதை அனுபவிக்கும் மனநிலையில் யாரும் இல்லை. பயமே அவர்களை சூழ்ந்திருந்தது. இவ்வேளையில்தான் ஒரு நாள் தியாவின் தந்தை திடீரென தனக்கு காய்ச்சல் அடிப்பதாக கூறினார்.

தியா உடனடியாக சுகாதார துறையினருக்கு அறிவித்தாள். அவரை அவர்கள் அம்பியூலன்ஸ் வண்டியில் வைத்தியசாலையில் அனுமதிக்க அழைத்துச் சென்றார்கள். அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவருக்கு கொரோனா என முடிவு செய்து அவருக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார்கள். தியாவும் ஏனையோரும் வீட்டிலேயே தனிமைப்படுத்தப் பட்டார்கள்.

இரண்டு நாட்களின் பின் தியாவின் தந்தை இறந்து போய்விட்டதாக தகவல் அறிவித்தார்கள். "ஐயோ நாம் என்ன செய்வது அவரின் முகத்தை கூட ஒரு தடவை பார்க்க நாம் கொடுத்து வைக்கவில்லையே!! என அவர்களால் அழ மாத்திரம் தான் முடிந்தது. பின்னர் வீட்டிலுள்ளவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை அறிய பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது.

அங்கு தியாவுக்கு அடுத்த பேரதிர்ச்சி காத்திருந்தது. அவளைத் தவிர அவளது அம்மா, கணவர் இருவருமே கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தார்கள். அவர்களும் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

யார் யாருக்கு ஆறுதல் கூறுவது என்று தெரியாது நாடே கவலையில் மூழ்கி போனது. தியாவுக்கு கிடைத்த அடுத்த அதிர்ச்சியான தகவல் தாய் மற்றும் கணவர் இருவருமே இறந்து போனார்கள் என்பதாகும். அவளால் இப்போது அழக் கூட முடியவில்லை. அவளைச் சுற்றி அந்தகாரமே சூழ்ந்திருந்தது.

தியாவின் வீட்டுக்கு அருகிலிருந்த நண்பியொருத்தி அவளது பரிதாப நிலை கண்டு தனக்கு கிடைக்கும் உணவில் சிறிதளவு கொண்டு வந்து வாசற்கதவில் தொங்க விட்டு செல்வாள். அரசாங்கம் அளித்த நிவாரண உதவிகளும் மெல்ல மெல்ல அவளுக்குக் கிடைத்தது.

தடுப்பூசிகளையும் தியா செலுத்தினாள், அவளது எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தது. தாயாகப் போகும் தன் நிலைமை குறித்து அவளே பச்சாதாபப்பட்டாள்.

மெல்ல மெல்ல நாடு வழமைக்கு திரும்பிக் கொண்டிருந்தது. தியா மகன் சுரேஷை பெற்றெடுத்தாள். இவ்வேளையில் தியாவுக்கு உறுதுணையாக அவளது நண்பி இருந்தாள். அவளது எதிர்காலத்துக்கும் மகனின் எதிர்காலத்துக்கும் என்ன செய்வதென்று திகைத்து நின்றிருந்த வேளையில் நண்பியே அவளுக்கு ஒரு யோசனை சொன்னாள். அவள் வேலை செய்யும் பள்ளேகலை சுதந்திர வர்த்தக வலய ஆடை தொழிற்சாலையில் புதிதாக வேலைக்கு ஆட்களை சேர்ப்பதாகவும் தியாவுக்கு நன்றாக தைக்க முடியும் என்பதால் அங்கு வேலைக்கு விண்ணப்பிக்குமாறு கூறினாள். அது தியாவுக்கு நல்ல யோசனையாக தான் இருந்தது. ஆனால் தனது மகனை யாரின் பாதுகாப்பில் விட்டுச் செல்வது என்ற கேள்வி எழுந்தது.

அப்போது கடவுள் போன்று நண்பியின் தாயார் "மகள் நீங்கள் பயமில்லாமல் வேலைக்குப் போங்க நீங்கள் வரும் வரை சுரேஷை நான் பார்த்துக் கொள்கின்றேன்" என்று கூறினார். அவர் சொன்னது அவளுக்குக்கு சந்தோசத்தை தந்தது. அன்று தொடக்கம் அவள் இந்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுகிறாள்.

திடீரென அவள் மீது மழைத் துளிகள் பெரிதாக விழத் தொடங்க கடந்த கால நினைவுகளிலிருந்து மீண்டாள். அவள் வர்த்தக வலயத்துக்கு அருகில் உள்ள வங்கிக்கருகில் நின்று கொண்டிருநதாள். உடனடியாக அவளுக்கு மகனின் ஞாபகம் வந்தது.

அன்று சம்பள நாள் அல்லவா வங்கியில் பணம் எடுப்பதற்கு பலரும் வரிசையில் நின்றிருந்தார்கள். விரைவாக வரிசை முடிந்து விடாதா என தவிப்புடன் காத்திருந்தாள்.

ஒரு நிமிடம் ஒரு யுகம் போல் தோன்றியது. இறுதியில் அவளது முறை வந்ததும் அவசர அவசரமாக பணத்தை எடுத்துக் கொண்டு பஸ் தரிப்பிடத்தை நோக்கிச் சென்றாள். வழமை போல் அன்றும் பஸ்ஸில் அதிக சனக் கூட்டம். அவளும் ஒருவாறு முண்டியடித்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

மெல்ல மெல்ல ஒவ்வொரு தரிப்பிடத்திலும் ஐந்து நிமிடங்கள் 10 நிமிடங்கள் என தரித்து நின்ற பஸ் வண்டி அவள் செல்ல வேண்டிய இடத்தை அடைந்தது.

பஸ்ஸில் இருந்து இறங்கிய தியா அருகில் இருந்த கடைக்கு சென்று மகனுக்கு ஒரு மாதத்துக்கு தேவையான பால்மாவை வாங்கினாள்.

பின்னர் வீட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை மிகவும் சிக்கனமாக வாங்கிக் கொண்டாள். கடை முதலாளி பில்லை அவளது கையில் தந்தார். அவருக்கு பணத்தை செலுத்துவதற்காக கைப்பையை திறந்து பர்ஸை எடுக்கப் போனாள். ஐயோ இது என்ன பர்ஸை காணவில்லை.

அவளுக்கு பூமியே சுழல்வது போல் இருந்தது. மகனின் பசி தான் தியாவுக்கு முதலில்தெரிந்தது. அவள் மீண்டும் மீண்டும் அவளது கைப்பையை துழாவினாள். பட்டகாலிலே படும் கெட்டக் குடியே கெடும் என்ற கூற்றுப் போன்று தனது உழைப்புக்காக கிடைத்த கூலியை இவ்வாறு அநியாயமாக இழந்து விட்டேனே என்று நினைத்தபோது அவளால் அழுகையை அடக்க முடியவில்லை விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

அவ்வேளையில் யாரோ தியாவை அழைப்பது போன்று உணர்ந்தாள். "அக்கா இந்தாங்க உங்களுடைய பர்ஸ்" நானும் நீங்கள் வந்த பஸ்ஸிலே தான் வந்தேன்.

நீங்கள் இறங்கும்போது உங்கள் பர்ஸை ஒருத்தன் பிக் பொக்கெட் அடிப்பதை கண்டேன்.

நான் அவனை துரத்திச் சென்றேன். அவன் பர்ஸை போட்டுவிட்டு ஓடிவிட்டான். நீங்கள் இந்த கடைக்குள் நுழைவதை கண்டேன். அதுதான் உங்களுடைய பர்ஸை கொடுக்க வந்தேன் என்றான்.

அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவள் அவனை நன்றியுடன் பார்த்தாள். கண் கண்ட கடவுளாக அவன் அவளுக்குத் தெரிந்தான். இரு கரம் கூப்பி அவனை வணங்கி நன்றி கூறினாள். திக்கற்றவர்களுக்கு தெய்வம் துணை என்று கூறுவது போல் அவள் கண்களுக்கு அவன் தெய்வமாக தெரிந்தான். முதலாளியின் பில்லுக்கு பணத்தை செலுத்தி விட்டு ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி நடந்தாள்.

வாழ்க்கையில் அனைத்தையும் இழந்தாலும் தியா போன்ற பெண்களுக்கு வாழ்க்கையில் பாறையை துளைத்துக் கொண்டு வரும் துளிர் போன்று நம்பிக்கை துளிர்க்கவே செய்கிறது.

**வயலட்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 100

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | ■ | 02 | | 03 | 04 | ■ | 05 |
| | ■ | | ■ | 06 | | 07 | |
| 08 | 09 | | | ■ | ■ | 10 | |
| 11 | | | ■ | 12 | 13 | | |
| ■ | | ■ | 14 | | | | ■ |
| 15 | ■ | 16 | | | | ■ | 17 |
| | ■ | 18 | | ■ | 19 | 20 | |
| | ■ | 21 | | | ■ | 22 | |

திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.................. ..................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 100
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 100

**இடமிருந்து வலம்**

1. ஒரு தமிழ் மாதம்
2. பணமுடிப்பு வழங்குவதை இப்படிச் சொல்வர்.
6. குளிர்காலத்தில் உடலைப் பாதுகாப்பது (திரும்பியுள்ளது)
8. ஆச்சரியமான அல்லது அதிசய உணர்வு (குழம்பியுள்ளது)
10. வார நாட்களில் ஒன்று (திரும்பியுள்ளது)
11. ஒரே தன்மையுடைய சிலர் அடங்கிய அமைப்பு (குழம்பியுள்ளது)
12. வயலும் வயல் சார்ந்த இடமும்
14. மகள் திரும்பி விட்டாள்
16. எண்ணத்தின் நிறைவேற்றம் குழம்பிவிட்டது
18. பெண்
19. காசு சிந்திக் கிடக்கிறது.
21. விதை
22. பழம்(திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. மனத்துணிவு
2. ஐம்பதாண்டு நிறைவுக் கொண்டாட்டம்
3. அழகுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லப்படும் ஒரு பறவை
4. குற்றம் செய்தலையும் தூற்றுதலையும் குறிக்கும் (தலைகீழ்)
5. வீரதீரச் செயல்
7. போற்றப்படத் தக்க தூய்மையான நிலை(குழம்பியுள்ளது)
9. பயனற்ற கழிவுப் பொருட்கள் குழம்பிக் காணப்படுகின்றது.
12. ஒரு கறிச்சரக்கு
13. உரிய நேரம் குழம்பியுள்ளது)
14. எதிர்பாராத வகையில் சேதத்தை அல்லது துன்பத்தை ஏற்படுத்தும் செயல் (குழம்பியுள்ளது)
15. குரங்கு
16. சிலப்பதிகாரக் கதையில் வரும் ஒரு பாத்திரம் (குழம்பியுள்ளது)
17. ஒரு வாத்தியக் கருவி (குழம்பியுள்ளது)
20. மாரி காலத்து இரவில் இதுவும் பொழியும்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 99

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. பாலன் பிறப்பு
6. தீவு
7. சீலம்
9. நடுநிசி
11. பாம்பு
12. கத்தி
13. பல
14. திரவம்
16. ராகம்
17. அலி
20. கவி
21. சபதம்
23. ஓடம்
24. மாலை

**மேலிருந்து கீழ்**

1. பாதீடு
2. நிலவு
3. பிரசித்தி
4. சீப்பு
5. புலம்பல்
8. பாலம்
10. நகரம்
14. விகடம்
15. வராகம்
17. அசதி
18. பலி
19. மாதம்
22. தலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 99

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ஏ.சீ. ஸ்ரீதரன்**<br>**லில்லி கெயார் ஹோம்**<br>152 பருத்தித்துறை வீதி<br>கோப்பாய் தெற்கு, யாழ்ப்பாணம் | **இல்யாஸ் தாஸீம்,**<br>இல 23 ஏ, இப்றாஹிம் விதி<br>தொட்டவத்தை,<br>பாணந்துறை | **ஹாஷிரா பானு லியாவுத்தீன்,**<br>12/6 சென் பீற்றர்ஸ் வீதி<br>நிந்தனி<br>புத்தளம் |

### பாராட்டு பெறுவோர்

1. **இப்.ஆர்.ஏ. ரஸாக்,** மடவள
2. **என். கே. வேணி** பலாங்கொடை
3. **எஸ். சந்திரிக்கா** களுவாஞ்சிக்குடி
4. **எஸ். சிறீகிருஷ்ணராஜா** மட்டக்களப்பு
5. **எச். சல்பியா,** பாணந்துறை
6. **அனுராதா பாக்கியராஜா** கொழும்பு 06
7. **வேல்நாயகன் ராஜேந்திரன்** காரைதீவு
8. **ஏ. சந்தியாகோ** கண்டி
9. **எம். அகஸ்டின்** லுனுகல
10. **எம். டபிள்யூ.எப். ஷனாஸ்** துல்ஹிரிய

## ஜனாதிபதி வழங்கிய உறுதி மொழி

### மனோ எம்.பி தெரிவிப்பு



வீடு வீடாக விபரங்களை திரட்டும் பொலிசாரின் பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு சபையில் கலந்துரையாடி பதிலளிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னிடம் உறுதியளித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் திடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்பி தனது அதிகாரபூர்வ எக்ஸ்டுவீட்டர் தளத்தில், "இது தொடர்பில் ஜனாதிபதியின் முடிவு அறியப்படும்வரை, அரசியல் யாப்பில் இருக்கின்ற, ஆட்சி மொழி சட்டத்தை மீறுகின்ற இந்த பொலிஸ் பதிவு படிவங்களை நிராகரிக்கும்படி மக்களை கோருகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.


## சுற்றாடல் அமைச்சு

## ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

**ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட் இன் கீழ் செயற்படும் மனம்பிட்டிய மணல் அகழ்வு செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் ஒவ்வொரு பரப்பிற்கும் பொருத்தமான சேவை வழங்குநர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை**

**பெறுகை இலக்கம். GSMBTS/PUR/NCB/2023-35**

சுற்றாடல் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வியாபாரக் கம்பனியான ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட் சார்பாக தலைவர் திணைக்கள பெறுகைக் குழுவினால் மனம்பிட்டிய மணல், அகழ்வு செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் ஒவ்வொரு பரப்பிற்கும் பொலன்னறுவை மாவட்டத்திற்குள் பொருத்தமான சேவை வழங்குநர்களை தேர்ந்தெடுப்பதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விக்கோரல் தேசிய போட்டி கேள்விக்கோரல் முறைமையின் பிரகாரம் செயற்படுத்தப்படும் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, மேலதிக விபரங்களை ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட் இன் பெறுகைக் பிரிவில் (தொ.பே. 011-2827850) இலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023 டிசம்பர் 18 முதல் 2024 ஜனவரி 08 பி.ப 3.00 வரை அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் தலைமையகத்தில் அல்லது மனம்பிட்டிய மணல், அகழ்வு செயற்றிட்டப் பணிமனையில் ரூ. 2000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024 ஜனவரி 09 பி.ப.200 அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு, பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வியுடன் ஒரு பரப்பிற்காக ரூ. 10,000.00 வீதமான கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். செல்லுபடியாகும் கேள்விப் பிணையுடன் இல்லாத எந்தக் கேள்வியும் நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கும் கேள்விகளும் நிராகரிக்கப்படும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் கீழ்க்காணும் முகவரியில் கேள்விகள் திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதி நிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**ஜீ எஸ் எம் பீ டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**569, எப்பிட்டமுல்ல வீதி, பிட்டகோட்டே**
**2023.12.18**


## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

# அறிவித்தல்

சவுதி அரேபியாவில் சாத் டிரேடிங் அன்ட் கொன்டிரக்டிங் நிறுவனத்தில் (Saad Trading & Contracting Company) சேவையாற்றியுள்ள அந்த நிறுவனம் திவாலான காரணத்தினால் தொழிலை இழந்த ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அந்த நாட்டில் தற்போது சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் நஷ்டஈடு வழங்குவதற்காக கவனத்திற் கொள்ளப்படுவதற்கு சில இலங்கைத் தொழிலாளர்கள் தமது தகவல்களை இதற்காக வழங்கப்பட்டுள்ள இணையதளத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை என சவுதி அரேபியாவின் இயைபுடைய அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால், இதுவரை தமது தகவல்களை வழங்காத பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் கூடிய விரைவில் இணையதளத்தின் ஊடாக பின்வரும் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த தகவல்களை நாளது தரவேற்றம் செய்துகொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

https://ehqaq.sa/saad

**விசாரணைகள்: 0112-2366962**

**முகாமையாளர்**
**(வெளிநாட்டு தொடர்புகள் 11 பிரிவு)**

| S/N | ID NUBER | NAME | CLAIM NO |
|---|---|---|---|
| 01 | 2352630418 | KALASHILFAN KANDABAN | 240042 |
| 02 | 2226112619 | YODHIKUMAR SILVA | 240067 |
| 03 | 2213503960 | MOHAMED HAMEED | 240431 |
| 04 | 2213804038 | SULAIMAN NAGOORAN | 240873 |
| 05 | 2179276460 | ARMA DURAI SANGARA PILLAI | 240968 |
| 06 | 2163190933 | T GANADASA SILVA | 240970 |
| 07 | 2166701512 | JAYAMNI FRANCIS | 240972 |
| 08 | 2166701041 | SILVA VINAYAGAMOORTHI | 240973 |
| 09 | 2203873886 | CHANDRADAS PERERA KANKAMARAJ | 240974 |
| 10 | 2203416025 | CHANDRA ABOOZ | 241000 |
| 11 | 2353208552 | SAMIS DENVALAR UHANIDI | 241023 |
| 12 | 2213372465 | RUWAN RAJAPAKSA | 241028 |
| 13 | 2199533841 | NIMAL MUDALIYAGE | 241223 |
| 14 | 2169426505 | MOHAMED FAIZAL HUSAI | 241226 |
| 15 | 2353208032 | M SARATH FERNANDO | 241229 |
| 16 | 2135965784 | VISWA LINGAM KANABATHY | 241231 |
| 17 | 2179492125 | MILO ADHIKARY UMAMI | 241423 |
| 18 | 2213781749 | MOHAMED AKMAL MUHIYADEEN | 241479 |
| 19 | 2231713468 | MANIJ KUMAR KASTHOORI DON | 241578 |
| 20 | 2179278995 | NIMAL ANTHONY | 241584 |
| 21 | 2211227547 | ABDUL GHAFOOR AHAMED | 241642 |
| 22 | 2165487774 | MOHAMED HAFIL RAFEER | 241645 |
| 23 | 2214592939 | A MOHAMED SANOOS | 241709 |
| 24 | 2213434810 | MOHAMED ZAINUL ABDEEN | 241778 |
| 25 | 2233798475 | MOHAMED IFTHIKAR JAWFER | 241781 |
| 26 | 2203774662 | RUWANI ARACHGE | 242865 |
| 27 | 2179490624 | SISIRA WIYANALAGE | 243265 |
| 28 | 2233107107 | NIHAL ASVIKA KALABI | 243356 |
| 29 | 2182975827 | NAJABAR RAWINDUN | 243398 |
| 30 | 2169426075 | WADUGE PRIYANTHA | 243464 |

“அக்கரையில் மாண்புறவே இக்கரையில் கைகோர்ப்போம்”

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

# அறிவித்தல்

சவுதி அரேபியாவில் சவுதி ஒஜர் நிறுவனத்தில் (Saudi Oger Company) சேவையாற்றியுள்ள அந்த நிறுவனம் திவாலான காரணத்தினால் தொழிலை இழந்த ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அந்த நாட்டில் தற்போது சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் நஷ்டஈடு வழங்குவதற்காக கவனத்திற் கொள்ளப்படுவதற்கு சில இலங்கைத் தொழிலாளர்கள் தமது தகவல்களை இதற்காக வழங்கப்பட்டுள்ள இணையதளத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை என சவுதி அரேபியாவின் இயைபுடைய அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனால், இதுவரை தமது தகவல்களை வழங்காத பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் கூடிய விரைவில் இணையதளத்தின் ஊடாக பின்வரும் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த தகவல்களை நாளது தரவேற்றம் செய்துகொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

https://ehqaq.sa/saaudioger

**விசாரணைகள்: 0112-2366962**

**முகாமையாளர்**
**(வெளிநாட்டு தொடர்புகள் 11 பிரிவு)**

| S/N | PASSPORT NO | IQAMA NO | NAME | CLAIM NO |
|---|---|---|---|---|
| 1 | N8590343 | 2316830898 | MOHIDEEN BAWA ABDUL LATHIFF | 2200422 |
| 2 | | 2367834922 | SELLAIAH SIVANAIAH THAYALAN | 2205886 |
| 3 | N6961669 | 2137107526 | MOHAMED NAZEEM SHAKAF | 2206337 |
| 4 | N8758965 | 2192270201 | AHAMED HUSAINI SEYED AHAMED | 2221074 |
| 5 | N8947718 | 2239002047 | MOHAMED SAHEER MOHAMED CASSIM | 2221166 |
| 6 | N6228457 | 2138060096 | JAYAWICKRAMATHNA SUDU HAKURE GEDARA | 2223388 |
| 7 | N4058017 | 2358078059 | ASHATH ANVAR S MOHIDEEN | 2204051 |
| 8 | - | 2325809669 | AJITH KUMARA G B MUDIYANSELAGE | 2205882 |
| 9 | - | 2173677903 | RANAWANSA - APPUHAMILAGE | 2205891 |
| 10 | - | 2361172436 | RIZWAN ADAM BAWA KALANDARLEBBE | 2205896 |
| 11 | - | 2395077833 | MOHAMED SABRAZ IM SHERIFF | 2205897 |
| 12 | - | 2272448453 | DAMMIKA MALKANTHI KARANDENI DEWAGE | 2205901 |
| 13 | - | 2367834872 | RAMESH KUMARA K RAJARATNAM | 2205902 |
| 14 | - | 2285739617 | SEGAR CHANDRASEKARAM - SAMPUNA-THAPILLA | 2205906 |
| 15 | - | 2281192217 | MAHESWARAN THAMBEMUTDHU- RAMAKUD-DY | 2205917 |
| 16 | - | 2376856577 | THALATHTHANILAG C N KIRIELLA | 2205922 |
| 17 | N3899088 | 2294426925 | DONA SANDYA K WICKRAMARATHE | 2205937 |
| 18 | NO319088 | 2278555947 | MOAHMED SARJOON- MANSOOR | 2205938 |
| 19 | N5755465 | 2378314310 | MOHAMED NAWSAN SUBAIRDEEN | 2205940 |
| 20 | - | 2380296588 | RATHNASIRI DIAS SUBAWEERAGE | 2206046 |
| 21 | - | 2158799409 | HALEEM - JALEEL | 2206324 |
| 22 | - | 2216171831 | MOHAMED RIMSAN MOHAMED TAIBU | 2206333 |
| 23 | - | 2170261263 | MOHAMMED - NOORSALIN | 2206339 |
| 24 | - | 2380296661 | MOWFEEK ALIYAR MAHROOF | 2206343 |
| 25 | - | 2310662586 | LAKSMAN DISANAYAKA DISANAYAKA MUDI-YANSELAGE | 2206347 |
| 26 | N0928225 | 2273363883 | SUMITH KUMARA HORATHAL PEDIGE | 2206351 |
| 27 | NO357771 | 2288630441 | NALLATHAMBI PERINPAM SURESH KUMAR | 2206354 |
| 28 | N3960832 | 2283438659 | DAYANANDA MUNUGODA- HAKURU | 2206361 |
| 29 | - | 2390183958 | ASINTHA UDITH DISSANAYAKE MUDIYAN | 2221076 |
| 30 | N3471923 | 2356723557 | PRAMASIRI ABEYKOON TENNAKOON MUDI-YANS | 2221092 |
| 31 | N2374277 | 2281323713 | PONNIAH SIVARAJHA- SIVEKEETHAN | 2221093 |
| 32 | - | 2279439125 | SAMANSIRI - KAHANGAMA MANNAGE | 2221123 |
| 33 | - | 2283431753 | SELLATHANBY JOSEPH - VIMALRAJ | 2221128 |
| 34 | - | 2259095657 | GOVINDARAJ -SIDDAMBARAM MAHADA-WASAMI | 2221140 |
| 35 | N0441201 | 2129693319 | MUHAMMAED - RAUFF | 2221162 |
| 36 | - | 2378074583 | MOHAMED MIFRAZ | 2221178 |
| 37 | - | 2265820668 | MOHAMED NIMSHAN MOHAMED NAJEEB | 2221184 |
| 38 | - | 2271638716 | NALEEM KALANDER - LEBBE | 2221190 |
| 39 | - | 2287436170 | YASEENBAWA ATHAMBAWA- NAGURAN | 2221198 |
| 40 | N4036382 | 2159023684 | MOHAMED - HUSSAIN | 2225644 |
| 41 | - | 2395211796 | ARSANILAGE DON K.N. FERNANDO | 2205885 |
| 42 | N4279082 | 2306733029 | MOHAMED NUHUMAN AHAMED | 2205908 |
| 43 | - | 2286048083 | SALENDURAI AHAMADULEBBAI - ABU BACKER | 2206325 |
| 44 | N3930966 | 2283432322 | ANIL PUSHPASIRI S UDUWARAGE | 2221081 |
| 45 | - | 2264323508 | UDESHA NIMANTHA - LANEROL | 2221082 |
| 46 | N4244229 | 2311057232 | VIGNESHWARAN ANGAMUTHU RAJALINGAM | 2221144 |
| 47 | N5856221 | 2287059246 | MOHAMED THAMBY MOHIDEEN BAWA AB-DUL HAKEEM | 2221158 |
| 48 | N6074991 | 2031298421 | MOHAMEDHASSAN - MOHAMED FALEEL | 2221160 |
| 49 | - | 2276800824 | MOHAMED MIFRAH MOHAMED SHAFI | 2221175 |
| 50 | - | 2261469809 | NIMALENDRAN NALLATHAMBY - PATHINIYAN | 2221189 |
| 51 | - | 2278853342 | WEERAPATHIRAN - SAMITHAMBY SUTHAN | 2221195 |
| 52 | - | 2272767514 | KALALDEEN VALLATH THAMBY | 2223393 |
| 53 | N2123636 | 2306116449 | MOHAMMADHU SHAFIE MOHAMMADHU IZZADHFEN | 2200420 |
| 54 | N5100985 | 2370659472 | MIRIS PONNUTHURAI KANDAN | 2205910 |
| 55 | N5730519 | 2370997559 | MOHAMED RISWAN M IQBAL | 2205911 |
| 56 | N7518221 | 2324453444 | TISSA KUMARA M ARACHCHIGE | 2205924 |
| 57 | N3886764 | 2205727072 | ANVAR - ABDULAZEEZ | 2205942 |
| 58 | N3015815 | 2335726044 | PRIYANTHA PUSHPA K S K GEDARA | 2206345 |
| 59 | N1138596 | 2283438485 | CHANDRASIRI MALINAIDA - MARAKKALA | 2206355 |
| 60 | N0665841 | 2286832932 | UMER LEBBE SULAIMAN LEBBE | 2206357 |
| 61 | N4454533 | 2356190211 | TUAN RASOOL J T HAJIREEN | 2221103 |
| 62 | N2885025 | 2175627237 | GORGE- TTAH | 2221107 |
| 63 | N1930601 | 2245615352 | RAGAVAN - NAGARASA | 2221117 |
| 64 | N2947742 | 2262335983 | SURAJ RATHNAYKE -RAJAN | 2221122 |
| 65 | N5835282 | 2281324620 | SINNATHAMBI SIVALINGAM - THAVARETNAM | 2221129 |
| 66 | N4369960 | 2272114444 | SHANTHA RUWAN - BANDIGEDARA | 2221131 |
| 67 | N4743250 | 2364820999 | KASUN MADUSHAN MOHOTTIGE | 2221146 |
| 68 | N4350063 | 2276855117 | MOHAMMED MAHIR MOHAMMED JUNAID | 2221174 |
| 69 | N5995772 | 2108694882 | MOHAMMED - FAHEM | 2221186 |
| 70 | N6178178 | 2274598453 | VELUPILLAI MAHALINGAM - THABESAN | 2223394 |
| 71 | N5701059 | 2387927367 | AHAMED LEBBE SEENI MOHAMED | 2205919 |
| 72 | N0674267 | 2425178957 | ANEES NAYOOR THAMBY | 2221079 |
| 73 | N4294498 | 2427562620 | PATHMASIRI SELLIAH VELLU | 2221083 |
| 74 | N6187929 | 2301747131 | PASKARAN SITHIRAVEL SELVANAYAGAM | 2221084 |
| 75 | N3924422 | 2282286281 | TARSAN FERNANDO - PANAGODAGE | 2221086 |
| 76 | N0893099 | 2309258438 | PRASANTH RAJAN MUTHUSAMY | 2221090 |
| 77 | N5763626 | 2365487707 | JEYARANJAN NADESALINGAM I THARMALINGAM | 2221108 |
| 78 | M2357703 | 2263634848 | DIMUTHU JAYA WIKRAMA PALLE GEDARA RALALAGE | 2221112 |
| 79 | N2015582 | 2285917817 | DIMUTHU GAYAN G WADU | 2221113 |
| 80 | N4567264 | 2364747093 | RATHNAM KUMAR PALANIVEL | 2221115 |
| 81 | N4777160 | 2356735601 | RANJAN KUMARA W SAMARATHUNGA | 2221119 |
| 82 | N2002736 | 2263683365 | KAMALASEKARA SIVASUPRAMANIYA - RATH-THANAM | 2221127 |
| 83 | N0581208 | 2141330049 | CHANDRAKUMAR - SUBRAMANIAM | 2221132 |
| 84 | N3806839 | 2379647486 | MOHAMED RIYAS M HUSSAIN | 2221163 |
| 85 | N6131549 | 2278171604 | MOHAMED SIHAN - FAROOK | 2221167 |
| 86 | N3802804 | 2265762373 | NASAR- PACKEERBAWA ALIYAR | 2221187 |
| 87 | N8979145 | 2219109523 | SUSILSHANTHA DISSANAYAKA HERATH MUDITANSELAGE | 2223390 |
| 88 | N2125411 | 228343907 | LAKSHMAN PIYARATHE - MANAWADU | 2223395 |
| 89 | N1885708 | 2351575333 | KAMAL RANJITH F NIYAKULAGE | 2223397 |

“அக்கரையில் மாண்புறவே இக்கரையில் கைகோர்ப்போம்”

Daily News Classifieds, the Housewives' companion

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

ASIAN INFRASTRUCTURE INVESTMENT BANK

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்திற்கு அனுசரணை வழங்குதல் (AIIB)

நகர அபிவிருத்தி பிராந்தியத்தில் முன்னுரிமை முதலீடாக நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரம் மற்றும் புறநகர் பிரதேசங்களின் காணிகளின் 4,074 வீடமைப்பு அலகுகளின் நிர்மாணம் மற்றும் காணிகளின் மீள்அபிவிருத்தி ஆகியவற்றிற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து நிதியிடலுக்காக இலங்கை அரசாங்கமானது ஆலோசனை நடத்தியுள்ளது. இந்த செயல் திட்டமானது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் (MUD&H) நிறைவேற்றப்படுவதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் (UDA) அமுல் நடத்தப்படுகின்றது.

''கொழும்பு நகர புத்துயிராக்கல் செயல் திட்டத்திற்கு அனுசரணை வழங்குதல் (AIIB)'' இலுள்ள பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக பரிசீலனை செய்வதற்காக பின்வரும் தகைமைகளை கொண்டுள்ள பொருத்தமான தகைமையுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| தொ. இல. | நிலை | இல. | தேவைப்படும் தகைமைமற்றும் அனுபவம் |
|---|---|---|---|
| | மட்டம் பிஎஸ் - 4ஏ – 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் | | |
| 01 | சிரேஷ்ட முறைபகுப்பாய்வாளர் | 01 | (கீழேயுள்ள 1 அல்லது 2)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தானதுறையில் சித்திகரமாக பூர்த்திசெய்யப்பட்ட இளமாணிப் பட்டமொன்று<br>அல்லது<br>உரித்தானதுறையில் பட்டப்படிப்பிற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழபக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>அல்லது<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவன மொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று / நிகரானதொழில்சார் தகைமையொன்று.<br>அத்துடன்<br>உரித்தானதுறையில் ஆகக் குறைந்தது 09 வருட பட்டப்படிப்பின் பின்னரான தகைமை அனுபவம்<br>2) உரித்தானதுறையில் அரசாங்க நாடளாவிய ரீதியிலான சேவைகளின் III/II அல்லது மேற்பட்ட வகுப்பிலுள்ள அலுவலரொருவர்.<br>அத்துடன்<br>III/II வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 9 வருட அனுபவம்<br>* தரவு பகுப்பாய்வு மற்றும் தொடர்புடைய தரவுத்தள முகாமைத்துவ முறைகளின் அனுபவம் பெறுமதியுள்ள சொத்தாகும். |
| 02 | பொறியியலாளர் (சிவில்) | 02 | (கீழேயுள்ள 1 அல்லது 2)<br>1) பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தானதுறையில் சித்திகரமாக பூர்த்திசெய்யப்பட்ட இளமாணிப் பட்டமொன்று<br>அல்லது<br>உரித்தானதுறையில் பட்டப்படிப்பிற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>அல்லது<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று / நிகரான தொழில்சார் தகைமையொன்று.<br>அத்துடன்<br>உரித்தானதுறையில் ஆகக் குறைந்தது 09 வருட பட்டப்படிப்பின் பின்னரான தகைமை அனுபவம்<br>2) உரித்தானதுறையில் அரசாங்க நாடளாவிய ரீதியிலான சேவைகளின் III/II வகுப்பிலுள்ள அல்லது மேற்பட்ட அல்லது நிகரான நிலபரத்திலுள்ள அலுவலரொருவர்.<br>அத்துடன்<br>III/II வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 9 வருட அனுபவம்<br>உயரமான கட்டிடங்களின் நிர்மாண செயல் திட்ட அனுபவமானது சேர்க்கப்பட்ட அனுகூலமாகும். |
| | மட்டம் பிஎஸ் - 6ஏ- 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் | | |
| 03<br><br>04 | தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்)<br><br>தொழில்நுட்ப அலுவலர் (சேவைகள்) | 01 | (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தானதுறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணிப் பட்டமொன்று<br>அல்லது<br>உரித்தானதுறையில் பட்டப்படிப்பிற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>அல்லது<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட இணைந்த அங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.<br>அத்துடன்<br>தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்<br>3) தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 14 வருட அனுபவம்<br>* கட்டிட செயற்றிட்டங்களின் அனுபவம் சேர்க்கப்பட்ட அனுகூலமாகும். |
| 05 | தரவு முறைவழியாக்கல் அலுவலர் | 01 | (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3)<br>1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணிப் பட்டமொன்று<br>அல்லது<br>உரித்தானதுறையில் பட்டப்படிப்னிற்கு நிகரான தகைமையென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்று.<br>அல்லது<br>உரித்தானதுறையில் அங்கீகரிக்கப்பட்டதொழில்சார் நிறுவனமொன்றிலிருந்துபெறப்பட்ட இணைந்தஅங்கத்துவமொன்று/ நிகரான தொழில்சார் தகைமையொன்று.<br>அத்துடன்<br>தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.<br>2) தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்<br>3) தொழில்நுட்ப துறைக்கு உரித்தான பதவிக்காக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட தேசிய வாழ்தொழில் தகைமை 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழொன்று பெறப்பட்டிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>தேவைப்படும் விஷேடத்துவ பரப்பில் ஆகக் குறைந்தது 14 வருட அனுபவம்<br>* தரவு பகுப்பாய்வு முறைகளை முகாமை படுத்தலிலுள்ள அனுபவமானது பெறுமதி வாய்ந்த சொத்தாகும். |
| 01/2019 என்ற இலக்கமுடைய முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம்<br>அனுசரணை வழங்கும் பதவிநிலை அலுவலர்கள்<br>அரசாங்க சேவை மற்றும் படிகளுக்கான தன்மையிலமைந்துள்ளது | | | |
| 06. | கணனி இயக்குநர் | 01 | (கீழேயுள்ள 1, 2 மற்றும் 3)<br>1) ஒரே அமர்வில் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் அடங்கலாக 5 திறமைச் சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>2) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆகக் குறைந்தது ஐந்தாம் மட்ட (5) தேசிய வாழ்தொழில் தகைமை அல்லது மேற்பட்ட கணனி/ தகவல் தொழில்நுட்பவியல் கற்கைநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல்.<br>அத்துடன்<br>3) High computer literacy in MS Word/Excel/Power Point and English and Sinhala Typing.<br>அத்துடன்<br>கணனி இயக்குநராக ஆகக் குறைந்தது 3 வருட அனுபவம்.<br>* செயற்றிட்டங்களின் அனுபவம் சேர்க்கப்பட்ட அனுகூலமாக அமையும். |

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

வேதனம்: நியதிகள் மற்றும் நிபந்தனைகள் 2019.03.15 ஆம் திகதியிடப்பட்ட 01/ 2019 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம். மேல் மாகாணத்தில் வெளியக பயணத்துடன் வேலை செய்யும் நிலையமானது கொழும்பில் அமைந்திருக்கும்.

விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்: **www.mudh.gov.lk** மற்றும் **www.uda.gov.lk** ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்தின் உருமாதிரியை பின்பற்றுமாறு விண்ணப்பதாரிகள் மதியுரை வழங்கப்படுகின்றனர்.

கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடையும் வகையில் 2023.12.31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அவர்களின் சுயதரவை கல்விசார், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் பதிவுத் தபாலில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தயவு செய்து உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.

செயற்றிட்ட பணிப்பாளர்,
கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கான அனுசரணை,
5 ஆம் மாடி,
“செத்சிரிபாய”, I ஆம் கட்டம்,
பத்தரமுல்ல.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறித்துரைக்கவும்.

அரசாங்க துறையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை திணைக்களங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களின் நேரம் தவறாத ஒப்படைத்தலை உறுதிப்படுத்துவதற்காக பிரதியொன்றை முன்னராகவே அனுப்புமாறு மதியுரை வழங்கப்படுகின்றனர்.

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று தேவைப்படுத்தப்படும் தகைமை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

மூடும் திகதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சைகளுக்கு பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கான அனுசரணை,**
**5 ஆம் மாடி,**
**“செத்சிரிபாய”, I ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல. 2023 டிசம்பர் 13.**

Ministry of Agriculture and Plantation Industries

# Rubber Research Institute of Sri Lanka

## VACANCIES

Applications are invited from the citizens of the Democratic Socialist Republic of Sri Lanka who possess the requisite qualifications to fill the following vacancies in the Rubber Research Institute of Sri Lanka.

1. **Director** - **(HM 2-3)**
2. **Additional Director** - **(HM 2-1)**
3. **Senior Research Officer** - **(AR - 2)**
4. **Technological Officer** - **(Civil) (MA 2-2)**
5. **Technological Officer** - **(Electrical) (MA 2-2)**

Please visit the Institute's Website (**www.rrisl.gov.lk**) for details.

**APPLICATION PROCEDURE:**

Applications prepared according to the guidelines mentioned in the website, should be sent under registered post to reach the address given below on or before 09.01.2024. The post applied for should be mentioned on the top left corner of the envelope. Applicants from Government Departments / Corporations / Boards / Private Sector Establishments should forward applications through their respective Heads of Institutions.

Applications not conforming with the requirements given in the Website will be rejected.

**Acting Director**
**Rubber Research Institute of Sri Lanka**
**Dartonfield**
**Agalawatte.**
14.12.2023

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கிக்காக மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்காக விண்ணப்பம் கோரல்

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் கடன் கொள்கையின் பிரகாரமும் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் வழங்கப்பட்ட 2020 இன் 13 ஆம் இலக்க வங்கி சட்ட வழிகாட்டலில் தேவைப்படுத்தப்படும் தகைமைகளின் கீழ் அமைக்கப்பட்ட கீழே திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள், அனுபவம் மற்றும் திறன் ஆகியவற்றையும் கொண்டுள்ள மதிப்பீட்டாளர்களிடமிருந்து நாடளாவியரீதியில் வெளியக மதிப்பீட்டாளர்களின் குழுமத்தில் பணியாற்றக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகைமை மற்றும் அனுபவத்தையுடைய வெளியக சுதந்திரமான மதிப்பீட்டாளர்கள்.

பின்வரும் தகைமைகளில் ஏதாவதொன்று.

- Royal Institution of Chartered Surveyors இன் பட்டயம் பெற்றவொரு மதிப்பீட்டாளர்
- இலங்கையின் மதிப்பீட்டாளர்கள் நிறுவக இணை அங்கத்தினரொருவர்
- 20 வருட அனுபவமுள்ள இலங்கையின் மதிப்பீட்டாளர்கள் நிறுவக அங்கத்தினரொருவர்.

வங்கியின் இறுதியான சுயவிருப்பமானது குழாமிற்கு நியமிப்பதற்கு முன்னராக பெறுமதி மதிப்பீட்டாளரின் தொழிலாற்றும் அனுபவமானது வங்கியினால் தீவிரமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பெறுமதி மதிப்பீட்டாளர்கள் வங்கியின் ஆதனங்களுக்கான மதிப்பீட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான தொழில்சார் நடத்தை, நெறிமுறைகள் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் அதியுயர்ந்த மட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். உரித்தான கால எல்லைக்காக மதிப்பீட்டாளராக தொழில்புரிவதற்காக இலங்கை மதிப்பீட்டாளர்கள் நிறுவகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள அதிகாரத்தை (அங்கத்துவ இலட்சினை) கொண்டிருத்தல் வேண்டும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட சுயவிபரமானது உரித்தான கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள், பணியாற்றும் இடத்துடனான தற்போதைய தொழில், அனுபவம் ஆகியவற்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தெரிவு செய்யப்படின் பணியாற்ற ஆர்வமுள்ள ஆகக்கூடிய மூன்று மாவட்டம்/ மாவட்டங்களின் பெயர்/ பெயர்கள் ஆகியன உதவி பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் ஒழுங்கமைத்தல்), 7 ஆம் மாடி, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி, ஒழுங்கமைத்தல் பிரிவு, 269, காலி வீதி, கொழும்பு-03 என்ற முகவரியில் 2024 சனவரி 3 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் குழாமில் ஏற்கனவேயுள்ள மதிப்பீட்டாளர்கள் மறுபடியும் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "மதிப்பீட்டாளர்களின் குழாம்" மற்றும் பணியாற்றுவதற்கான ஆர்வமுள்ள மாவட்டமும் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0117722879 என்ற தொடர்பிலக்கத்தினூடாக மனித வளம் மற்றும் ஒழுங்கமைத்தலிற்கான இற்கான பிரதான முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

Repeat Your ad For Better Offers

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## பதவி வெற்றிடம்

## கண் மருத்துவ நிபுணர் பதவி

மேலேயுள்ள பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| தகைமைகள்: | இலங்கை கண் மருத்துவ நிபுணர் பாடசாலையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் அத்துடன் மூன்று (03) வருட அனுபவத்துடன் இலங்கை மருத்துவ சபையில் கண் மருத்துவ நிபுணராக பதிவு செய்திருத்தல் வேண்டும். |
| வயது: | விண்ணப்பதாரிகள் 50 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். 50 வயதிற்கு குறைவாகவுள்ள விண்ணப்பதாரிகள் இல்லாவிடின், 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக பரிசீலனை செய்யப்படுவர். |
| சம்பள அளவுத்திட்டம்: | மாதாந்தம் 43,310-10x600-49,310 ரூபா<br>மாதாந்தம் 43310 ரூபா சம்பள படிமுறையில்<br>மேலதிகமாக அரசாங்க துறையில் வழங்கப்படும் படிகள் மற்றும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக படிகளும் வழங்கப்படும். |
| வேலைவாய்ப்பு நியதிகள்: | நிரந்தரமானதும் (50 வயதிற்கு குறைவானவர்கள்) சேமலாப நிதி அடிப்படையிலும் ஊழியர் நம்பிக்கை நிதிய அடிப்படையிலும் அமைந்துள்ளது. அரசாங்க நிறுவனங்களின் எந்தவொரு விண்ணப்பதாரியும் இப்பதவிக்காக பணியிடை விடுவிப்பு அடிப்படையில் விண்ணப்பிப்பதற்கு விரும்பினால், அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும். |

அரசாங்க சேவையில் பதவிகளை வகிக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அவர்கள் பணியாற்றும் திணைக்கள / நிறுவன தலைவருடாகவும் நேரடியான பிரதியொன்றுடனும் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரியானவர் தெரிவு செய்யப்பட்டால் அவர் விடுவிக்கப்படுவார் என நிறுவன தலைவரிடமிருந்து தெரிவிக்கும் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

நியமனமொன்றை வழங்கல் அல்லது வழங்காமலிருத்தல் தொடர்பான உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையானது கொண்டுள்ளது. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது குறிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை முழுமையான சுயதரவுடன் மற்றும் இரு (02) உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடனும் 2024 சனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய,**
**நுகேகொட.**
**2023 டிசம்பர் 18ஆம் திகதியன்று.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவை அமைச்சு**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## கொழும்பு-01 இதுஅ இடப்பரப்பிலுள்ள வேலைத்தள கட்டிட தொகுதிக்கான வீதி மற்றும் திறந்தவெளி செப்பனிடல் வேலைகள்

1. **''கொழும்பு-01, இதுஅ இடப்பரப்பிலுள்ள வேலைத்தள கட்டிட தொகுதிக்காக வீதி மற்றும் திறந்தவெளி செப்பனிடல் வேலைகளுக்காக''** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இதுஅ இன் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். ஒப்பந்த இல: **SLPA/DD/COL/WS/01.**
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக
   - வீதி நிர்மாண வேலைகளின் விஷேடத்துவமுள்ள **ஒப்பந்தக்காரர் தரம் சி-3 மற்றும் சி-4 தரங்களில் CIDA பதிவை** விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவு செய்தல் சான்றிதழ்.
3. கொழும்பு-01 வேலைத்தள கட்டிட தொகுதி இடப்பரப்பில் **2024.01.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமொன்றும் நடைபெறும்.
4. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக **18,000 ரூபாவை** (பெசேவ அடங்கலானது) செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெயிடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரினால் **2023.12.20 ஆம் திகதி தொடக்கம் 2024.01.16 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2** மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்கள் கொழும்பு-01, லெயிடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, அபிவிருத்தி பிரிவின் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
5. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்பான முத்திரையிடப்பட்ட உறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Road and Yard Paving Works for Workshop Building complex at SLPA premises Colombo-1 – Contract No.: SLPA/DD/COL/WS/01"** என அடையாளமிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, அபிவிருத்தி பிரிவு, இல. 45, லெயிடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் அபிவிருத்திக்கான பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
6. அனைத்து விலைமனுக்களும் **950,000 ரூபா** பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் **2024.01.16 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. எந்தவொரு மேலான விபரங்களும் மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகைக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல.: +94(0)112325049. தொலைநகல் இல.: +94(0) 112424543.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல.: 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

# புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்

## சுற்றாடல் அமைச்சு

### பதவி வெற்றிடம்

### உதவிப் பணிப்பாளர் - சட்டம்

1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தில் நிலவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளியக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2 மற்றும் 3)**

**கல்விசார்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை இளமாணிப் பட்டமொன்று பெற்றிருத்தல்.
2. சட்டத்தரணியொருவர்

அத்துடன்

**சேவை அனுபவம்:**

3. முதலாம் பட்டத்தைப் பெற்ற பின்னர் சுறுசுறுப்புள்ள செயல்படும்/ சட்டப் பணித்துறையில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (கீழேயுள்ள 1 அல்லது 2)**

**கல்விசார்:**

1. மேலே (1 அல்லது 2 மற்றும் 3) கூறப்பட்டவாறு வெளியக விண்ணப்பதாரிகளினால் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

**சேவை அனுபவம்:**

2. பதவிக்கு உரித்தான சட்டப் பணித்துறையில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் (ஜேஎம் 1-1) பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்தியான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**02/ 2016 என்ற முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள அளவு அமைந்திருக்கும்.**
**எம்எம் 1-1-2016 – 53,175 - 10x1375 - 15x1910 - 95,575 + அனுமதியளிக்கப்பட்ட படிகள்.**

**வயதெல்லை:**
வயதானது 22 இற்கு குறைவாகவில்லாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். மேல் வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பிரயோகப்படுத்தப்படமாட்டாது.

**இப்பதவிக்கு ஏற்புடையதான பொதுவான நிபந்தனைகள்:**

- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அவரது சம்பளத்தின் 10% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். பணியகமானது 15% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மேலதிகமாக 3% ஐ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.
- வைத்தியசாலை மருத்துவ காப்புறுதி திட்டத்திற்கான உரித்து.
- வெளிநோயாளர் மருத்துவ விலைச்சிட்டைகளை மீள்நிரப்புவதற்கான உரித்து.
- அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரியின் தகுதியை சரிபார்ப்பதற்காக விண்ணப்பத்தில் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
- கல்விசார் மற்றும் ஏனைய உரித்தான சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பத்தை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2024.01.05 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம் (பதில் கடமையாற்றுபவர்),**
**புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம்,**
**இல. 569,**
**எப்பிட்டமுல்ல பாதை,**
**பிட்டகோட்டே.**

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

EDB

### வெற்றிடங்கள்

கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக சபையின் சேவையில் இணைவதற்கு நிரூபிக்கப்பட்ட திறன் மற்றும் தொழில்முறை தேர்ச்சிகளுடன் திறமையான மற்றும் அதிக ஊக்கமுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**(01) பணிப்பாளர் பதவி - மனித வள முகாமைத்துவம்** (HM 1–1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**பணி விபரம்:**

அமைப்பின் மனித வள மேம்பாடு மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள், பணியாளர்களின் மேம்பாட்டுத் தேவைகளைக் கண்டறிதல் மற்றும் நிறுவனத்தில் குறிப்பாக நிர்வாக மட்டங்களில் மனித வள மேம்பாட்டுக்கான திட்டமிடப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல், ஏ.அ.ச. இன் ஏற்பாட்டியல் செயற்பாடுகள் மற்றும் போக்குவரத்து விடயங்களில் பணியாளர்களை நிர்வகித்தல்.

தகைமைகள் மற்றும் அனுபவங்கள்: கீழுள்ள 1 அல்லது 2

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ பொது முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகம் (ம.வ.மு. இல் விசேடத்துவம்)/ முகாமைத்துவத்தில் (ம.வ.மு. இல் விசேடத்துவம்) இளமாணிப் பட்டம்/ B.Com

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்

   மற்றும்

   முதல் பட்டத்தை பெற்ற பின் தொடர்புடைய துறையில் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம்

   மற்றும்

தொடர்புடைய துறையில் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**(02) பணிப்பாளர் பதவி - வர்த்தக வசதி மற்றும் வர்த்தக தகவல்** (HM 1–1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**பணி விபரம்:**

ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி பொதியிடல், மின்னணு ஊடகங்களைப் பயன்படுத்தும் சாத்தியமான ஏற்றுமதியாளர்கள், வெளியீடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கண்காட்சிகள், ஏற்றுமதி செய்பவர்கள், வெளிநாட்டு கொள்வனவாளர்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள அரசு நிறுவனங்கள் உள்ளிட்ட பயனுள்ள மற்றும் திறமையான வர்த்தக வசதி மற்றும் வர்த்தக தகவல் சேவையை வழங்குவதற்கு பொறுப்பாவார். ஏற்றுமதி பொதியிடல் உட்பட தொடர்புடைய தகவல்களை பெறுதல், செயல்முறை பகுப்பாய்வு, ஏற்றுமதியாளர்களுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், இலங்கை மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் வர்த்தகம் தொடர்பான தரவுத் தள அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல், ஏற்றுமதி தொடர்பான தடைகள்/ பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்றுமதியாளர்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகொள்வது மற்றும் ஒருங்கிணைத்தல்.

**(03) பணிப்பாளர் பதவி - வர்த்தக உற்பத்திகள்** (HM 1–1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**பணி விபரம்:**

உற்பத்தி மேம்பாடு மற்றும் ஏற்புத்திறன், விநியோக மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம், தர மேம்பாடுகள், ஏற்றுமதி சந்தை தேவைகளுக்கு ஏற்ப பொதியிடல் மேம்பாடு, தொடர்புடைய R & D வேலை மற்றும் சந்தையை செயற்படுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த திட்டங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்துறை தயாரிப்புகளின் ஏற்றுமதி செயல்திறனை மேம்படுத்துவது மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு திட்டங்களை செயற்படுத்தற்கு பொறுப்பு வகிப்பார்.

தகைமைகள் மற்றும் அனுபவங்கள்: கீழுள்ள 1 அல்லது 2

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்/ சர்வதேச உறவுகள்/ பொருளியல்/ வர்த்தகம்/ விஞ்ஞானம்/ விவசாயம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்

   மற்றும்

   முதல் பட்டத்தை பெற்ற பின் தொடர்புடைய துறையில் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**(04) பணிப்பாளர் பதவி - தகவல் தொழில்நுட்பம்** (HM 1–1)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**பணி விபரம்:**

நிறுவனத்திற்கு IT சேவைகளை வழங்குதல், Trade Portal ஒன்றை பராமரித்தல், ஏ.அ.ச. இணையதளத்தைப் புதுப்பித்தல், e-communication, e-promotion போன்றவற்றின் ஏற்பாடுகள், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் மூலோபாய திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் பொறுப்பு. நிறுவனத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால வணிக இலக்குகளை எதிர்கொள்ளத் தேவையான தீர்வுகளை வழங்குதல். e-government கொள்கையுடன் இணக்கமான தகவல் தொழில்நுட்பக் கொள்கையைப் பராமரித்தல்.

தகைமைகள் மற்றும் அனுபவங்கள்: (கீழுள்ள 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானம்/ முகாமைத்துவ தகவல் முறைமையில் இளமாணிப் பட்டம்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்புப் பட்டம் (முதுமாணி)

   மற்றும்

   முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

2. பதவிக்கு தொடர்புடைய துறை ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம்.

**01,02,03 மற்றும் 04 பதவிகளுக்கான சம்பள அளவு** (HM 1–1)

மாதாந்தம் ரூபா 80,295/- 15 x 2,270 - ரூபா 114,345/- மற்றும் அரசு அங்கீகரித்த கொடுப்பனவுகள்

தேர்வு முறை (**HM 1-1**): கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம்

வயதெல்லை (**HM 1–1**): 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மேலுள்ள பதவிகளுக்காக பொருந்தும் ஏனைய தகைமைகள்:**

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியில் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உள ரீதியில் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள்**

- 2016.10.27 ஆம் திகதிய PED 1/2015(i) ஆம் இலக்க PE சுற்றுநிருபத்திற்கு அமைய ஒதுக்கப்பட்ட ஒரு வாகனம்
- EDB மருத்துவ உதவித் திட்டம்
- ஊ.சே.நி. – ஊழியர் - 10%; சபை - 15% மற்றும் ஊ.ந.நி. – சபை 3%

**விண்ணப்பிக்கும் முறை:**

மேலுள்ள தகைமைகளை நீங்கள் பூர்த்தி செய்திருந்தால், ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 8ஆவது மாடியில் அமைந்துள்ள மனித வள முகாமைத்துவ பிரிவில் இருந்து அல்லது www.srilankabusiness.com இணையதளத்தில் இருந்து ("announcements" இன் கீழ்) பெறப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒன்றில் 2023.12.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளை EDB வடிவத்தில் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும், தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத மற்றும் முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச சேவையில் உள்ள அபேட்சகர்கள் நிறுவனத்தின் குறித்த தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தின் மேலதிக பிரதி ஒன்றை விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு முன்னர் தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பாமல் இருக்கும் அதிகாரம் 2020.10.26இன் 2/2020 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, செயலாளர் வசமானதாகும்.

**தலைவர்/ தலைமை நிர்வாக அதிகாரி,**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை,**
**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.**
**தொ.: 011-2300700**



Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 l 011 2 429 342/ 343

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
# வெற்றிடங்கள்
## கதிரியக்கவியலாளர் பதவி
## (POST OF RADIOGRAPHER)

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| தகைமைகள் | : | மூன்று (03) வருட கால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவ பேரவையில் கதிரியக்கவியலாளராக பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை கதிரியக்கவியல் பாடசாலையின் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவ பேரவையில் கதிரியக்கவியலாளராக பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கதிரியக்கவியலாளர் பட்டம் |
| வயது | : | 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர். |
| சம்பளம் | : | ரூபா 43310 - 10x600 - 49,310/= மாதாந்தம்.<br>சம்பள நிலை ரூபா 43310/= மாதாந்தம் |

இதற்குப் புறம்பாக அரசாங்கத் துறைக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**வேலைவாய்ப்பின் நியதிகள்** : நிரந்தரம் (50 வயதிற்குக் குறைவானவர்கள்) மற்றும் சேமலாப நிதி அடிப்படையில்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என இயைபுடைய நிறுவனம் / திணைக்களத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2024 ஜனவரி 01ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
### (நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு)
## 2023 இல 01 கடல்சார் சூழல் பாதுகாப்பு (கடலுக்கு அப்புறப்படுத்துதல் சார்பாக) அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்) கட்டளைகளை செயற்படுத்துதல்

MEPA

2008 இல. 35 கடல்சார் மாசுப்படுத்தல் தடுக்கும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, சட்டத்தின் மானியங்களுக்கு அமைவாக கடலுக்கு கழிவுப் பொருட்களை இடுதல் / அகற்றுதலை கட்டுப்படுத்துவதற்காக 2021.06.12 முதல் அமுல்படுத்துமாறு 2013 இல. 01 கடல்சார் பாதுகாப்பு (கடலுக்கு அப்புறப்படுத்தலுக்கான அனுமதிப்பத்திரம் விநியோகித்தல்) கட்டளை வெளியிடப்பட்டுள்ளது. (இக்கட்டளை 2024.07.09 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ளது)

இக்கட்டளைகளுக்கு அமைவாக இலங்கை உள்ளூர் நீரோட்டம் அல்லது வேறு ஏதேனும் கடல்சார் விடயத்திற்கு அல்லது இலங்கையின் அதற்கு முந்திய கடற்கரை வலயம் (மத்திய சேற்றுநீர் எல்லையில் இருந்து 300 மீட்டர் தரைப்பிரதேசத்திற்கு, மத்திய நீர் எல்லையில் இருந்து 02 கிலோமீற்றர் கடல்பக்கமாக மற்றும் கங்கை ஓடை, களப்பு கடலுக்கு திறந்துவிடப்படும் இடத்தில் இருந்து தரைபிரதேசமாக, 02 கிலோமீற்றர் வரையான பிரதேசத்திற்குள் குறித்த ஆறு, ஓடை, களப்பு) இற்கு உட்புரமாக.

01. ஹோட்டல், உணவகம் மற்றும் வேறு கைத்தொழில்கள் மூலம் மலக்கழிவுகள், சுத்த நீர், குளிரூட்டிக்கு பாவிக்கப்படும் நீரை அகற்றும்போது.
02. அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பொருட்கள், மலக்கழிவு, மீன் கழிவுகள் அல்லது மீன் தயாரிப்பு செயற்பாட்டில் எஞ்சியுள்ள பொருட்களை அகற்றும்போது.
03. இயற்கை நிகழ்வுகளுள்ள செயற்பாடற்றதாக்கும், அசேதன, புவிச்சரித பொருட்கள், உருக்கு, கொங்கிரீட் அல்லது சமமான பாதிப்பை ஏற்படுத்தாத பொருட்கள் அடிப்படையாக அடங்கிய பொருட்களை அகற்றும்போது.
04. கப்பல்கள் அல்லது விமானங்கள் அல்லது மனிதனால் தயாரிக்கப்பட்ட வேறு இரும்பு கட்டமைப்புகளை அகற்றும்போது.

அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமாகும் - அதனடிப்படையில் இக் கட்டளையுடன் சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்கள் / ஹோட்டல் / உணவகங்கள் வீடமைப்புத் தொகுதிகள் 2024ம் ஆண்டிற்காக அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல் / நாளதுவரைக்கு உட்படுத்தல் 2024.01.31ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளல் வேண்டும்.

**விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்.**

1. அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்தல் ஒன்லைன் வழியாக மேற்கொள்ள முடியும். அதற்காக கீழேயுள்ள முறைகளை பின்பற்றுங்கள்
   i. www.mepa.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து இதற்கான அறிவுறுத்தல்களை (user manual) பதவிறக்கம் செய்துக்கொள்ளுங்கள்.
   ii. https://sdpms.mepa.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து மேலே பதிவிறக்கம் செய்யப்பட்ட அறிவுறுத்தல்கள் (user manual) இற்கு அமைவாக பதிவு செய்துக்கொள்ளுங்கள்
   iii. பதிவு உறுதி செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பத்தை ஒன்லைன் முறையில் பூர்த்தி செய்து submit செய்யுங்கள்.
2. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ்க்காணும் மாவட்ட அலுவலகங்களில் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் www.mepa.gov.lk இணையதளத்தில் விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்யலாம்

**இதைப்பற்றி விபரங்கள் மற்றும் விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய மாவட்ட அலுவலகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, கொழும்பு - 05. தொ. பே. இல.: 0112554006<br><br>கம்பஹா மாவட்ட அலுவலகம், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, இல .72/3/A, கொழும்பு வீதி, குரண - கட்டுநாயக்க. தொ. பே. இல.: 0312228606<br><br>களுத்துறை மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, இல. 28, கங்கபட வீதி, களுத்துறை தெற்கு. தொ. பே. இல.: 0342221790<br><br>புத்தளம் மாவட்ட அலுவலகம், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, நுக சேவன, B பகுதி, வயம்ப சம்பத் அபிவிருத்தி அதிகாரி கட்டிடம், பம்பல, காக்காப்பள்ளி. தொ. பே இல.: 032-2222865 | காலி மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 426/B, கொழும்பு வீதி, தடல்ல, காலி. தொ.பே. இல.: 091-2233547<br><br>மாத்தறை மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 18, வில்மட் பாலசூரிய மாவத்த, நூபே, மாத்தறை தொ. பே. இல.: 041-2234250<br><br>ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 46, இரண்டாம் மாடி, ருஹுனு மாகம்புர, நிர்வாக கட்டிடத்தொகுதி, சிறிபோபுர, ஹம்பாந்தோட்டை. தொ. பே. இல.: 047-2256372<br><br>திருகோணமலை மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, மாவட்ட செலயகம், 4ம் கட்டை சீன துறைமுகம் திருகோணமலை தொ. பே. இல.: 026-2050805 | அம்பாறை மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, பிரதேச சபை கட்டிடம், கம்சபா வீதி, தம்பிலுவில் - 2. தொ. பே. இல.: 067-2265416<br><br>மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 03, பிள்ளையார் கோவில் வீதி, 1ம் குறுக்கு வீதி, மட்டக்களப்பு. தொ. பே. இல.: 065-2224979<br><br>யாழ்பாண மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். தொ.பே. இல.: 021-2212663<br><br>மன்னார் மாவட்ட அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, பிரதேச செயலகம், மன்னார். தொ. பே. இல.: 023-2251758 | கிளிநொச்சி பிரதேச அலுவலகம் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, மாவட்ட செயலகம், (பழையக்கட்டிடத் தொகுதி) கிளிநொச்சி, தொ. பே. இல.: 021-2282101 |

மேற்படி விதிகளை மீறுகின்ற நிறுவனங்கள் / தனிநபர்களுக்கு எதிராக 2008 இல. 35 கடல்சார் மாசடைதலைத் தடுக்கும் சட்டத்தின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கையெடுக்கப்படும். அனுமதிப்பத்திரமின்றி கடல்சார் சூழலுக்கு கழிவுப் பொருட்களை திறந்துவிடல் ரூபா 4 மில்லியன் முதல் 15 மில்லியன் வரையான தண்டத்திற்கு உட்படுத்தக்கூடிய குற்றமாகும்.

**தலைவர்,**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,**
**தலைமையகம்,**
**177, நாவலவீதி, நாராஹேன பிட்ட,**
**கொழும்பு - 05**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT, WE HAVE IT
Sunday Observer adz Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want

- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369 011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# வாரபலன்



17.15.2023 - 23.12.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

மனதில் இருந்த வீண்கவலை நீங்கும். சுணங்கிக் கிடந்த காரியங்களில் வேகம் உண்டாகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெற்று அதனால் நன்மை அடைவார்கள். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். வீட்டுக்கு தேவையான பொருள் வாங்குவதால் செலவு ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் நீங்கும். வீடு, மனை போன்ற முதலீடுகளில் ஆர்வம் அதிகரிக்கும். பெண்களுக்கு தன சேர்க்கை உண்டாகும். கலைத்துறையினருக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடை, ஆபரணம் வாங்குவதால் சுபச்செலவு உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். எதிலும் ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. இல்லையெனில் பலரையும் விரோதித்துக் கொள்ள வேண்டி இருக்கும். பிள்ளைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகை இருக்கும். தந்தை வழியில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும். பிதுரார்ஜித சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். பெண்கள் காரிய வெற்றி அடைவார்கள். கலைத்துறையினருக்கு இருந்த போட்டிகள் அகலும். மாணவர்கள் வீண் அலைச்சலை குறைத்துக் கொண்டு கல்வியில் கவனம் செலுத்துவது நன்மை தரும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். எதிலும் இலாபத்தை பார்க்க முடியும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். எல்லாவற்றிலும் முன்னேற்றம் காணப்படும். அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். தாமதமாகி வந்த சுபகாரியங்கள் சிறப்பாக நடக்கும். பெண்களுக்கு மனக்கவலை நீங்கும். கலைத்துறையினர் இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பர். மாணவர்கள் கல்வியில் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்க பாடுபடுவர்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியத்தடை அகலும். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சார்ந்த விஷயங்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். குடும்பத்தில் திடீர் குழப்பங்கள் தலை தூக்கும். அமைதியாக இருக்க முயன்றாலும் கூட மற்றவர்கள் வலுக்கட்டாயமாக பேசுவார்கள். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. அக்கம் பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பெண்களுக்கு பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். கலைத்துறையினருக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். எதிலும் ஒரு வேகம் உண்டாகும். எந்தக் கடினமான சூழ்நிலையிலும் நல்லதா? கெட்டதா? என்று யோசிக்கத் தோன்றும் மனநிலை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். தொழில் தொடர்பான பயணம் செல்ல நேரலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். மேலிடத்தின் கனிவான பார்வை உங்கள் மீது விழும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். குடும்பத்தில் பொன்னான தருணங்கள் நிகழும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். கலைத்துறையினருக்கு வெளியூர் பயணம் உண்டாகலாம். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான பயணம் செல்ல நேரலாம். திறமை வெளிப்படும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**

மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்கப் பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். ஆரோக்கியக் குறைபாடு நீங்கும். தொழில் வியாபாரம் இலாபகரமாக நடக்கும். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை அதிகரிக்கும். பங்கு மார்க்கெட்டில் முன்னேற்றம் காணப்படும். எடுத்த காரியம் நல்லபடியாக நடந்து முடியும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வர். பெண்களுக்கு மற்றவர்களது ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் வந்து குவியும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டு காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த மனக்கசப்பு மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். எதிர்பார்த்த இடமாற்றம் ஏற்படும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். பிள்ளைகளிடம் கவனமாக இருப்பதும் அன்பாக பேசுவதும் நல்லது. பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். கலைத்துறையினருக்கு எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் திடீர் தடை, தாமதம் ஏற்படலாம்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை, தாமதம் நீங்கும். வழக்குகள், தகராறுகளில் சாதகமான பலன் கிடைக்கும். எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் அக்கறை காட்டுவீர்கள். அதே வேளையில் கடுமையான முயற்சிகளும் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். அரசாங்க ரீதியிலான காரியங்கள் மிகச்சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த மனக்கசப்பு மாறும். குழந்தைகளின் நலனில் அக்கறை தேவை. தாய்வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் மேம்படும். கலைத்துறையினருக்கு பணிகள் நிறைவாக முடியும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதில் வேகம் காட்டுவீர்கள்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். சுபச்செலவுகள் இருக்கும். உங்களது செயல்களுக்கு யாராவது ஒருவர் உறுதுணையாக இருப்பார். பேச்சுத்திறமை கை கொடுக்கும். தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதப்பட்டாலும் கைக்கு வந்து சேரும். தொழில், வியாபாரம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள். குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன் மனைவிக்கிடையே தேவையில்லாத விஷயத்தால் மன வருத்தம் ஏற்படலாம். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் செலவுகளை குறைப்பது நன்மை தரும். கலைத்துறையினருக்கு நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டி இருக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நெருக்கமானவர்களுடன் பேசி மகிழ்வீர்கள். வாகனங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடலாம். வியாபாரத்திற்கென்று புதிதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கிடையே சகஜநிலை நீடிக்கும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிள்ளைகளின் செயல்திறன் அதிகரிக்கும். பெண்களுக்கு மனதில் இருந்த கவலை நீங்கும். கலைத்துறையினர் உற்சாகமாக இருப்பர். மாணவர்கள் எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நன்மை தரும்.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

எல்லாக் காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத்துணிவு உண்டாகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கி ஒற்றுமை காணப்படும். நினைத்ததை நடத்தி முடிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். சொத்துப் பிரச்சினை தீர்வு பெறும். பெண்கள் எந்த காரியத்தை செய்து முடிப்பதிலும் வேகத்தை காண்பர். கலைத்துறையினருக்கு பேச்சாற்றல் மூலம் தொழில் இலாபம் கூடும். மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றிய எண்ணம் மேலோங்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

சாதுரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. சக ஊழியர்களுடன் எளிதில் கருத்து வேற்றுமை உண்டாகலாம். அரசாங்க ரீதியிலான காரியங்கள் மிகச்சிறப்பாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை ஏற்படும். வீட்டில் உள்ளவர்களுடன் இருந்து வந்த மோதல்கள் குறையும். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு பழைய பகைகள் மாறும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். சாதுரியமான பேச்சால் நன்மை கிடைக்க பெறுவீர்கள்.

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 17

# ஒற்றுமையின் அடையாளமாக தன்னை நிலைநிறுத்தியவர்

## பேராசிரியர் செ.யோகராசா



உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு மற்றும் உட்பட பல தேசிய, சர்வதேச அரங்குகளிலும் ஆய்வாளராக பங்கேற்கும் முனைப்பில் அத்துறையில் என்னை வளரச் செய்வதில் மிக முக்கியமானவராக பேராசிரியர் செ.யோகராசா திகழ்கிறார். கடந்த 07.12.2023 மாலை அப் பெருந்தகை காலமானதாக முகநூல் பதிவின் ஊடாக அறிந்துக் கொண்டேன். அச் செய்தி மிக மனவருத்தத்தை தந்த செய்தியாக அமைந்தது. பேராசிரியருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த எனது நண்பர்களுடன் அவரது மறைவு பற்றி தொலைபேசி வாயிலாக கருத்துப் பரிமாறிக் கொள்கிறோம். முகநூல் பதிவுகள் ஒவ்வொன்றும் செ.யேகராசாவின் உன்னத தன்மையை எடுத்துரைத்துக் கொண்டிருந்தன. அவர் பற்றிய நினைவுகளை, அவருடன் உரையாடி கருத்துப் பறிமாறிக் கொண்ட தருணங்களை மீட்டிப் பார்க்கும் வண்ணமாக அமைந்தது. தொடர்ந்து மனைவி, பிள்ளைகளுடன் அவரின் இழப்பு பற்றியும், அவரின் மனித நேய முன்னுதாரணம் பற்றியும் எடுத்துச் சொல்லும் களமாக அன்றைய பொழுது அமைந்தது.

கடந்த ஜுலை மாதம் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பேராசிரியர் செ.யோகராசாவை சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. நீண்ட நேரம் அவருடன் கலந்துரையாடினேன். மிக நீண்ட நாட்களுக்கு பின்னரான சந்திப்பாகவும் அது அமைந்திருந்தது. திண்டுக்கல் காந்தி கிராமம் கிராமிய பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவர் பா.ஆனந்தக்குமாரின் சிறப்புரையே அன்றைய தினம் இடம்பெற்றது. பேராசிரியர் பா. ஆனந்தக் குமாரைச் சந்திப்பதற்காகவே வருகைத் தந்திருந்தேன். பா. ஆனந்தக்குமார் 2017ஆம் ஆண்டு திண்டுக்கல் காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத்தில் "மலையக இலக்கியம் பன்னாட்டு கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர். இதுவே கடல் கடந்த நாடொன்றில் மலையக இலக்கியம் தொடர்பிலான முதலாவது சர்வதேச மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மலையக மக்களின் பூர்வீக நாடான தென்னிந்தியாவில் இவ்வாறானதோர் மாநாடு என்ற வகையில் முக்கிய கவனத்திற்குரிய நிகழ்வாக அமைந்தமை கவனிக்கத்தக்கது. பேராசிரியர் செ.யோகராசாவை 2002ஆம் ஆண்டு கவிஞர் சு.முரளிதரனின் "மலையக இலக்கிய தளங்கள்" நூல் வெளியீட்டு நிகழ்விலேயே முதன் முறையாக சந்தித்தேன். ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர பயிலுனராக கல்வி கற்றுக்கொண்டிருந்தேன். சாரல் நாடன் தலைமையிலான "கொட்டகலை தமிழ்ச் சங்கம்" பௌர்ணமி தின ஒன்றுகூடலை நடத்தும் சாரல் வெளியீட்டகம் தொடராக நூல்களை வெளியிட்டுக் கொண்டிருந்தது. "மலையக இலக்கிய தளம்" நூலும் சாரல் வெளியீட்டகத்தின் வெளியீடாகவே வெளிவந்தது. கொட்டகலை தமிழ்ச் சங்கத்தின் இந்த களம் மூத்த எழுத்தாளர்களையும், இலக்கிய செயற்பாட்டாளர்களுடன் அறிமுகமாகிக் கொண்டுநட்பைஏற்படுத்திக்கொண்டசந்தர்ப்பமாக அமைந்தது. மேற்படி நூலின் ஆய்வுரையையே இந் நிகழ்வில் செ.யோகராசா ஆற்றினார். மிக நீண்ட உரையாக அவரது உரை அமைந்திருந்தது. மலையக இலக்கியம் தொடர்பிலான பற்றுதலை ஏற்படுத்துவதில் அன்றைய பொழுது முக்கிய தருணமாகவே அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மலையக இலக்கிய வரலாற்றையும் அதன் வகிபங்கையும் ஏனைய இலக்கியங்களோடு ஒப்பிட்டு அவர் ஆற்றிய உரை என் மனதில் இன்னமும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அதன் தொடர்ச்சி நிலையில் அவருடைய ஆக்கங்களை தவறாமல் வாசிக்கும் வாசகனானேன். ஞானம், ஜீவநதி, மல்லிகை ஆகியன தொடர்ச்சியாக அவருடைய ஆக்கங்களை பிரசுரம் செய்யும் இதழ்களாகும். 2011ஆம் ஆண்டு சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் "சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு – 2011" ஐ கொழும்பில் லெ.முருகபூபதி தலைமையில் நடத்தியது. இம் மாநாடு தமிழ் இலக்கியம் தொடர்பிலான ஆய்வுப் பார்வையில் மிக முக்கியத்திற்குரியதாகும். மலையக கலை. இலக்கியம் தொடர்பிலான முக்கிய அவதானத்தைக் கொண்டதாகவும் அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியில் மூத்த பத்திரிகையாளர் கி.பொன்னுத்துரையின் பங்கேற்பும், ஈடுபாடும் குறிப்பிடக் கூடியதாகும். இம் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களான லெ.முருகபூபதி, தி.ஞானசேகரன், இரா.உதயணன், ஜின்னா ஷரீபுதீன், அஷ்ரப் சிஹாப்தீன், கவிஞர் வெள்ளைச்சாமி, அந்தனி ஜீவா, போன்றோர் நேரடியாக மலையக பிரதேசத்திற்கு வருகைத்தந்து ஒருங்கிணைத்த விதம் நன்றிக்குரிய விடயமாகும். அம் மாநாட்டிற்கு கே.பொன்னுத்துரை ஏற்படுத்திய அறிமுகத்தின் ஊடாக என்னாலும் இம் மாநாடு சிறப்பதற்கு ஒத்துழைக்க முடிந்தமையை என் வாழ் நாளில் முக்கிய திருப்பமாகவே உணர்கிறேன். நாவலப்பிட்டி தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அமைப்பார்ந்த ஒருங்கிணைப்பை சிறப்பாகவே ஆற்றினேன்.

மேற்படி மாநாட்டில் "நிகர்" ஆவண சிறப்பிதழ் ஒன்றையும் வெளியிட்டதோடு "மலையக வீதிப்பாடல்களின் உள்ளடக்கமும் அதன் எழுச்சி தாக்கங்களும்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை முன் வைத்தேன். பேராசிரியர் சு.வித்தியானந்தன் அரங்கில் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸின் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கிலேயே மேற்படி தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையை முன்வைத்தேன். கட்டுரையின் உள்ளடக்கம் தொடர்பில் பலரும் பாராட்டுக்களுடன் வாழ்த்தையும் தெரிவித்தார்கள். ஆய்வரங்குக்கு தலைமை வகித்த பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் மலையக இலக்கியத்தில் முனைப்பு பெற்ற "வீதிப்பாடல்கள்" தொடர்பான பதிவு முதல் முறையாக பதிவாகியுள்ளது எனவும் மிக சிறப்பாகவும், காத்திரமாகவும் முன்வைக்கப்பட்டமை பாராட்டுக்குரியது எனவும் பதிவு செய்தார். அரங்கில் பேராசிரியர் செ.யோகராசாவும் அமைதியாக எனதுரையை செவிமடுத்துக் கொண்டிருந்தார். ஆய்வரங்கு நிறைவுற்றதும் எனது அருகில் வருகைத் தந்து பெயரை கூறி அழைத்து இது வரையில் மலையக இலக்கியப்பரப்பில் யாரும் பார்க்காத விடயத்தை முன் வைத்தீர்கள். உங்கள் முன் வைப்பு சிறப்பாக இருந்தது. தொடர்ந்து வாசியுங்கள், தேடுங்கள், மலையக சமூகத்தைப் பொறுத்த மட்டில் பார்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் உள்ளன. அவை மீது உங்கள் தலைமுறை எழுத்தாளர்கள் ஆர்வம் செலுத்த வேண்டியது அவசியமாகும். எனவும் வலியுறுத்திய நினைவுகள் வந்து போகின்றன.

இவ்வாறே எனது உரையை செவிமடுத்த நிலையில் "பசறையூர் வேலாயுதமும் என்னை பாராட்டி வாழ்த்திய சம்பவமும் நினைவுக்கு வருகிறது. ஆய்வரங்கு சனிக்கிழமை இடம்பெற்றது. அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமை எனது உரை தொடர்பில் பசறையூர் வேலாயுதம் சிலாகித்த பதிவு ஒன்றினை தினக்குரல் வார இதழில் எழுதியிருந்தார். அப்பதிவை தொடர்ந்து தினக்குரல் ஆசிரியர் பீடத்திலிருந்து வந்த தொலைபேசி அழைப்புக்கு அமைய என்னால் முன்வைக்கப்பட்ட கட்டுரையை மின்னஞ்சல் செய்தேன். அடுத்த வாரம் தொடக்கம் தொடர்ந்து மூன்று வாரங்கள் எனது கட்டுரை பிரசுரமானது. அம் மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளில் முதலாவதாக எனது கட்டுரையே ஊடகமொன்றில் பிரசுரமாகியமை குறிப்பிடத்தக்கது. மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பில் மிக அக்கறையுடன் தொழிற்பட்டவர்களில் பசறையூர் வேலாயுதம் மிக முக்கியத்திற்குரியவர். அவர அமரத்துவம் அடையும் வரையிலும் மிக நெருக்கத்திற்குரியவராக தொடர்பை பேணியவர்.

இம் மாநாட்டை முன்னிறுத்தி வெளியிட்ட "நிகர்" சிறப்பிதழ் தொடர்பில் மாநாடு நிறைவுற்று ஒரு வாரத்தின் பின்னர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்து தெரிவித்தமையும் ஞாபகத்திற்கு வருகிறது. தொலைபேசி தொடர்பில் அவ்வப்போது பேராசிரியருடன் பேசிக்கொள்வேன். அப்பொழுதெல்லாம் வாசிப்பு பற்றியும், மலையகம் பற்றியும் கலந்துரையாடிக் கொள்வது வழமையாக இருந்தது. அவரை நேரில் தரிசித்த பல சந்தர்ப்பங்கள் அமைந்த போதிலும், மு.சிவலிங்கத்தின் "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" நாவல் வெளியீட்டு வைபவம் மனதில் வெகுவாக இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 10.04.2016 அன்றைய தினம் வட்டவளை மீனாட்சி தோட்டத்தில் ஜீவன் ஏற்பாட்டில் "சுமைதாங்கி" அமைந்துள்ள பொட்டலில் விழா ஏற்பாடாகியிருந்தது. பேராசிரியரும் கலந்துக்கொண்டிருந்தார். பஞ்சம் பிழைக்க வந்த சீமை நாவலும் அவரின் முன்னுரையிலேயே வெளியாகியிருந்தது. நிகழ்வில் அவரது உரை மிக முக்கியத்திற்குரியதாக விளங்கியது. மலையக இலக்கியம் தொடர்பிலும், நாவல் இலக்கியத்திற்கு மலையகத்தின் வகிபங்கையும் ஒப்பிட்ட வகையிலும் அவரது உரை அமைந்திருந்தது. உலக நாவல் இலக்கிய முனைப்புகள் பற்றியும் தமிழ் நாவல்கள் சித்தரிக்கும் முரண்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் அவரது பார்வை மிக காத்திரமாக அமைந்தது. மலையக நாவல்கள் தொடர்பான ஈடுபாடும், ஆர்வமும் என்னிலும் மேலோங்கியது. இதன் விளைவாகவே கடந்த மாதம் நடைபெற்ற முதலாவது உலக முத்தமிழ் மாநாட்டில் "மலையக நாவல் இலக்கிய செல்நெறி" எனும் தலைப்பில் ஆய்வுரையை முன் வைக்க தூண்டியதாகவும் அமையப்பெற்றது.

கொரோனா காலப்பகுதியில் சூம் செயலி வழியாக நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம் பல்வேறு நிகழ்வுகளை நடத்தியது. அந் நிகழ்வுகளிலெல்லாம் கலந்துக்கொண்டு காத்திரமாக கருத்துக்களை முன்வைத்ததோடு தேவையான ஆலோசனைகளையும் முன்வைப்பார். இவ் அமைப்பின் ஆலோசகர்களில் ஒருவராகவும் அவர் எமக்கு வழங்கிய ஆலோசனைகள் மிக கவனத்திற்குறியதாகும்.

இறுதியாக அவரை பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சந்தித்து உரையாற்றிய போது மிக அக்கறையோடு விசாரித்தார். எழுத்துத்துறை செயற்பாடுகள், மற்றும் உயர் கல்வி தொடர்பில் அக்கறையோடு ஆலோசனை வழங்கினார். நிகர் இதழ் தொடர்பிலும் விசாரித்தார். வேலைப் பளு காரணமாக தொடர்ந்து இதழை கொண்டு வருவதில் உள்ள சிக்கல் நிலையை கூறினேன். ஆவண இதழ்களை மட்டும் வெளியிடுவதாகவும், மலையகம் 200 ஆவண சிறப்பிதழை தயார் செய்து கொண்டிருப்பது பற்றியும் எடுத்துக் கூறினேன். கட்டுரை ஒன்றினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைய விரைவில் அனுப்பி வைப்பதாக கூறினார்.


11வது உலகத' தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்று "தொண்ணூறுகளின் பின்னரான மலையக நாடக முன்னெடுப்புகள"; எனும் தலைப்பில் ஆய்வுரை நிகழ்த்தவுள்ளதாக கூறினேன். நல்ல முயற்சி, வாழ்த்துக்கள் என அவர் கூறினார். மறக்க முடியாத தருணம். பேராசிரியர் பா. ஆனந்தகுமாருடன் இணைந்த நிலையில் யோகராசா சேருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். இதுதான் அவருடன் எடுத்துக்கொண்ட இறுதி புகைப் படமாக இருக்கும் என்பது பற்றி யோசிக்கவில்லை. அவரது ஆசீர்வாதத்துடனும் மாநாட்டில் திருப்தியாக பங்கெடுத்தமை திருப்தியைத் தருகிறது.

மானுடத்தை நேசித்து காட்டிய ஒருவரின் இழப்பை இலக்கிய உலகு ஏற்க மறுக்கிறது. பேதங்களுக்கு அப்பால் அனைவரையும் நேசிக்க தெரிந்த ஓர் ஆன்மாவின் பிரிவு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் தலை சிறந்த புலமையாளரும், பேதங்களை மறந்து செயற்பட்டு தேச ஒற்றுமையின் அடையாளமாக தன்னை நிலைநிறுத்திய ஒருவரின் பிரிவுத்துயரை தமிழ் கூறும் நல்லுலகு ஏற்க மறுக்கிறது.

மதங்கள், இனங்கள், பிரதேசங்கள் என்ற பேதங்கள் கடந்த பொதுத்தன்மையான அணுகுமுறையும், தலைமுறை கடந்த எல்லா வயதினரையும் மதித்து பழகும் முன்மாதிரியும் இவரின் சிறப்பம்சமாகும். இத்தனை உயரிய பண்புகளின் நேச அடையாளமான ஓய்வுநிலைப் பேராசிரியர் செ.யோகராசாவின் மறைவு பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது. அவரில் காணப்படும் பொதுத் தன்மையைப் போலவே அவரின் மரணத்தையும் மானுட நெறிமுறையின் ஏக அடையாளமாக உயர்த்தி அவரை எல்லோரும் நேசிப்பதை அறிய முடிகிறது.

பயணம் தொடரும்...





# படித்ததும் பகர்வதும் 171



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்


## நல்லதை சொல்கிறோம்

### வருடத்தின் இறுதி வாரங்கள்!

2023ஆம் ஆண்டின் இறுதி மாதத்தின் இறுதி இரு வாரங்களை அடைந்திருக்கிறோம். பெரும்பாலும் இவ்விரண்டு வாரங்களும் பண்டிகை காலமாகவும், பயணங்கள் செல்கின்ற காலமாகவும் இருப்பதைக் காண முடியும்.

பல்வேறு வகையான பொருட்களை தேவைகளுக்காகவும், பரிசளிப்பதற்காகவும் தேடித் தேடி வாங்குகின்ற காலமாகவும் இது இருக்கிறது. இன்னுமொரு புதிய வருடத்தை வரவேற்கவும் சிலர் காத்திருக்கும் காலமிது.

இக்காலத்தில் பயணங்கள் செல்கின்றவர்கள், அவற்றை சன்மார்க்க விடயங்களுக்கான புனிதப் பயணங்களாகவும், விடுமுறை காலத்தை மகிழ்வுள்ளதாக களிப்பதற்கான சுற்றுலா பயணங்களாகவும் ஆக்கிக்கொள்ளும் அதே வேளை, மற்றும் சிலர் திருமணங்கள் போன்ற வைபவங்களை நடத்துகின்ற காலமாகவும் இதனை ஆக்கிக் கொள்கின்றனர்.




இந்த விடுமுறை அல்லது பண்டிகைக் காலத்தை பயனுள்ளதாக, நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் பயன்படுத்திக்கொள்வதே சிறந்தது. இதனை மற்றவர்களுடனான உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்ளும் காலமாக ஆக்கிக் கொள்ளலாம். பயணங்கள் செல்ல திட்டமிடுபவர்கள் தமது குடும்ப உறவினர்களை சந்திப்பதற்கும், தமது நட்புக்குரியவர்களைத் தேடிச் சென்று கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும், வசதி வாய்ப்புகள் குறைந்தவர்களை கண்டு உதவி செய்யவும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தாம் அனுபவிக்கின்ற சந்தோசத்தை, மகிழ்ச்சியை, இன்பத்தை அல்லது கொண்டாட்டத்தை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும் என விரும்பி செயற்படுவது மிக உயர்ந்த மனிதப் பண்பாக இருக்கும். அதே வேளையில் மற்றவர்களும் தம்மால் மகிழ்ச்சியடையும் நிலை உருவாகும். எனவே இவ் எல்லா விடயங்களிலும் தமது உளம் நிறைந்த அன்பையும், பாசத்தையும், நட்பையும், கருணையையும் அவர்களோடு பகிர்ந்து கொள்ளும் வகையில், இப்பருவத்தில் ஒவ்வொருவரும் திட்டமிட்டு செயற்படுதல் வேண்டும்.

பண்டிகைக் கால கொள்வனவுகளின் போது, மற்றவர்களுக்காகவும் குறிப்பாக பிறர் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்காகவும், அவர்களது தேவைகளை உணர்ந்து உதவும் வகையில் செயல்படுதல் வேண்டும். அத்தகையவர்களுக்காக பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதும், தமது வீட்டு வைபவங்களுக்கு தவற விடாது அவர்களை சேர்த்துக் கொள்வதற்கும், இயன்ற உயரிய அளவில் அவர்களைத் தேடிச் சென்று அன்பையும் பாசத்தையும் பரிமாறிக் கொள்ளவும், குறிப்பாக, முக்கியமான குடும்ப உறவுகளை மகிழ்விக்கவும் வருடத்தின் இவ் இறுதிப் பருவத்தை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சாதி, சமய, இன, மொழி, பேதங்கள் மறந்து, சகலரையும் சகவாழ்வு எண்ணத்துடன் அரவணைத்து ஆதரவளித்து அன்பை பரிமாறிக் கொள்வது நமக்கும் நம் வீட்டுக்கும் நம் குடும்பத்துக்கும் நம் சமூகத்துக்கும் ஏன் முழு நாட்டுக்குமே நன்மை அளிப்பதாக அமையும். மகிழ்ச்சியும் குதூகலமும் எங்கும் பெருகிட வழிவகுக்கும்.

இவற்றை நன்கு உணர்ந்து வருடத்தின் இவ்விரு இறுதி வாரங்களையும் நன்மைகளை செய்யும் நன்நாட்களாக ஆக்கிக் கொள்ள ஒவ்வொருவரும் உளப்பூர்வமாக உறுதி கொண்டு செயல்பட வேண்டும். நல்லன நினைப்போம்! நல்லதையே செய்வோம்!!

நெஞ்சுக்கு நீதி
வருடத்தின் இறுதி வாரங்கள் மகிழ்வானவை
சுற்றுலாக்கள் செல்வதனால் செழிப்பானவை
கருணையுடன் மற்றோர்க்கும் உதவி செய்தால்
காயமதில் வாழ்வதுமே மிகக் களிப்பானவை!

## பிரிந்தார் பெருமை

### பேராசிரியர் செ. யோகராசா



இலங்கையின் பிரபல தமிழறிஞர், மொழித்துறைப் பேராசிரியர் செ. யோகராசா கடந்த டிசம்பர் 7ஆம் திகதி (2023.12.07) தனது 73ஆவது அகவையில் இவ்வுலகைப் பிரிந்தார்.

தமிழில் இளங்கலை சிறப்புப் பட்டம், இளமெய்யியல் பட்டம், கல்வி டிப்ளோமா பட்டம், முதுகலைப் பட்டம், முனைவர் பட்டம் எனப் பல பட்டங்களைப் பெற்றவர். கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர், பேராசிரியர், பீடாதிபதி என்று பல பதவிகளை அலங்கரித்தவர்.

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி, கரணவாய் கிராமத்தில் 1949 டிசம்பர் 17ஆம் திகதி பிறந்த இவர், 'கருணை யோகன்' என்ற புனைபெயரில் சிறுகதைகளும் கவிதைகளும் எழுதியுள்ளார். நவீன தமிழ் இலக்கியம், தமிழியல், ஈழத்து இலக்கியம், சிறுவர் இலக்கியம், பெண்கள் இலக்கியம், நாட்டாரியல், போரியல், கல்வியியல் துறைகளில் ஆய்வுகளைச் செய்துள்ளார்.

ஈழத்துத் தமிழ் நாவல் வளமும், வளர்ச்சியும், இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன கவிதை, ஈழத்து முச்சந்தி இலக்கியம், ஈழத்து இலக்கியமும் இதழியலும், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை எனும் நூல்களை எழுதியுள்ள செ. யோகராசா, ஈழத்து நவீன கவிதை நூலுக்காக, 2007 இல் தேசிய சாகித்திய விருது பெற்றார்.

ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, மாற்று நோக்கில் சில கருத்துகளும் நிகழ்வுகளும், புதுத்துளை நூறு (பயிற்சிப் பட்டறைக் கவிதைகள்), ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள், ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம் என்பன இவர் வெளியிட்ட தொகுப்பு நூல்களாகும்.

தமிழ், முஸ்லிம் உறவுக்காக அரும்பாடு பட்ட பேராசிரியர் செ.யோகராசா ஜீவநதி, ஞானம் உட்பட பல சஞ்சிகைகளின் அட்டைப்பட நாயகனாக கௌரவிக்கப்பட்டுள்ளார். இவரது பணிகளைப் பாராட்டி, அவர் வாழும் போதே பல நிகழ்வுகள் நடத்தப்பட்டமை, இவரது சேவைக்கான அங்கீகாரத்தை உலகறியச் செய்தன.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், இலக்கிய நண்பர்களுக்கும், அவரது மாணவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!!

### அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்

தெல்தோட்டை ஊடக மன்றமும், அதன் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலைக் கழகமும் இணைந்து நடாத்திய அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் நினைவுப் பேருரை கடந்த 2023 நவம்பர் 30ஆம் திகதியன்று, கொழும்பு, தெமட்டகொட, வை. எம். எம். ஏ. தலைமையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பன்னூலாசிரியருமான 'மல்லிகைப்பூ திலகர்' மயில்வாகனம் தியாகராஜா "மலையகக் கவிதை இலக்கியச் சொல் நெறியும் மலையக அடையாள உருவாக்கமும்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.




அருள்வாக்கி அப்துல் காதிர் வாழ்க்கைச் சரிதம் பற்றிய "அருள்வாக்கி" எனும் நூலை வெளியிட்டதோடு அதன் இரண்டாவது பதிப்பையும் வெளியிட்டு அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கு சிறப்பு செய்த, கல்ஹின்னை தமிழ் மன்றத்துக்கு "அருள்வாக்கி நேசன்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் முகநூல் குழுமத்தின் கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய, சிறப்பான பங்களிப்புகள் செய்த கவிஞர்கள் பாராட்டி சான்றிதழ், கேடயம் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு இயக்கங்களின் பிரதிநிதிகள், மூத்த இலக்கியவாதிகள், கவிஞர்கள், கலைஞர்கள், என பலர் பங்குபற்றி நிகழ்வை சிறப்பிக்கச் செய்தனர். பார்வையாளர்களால் மண்டபம் நிரம்பி வழிந்தமை நிகழ்வின் வெற்றிக்கு சான்றாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பேருரையாற்ற கவிஞர் மயில்வாகனம் திலகராஜா தயாரித்த பேருரை சிறு நூலாக, வருகை தந்த அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டமை சிறப்பான விடயமாகும்.

மலையக இலக்கியம், மலையகத் தமிழ்க் கவிதைகள், மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி, 1820 முதல் 1920 வரையான காலம், கூலி எனும் அடையாளம், 1920, 1948 சுதந்திரமடையும் வரையான காலப் பகுதி, 'இந்தியத் தொழிலாளர்' எனும் அடையாளம், 1965 இன் நடுப்பகுதி முதல் 1985 வரையான காலப்பகுதி மலையகத் தமிழர்கள், 1985 முதல் 2005 வரையான காலம் மலையகத் தமிழர்கள், 2005க்குப்பின் (2023) இன்று வரையான காலம், இலங்கை மலையகத் தமிழர்கள் எனும் உப தலைப்புகளில் அருமையான, ஆய்வு ரீதியான விடயங்கள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

இடையிடையே அவசியமான இடங்களில், பொருத்தமான கவிதைகள் இடம் பெறச் செய்யப்பட்டிருப்பது உரையாளரின் ஆய்வின் ஆழத்தையும், இவ்விடயம் தொடர்பிலான அவரது ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. 36 பக்கங்களைக் கொண்ட சிறு நூலாக இருப்பினும், கனதியான, ஆழமான, சகலருக்கும் பயனளிக்கும் வகையிலான விதத்தில் மலையக கவிதை இலக்கியத்தை சிறப்பாக இச் சிறு நூல் எடுத்துக் கூறுவது பாராட்டுக்குரியது.

அதே தினத்தில் இலங்கை வானொலி வர்த்தக சேவையில் பிற்பகல் 2 மணி முதல் சுமார் 40 நிமிடங்கள் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் பற்றியும், இந்நிகழ்வு பற்றியும் விசேட நேரடி நிகழ்ச்சியொன்றும் சிறப்பாக ஒலிபரப்பானமை முக்கியமாக பதிவு செய்ய வேண்டிய விடயமாகும்.

அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர் தொடர்பாக, தொடர்ந்து பங்களித்து வரும் தெல்தோட்டை ஊடக மன்றமும், அதன் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலைக் கழகமும் சிறப்பான முறையில் இந்த நினைவுப் பேருரை நிகழ்வை நடாத்தியதுடன் "200 மலையாக வரலாறும் ஈழத்து இலக்கியமும்" எனும் தலைப்பில் குறித்த நினைவுப் பேருரையை நூலாகவும் தந்துள்ளதை பாராட்டுவதொடு, அதன் அனைத்து செயற்பாடுகளும், எதிர்கால முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறோம்!

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### தமிழில் ஆண்டு நிறைவுகள்

பொதுவாக தமிழில் குறிப்பிட்ட நிறைவு ஆண்டுகளைக் குறிப்பிடும் போது, அவற்றுக்கு தனியான விசேட பெயர்கள் கூறப்படுகின்றன. 25ஆவது ஆண்டினை 'வெள்ளி விழா' என்றும், 50வது ஆண்டினை 'பொன் விழா' என்றும், 60ஆவது ஆண்டை 'வைர விழா' என்றும், 75 ஆவது ஆண்டினை 'பவள விழா' என்றும், 100 ஆவதை 'நூற்றாண்டு விழா' என்றும் கூறுவது பிரபல்யமானது.

ஆனால் இவற்றுக்கு இடையிலான ஆண்டுகளுக்கு நாம் வழமையாக பாவிக்காத ஆண்டு நிறைவுப் பெயர்கள் பல உள்ளன. அவற்றில் சில இங்கே:

1 ஆண்டு – காகித விழா
2 ஆண்டு – பருத்தி விழா
3 ஆண்டு – தோல் விழா
4 ஆண்டு – மலர் மற்றும் பழ விழா
5 ஆண்டு – மர விழா
6 ஆண்டு – சர்க்கரை / கற்கண்டு / இனிப்பு விழா
7 ஆண்டு – கம்பளி / செம்பு விழா
8 ஆண்டு – வெண்கல விழா
9 ஆண்டு – மண் கலச விழா
10 ஆண்டு – தகரம் / அலுமினிய விழா
11 ஆண்டு – எஃகு விழா
12 ஆண்டு – இலினன் விழா
13 ஆண்டு – பின்னல் விழா
14 ஆண்டு – தந்த விழா
15 ஆண்டு – படிக விழா
20 ஆண்டு – பீங்கான் விழா
25 ஆண்டு – வெள்ளி விழா
30 ஆண்டு – முத்து விழா
40 ஆண்டு – மாணிக்க விழா
50 ஆண்டு – பொன் விழா
60 ஆண்டு – வைர விழா
75 ஆண்டு – பவள விழா
80 ஆண்டு _அமுத விழா
100 ஆண்டு – நூற்றாண்டு விழா

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**




சென்றதே ஓர் உருவம் நள்ளிரவில் மெல்ல நடந்து ஆண்கள் இருவரும் தவித்தனரே வியப்பில் மிதந்து ஆர்வத்துடன் சிந்துஜன் கேட்ட கேள்வி, துர்காவின் ஆழ்மனதிலும் பதிந்தது.

அவள் நிமிர்ந்து,

சிந்துஜனைப் பார்த்தாள்!

"இல்லை, அதற்கான அனுமதி எதுவும் என்னிடமிருந்து அவருக்கு கிடைக்கவில்லை!" அவள் அதரங்கள் மெல்ல அசைந்தன!

"அப்பாடா" என்று மனதிற்குள் நிம்மதி பெருமூச்சு விட்டுக் கொண்டான் சிந்துஜன்

அதேநேரம்,

கொட்டாவி விட்டபடியே எழுந்து நின்றார் சிரஞ்சீவி, "ம்" இங்கெல்லாம் கொழும்பு மாதிரி இல்லை. சீக்கிரமே தூக்கம் வந்துவிடுகிறது." என்று சொல்லியபடியே,

மாடியில் தங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தவர்,

ஆர்வத்துடன் துர்காவுடன் பேசிக் கொண்டிருந்த சிந்துஜனின் பக்கம் எட்டிப்பார்த்து, "என்ன, சிந்துஜன், எனக்கு தூக்கம் வருது, நான் படுக்கப் போறேன் நீயும் வர்றியா?" என்று கேட்டார். அவர் இப்படிக் கேட்டதும்,

சற்றுத் தடுமாறிப் போனான் சிந்துஜன்!

அவன், பதில் எதுவும் சொல்லாமல், அப்படியும் இப்படியும் நெளிந்தான்! துர்காவை விட்டு விட்டுப் போகவும் அவனுக்கு மனம் வரவில்லை!

அதேநேரம், மாமாவின் அழைப்பை தட்டிக் கழிக்கவும் அவனால் முடியவில்லை!

துர்காவைப் பார்த்து, விழிகளால் விடைபெற்றுக் கொண்டு, மெல்ல எழுந்து, அவர் பின்னால் நடந்தான், "நீ செய்த காரியத்தினால் செல்வராகவன் ஆத்திரமடைந்து போயிருப்பது உனக்குத் தெரியுமா சிந்துஜன்?" மாடிப்படிகளில் ஏறிக் கொண்டே கேட்டார். சிரஞ்சீவி!

"ஏன், அப்படி நான் என்ன செய்தேன்?"

வியப்பினுள் விழுந்தபடியே கேட்டான் சிந்துஜன்.

"ம். செல்வராகவன் போடும் கூச்சல் கேட்குதா?" செவிகளை கூர்மையாக்கிக் கொண்டான் சிந்துஜன்!

"அந்த செல்வராகவன் துர்காவைக் கொன்று விடுவானோ தெரியாது?" "ஏன் அப்படி அந்த ஆள் செய்யப் போறார்?" எதுவுமே புரியாமல் கேட்டான் சிந்துஜன்!

"அது அந்த கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் ஒன்று மட்டும் எனக்குப் புரியுது"

"என்ன புரியுது?"

"துர்கா மீது எவரும் அக்கறை கொள்வதை செல்வராகவன் விரும்பவில்லை! அதனால் நீ இன்று பண்ணிய காரியம் எப்படி இருக்கிறது தெரியுமா?"

"எப்படி இருக்கு?" புருவங்களை உயர்த்தினான் சிந்துஜன்.

"விளக்கு வெளிச்சத்தில் மயங்கிச் செல்லும் விட்டில் பூச்சியைப் போலிருக்கிறது!" அவர் இப்படிச் சொன்னதும்,

சிந்துஜனின் முகம், நாணத்தினால் சிவந்தது!

ஆனாலும்,அவன் அதை மறைத்துக்கொண்டான்!

பிறகு, மெல்ல பேச ஆரம்பித்தான்!

"அவளுடன் பேசுவது பயங்கரமான ஒரு குற்றம் என்று நான் நினைக்கவில்லை. அது மட்டுமல்லாமல் அவள் சாதாரண ஒரு விளக்கு வெளிச்சமில்லை. வெளிச்ச வீடு. இதுதான் உண்மை. இப்படி ஒரு மனிதனுக்கு அவனுடையதாக இல்லாவிட்டாலும் ஒரு மகள் இருப்பதை எண்ணிப் பெருமைப்பட வேண்டும்.! ஆனாலும் அவரது மனதில் உள்ள அச்சத்தின் காரணமாக அவர் அதை தவிர்த்திருக்கிறார்!"

சிறிது நேரத்தில், துர்கா அவர்களின் அறையைத் தாண்டிச் செல்வதையும், அதன்பிறகு இரண்டு வேலைக்காரர்கள்,

சக்கர நாற்காலியில் வைத்து, செல்வராகவனை தூக்கிச் செல்வதையும் அவர்கள் இருவரும் கவனித்தார்கள்

"குட்நைட் செல்வா!" என்று சிரஞ்சீவி சொன்னபோது,

"ம். குட்நைட்!" என்று, வேண்டா வெறுப்பாக சொல்வது போல், செல்வராகவன் சொல்லிச் சென்றார்!

மலைகளுக்கு நடுவில் இருந்து எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த சந்திரனின் ஒளி, அந்த மலைப் பிரதேசத்தையே அழகுபடுத்திக் கொண்டிருந்தது.

இதமான காற்று, பதமாக வீசிக் கொண்டிருந்தது.

வண்டினங்களின், மெல்லிய இசை, இதயத்தை வருடிக் கொண்டிருந்தது.

ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு, மாமனும் மருமகனும், இந்த இயற்கை காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார்கள்! அந்த நிலவு வெளிச்சத்தில், எதிரில் இருந்த வெள்ளை நிறத்திலான ஓர் பங்களா, கவர்ச்சியாகத் தெரிந்தது!

"அந்த பங்களா ரொம்ப அழகாக இருக்குது மாமா. அது யாருடைய பங்களாவாக இருக்குமோ.?" மெதுவாகக் கேட்டான் சிந்துஜன்.

"நான் இங்கே வந்தவுடன் பிரதான வேலைக்காரன் மாதுவிடம் அது சம்பந்தமாகக் கேட்டேன். அந்த அழகான பங்களா தோமஸ் என்பவருக்கு சொந்தமானதாம். அவர் நன்றாகப் படித்தவராம். அதேபோல பெரிய செல்வந்தராம். அதேபோல் செல்வராகவனுக்குத் தெரியாமல் ரகசியமாக துர்காவுடன் பழகிவந்த ஒரு நல்ல நண்பராம்!" அவரால் அதற்கு மேல் பேச முடியாமல் போனது.



காரணம், அந்த மாளிகையின் ஒரு பகுதியில் இருந்து, திடீரென்று, வெளிச்சமொன்று, பளிச்சென்று பாய்ந்தது!

திடீரென்று அணைந்தது! மீண்டும் எரிந்தது!

இப்படி, இரண்டு மூன்று தடவை, எரிந்து எரிந்து, அணைந்தது!

"என்ன மாமா இது?" வியப்புடன் கேட்டான் சிந்துஜன்,

"யாரோ, யாருக்கோ சைகை காட்டுகிறார்கள். ம்.. அதோ, அங்கே பார் சிந்துஜன். யார் போகிறார்கள் என்று." பரபரப்புடன், தோட்டத்துக்குக் கீழே, கையைக் காட்டியபடியே சொன்னார் சிரஞ்சீவி!

கீழே, தோட்டத்துக்கு நடுவில் இருந்து செடிகளுக்கு நடுவால், ஓர் உருவம் நடந்து சென்று கொண்டிருந்தது, நன்றாக உற்றுப்பார்த்தான் சிந்துஜன்.

அது, அவனது மனதைக் கவர்ந்த ஓர் உருவம்தான்!

இதேபோன்றதொரு பால் நிலவில் மட்டுமல்ல, அமாவாசை இருளிலும் கூட அந்த உருவத்தை அவனால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்! ஆமாம், அங்கே, நடந்து சென்று கொண்டிருந்த அந்த உருவம், துர்காதான்!

அவள் கையில், பை ஒன்றும் இருந்தது! இதனால்அந்த காட்சியைப் பார்த்து விட்டு, மாமனும், மருமகனும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதிகாலையிலேயே எழுந்து சில மைல்கள் நடப்பது என்பது மாமனும் மருமகனும் வழமையாக செய்துவரும் ஒரு காரியம். வழமை போல், அன்றும் அதைச் செய்வதற்காக,அதிகாலையிலேயே எழுந்து போய்விட்டார்கள்!

மலைகளில் இருந்து தவிழ்ந்து வந்த தென்றல் காற்று, மேனியில் படர்ந்து செல்லும் போது, அலாதியான இன்பமாக இருந்தது!

பொதுவாகவே, மலையகத்தில் உள்ள பங்களாக்களில் வாழ்கிற வசதியானவர்கள் காலையில் கால தாமதமாகித்தான் எழுந்திருப்பார்கள்!

செல்வராகவனின் பங்களாவிலும் அப்படித்தான்!

வேலைக்காரர்கள் எல்லோரும்,

ஏழு மணிக்குப் பிறகுதான் எழுந்திருப்பார்கள்!

துர்கா எழுந்துவர ஒன்பது மணியாகிவிடும்!

செல்வராகவன், பதினொரு மணிக்குப் பிறகுதான் அறையை விட்டு வெளியே வருவார்!

"நேற்றிரவு காட்டப்பட்ட அந்த சைகை எனக்கு இன்னமும் மர்மமாகத்தான் இருக்கிறது!" சிறிது தூரம் நடந்த படியே சொன்னார், சிரஞ்சீவி!

"எனக்கும் அப்படித்தான் இருக்கிறது, அதே போல்தான் துர்கா அந்த நேரத்தில் எங்கே போனாள் என்பதும்!"

"சரி! அந்த பங்களாவின் பக்கம் போய் கொஞ்சம் பார்ப்போம்!"

சொல்லியபடியே,

முன்னால் நடந்தார் சிரஞ்சீவி!

இப்போது அந்த பங்களாவிற்கு மிக அருகிலேயே இருவரும் வந்துவிட்டார்கள்!

"ம். அதோ அந்த பக்கவாட்டில் இருக்கும் அறையில் இருந்து தான் அந்த வெளிச்சம் காட்டப்பட்டிருக்க வேண்டும்!" மடிப் பகுதியில் இருந்த ஓர் அறையைக் காட்டிய படியே சொன்னார் சிரஞ்சீவி!

ஆனாலும், துர்காவுடன் ரகசியமாக நட்பு வைத்திருக்கும் அந்த தோமஸ் யார் என்பதைப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலில்தான்,

சிந்துஜன் இருந்தான்!

ஆனாலும், துர்காவை சுற்றி இருக்கும் மர்மம் என்ன என்பதை அவர்கள் அறிந்து கொண்டால், இருவரும், மயக்கம் போட்டு விழுந்து விடுவார்கள்!

(தொடரும்..)

# சிறுவர் உலகம்

சுகந்தி



**அறன் வலியுறுத்தல் : அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க மற்றது பொன்றுங்கால் பொன்றாத் துணை.**

**தெளிவுரை :**

இளைஞராக உள்ளவர், பிற்காலத்தில் பார்த்து கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியா துணையாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 93

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | | 08 |
| 09 | 10 | | 11 | | 12 |
| | 13 | 14 | 15 | 16 | |
| 17 | 18 | | 19 | 20 | 21 |
| | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..............................................................

வகுப்பு ..............................................................

தொலைபேசி இல ..............................................................

பாடசாலை பெயர் ..............................................................

வதிவிட முகவரி ..............................................................

..............................................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) திறமையை வெளிக்காட்டும் சாதனையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கௌரவம். மாணவர்களாகிய நீங்கள் கல்வியிலோ அல்லது வேறு துறைகளிலோ திறமையைக் காண்பித்தால், உங்களுக்கும் இது வழங்கப்படும்.

(4) நீரின் பௌதிக வடிவங்களில் ஒன்று இது. நீர் இவ்வாறான வடிவத்தைப் பெறுவதனாலேயே உலகில் மழை பெய்கின்றது.

(9) குளம் ஒன்றின் பிரதானமான பாகம் இது. தண்ணீர் வேறெங்கும் வெளியேறி விரயமாகாதவாறு, பாதுகாப்பாக அமைக்கப்படுவது.

(13) வீட்டுக்குள் காற்றோட்டம் அவசியமென்றால் அவசியமானது இது.

(17) இரப்போர்க்கு இல்லையென்று கூறாமல், வாரிவழங்கும் வள்ளலென்று இலக்கியங்களில் போற்றப்படுகின்ற மன்னன் இவன். இந்தியாவின் பறம்பு நாட்டை ஆட்சி செய்த மன்னன்.

(19) பெற்றோரின் அன்புக்குரியவன் இவன். (தலைகீழான சொல்)

(22) பிறமனிதர்கள் மீது மாத்திரமன்றி, அனைத்து உயிரினங்கள் மீதும் நாம் காண்பிக்க வேண்டிய நேசம்.

**மேலிருந்து கீழ்**

(1) மலையில் இருந்து வீழ்கின்ற நீரூற்று. (தலைகீழான சொல்)

(3) எந்தவொரு திரவத்தை எடுத்துக் கொண்டாலும், அத்திரவத்தின் சிறுசொட்டு இது.

(5) பார்த்து இரசிக்கக் கூடிய பறவையினம். பறவையினங்கள் பலவற்றின் பொதுப்பெயர். (தலைகீழான சொல்)

(10) மன்னன் அமர்ந்திருக்கும் சிம்மாசனம். (தலைகீழான சொல்)

(11) நாம் அணிகின்ற பொன்னகைகளைப் பார்க்கிலும், முகத்தில் தவழுகின்ற இதுவே உண்மையான அழகு தரும். (தலைகீழான சொல்)

(16) கருங்கல் பாறைகள் உடைந்தோ அல்லது சிதைவடைந்தோ உருவாகின்ற சிறு துண்டு இது. (தலைகீழான சொல்)

(21) வீடு என்பதன் ஒத்தபொருள் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 92

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01.தேநீர் 04. வால் 07. கம்பன்
11. நாரை 16. நகம் 22. வளை 24. அத்தை

**மேலிருந்து கீழ்**

01. தேன் 03. நாகர் 04. கப்பல் 05. வான்
11. வல்லாரை 16. நத்தை 18. அகம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 91

### பாராட்டு பெறுவோர்

1. **பதுரியா ஜெஹான்**
தரம் 04C, கைரியா ஆரம்ப பாடசாலை,
தெமட்டகொட வீதி, கொழும்பு 09.

2. **தூபா ரியாஸ்**
கைரியா மகளிர் கல்லூரி,
இல. 64, விஹார மாவத்தை, கொளன்னாவ.

3. **எம்.கே.எப். ரிலா**
தரம் 04D, அல் மினா ஆரம்ப பாடசாலை
இல 124/16, மானம்பொட, உக்குவளை.

4. **தி. சயந்தவி**
தரம் 06, மட்/ வின்சன்ட் ம.உ. பாடசாலை,
இல. 07, பாடசாலை வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

5. **ஹம்தா மர்யம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

6. **அப்தார் நூரி**
தரம் 07, டி.எஸ். சேனாநாயக்க கல்லூரி,
கொழும்பு.


7. **சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் அமான் மு.ம. கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொட.

8. **எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 07, மா/ சாஹிரா தேசிய கல்லூரி,
இல 37, கண்டிவீதி மாத்தளை, வறக்காமுறை,
உக்குவளை.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 93**
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# உயிரை காப்பாற்றிய பன்றி



பன்றி ஒன்று சேற்றுடன் வருவதை கண்ட ஒரு பெண் யானை, கேவலமாக பன்றியை பார்த்து ஒதுங்கி நின்றது.

சேற்றுப்பன்றிக்கு தன் தோழமை பன்றி முன் யானையின் இச்செயலால் அவமானமாய் போய்விட்டது.

பன்றி விலகி நடந்தது. ஒரு நாள் எங்குமே நீர் கிடைக்காத யானைகள் கூட்டம், சேற்றுப் பன்றி இருந்த குட்டைக்கு நீர் அருந்த வந்தது. யானைகளின் கூட்டத்தைக் கண்ட பன்றி அவைகளின் தாகம் உணர்ந்து நீரை கலக்குவதை நிறுத்தி அமைதி காத்தது. அந்தக் கூட்டத்தில் பன்றியை சேற்றுடன் கண்டு நகைத்த பெண் யானையும் இருந்தது. யானைகள் கூட்டமாக இருந்ததால், தண்ணீர் கிடைப்பதில் சிரமம் இருந்தது. பெரிய யானைகள் தும்பிக்கை நீட்டி நீரை அருந்த, குட்டிகள் அவசரத்தில் சேற்றுக்குள் இறங்கி நடு குட்டையில் நீர் பருகின. அனைத்து குட்டிகளும் கரையேற, சேற்றை கேவலமாக எண்ணிய யானையின் குட்டி மட்டும் சேற்றில் மாட்டிக் கொண்டது.

பெரிய யானைகள் மீட்க கால் வைத்ததால், எடை தாங்காமல் சேற்றுக்குளம் புதைக்குழியாய் உள்ளிழுத்தது. தாய் யானை கதறியது. இதனைக் கண்ட பன்றி, அவசரமாக களத்தில் இறங்கியது. குட்டி யானையின் கால்களுக்கு அருகே குளத்திலிருந்த சிறு பாறைகளை நகர்த்தி வைத்து, குட்டி யானையை தள்ள... குட்டி யானை சிறு பாறைகளில் கால் ஊன்றி கரையேறியது. கரைக்கு வந்த தன் குட்டியை சேற்றுடன் அணைத்த தாய் யானை, கண்களில் நீர் மல்க பன்றியை பார்த்தது. பன்றி, யானையை கண்டும் காணாது வழக்கம் போல் சேற்றில் விளையாடத் தொடங்கியது.

ஒருவர் வளரும் சூழல், உடுத்தும் ஆடை, தொழில் ஆகியவற்றைக் கொண்டு ஒரு போதும் எடை போடக்கூடாது.

# இவ்வார மழலை



கா. வர்ஷித்

காண்டீபன் – லோகதர்ஷினி





**எம்.ஆர்.எம். ரஸீன்**
தரம் 4 D, பதுரியா தேசிய பாடசாலை, மாவனல்லை.




**எம்.ஆர்.எம். ரய்யான்**
தரம் 2 C, பதுரியா தேசிய பாடசாலை, மாவனல்லை.



**எச்.எப். ஹம்னா**
தரம் 5, முஸ்லிம் மகளிர் கல்லூரி, காலி.





# அண்டாட்டிகா பாலைவனம்

அண்டாட்டிகா, உலகிலிருக்கும் எந்த நாட்டிற்கும் சொந்தமானதில்லை. யாரும் இது எங்களுடையது என்று உரிமை கொண்டாட முடியாத இடம். உலகிலுள்ள மொத்த பனிக்கட்டிகளில் 90 சதவீதம் இங்குதான் உள்ளது. இந்த 90% பனிக்கட்டிகளில் 70% குடிநீரும் அடங்கும். இங்கிருக்கும் அத்தனை பனிக்கட்டிகளும் உருகினால் கடல் நீரின் மட்டம் 200 அடி உயர வாய்ப்புள்ளது.

அண்டாட்டிகா பனிக்கட்டிகளால் நிரம்பியிருந்தாலும், இது ஒரு பாலைவனம். வருடத்திற்கு இரண்டு அங்குலம் மழை பொழிவதே அபூர்வம். ஆசியாவிலேயே மிகப்பெரிய பாலைவனமான கோபி பாலைவனத்தைவிட அண்டாட்டிகாவில் ஈரப்பதம் மிகக்குறைவு. இங்கிருக்கும் ICE Fish என்று அழைக்கப்படும் மீன்களின் உடல்களில் ஹீமோகுளோபின் கிடையாது. பனியில் உறைந்துவிடாமலிருக்க, இவற்றின் உடலில் antifreeze எனப்படும் உறைதலைத் தடுக்கும் தன்மை இருக்கிறது.



# உடற்பயிற்சி

உடற்பயிற்சி செய்திட்டால்
உடலும் உறுதியாகிடுமே
உடலும் உறுதியானாலே
உலகில் நெடுநாள் வாழலாமே!

காலை மாலை தவறாமல்
கவனத்துடனே உடற்பயிற்சி
காலமெல்லாம் பழகிட்டால்
களிப்பாய் நாமும் வாழலாம்!

இளமையான வயது முதல்
இனிதாய் பயிற்சி செய்துவரின்
வலிமையான உடலோடு
வாழ்ந்து சாதனை புரிந்திடலாம்!

இக்ராம்...
தரம் 4 – அல் மஹ்மூத் மகா வித்தியாலயம்
மள்வானை

# வெற்றியின் பொக்கிஷம்

1. மிகவும் மதிப்புக்குரியோர்?
தாய், தந்தை
2. மிகவும் கொடிய நேரம்?
பேராசை
3. நழுவவிடக் கூடாதது?
வாய்ப்பு
4. செய்யக் கூடியது?
உதவி
5. மிகவும் வேண்டியது?
பணிவு
6. விலக்க வேண்டியது
சோம்பேரித்தனம்
7. மிகப் பெரிய தேவை
நம்பிக்கை
8. மிகப் பெரிய வெகுமதி?
மன்னிப்பு

கே.எல். ஹில்மி...
தேசிய பாடசாலை, சம்மாந்துறை 10

# எறும்புப் படகு



எறும்புகள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசை மாறாமல் செல்வது சர்வசாதாரணம். ஆனால், ஒரு கூட்டமாக ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு கிட்டத்தட்ட ஒரு படகு தட்டு மாதிரி செல்லுமா?

ஆம், காடுகளிலிருக்கும் நெருப்பெறும்புகள் மழைக்காலங்களில் வரும் வெள்ளப்பெருக்கிலிருந்து தப்பிக்கத்தான் இப்படி ஒரு தந்திரத்தை உபயோகிக்கின்றன. மழையால் எறும்புப்புற்றுகளில் தண்ணீர் நுழையும்போது, அதில் வாழும் எறும்புகளனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு தட்டுபோன்ற அமைப்பை உருவாக்கி, இலைகள் மிதப்பதுபோல் நீரில் மிதக்கின்றன.

மெதுவாக மிதந்துவந்து மற்றொரு தரைப்பகுதியையோ அல்லது மரங்களையோ பற்றி உயிரைக் காப்பாற்றிக்கொள்கின்றன.

நடுப்பகுதியில் ராணி எறும்பும், அதைச் சுற்றி சின்ன வயது எறும்புகளும், வயதில் பெரிய எறும்புகள் ஓரத்தில் இருப்பது போலவும் இவை ஒன்று சேர்கின்றன. நீரில் மிதந்து வரும்போது, படகுக்கோ மீன்களுக்கோ இரையாகாமல் தப்பிப்பது தான் இவற்றின் பெரிய சவால்.

# சீனப் பெருஞ்சுவர்



உலகின் 7 அதிசயங்களில் சீனப்பெருஞ்சுவரும் ஒன்றாகும். ஆண்டுதோறும் இந்த சீனப்பெருஞ்சுவரை பார்வையிடுவதற்கு மட்டும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். பண்டைய சீன அரசர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக வலிமையான கோட்டைகளையும், சுற்றுச்சுவர்களையும் எழுப்பினர் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சீனாவின் வடபுலத்தில் உள்ள மங்கோலியா என்னும் நாட்டிலிருந்து நாகரிகம் இல்லாத நாடோடிகள் அடிக்கடி படையெடுத்து வந்தனர். அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக ஏறத்தாழ 2,200 ஆண்டுகளுக்கு முன்பு ஷயுவால்டீ என்ற மன்னன் இந்த நீண்ட சுவரை எழுப்பியதாகக் குறிப்பு உள்ளது. இதன் நீளம் 5 ஆயிரத்து 500 மைல்கள். உயரமான சிறுசிறு கண்காணிப்பு கோபுரங்கள் ஆங்காங்கே அதிக அளவில் காணப்படுகின்றன. சுவரின் அடிப்பகுதி அகலம் 8 மீற்றர். மேற்பகுதி அகலம் 5 மீற்றர். சுவரின் இடையில் மண், செங்கல், கருங்கல் நிரப்பி பாதைபோல் செய்துள்ளனர். சுவரின் மேலுள்ள இருப்புப் பாதை, குதிரை வீரர்கள் செல்ல ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு அரச வம்சங்களின் ஆட்சியின் கீழ் பல ஆண்டுகளாகக் கட்டப்பட்டிருக்கலாம் என்ற செய்திகள் உள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு 200 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஷி ஹுவாங் லீ என்ற மன்னன் (கி.மு. 221) தனித்தனியாக இருந்த சுவர்களை ஒன்றாக இணைத்தார். இவர் சின் வம்சத்தைச் சேர்ந்தவர். கி.மு. 246ல் சீனா பல்வேறு மாகாணங்களாக பிரிந்து கிடந்தது. அரசர் ஷ ஹவாங் லீ ஒன்றாக இணைத்து பேரரசாக்கியுள்ளார். இரு சுவர்களுக்குமிடையே படிக்கட்டுகள் உள்ளன. இச்சுவரின் பல பகுதிகள் கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டுள்ளன. சூய் மரபுக் காலத்தில் (கி.பி. 589 _ 618) நீளம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மிகப்பெரிய அளவிலான விரிவாக்கம் மிங்க் வம்ச காலத்தில் நிகழ்ந்திருப்பதாக குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த சுவரை எழுப்புவதற்கு, நாட்டின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் இரவு பகல் என்று வேலை பார்த்துள்ளனர். சீன பெருஞ்சுவரில் இரு உருவப் பாறைகள் காணப்படுகின்றன. இதற்கு, செவிவழிக் கதை ஒன்று உள்ளது. சீனப் பெருஞ்சுவரைக் கட்டிய பணியாளர்களுள் மீங்ஜியாங் என்ற பெண்ணின் கணவனும் ஒருவன். வேலைக்குச் சென்ற அவன், பல ஆண்டுகளாகியும் வீட்டிற்கு வரவில்லை. கவலையுற்ற மனைவி, கணவன் வேலை செய்யும் இடத்திற்குத் தேடி வருகிறாள். வேலையாட்கள் நிறையப்பேர் வேலை செய்து கொண்டிருந்தனர். கணவனை உடனடியாகக் காணமுடியாமல் தவிக்கிறாள். காத்திருந்து கணவனைப் பார்க்கிறாள். அப்போது, வேலை நடைபெற்ற இடத்திலிருந்து ஒரு பாறாங்கல் உருண்டு, அவனது தலையில் விழுகிறது. கணவரின் உயிர் உடலைவிட்டுப் பிரிகிறது. மனம் தாங்காத மனைவியும் அதே பாறையில் மோதி மோதி அழுது, தலையில் அடிபட்டு உயிர் துறக்கிறாள். இந்தத் தம்பதியரின் உருவம்தான் பாறையில் செதுக்கப்பட்டுள்ளது என்று மக்களால் வழிவழியாக நம்பப்பட்டு வருகிறது. விண்வெளியிலிருந்து பூமியைப் பார்த்த வீரர்கள் கடல், மலை என்ற இயற்கை வளங்களுடன், செயற்கையாக மனிதனால் உண்டாக்கப்பட்ட சீனப் பெருஞ்சுவரை மட்டுமே பார்த்ததாகக் கூறியுள்ளனர். அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக சுவரின் தேவைப்படும் பகுதிகள் அவ்வப்போது இடிக்கப்படும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இந்த நெடுஞ்சுவரைப் பார்ப்பதற்கு, இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். ஆர்வத்துடன் வருபவர்கள் சுவரின் நீளம் முழுமையையும் பார்த்துவிட முடியுமா என்றால் முடியாது. சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இப்போது கம்பி ரயில் (கேபிள் கார்) வசதி அமைக்கப்பட்டுள்ளது. விண்பவுதியான் என்பவர் 2 ஆண்டுகள் சுவர் மீது நடந்து முழு நீளத்தையும் கடந்துள்ளார்.

இன்னும் 20 ஆண்டுகளில் சீனப்பெருஞ்சுவரின் ஒரு சில பகுதிகள் மறைந்து போகலாம். மண்ணால் செய்யப்பட்ட இப்பகுதிகள் காற்றிலும் மழையிலும் கரைந்துவிடும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அரண்மனையைச் சுற்றி கோட்டைச்சுவர் எழுப்புவது சாதாரணம். இங்கே நாட்டைச்சுற்றி கோட்டைச் சுவர், அதிலும் எந்த நவீன வசதிகளும் இல்லாத காலம். வெறும் மனித வலுவை நம்பி எழுப்பப்பட்ட நெடு மதில்.

# மஞ்சரி விளையாட்டு



# ‘சின்ன கல்லு பெரிய லாபம்’

பத்து அணிகள், கையிருப்புத் தொகை இந்திய நாணயத்தில் 263 கோடி, நிரப்ப வேண்டிய இடங்கள் 77... சுத்தியல் கீழே வைக்கப்படும் முன் ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம்... இந்த இடைவெளிக்குள் யாரை வாங்குவது, யாரை வாங்கக் கூடாது எத்தனை செலவு செய்வது என்ற போட்டி இருக்கும்.

இந்திய பிரீமியர் லீக் ஏலமும் கேள்வி நிரம்பம் என்ற அடிப்படை பொருளாதாரத் தத்துவத்துக்குள் தான் இயங்கும். ஆனால் சர்வதேச கிரிக்கெட் உலகில் இப்போதெல்லா தனது தேசிய அணிக்கு அடுவதை விட ஐ.பி.எல்லில் ஆடினால் போதும் என்று நினைக்கும் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. எனவே, ஐ.பி.எல்லுக்கான போட்டியும் எப்போதும் இல்லாமல் அதிகரித்துவிட்டது.

உலகில் செல்வந்த கிரிக்கெட் லீக், ‘சின்ன கல்லு பெரிய லாபம்’ என்ற அளவுக்கு பணம் கொட்டும் விளையாட்டு. உலகின் செல்வந்து லீக் போட்டிகளில் ஐ.பி.எல் முன்னணியில் இருப்பதென்றால் சும்மாவா? 2022 ஆம் ஆண்டு நிலவரப்படி ஐ.பி. எல். பிராண்ட் மதிப்பு 11 பில்லியன் டொலர்களுக்கு மேல்.

2023 தொடக்கம் 2027 ஆம் ஆண்டு வரையான ஐ.பி.எல். இன் ஊடக உரிமை 6.4 பில்லியன் டொலர்களுக்கு விற்கப்பட்டது. இதன்படி பார்த்தால் ஐ.பி.எல் போட்டி ஒன்றின் பெறுமதி மாத்திரம் 13.4 மில்லியன் டொலர்களை எட்டும். இப்பேர்ப்பட்ட ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 2024 தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் டிசம்பர் 19 ஆம் திகதி டுபாயில் நடைபெறப் போகிறது.

முதல் முறையாக இந்தியாவுக்கு வெளியில் ஏலம் இடம்பெறப் போகிறது முக்கிய அம்சமாக இருந்தாலும், வீரர்களை வாங்குவதில் வழக்கமான போட்டிகளுக்கு இம்முறையும் பஞ்சம் இருக்காது. இந்த ஏலத்தில் போட்டியிடுவதற்கு குதித்த மொத்த வீரர்களின் எண்ணிக்கை 1166. ஆனால் அணிகளின் தேவை, திறமை அடிப்படையில் அந்த எண்ணிக்கை 333 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி குறைக்கப்பட்ட வீரர்களில் 214 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பதோடு 119 வீரர்கள் வெளிநாட்டினர். அதிலும் இரு வீரர்கள் நெதர்லாந்து மற்றும் நமீபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். இதிலே சர்வதேச அனுபவம் பெற்ற வீரர்கள் என்று பார்த்தால் 116 பேர் இருப்பார்கள், 215 வீரர்கள் அனுபவம் பெற்றவர்கள் அல்ல. என்றாலும் ஏலத்துக்கு தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் என்று பார்த்தால் அனைவரும் திறமையானவர்களாகத் தான் இருப்பார்கள்.

சர்வதேச அனுபவம் பெற்ற துடுப்பாட்ட வீரர்களுடனேயே ஏலம் ஆரம்பிக்கப்படும், தொடர்ந்து சகலதுறை வீரர்கள், விக்கெட் காப்பாளர்கள், வேகப்பந்து வீச்சாளர்கள் அடுத்து சுழற்பந்து வீச்சாளர்கள் என்று ஏலம் விடப்படுவார்கள். அதனைத் தொடர்ந்து சர்வதேச அனுபவம் பெறாதவர்கள் ஏலத்துக்கு வருவார்கள்.

ஐ.பி.எல் தனது விறுவிறுப்பு, போட்டித் தன்மை மற்றும் ரசிகர்களின் எதிர்பார்ப்பை தக்கவைத்துக் கொள்ளும் வகையில் வீரர்களை தேர்வு செய்யும். இதற்காக பத்து அணிகளும் ஏற்கனவே யாரை வாங்குவது, யாருக்கு எவ்வளவு பணத்தை செலவிடுவது என்ற திட்டத்தை வகுத்திருக்கும்.

ஏலத்தில் அதிக அடிப்படை விலையான இந்திய நாணயத்தில் 2 கோடி ரூபாவுடன் வரும் வீரர்கள் எண்ணிக்கை 23. 1.5 மில்லியன் அடிப்படை விலையுடன் 13 வீரர்கள் ஏலத்துக்கு வந்திருக்கிறார்கள்.




துடுப்பாட்ட வரிசையை பார்த்தோம் என்றால் இங்கிலாந்தின் ஹர்ரி புரூக்கிற்கு அதிக கேள்வி இருக்கும். முந்தைய ஐ.பி.எல் ஏலத்தில் அதிக விலைபோன ஒருவர். அவரை சன்ரைசஸ் ஹைதராபாத் அணி 13.25 கோடி ரூபாவுக்கு வாங்கியது. என்றாலும் பங்களிப்பு குறைவாகவே இருந்தது. 11 இன்னிங்ஸ்களில் 19 ஓட்டங்களையே பெற்றார். அதிலும் 100 ஓட்டங்கள் ஒரே ஒரு இன்னிங்ஸில் பெற்றது. எனவே அவரை விடுவித்தது ஹைதராபாத் அணி.

மற்றொரு அதிக அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் துடுப்பாட்ட வீரர் அவுஸ்திரேலியாவின் ட்ரவிஸ் ஹெட். அவர் ஆறு ஐ.பி.எல் பருவங்களில் விளையாடி இருக்கிறார். என்றாலும் அண்மையில் இந்தியாவில் நடந்த ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனானது, அதன் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகளில் ஆட்ட நாயகன் விருதை வென்றது என்று ஹெட்டின் கிராக்கி அதிகரித்திருக்கிறது.

உலகக் கிண்ணத்தில் சோபித்து அதிக அவதானத்தை பெற்ற மற்றொரு வீரர் ஆப்கானிஸ்தான்



வேகப்பந்து சகலதுறை ஆட்டக்காரர் அஸ்மதுல்லா ஒமர்சாய். உலகக் கிண்ணத்தில் எட்டு இன்னிங்ஸ்களில் 353 ஓட்டங்களை பெற்று ஆப்கான் அணிக்காக அதிக ஓட்டங்கள் பெற்றவராவார். தவிர தொடரில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஏலத்தில் அவரது அடிப்படை விலை 50 இலட்சம் ரூபாவாக இருந்தாலும் அது பல மடங்கு உயரலாம்.

ஆப்கானின் 16 வயது சுழற்பந்து வீச்சாளர் அல்லா கசன்பாரும் ஏலத்தில் இடம்பெற்றிருக்கிறார். அதே போன்று அந்த அணியின் வயதானவரான 39 வயது முஹமது நபியும் இருக்கிறார். என்றாலும் இவர்கள் வாங்கப்படுவதற்கான உத்தரவாதம் குறைவு தான்.

இலங்கையை பெறுத்தவரை எட்டு வீரர்கள் ஐ.பி.எல் ஏலத்தில் இடம்பெற்றிருக்கிறார்கள். கடந்த ஐ.பி.எல் தொடரில் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியில் இடம் பெற்ற இலங்கையின் முன்னணி சுழற்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவை அந்த அணி விடுவித்த நிலையில் ஒன்றரைக் கோடி அடிப்படை விலையுடன் ஏலத்தில் குதிக்கிறார்.

கடந்த ஐ.பி.எல். இல் போதுமாக சோபிக்கவில்லை. உபாதையால் உலகக் கிண்ணத்தில் ஆடவில்லை. போதாக்குறைக்கு சத்திரசிகிச்சை செய்து தற்போது புனர்வாழ்வு பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். எனவே, அவரை வாங்குவதா, இல்லையா என்று அணிகள் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கும்.

இலங்கை மட்டுப்படுப்படுத்தப்பட்ட ஓவர் தலைவர் தசுன் ஷானக்கவின் கதை இதனை விடவும் மோசம். கடந்த முறை இலங்கை அணியின் இந்திய சுற்றுப்பயணத்தில் அபாரமாக துடுப்பெடுத்தாடிய புண்ணியத்தில் குஜராத் டைட்டன்ஸ் காயத்துக்கான மாற்று வீரராக அவரை வாங்கியது. என்றாலும் போட்டிகளில் சோபிக்கவில்லை. இதனால் அவர் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

50 இலட்சம் ரூபா அடிப்படை விலையுடன் ஏலத்தில் இடம்பெற்றிருக்கும் தசுன் ஷானக்க உலகக் கிண்ணத்தில் காயத்தால் பாதியில் விலகினார். அவரது துடுப்பாட்டமும் அண்மைக் காலமாக சரியாக இல்லை. எனவே அவர் விலைபோவதும் சந்தேகமே.

பானுக்க ராஜபக்ஷ, டி20 கிரிக்கெட்டின் தனித்துவமான வீரர். ஐ.பி.எல் தொடரில் இடம்பெற்று வந்த அவர் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக ஆடினார். என்றாலும் போதுமாக சோபிக்காததால் அந்த அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட பானுக்க கடைசியில் ஏலத்திற்கான 333 வீரர்களில் ஒருவராகக் கூட இடம்பெறவில்லை.

பானுக்க ராஜபக்ஷ முன்னர் இலங்கை அணியில் முக்கிய துடுப்பாட்ட வீரராக இடம்பெற்று வந்தபோதும், தேசிய அணியில் ஆடுவதை விடலும் உலகெங்கும் நடக்கும் லீக் கிரிக்கெட்டில் ஆடுவதற்கே அதிக ஆர்வம் காட்டி வந்தார். இதனால் தேசிய அணியில் இருந்து படிப்படியாக விடுபட்டுப் போன அவருக்கு இப்போது ஐ.பி. எல் தொடரிலும் இடம் கிடைக்கவில்லை.

இலங்கையின் அனுபவ வீரரும், முன்னாள் அணித் தலைவருமான அஞ்சலோ மத்தியூஸ் 2 கோடி ரூபா அடிப்படை விலையுடன் ஐ.பி. எல் ஏலத்தில் தம்மை பதிவு செய்த போதும் கடைசி பட்டியலில் இடம் பெறும் அளவுக்கு அவர் தகுதியானவராக இருக்கவில்லை. அதிக வயது, தேசிய அணியில் நிரந்தர இடமில்லை, குறிப்பிடும்படியாக திறமையை வெளிப்படுத்தாதது என்று ஏலத்தில் கூட இடம்பெறாத அளவுக்கு அவரை தள்ளிவிட்டது.

என்றாலும் இந்த ஏலத்தில் குதித்திருக்கும் இளம் இடது கை வேகப் பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க மீது அதிக எதிர்பார்ப்பு உள்ளது. அண்மையில் நடந்த உலகக் கிண்ணத்தில் அவர் அபாரமாக பந்து வீசினார். 9 போட்டிகளில் மொத்தம் 21 விக்கெட்டுகளை வீழ்த்திய அவர் தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியோர் வரிசையில் மூன்றாவது இடத்தை பிடித்தார்.

அவருக்கு நிர்ணயித்திருக்கும் அடிப்படை விலை 50 இலட்சம் ரூபா. என்றாலும் அவரை வாங்க அதிக அணிகள் ஆர்வமாக இருப்பதாக தெரிகிறது. எனவே அவரது விலை அதிகரிக்கக் கூடும்.

இந்த ஏலத்தில் போட்டியிடும் மற்ற இலங்கை வீரர் குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, துஷ்மந்த சமீர, லஹிரு குமார மற்றும் நுவன் துஷார ஆகியோராவர். என்றாலும் இவர்கள் வாங்கப்படுவதற்கான உத்தரவாம் பெரிதாக இல்லை.

என்றாலும் நடப்புச் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தன்னிடம் உள்ள இலங்கை வீரர்களான மதீஷ பத்திரண மற்றும் மஹீஷ் தீக்ஷனவை தக்கவைத்துக்கொண்டது.

அடிப்படையில் ஐ.பி.எல் என்பது இந்தியாவின் கிரிக்கெட் தொடர். இந்திய வீரர்களுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். ஐ.பி.எல் வருகைக்கு பின்னர் இந்திய கிரிக்கெட் திறமையும் சாதகமான போக்கிற்கு மாறி இருக்கிறது.

விராட் கொஹ்லி (றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர்), எம்.எஸ். தோனி (சென்னை சுப்பர் கிங்ஸ்), ஜஸ்பிரிட் பூம்ராஹ் (மும்பை இந்தியன்ஸ்) போன்ற வீரர்கள் ஒரு முறைதான் ஏலம் எடுக்கப்பட்டார்கள். அது தொடக்கம் அந்தந்த அணிகளால் தக்கவைக்கப்பட்டு மீண்டும் ஏலத்திற்கு வரவே இல்லை. மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெயில் ஒரு காலத்தில் ஐ.பி.எல். இல் ஒரு கலக்கு கலக்கி இருந்தார். இன்று வயது மூப்பு காரணமாகவோ என்னவோ ஐ.பி.எல். இல் இடமே இல்லை. இத்தனைக்கும் அவர் இன்னும் ஓய்வை அறிவிக்கவில்லை.

கடந்த தொடரில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய குஜராத் டைட்டன்ஸ் அதிகபட்சமான 38.15 கோடி ரூபா பணத்துடன் ஏலத்திற்கு வருகிறது. அதன் அணித் தலைவர் ஹார்திக் பண்டியா மும்பை இந்தியன்ஸுக்கு சென்றதாலேயே இத்தனை பணம் அதன் கைவசம் இருக்கிறது. கடந்த தொடரில் அதிக ஓட்டம் பெற்ற ஷுப்மன் கில் குஜராத் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதற்கு அடுத்து சன்ரைசஸ் ஹைதராபாத் (34 கோடி) மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (32.7 கோடி) அதிக பணத்தை வைத்திருக்கின்றன.

என்றாலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் அதிகபட்சமாக 4 வெளிநாட்டு வீரர்களுடன் 12 வீரர்களுக்கான இடங்கள் எஞ்சியுள்ளன.

ஐ.பி.எல். ஏலத்தில் இந்திய வீரர்களுக்கு அதிக கேள்வி இருந்தபோதும், சர்வதேச அனுபவம் பெற்ற அண்மைக் காலத்தில் அதிக சோபித்து வரும் வீரர்கள் அதிக விலைக்கு ஏலம்போவது வழக்கம். இதில் அண்மையில் நடந்த உலகக் கிண்ணப் போட்டி தொடக்கம் பிராந்திய மட்டப் போட்டிகள் வரை வீரர்கள் ஏலத்தில் தாக்கம் செலுத்தும் காரணியாக இருக்கும்.

**எஸ்.பிர்தௌஸ்...**

# இலங்கை இளையோரையும் தொற்றிய தோல்வி



தேசிய அணியின் நிலைமை இளையோர் அணிக்கு தொற்றிவிட்டது. 19 வயதுக்கு உட்பட்ட ஆசிய கிண்ணத் தொடரில் ஆடுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் சென்ற இலங்கை இளையோர் அணி குழு நிலை போட்டிகளுடனேயே வெளியேறிவிட்டது.

தொடரின் ஆரம்பப் போட்டியில் ஜப்பான் அணியை வீழ்த்தியதில் கூறுவதற்கு பெரிதாக ஒன்றுமில்லை. கத்துக் குட்டி ஜப்பான் இப்போது தான் கிரிக்கெட்டில் தவழ ஆரம்பித்திருக்கிறது. ஆனால் ஐக்கிய அரபு இராச்சியத்திடம் 2 விக்கெட்டுகளால் தோற்ற இலங்கை பங்களாதேஷிடமும் தோற்று வெளியேறியது.

இலங்கை இளையோர் ஆசிய கிண்ணத்தை வெல்லாதபோதும் ஐந்து தடவைகள் இறுதிப் போட்டி வரை முன்னேறி இருக்கிறது. 2018ஆம் ஆண்டு இறுதிப் போட்டிவரை முன்னேறிய தொடரில் ஆடிய துனித் வெள்ளாலகே, நுவனிந்து பெர்னாண்டோ போன்ற வீரர்கள் தேசிய அணிக்குக் கூட தகுதி பெற்றார்கள்.

தேசிய அணிக்கான கட்டமைப்புக்கு 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அடிப்படையானது. தேசிய அணியில் ஆடும் பெரும்பாலான வீரர்கள் இளையோர் கிரிக்கெட்டில் இருந்து இலங்கை அணிக்கு முன்னேறியவர்கள் தான். இளையோர் கிரிக்கெட் ஆட்டங்காண்பதென்பது இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் ஒன்று.

இளையோர் ஆசிய கிண்ணத்தில் இலங்கை சோபிக்காததன் காரணம் என்னவென்று உறுதியாகச் சொல்லிவிட முடியாது. என்றபோதும் ஆடிய போட்டிகளைப் பார்க்கும்போது அணியின் துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சு அனைத்துமே பலவீனமாக இருந்தது.

ஜப்பானுடனான போட்டியை தவிர்த்துப் பார்த்தால் மத்திய வரிசையில் தினுர களுபஹன மாத்திரம் அரைச்சதம் ஒன்றை பெற்றிருந்தார்.

பந்துவீச்சிலும் எவரும் ஆதிக்கம் செலுத்தவில்லை.

என்றாலும் இந்த அணிக்கு ஆசிய கிண்ணத் தொடருக்கு முன்னர் போதிய ஆட்டங்கள் வழங்கப்படாததும் அவர்கள் அணி ஒன்றாக திறமையை வெளிப்படுத்தத் தவறியதற்குக் காரணமாக இருக்கக் கூடும். அதற்கு அப்பால் அணித் தேர்வு பற்றி பெரிய கேள்வி எழுவதை மறுக்க முடியாது.

இந்த 19 வயதுக்கு உட்பட்ட அணியை பார்த்தோம் என்றால் 15 பேர் குழாத்தில் இருக்கும் வீரர்கள் 10 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். அதிலும் எட்டுப் பேர் கொழும்பை மையப்படுத்திய பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள்.

எஞ்சிய ஐந்து பேரையும் பார்த்தால் காலியில் இருந்து இரு வீரர்கள் மற்றும் அம்பலாங்கொடையில் இருந்து ஒரு வீரர் என தென் மாகாணத்தில் இருந்து மூன்று வீரர்கள் உள்ளனர். மற்ற இருவரும் கண்டியைச் சேர்ந்தவர்கள். அவர்களை மத்திய மாகாணம் என வகைப்படுத்தினாலும் ஒட்டு மொத்த இலங்கைக்குமான அணித் தேர்வு மூன்றே மூன்று மாகாணத்தை மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இதனையும் சுருக்கி சொல்வதாக இருந்தால் இலங்கை கிரிக்கெட் என்பது கொழும்பு, காலி, கண்டி என்ற மூன்று நகருக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பது இந்த அணித் தேர்வில் தெரிகிறது. இதற்கு தேர்வாளர்களை மாத்திரம் குற்றம் செல்லவும் முடியாது. இலங்கையின் ஒட்டுமாத்த கிரிக்கெட் கட்டமைப்பும் இப்படித் தான் இருக்கிறது.

இத்தனைக்கும் நாடு முழுவதும் பாடசாலைகளில் கிரிக்கெட் விளையாட்டு இருக்கிறது. வடக்கு, கிழக்கு உட்பட பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் ‘பிக் மெட்ச்’ கிரிக்கெட் போட்டிகளே இதற்கு நல்ல உதாரணம்.

என்றாலும் திறமையில் பஞ்மோ அல்லது திறமையை தேடுவதில் பஞ்சமோ தெரியவில்லை இளையோர் அணியின் தேர்வு மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகவே தெரிகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தோற்ற இலங்கை இளையோர் அணி அடுத்து தென்னாபிரிக்காவில் 19 வயதுக்கு உட்பட உலகக் கிண்ணப் போட்டியில் களமிறங்கப்போகிறது. எதிர்வரும் ஜனவரி 24 தொடக்கம் பெப்ரவரி 11 ஆம் திகதி வரை நடைபெறும் இளையோர் உலகக் கிண்ணத்தில் சி குழுவில் அவுஸ்திரேலியா, நமீபியா மற்றும் சிம்பாப்வேயுடன் இலங்கை அணி இடம்பெற்றிருக்கிறது. தொடரின் சுப்பர் சிக்ஸ் சுற்றுக்கு முன்னேற இதில் குறைந்தது இரண்டு போட்டியிலாவது வெற்றி பெற வேண்டும்.

இந்த நிலையில் இந்த குறுகிய காலத்திற்கு அதிரடி மாற்றங்கள் செய்ய முடியாது. என்றாலும், பாடசாலை கிரிக்கெட் கட்டமைப்பை மாற்றுவது, அணித் தேர்வில் தேசிய கொள்கை ஒன்றை ஏற்படுத்துவது இலங்கையின் எதிர்கால கிரிக்கெட்டுக்கு உகந்ததாகும்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2023 டிசம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை



## அரச உயர் விருது பெறும்
## அசகாய ஆளுமை
# கலைஞர் கலைச்செல்வன்



# குப்பைகளாலான மர்ம வீடு

பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்



1947 மார்ச் 21 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் ஹார்லம் பகுதியிலே ஐந்தாவது ஒழுங்கையில் இருக்கும் வீட்டில் இருந்து மோசமான வாடை வருவதாக பொலிஸாருக்கு அநாமதேய அழைப்பு ஒன்று வந்தது. அதன்படி அந்த வீட்டுக்குப் போய் கதவைத்தட்டினால் யாரும் பதிலளிப்பதாக இல்லை.

அந்த மூன்று மாடி கட்டடத்தின் முன் கதவைத் திறந்து உள்ளே போக முடியாத அளவுக்கு பொருட்கள் நிரம்பி இருந்தன. கடைசியில் இரண்டாவது மாடியின் ஜன்னலை உடைத்தே உள்ளே நுழைய முடிந்தது. அதேபோன்று கூரையில் ஓட்டை போட்டும் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

உள்ளே போய் பார்த்தால் வீடு முழுவதும் பொருட்கள், வீதியில் கிடக்கும் குப்பைகள், பயன்படுத்த முடியாத உடைந்த பொருட்கள், பழைய சாமான்கள் என்று உட் கூரையை முட்டும் அளவுக்கு வீட்டுக்குள் பொருட்கள் நிரம்பிக் கிடந்தன. அந்த பொருட்களுக்கு இடையே செல்வதற்கு சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

அந்த வீட்டிலே ஹோமர் லஸ்க் கொலியர் மற்றும் லங்லி வேக்மன் கொலியர் ஆகிய இரு சகோதரர்களே வசித்து வந்தார்கள். அந்த மர்ம வீட்டிலே எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பது பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

இதில் லங்லி கொலியர் பொறியியல் பட்டம் பெற்றவர், வீட்டில் குவித்து வைத்திருக்கும் சேகரிப்புகளை யாராவது திருடுவார்கள் என்று பயந்தவர்கள். எனவே வீட்டின் கதவுகள் மற்றும் அனைத்து இடங்களிலும் பொறிகளை வைத்திருந்தார்.

இந்தக் குப்பைகளுக்கு இடையே தேடுதலில் ஈடுபட்ட பொலிஸார் கடைசியில் ஹோமர் கொலியரின் உடலைக் கண்டுபிடித்தார்கள். அவர் கண்டுபிடிக்கப்படுவதற்கு பத்து மணி நேரத்திற்கு முன்னர்தான் உயிரிழந்திருக்கிறார். பட்டினி மற்றும் மாரடைப்பு அவரது மரணத்திற்குக் காரணம்.

கண்பார்வையை இழந்த ஹோமர் வெளியே வருவதில்லை, வீட்டுக்குள்ளேயே... இல்லை என்றால் அந்த குப்பைகளுக்கு இடையே... வாழ்ந்திருக்கிறார். ஆனால் சகோதரர் லங்லி எங்கே என்று தெரியவில்லை. ஆரம்பத்தில் லங்லி தனது சகோதரரை கொன்றுவிட்டு தப்பியோடிவிட்டார் என்றே பொலிஸார் நினைத்தார்கள்.

மறுபுறம் வீட்டுக்குள் இருக்கும் பொருட்களை அதிகாரிகள் அகற்ற ஆரம்பித்தார்கள். ஆனால் அது இலகுவானதாக இருக்கவில்லை. வீட்டுக்குள் சுமார் 120 தொன் குப்பைகள் இருந்தன.

அதிலே 14 பெரிய பியானோக்கள், பழைய மின்பிறப்பாக்கிக் கருவிகள், டீ. போர்ட் கார் வண்டியின் பாகங்கள், 3,000க்கும் அதிகமான புத்தகங்கள்,



கவர்ச்சி பெண்களின் புகைப்படங்கள், ஆயிரக்கணக்கான வெற்று போத்தல்கள் மற்றும் கேன்கள், பொம்மைகளும் இருந்தன.

கிட்டத்தட்ட 15 நாட்கள் குப்பைகளை அகற்றிக் கொண்டிருந்த அதிகாரிகளுக்கு சகோதரர் லங்லியின் உடல் கிடைத்தது. அதாவது அவரது சகோதரரின் உடல் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இருந்து வெறுமனே 10 அடி தூரத்தில்தான் லங்லியின் உடல் இருந்தது. என்றாலும் அதனை கண்டுபிடிக்க அரை மாதம் சென்றது என்றால் வீட்டுக்குள் எவ்வளவு குப்பை இருந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

சூட்கேஸ் பெட்டி ஒன்றுக்குக் கீழ் மூடப்பட்ட நிலையிலேயே லங்லியின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று இரும்புப் பெட்டிகள் மற்றும் செய்திப் பத்திரிகைகளை பிணைத்த பொறி ஒன்றில் சிக்கியே லங்லி உயிரிழந்திருக்கிறார். அதாவது, அவர் வைத்த பொறியிலேயே அவர் மாட்டிக் கொண்டிருக்கிறார்.

அந்த மர்ம வீடு அவர்கள் உயிரிழந்து சில காலத்துக்குள்ளேயே தரைமட்டமாக்கப்பட்டது. அங்கே இப்போது சிறிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டு அந்த சகோரர்களின் நினைவாக கொலியர் சகோதரர் பூங்கா என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

# இந்த ஓவியத்தின் விலை தெரியுமா?



இந்தப் படத்தில் இருப்பது பிரபலமான ஓவியம் ஒன்று. தீட்டியவர் அமெரிக்க ஓவியரான மார்க் ரொத்கோ. 1960களில் முன்னணி ஓவியராக இருந்த அவர் 1970களில் தற்கொலை செய்து கொண்டார். அவரது ஓவியங்கள் இப்படித்தான் வெறுமனே நிறங்கள் மாத்திரம்தான் இருக்கும். கேட்டால் புலமையாளர்களால் ஆயிரத்தெட்டு வியாக்கியானங்கள் சொல்லப்படுகின்றன.

இந்தப் படத்தில் இருக்கும் ஓவியத்தைப் பார்த்தால் இந்த வியாக்கியானங்களுக்கு அப்பால் சரியாக உக்ரைன் நாட்டு கொடிபோல் இருக்கிறது. இதனால் ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பின் ஓவியத்தின் மௌசு அதிகரித்து விட்டது.

இதுவல்ல செய்தி, 2015 ஆம் ஆண்டு நியூயோர்க்கில் உள்ள சௌதபீஸ் ஏலத்தில் இந்த ஓவியம் 46.5 மில்லியன் டொலர்களுக்கு விலைபோனது என்றால் நம்புவீர்களா!

# யூதக் குழந்தையிடம் ஏமாந்த நாஜிக்கள்

1935 இல் நாஜிக்கள் குழந்தைகளின் புகைப்படத்திற்கான போட்டி ஒன்றை வைத்தனர். அதாவது அழகான அரிய குழந்தையை தேர்வு செய்வதற்கே அந்தப் போட்டி நடத்தப்பட்டது. போட்டிக்கு ஏகப்பட்ட புகைப்படங்கள் வந்தன. இதில் வெற்றிபெற்ற புகைப்படத்தை நாஜிக்களின் சக்திமிக்க ஒருவரான கொள்கை பரப்பு அமைச்சர் ஜோசப் கோயபல்ஸ் தேர்வு செய்தார். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட குழந்தையின் பெயர் ஹசி லெவின்சன் டெட்டி.






அந்தக் குழந்தையின் புகைப்படம் நாஜிக்களின் பிரசாரங்களில் பரவலாக பயன்படுத்தப்பட்டது. அதாவது நாஜிக்களின் பத்திரிகைகள், சுவரொட்டிகள், தபால் அட்டைகள் எல்லாவற்றிலும் இந்தக் குழுந்தையின் புகைப்படத்தைப் பார்க்கலாம்.

உண்மை என்னவென்றால் அந்தக் குழுந்தை ஒரு யூத இனத்தைச் சேர்ந்த குழந்தை. நாஜிக்களை கேலி செய்வதற்காகவே அந்தப் புகைப்படத்தை அனுப்பியதாக படப்பிடிப்பாளர் குறிப்பிட்டார்.

அந்தப் புகைப்படத்தில் இருந்த குழந்தை 2014 ஆம் ஆண்டு ஜெர்மனி மொழியின் பில்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், “இப்போது கூட அதனை நினைத்தால் எனக்கு சிரிப்பு வருகிறது. ஆனால் நான் யார் என்று நாஜிக்களுக்கு தெரிந்திருந்தால் நான் இப்போது உயிருடன் இருந்திருக்க மாட்டேன்” என்றார்.



நீதிபதி: நீ செய்த குற்றத்துக்காக உனக்கு தூக்கு தண்டனை விதிக்கிறேன்.
குற்றவாளி: சரிங்க ஐயா, எவ்வளவு வெயிட்டை தூக்கணும்.



ஆசிரியர்: உலகிற்கு முக்கியம் சூரியனா சந்திரனா?
மாணவன்: சந்திரந்தான் சார்!
ஆசிரியர்: எப்படி?
மாணவன்: சார் பகல்ல வெளிச்சம் இருக்கும்போதுதான் சூரியன் ஒளி கொடுக்குது. ஆனால் சந்திரன் ராத்திரில வெளிச்சம் இல்லாத போது ஒளி கொடுக்குதுல்ல

ஆசிரியர் : அந்த பொண்ணு 98 மார்க் எடுத்துட்டு 2 மார்க் எப்படி போச்சுன்னு அழுது கிட்டு இருக்கு.. நீ 12 மார்க் எடுத்துட்டு எப்படி டா சிரிச்சு கிட்டு இருக்க?

மாணவன்: எப்படி அந்த 12 மார்க் வந்ததுன்னு பார்த்து கிட்டு இருக்கேன் சார்.





உலகத்திலேயே மிகப்பெரிய ஆங்கில வார்த்தை எது தெரியுமா?
தெரியாது
Smiles
எப்படி?
முதல் எஸ்சுக்கும் கடைசி எஸ்சுக்கும் ஒரு மைல் தூரம் இருக்கு. அதான்.



பெண் 1: நான் ரசம் வைச்சதும் என் புருஷன் சாம்பார் கேட்டார்
பெண் 1: அதுல 4 கத்திரிக்காயை வெட்டிபோட்டேன். சாம்பார் ரெடி ஆகிருச்ச்சு..



மனைவி: என்னங்க.. எங்க ஆபிஸ்ல இன்னைக்கு உங்களை விசாரிச்சாங்க..
கணவன்: என்னனு விசாரிச்சங்க மா
மனைவி: தினமும் ஒரு வயசானவர் கொண்டு வந்து விடுறாரே அவர்தான் உங்க அப்பாவான்னு..



நோயாளி – ஏன் டாக்டர், இதைக் கொடுத்தபோது சுகர் மாத்திரைன்னுதானே சொன்னீங்க
டாக்டர் – ஆமா.. சொன்னேன்.. அதுக்கென்ன இப்போ
நோயாளி – இல்ல டாக்டர்.. வீட்டுக்குப் போய் சாப்பிட்டு பார்த்தேன்.. இனிப்பாவே இல்லையே.. கசந்துச்சே.. அதான் வந்தேன்

மனைவி: பணம் வந்தா கூடவே கஷ்டமும் வந்துடும்.
கணவன் : நான் வரதட்சணை வாங்கி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டதைத் தானே சொல்றே?



"உங்க மனைவிய செல்லமா எப்படி கூப்பிடுவிங்க?"
"கூகிள் ன்னு"
"ஏன்?"
"நான் எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சுடுவா"



தோழி 1 : என்னடி இது அனியாயமா இருக்கு, உன் வீட்டு வேலைக்காரி லீவு போடறா அன்னைக்கி உன் வீட்டுக்காரரும் லீவு போடறாரா?
தோழி 2 : சும்மா இருடி. நான்தான் அவரை லீவு போட வைப்பேன்,என்னா வேலைக்காரி விட்டுப் போன வேலையை யாரு செய்றது



நண்பர் 1: நடிகருக்கும் மருத்துவருக்கும் என்ன ஒற்றுமை ?

நண்பர் 2: தெரியலை யேடா?

நண்பர் 1:இரண்டு பேருமே ஏதோ ஒரு தியேட்டர்ல யாரையாவது போட்டு அறுத்து கிட்டு இருப்பாங்க.





டீச்சர் : ஏன் லேட்?
சிறுவன் : வெளில ஒரு போர்டு போட்டிருந்தது அதான் லேட்
டீச்சர் : போர்டுக்கும் லேட்டா வர்றதுக்கும் என்ன சம்மந்தம்?
சிறுவன் : பள்ளிப்பகுதி மெதுவாகச் செல்லவும்னு போர்டு வச்சுருந்தாங்க.

# 'அக்னி' திரைப்படம்



இலங்கையில் நிலவிய யுத்தத்தை வெற்றி கொண்டு 18 மே 2024 மே 18 ஆம் திகதி 15 வருடங்கள் பூர்த்தியாகிறது.

இதனையொட்டி இந்தியாவும் இலங்கையும் இணைந்து 'அக்னி' என்ற பெயரில் திரைப்படமொன்றை தயாரிக்கவுள்ளது.


இலங்கையில் யுத்தம் தொடர்பாக பல திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டாலும் இந்தத் திரைப்படம் படமாக்கப்படுவது யுத்தத்தை வெற்றியை நோக்கி கொண்டு சென்ற அரச தலைவர் ஒருவரின் கண்ணோட்டத்தில் ஆகும்.

இந்த வெற்றிக்கு அனைத்து நிறுவனங்களும் உரிமை கூறினாலும் இதுவரை அதிகமாக கேட்கப்படாத உண்மையான கதையை தெரிந்தவர் இலங்கை அரசியலமைப்புக்கு அமைய அனைத்து சக்திகளுக்கும் கட்டளையிடும் தலைவரான அரச தலைவராவர். இத்திரைப்படத்தின் தயாரிப்புக் குழுவினர் அவர் பற்றி அன்றைய அரச தலைவர் மற்றும் முப்படைகளின் கட்டளையிடும் தலைவர் மஹிந்த ராஜபக்சவுடன் கலந்துரையாடினார்கள். அதுபோல் மஹிந்த ராஜபக்சவின் வாழ்க்கை சரிதம், யுத்தத்தின் உண்மை சம்பவங்கள், சூழ்ச்சி ,உள்ளூர் மற்றும் சர்வதேச அரசியல் பிரச்சினைகள், காதல் கதை, சண்டைகள் உள்ளிட்ட அனைத்தும் இந்த திரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்உள்ளூர் தயாரிப்பாளர் *Mohan Perera*. இந்தத் திரைப்படத்தின் இந்திய தயாரிப்பாளர் *Saumya R Pradahn*. இவர்கள், இதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுவதோடு UAE யின் தயாரிப்பாளரும் இந்த மெகா தயாரிப்புடன் இணைந்து இதனை வெற்றி பெறச் செய்ய திட்டமிட்டுள்ளனர். அனைத்து இந்திய திரைப்பட சங்கத்தின் தலைவர் பி எச் திவாரி திரைப்படத்தின் இணை இயக்குனராவர்.



சர்வதேச மனித உரிமைகள் தினம் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகர்த்த மண்டபத்தில் அண்மையில் கொண்டாடப்பட்டது. நிகழ்வுக்கு பிரதம அதிதியாக போக்குவரத்து மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன கலந்து கொண்டதுடன் முன்னாள் அமைச்சர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அருட் கலாநிதி S.சந்துரு பெர்ணான்டோ கலந்து சிறப்பித்ததுடன், உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடத்தின் சர்வதேச தலைவர் டாக்டர் எஸ்.எம்.ரஷ்மீ ரூமியினால் அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோவுக்கு இந்திய தேசிய மக்கள் பேரவை மன்றத்தின் இலங்கைக்கான தூதுவராக நியமனம் வழங்கப்பட்டதுடன் அவர், Dr. ஆப்ரகாம் லிங்கன் விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.





உலகத் தமிழ் கலை பண்பாட்டு கலைக்கூடம்
World Tamil Arts & Cultural Academy
Head Office: 197, State Route, No.18, South East Brunswick, New Jersey - 08816, United States of America
INTERNATIONAL HUMAN RIGHTS DAY
DR.ABRAHAM LINGAN AWARD - 2023
REV.DR.S.CHANDRU FERNANDO
NATIONAL PEOPLE FORUM OF INDIA - SRI LANKA AMBASSADOR
For his/ her Exceptional Contributions Dedication, Education & Social Services This Certificate Presented on 10.12.2023 Sunday @ 4.00pm
Place : BMICH International Hall, Colombo, Srilanka
FOUNDER & INTERNATIONAL PRESIDENT

# ஹரித்ரா செந்தில்குமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம்

நாட்டிய கலாமந்திர் இயக்குநர் கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியும், சண்முகம் செந்தில்குமார், சுபாஷினி செந்தில்குமார் தம்பதியரின் புதல்வியுமான செல்வி ஹரித்ரா செந்தில்குமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம் பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் கலையரங்கத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நடனக் கலைஞரும், நடன அமைப்பாளரும், யோகா பயிற்றுவிப்பாளருமான டி.கே.திருச்செல்வம் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதிகளாக பிஷப்ஸ் கல்லூரி அதிபர் திருமதி செமாலி குணதிலக ஹேரத் மற்றும் உப அதிபர் கிருஷ்ணிகா கல்படகே ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.




இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதியடைந்த மட்/மம/ஓட்டமாவடி ஸாஹிறா வித்தியாலய மாணவர்களின் குழுப்படம். இடமிருந்து வலமாக முன்வரிசை எம்எப். சம்ரிதா (157), ஏ.எச்எம் ஜெஸீம் (ஆசிரியர்), எம்ஏ. அபூதாஹிர் (அதிபர்), எஸ்.ஏ.எம். றமீஸ் (ஆசிரியர்) மற்றும் எம்என்ஏ. ஆகிப்(149). பின்வரிசை இடமிருந்து வலமாக யூகே. பரீராஹானி (152), ஏஆர். ரபாஸைனப் (161), ஆர்எப். றீமா(152),எம்ஜேஎப். அய்னிஇஷால் (152), எம்ஜ.அம்ரிசராப் (152), எம்வி. அப்துல்லாஹ்(154), என். பர்ஹத்நூரி (168), எம் ஆர்எம். உசைத்(156), (ஏறாவூர்நிருபர்நாஸர்)

# கண்டியில் சங்கவி பிலிம்ஸ் உமா அறக்கட்டளையின் கலாவிபூஷண விருது விழா




































தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI | தினகரன் THINAKARAN

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் சங்கவி பிலிம்ஸ் நிறுவனமும் உமா அறக்கட்டளையும் கண்டியில் நடத்திய கலா விபூஷணம் விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது. வாழும் போதே வாழ்த்தும் இவ்விழாவில் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா கலந்து கொண்டார். இதில் 73 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ், உமா அறக்கட்டளையின் தலைவர் தேசபந்து எம். தீபன் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.





# "நாடகக் கீர்த்தி" விருது பெறும் கலைஞர் கலைச்செல்வன்

கலைஞானி கலைச்செல்வன் தனது 81வது அகவையை இவ்வாண்டில் (2023) நிறைவு செய்து இருக்கிறார். இதில் 65 ஆண்டுகளை கலைக்காகவே அர்ப்பணித்துள்ளார்

தமிழ்நாட்டின் யதார்த்த நாடகங்களின் முன்னோடியான யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளையின் சீடர்களின் ஒருவரான எம். என் இராஜரத்தினம் பிள்ளை இலங்கை வந்து 1959இல் கொழும்பு வை. எம். பி. ஏ. மண்டபத்தில் இளவரசன் என்ற பெயரில் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார். பிரபல நாவலாசிரியரான அரு. இராமநாதன் எழுதிய "அசோகன் காதலி" என்ற நாவலைத் தழுவி எழுதப்பட்ட "இளவரசன்" மூலம் தமிழ் நாடக அரங்கில் பாதம் பதித்த கலைஞர் கலைச்செல்வன் இன்று ஒரு கலைச்சக்கரவர்த்தியாகவே பரிமளிக்கிறார்.

1960இல் "மரணத்தின் மடியிலே" என்ற நாடகத்தை கலைச்செல்வனைக் கொண்டு எழுதச் சொல்லி, பிரதான பாத்திரத்தில் நடிக்கச்செய்து அந்த நாடகத்தை இயக்கினார் கலைஞரின் தந்தையான முஹம்மது மொஹிதீன். இதுதான் கலைஞர் எழுதிய முதல் நாடகம்.

இதுவரை குறுநாடகம், முழு நீள நாடகம் என 70க்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேறி நடித்துள்ளார்.

1963இல் சம்பவங்கள் அனைத்தும் ஒரு "செட்"டிலேயே நடைபெறுகின்ற, ONE SET PLAY என்ற முறைமையில் "புயலில் ஒரு மலர்" என்ற நாடகத்தை எழுதித் தயாரித்து நெறியாள்கை செய்தார். அதனைத் தொடர்ந்து தனது கலை முயற்சிகளை தலைநகருக்கு வெளியேயும் அதாவது வடக்கு, கிழக்கு, மலையகம் என முன்னெடுத்தார்.



அரை நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட இலங்கை நாடக வரலாற்றுடன் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டவர் கலைஞர் கலைச்செல்வன். 'முழுமை" என்பது நாடகப் பரிமானங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய கருத்தாக்கம். நடிப்பு, நாடக எழுத்துரு, நெறியாள்கை, ஒப்பனை, அரங்க நிர்மாணம், இசை, ஒலிஒளி, நாடகத் தயாரிப்பு என்ற துறைகளில் மட்டுமின்றி, நாடகத் திறனாய்வாளர், வளவாளர் என அனைத்தையும் உள்ளடக்கிய கலை ஆழங்களோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்.



சிங்கள நாடக அரங்கில் விஸ்வரூப தரிசனம் தந்த திருவாளர்கள் ஏ. ஜே. குணவர்தன, தம்மா ஜாகொட, சுகதபால டி. சில்வா ஆகியோருடனான தொடர்புகளால் நவீன நாடகத்தின் வளர்ச்சியின் செயற்பாடுகளை ஆளுமையுடன் அவரால் முன்னெடுக்க முடிந்தது.

அதனால்தான் 2006ஆம் ஆண்டு நடைபெற்ற கலாசார திணைக்களத்தின் பொன்விழாவில், இலங்கை கலாசாரத்தின் அடையாளத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், மரபுசார் நாடகக் கலையை பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு கையளிக்கும் முறைமையில் பாரிய பங்களிப்பை செய்து வருகின்றமைக்காக கௌரவ பொன்விழா விருதும் கலைஞர் கலைச்செல்வனுக்கு வழங்கப்பட்டது.

தமிழ் நாடக வளர்ச்சியின் இடைவெளிகளையும் பின்னடைவுகளையும், உலக நாடக வளர்ச்சி, சிங்கள நாடக வளர்ச்சி ஆகியவற்றுடன் ஒப்பியல் திறனாய்வு செய்து விளக்குபவர் விளங்குபவர். அத்தகைய மதிப்பீடுகளினூடே அவரது கவன ஈர்ப்பை பெற்றுக்கொண்ட ஒருதுறையாக குறுநாடகத்துறை அமைந்துள்ளது.

'கலைஞர் கலைச்செல்வனின் குறுநாடகங்கள்" என்ற நாடக நூலே, நம் நாட்டிலும் சரி, தமிழ்நாட்டிலும் சரி வெளிவந்த முதல் குறு நாடகநூல் என்பது குறிப்பிடத்தக்கது.

"அரங்கு" என்பது பொழுது போக்குவதற்கான கடற்கரை மணல்வெளி அல்ல பொழுது புலர்வதற்கான கிழக்குச் சமவெளி என்பதை புரிந்துகொண்டு நீண்ட நெடும் காலமாக கலைத்துறையில் வலம் வரும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா கலைஞர் இவர்.

"ஒரு கலைஞனின் கதை, "மனித தர்மம், கலைஞர் கலைச்செல்வனின் குறுநாடகங்கள் ஆகிய மூன்று நாடக நூல்களுக்கும் அரச சாகித்திய விருதினை பெற்றுக்கொண்ட முதல் தலைநகர் கலைஞருமாவார்.



சாகித்திய விருது மாத்திரமின்றி, யாழ் இலக்கியப் பேரவை மட்./ எழுத்தாளர் தொன்மை மையம், திருச்சி சின்னப்ப பாரதி அறக்கட்டளை நிறுவனம் ஆகியவற்றின் விருதுகளையும் பணப் பரிசில்களையும் பெற்றுக்கொண்டார்.

வானொலி நாடகம், மேடை நாடகம் தொலைக்காட்சி நாடகம் சினிமா வில்லிசை இலக்கியம் போன்ற

**(07 ஆம் பக்க பார்க்க)**



# மட்/மம/ஜாமியுழ்ழாபிரீன் வித்தியாலயம்—காத்தான்குடி

## தரம்—5 புலமைப் பூக்கள்—2023



இவ்வாண்டுநடைபெற்றதரம்5 புலமைப்பரிசில்பரீட்சையில்காத்தான்குடி மட்/மம/ஜாமியுழ்ழாபிரீன்வித்தியாலயத்தில்தகுதியடைந்த மாணவர்களின் குழுப்படம்.

**இடமிருந்துவலமாக (முன்வரிசை)** திருமதி ஜேஎம்.மஸ்ஊத் (ஆசிரியை), திருமதிஎப்எம்எம். அறபாத் (ஆசிரியை), திருமதிஎம் எம்பிர்தவ்ஸீ (பிரதிஅதிபர்), ஏ.எல் எம். பாறூக் (அதிபர்), எஸ்எம்எம். அமீர் (வலயக்கல்விப்பணிப்பாளர்), ஏஜீஎம்.ஹக்கீம் (பிரதேசக் கல்விப்பணிப்பாளர்).

**இடமிருந்துவலமாக (பின்வரிசை)** எம்ஜஎம். ஸயான் (158),எம்எப். உமர்அய்யாஷ் (161),எம்ஏ. அயாஷ் அப்துல்லாஹ் (169),எம்எப். ஸபியுர் றஹ்மான் (163), எம்ஆர். ஆயிஷா றஹா (155),எம்எல்எப். ஹானியா (149),எஸ்ஏ. சபிய்யா (147) மற்றும்ஏஎம்எஸ். மதீஹா (147)

**(ஏறாவூர்நிருபர்நாஸர்)**

# மட்/மம/ ஹிழுறிய்யா வித்தியாலயம்—காத்தான்குடி

## தரம்—5 புலமைப் பூக்கள்—2023

இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் தகுதியடைந்த மாணவர்களின்ன் குழுப்படம். **முன்வரிசை (இடமிருந்துவலமாக)** திருமதிஆர்.பி.ஏ. ஷாகிர் (ஆசிரியை), திருமதிஎஸ்.ஆர். ஆதம்லெப்பை (பகுதித்தலைவர்), எம்.எம்.ஏ. சப்றி (பொறியியலாளர்), எஸ்.ஐ. யஸீர்அறபாத் (அதிபர்),எஸ்.எம்.எம். அமீர் (வலயக்கல்விப்பணிப்பாளர்),எம்.ஏ.சீ. எம். நௌபல் (பொறியியலாளர்),திருமதி எஸ்.ஏ.என்.எம். ஷாபி (பிரதிஅதிபர்) மற்றும் திருமதிஆர். தாஜுதீன் (ஆசிரியை). **இரண்டாம்வரிசை (இடமிருந்துவலமாக)** எம்.ஏ. ஜம்லாஸைனப் (155),எம்.என்;. றிஸாஹாஜர் (145),எப்.ஏ. பாஸத்ஹிமா (147),எம்.எப். றயூப்மிஷ்அல் (145),வை.ஏ. ஸீனத்சமா (149),ஏ.ஏ. ஆதிகாஸீனத் (150),எம்.என். ஹதீஜாஸீனத் (154) மற்றும்எம்.எஸ். பாத்திமாஸைனப் (148) **மூன்றாம்வரிசை (இடமிருந்துவலமாக)** எம்.ஐ. உமர் (156), எம்.ஏ. முஆத் (158), எம்.எஸ். உமர்சஹ்றாம் (161), கே.எம். மாஸின்நாஜிஹ் (153), ஏ.எஸ். உமர் மிஷ்அல் (154),எம்.ஏ.எஸ். சுலைமான்யுஸ்ரி (160),ஏ.எஸ். யூசுப்ஸறாப் (147),ரீ. உமர்ஆஸிப் (160),எப். மஹ்திஹஸன் (166),எம். ஏ.அப்துல்லாஹ் (148),எம்.எப். பாதிக்ஜாஸி (148),எம்.எப். அப்துல்லாஹ் (146) மற்றும் எம்.பி. சுரைப்அஹமத் (172).



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

**(06 ஆம் பக்க தொடர்ச்சி)**

துறைகளிலும் தன் ஆற்றல்களை அடையாளப்படுத்தி இருக்கும் இம்மூத்த கலைஞர், இளைஞர் சேவைகள் மன்றத்தின் "டிப்ளோமா" சான்றிதழுக்கான அரங்கியல் செயல்முறைப் பயிற்சி ப்பட்டறையில் வளவாளராக இருந்து இளங்கலைஞர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதில் மும்முரமாக இருப்பவர்.



கொழும்பு தலைநகரிலே முன்னணிக் கலைஞர்களாகத் திகழ்ந்த பலரும் இக்கலைஞானியின் பாசறையில் கலை பயின்றவர்கள். அவர்களிலே நாடகக்கீர்த்தி எம். எம். ஏ. லத்தீப், கலைவேந்தன் ஸ்ரீசங்கர், கலாபூசணம் எம்.ஜி. டீன் குமார், நடிகமணி கே. ஏ. ஜவாஹர், சலோமி செல்லையா, சீனிவாசன் ஸ்ரீஹரன், எஸ். சத்தியன், கே. எம். எம். நஸீர், எஸ். மோகன்ராஜ், பிரேம் நஸ்லி, கே. மோகன்குமார், கே. வீ. எஸ். மணியம், ஆர், பி, மகாராஜா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அரச தேசிய நாடக விழாக்களில் கூடுதலாக பங்கேற்று அதிகமான விருதுகளை வென்றுள்ளமை கலைஞர் கலைச் செல்வனின் அசகாய ஆளுமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். 1969இல் லேக்ஹவுஸ் நிறுவனம் நடத்திய முதல் தேசிய நாடகவிழாவில் இருபத்தாறு வயது இளங்கலைஞரான கலைச் செல்வன் "மனிததர்மம்" நாடகத்தை அறங்கேற்றி 06 விருதுகளை பெற்றுக் கொண்டார். அதேபோல் 2005ம் ஆண்டு கலாசாரத் திணைக்களம் நடத்திய அரச நாடகவிழாவிலும் "ஓதெல்லோ" எனும் தழுவலாக்க நாடகத்தை அறங்கேற்றி 06 விருதுகளை பெற்றுக் கொண்டார். 1978ம் ஆண்டு மத்திய வங்கி நாடக விழாவில் சிங்கள அரங்கின் சிறந்த நாடகாசிரியராக விளங்கிய சுகத பால டி. சில்வாவின் "துன்ன துனு கமுவே" நாடகத்தை தமிழில் அரங்கேற்றி சிறந்த தயாரிப்பாளருக்கான விருதையும் 1998இல் தனது சுய ஆக்கமான "ஒரு கலைஞனின் கதை" நாடகத்தின் மூலம் அரச நாடக விழாவில் சிறந்த நடிகருக்கான விருதையும் தனதாக்கிக் கொண்டார்.



இவரது அரங்க ஊழியத்தில் இன்னுமொரு பரிமாணம், அரச நாடகக் குழு உறுப்பினராக இருந்து, அரச நாடக விழா, குறுநாடகவிழா, வாழ்நாள் சாதனையாளர் விழா ஆகியவற்றை ஆரம்பித்து நடத்தியமையாகும்.

கலைஞர் கலைச்செல்வனின் சுய ஆக்கமான "சிறுக்கியும் பொறுக்கியும்" நாடகத்திற்கும், ஷேக்ஸ்பியரின் "ஒத்தெல்லோ" நாடகத்திற்கும் இடையில் பாரிய வளர்ச்சி தென்படுகிறது எனவும், அதனை ஆய்வு செய்ய வேண்டுமெனவும் கூறுகிறார் பேராசிரியர் மௌனகுரு. கலைஞானியின் "ஒரு கலைஞனின் கதை" என்கின்ற நாடகத்தை தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தின் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை ஆய்வுக்கு எடுத்துள்ளமை இவரது அரங்கியல் புலமைக்குச் சான்றாகும்.

இவரை, உச்சத்தின் உச்சிக்குக் கொண்டு சென்ற நாடகம், எழுபது நடிகர்களை நடிக்கவைத்து மேடையேற்றப்பட்ட, இயற்பண்புவாத நாடகமான "சிறுக்கியும் பொறுக்கியும்". இந்நாடகம் பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி அரங்குக்கு அரசியல் பேசக் கற்றுக் கொடுத்த நாடகம் என வர்ணித்துள்ளார்.

பிரபல விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் "மெக்ஸிம் கோர்க்கி" யின் பாணியில் அமைந்த நாடகம் என ஆங்கில நாளிதழில் பதிவு செய்துள்ளார். "சிங்களக் கலைஞர்கள் படிக்க வேண்டிய எவ்வளவோ சங்கதிகள் இந்நாடகத்தில் இருக்கின்றன" என பேராசிரியர் சுசில் சிறிவர்தன இலங்கை கலைக் கழகத்தின் "மாவத" சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

ஈழத்தின் தமிழ் அரங்க வரலாறு முழுமை பெறுவதற்கு கலைஞானி கலைஞர் கலைச்செல்வன் பற்றிய பதிவுகள் மிக முக்கியமானவை. ஏனெனில் தமிழ் கலை உலகால் நன்கு அறியப்பட்ட கலைஞர் இவர்.

கலையே வாழ்வாகவும் வாழ்வே கலையாகவும் வாழும் வாழ்நாள் சாதனையாளரான கலைஞானி கலைச் செல்வன் அவர்களுக்கு "நாடகக் கீர்த்தி" விருது வழங்கி கௌரவிப்பதே அரங்கியல் கலைஞர்கள் அனைவருக்கும் பெருமை. நம் மண்ணுக்கும் பெருமை.



தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக இருக்கிறார் நடிகை சமந்தா. தொடர்ந்து படங்களில் நடித்து வரும் இவர் தற்போது சினிமாவில் கமிட் ஆகாமல் ஓய்வெடுத்து வருகிறார். இந்நிலையில், சமந்தா அவர் தொடங்கியிருக்கும் ஒரு புதிய பயணத்தை அவரது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அறிவித்திருக்கிறார். பல பிரபலங்கள் சமந்தாவிற்கு ஆதரவாக கமெண்டுகள் பதிவிட்டு வருகிறார்கள். என்ன பண்ண போகிறார் சாம் ?நடிகை சமந்தா படங்களில் நடிப்பது மட்டுமல்லாமல் ப்ரத்யுஷா என்னும் தொண்டு நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். 2012ல் ப்ரத்யுஷா தொண்டு நிறுவனத்தை தொடங்கிய சமந்தா அதன் மூலம் பல குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான உதவிகளை செய்து இருக்கிறார். முன்னதாக சமந்தாவின் மருத்துவ நண்பர்களான மூன்று பேரை வைத்து மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ வசதிகளை செய்து கொடுத்தார். அதன் பிறகு தொடர்ந்து இந்தப் ப்ரத்யுஷா தொண்டு நிறுவனத்தின் மூலம் பல்வேறு நேரங்களில் பல்வேறு உதவிகளை செய்திருக்கிறார் இப்போதும் செய்து வருகிறார்.நடிகை சமந்தா நடிப்பது, குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான நலத்திட்ட உதவிகளை ப்ரத்யுஷா நிறுவனத்தின்மூலம் செய்து வருவது மட்டுமல்லாமல் சகி என ஒரு ஆடை நிறுவனத்தையும் தொடங்கினார். 2020ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த சகி வேர்ல்ட் என்னும் கிளாத்திங் பிராண்டுக்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு இருக்கிறது. சினிமா மட்டுமல்லாது பிசினஸிலும் ஆர்வம் கொண்ட சமந்தா இப்போது ஒரு புதிய முன்னெடுப்பை கையில் எடுத்திருக்கிறார்.

## சமந்தாவின் புதிய பயணம்

## மூன்று முடிச்சால் முட்டாளான பப்லு



பொருந்தா காதலுடன் சமூகத்தில் தன் நற்பெயரை கெடுத்துக் கொண்ட பப்லு ஒரு காலத்தில் தமிழ் சினிமாவின் ஜாம்பவான்களான எம்ஜிஆர் மற்றும் சிவாஜியின் செல்ல பிள்ளையாக இருந்துள்ளார். எம்ஜிஆரின் "நாளை நமதே" மற்றும் சிவாஜியின் தம்பியாக "நான் வாழவைப்பேன்" படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருந்தார் பப்லு.தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என தென்னிந்திய மொழிகள் அனைத்திலும் நடித்திருந்த பப்லு சினிமாவில் வாய்ப்புகள் குறைந்த நிலையில் சின்ன திரையிலும் அலை பாயுதே, வாணி ராணி, மர்ம தேசம் போன்ற தொடர்களிலும் நடித்து அரை நூற்றாண்டுக்கும் மேல் கலைத்துறையுடன் ஒன்றி வாழ்ந்து வருகிறார்இது போக ஜெயா டிவியின் சவால், விஜய்யின் ஜோடி நம்பர் ஒன் போன்ற ரியாலிட்டி ஷோக்களிலும் தலைக்காட்டிய பிரித்திவிராஜ் இயல்பிலேயே ஒரு கார் பிரியர். ஆடி இன்னோவா, மகேந்திரா என நடைமுறைக்கு தகுந்தவாறு அடிக்கடி காரை மாற்றிக் கொண்டே இருப்பாராம். இதுவரை மேற்பட்ட 100க்கும் மேற்பட்ட சொகுசு கார்களை உபயோகப்படுத்தி உள்ளார்.57 வயதை கடந்தும் இளமை தோற்றத்தோடு வலம் வரும் பிரித்விராஜ் ஒரு ஜிம் டிரைனர். மேலும் முக்கிய நகரங்களில் டீ ஷாப் வைத்து பிசினஸிலும் நல்ல லாபம் சம்பாதிக்கும் இவரின் சொத்து மதிப்பு 38 முதல் 40 கோடி வரை இருக்கலாம் என்கிறது தகவல்.கடந்த சில மாதங்களில் மட்டும் பல லட்சம் இழந்து உள்ளதாக புலம்பி வரும் பப்லு, காதலியுடன் ஆன பிரிவுக்குப் பின் மூணு முடிச்சாலே முட்டாளா ஆனேன் என்று தத்துவம் பேசி வருகிறார். காலம் கடந்த இவரின் ஞான உதயம் இவருக்கு பலன் கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.





## நயன்தாரா நிலைமை இவ்வளவு மோசமா.?

ஒரு காலகட்டத்தில் லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாராவின் படங்கள் சினிமாவில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. அவருடைய படங்கள் வசூல் ரீதியாக நல்ல லாபத்தை ஈட்டி வந்ததால் தயாரிப்பாளர்கள் நயன்தாராவின் கால்ஷீட்டுக்காக காத்திருந்தனர். இப்போது நிலைமை அப்படியே தலைகீழாக மாறிவிட்டது.அதாவது திருமணத்திற்கு பிறகு நயன்தாராவின் மார்க்கெட் சரிய தொடங்கி விட்டது. பெரிய அளவில் அவரது படங்கள் வசூல் செய்யாத நிலையில் சமீபத்தில் அன்னபூரணி என்ற படம் வெளியாகி இருந்தது. இந்த படத்திற்கு ஓரளவு நல்ல விமர்சனம் கிடைத்திருந்தாலும் சமீபத்தில் காமெடி நடிகர் சதீஷ் நடிப்பில் வெளியான கான்ஜுரிங் கண்ணப்பன் படம் நயன்தாரா படத்தின் முதல் நாள் கலெக்‌ஷனை விட அதிகம் பெற்றிருக்கிறது.

ரெஜினா, சரண்யா பொன்வண்ணன் மற்றும் ரெடின் கிங்ஸ்லி ஆகியோர் நடிப்பில் செல்வின் ராஜ் சேவியர் இயக்கத்தில் இந்த படம் உருவாகி இருந்தது. கிட்டதட்ட 80 கோடி மட்டுமே வசூல் செய்திருந்தது.

இப்போது காமெடி நடிகர்கள் ஹீரோ அவதாரம் எடுத்து வரும் நிலையில் நாய் சேகர் படத்தின் மூலம் தான் சதீஷ் கதாநாயகனாக அறிமுகமானார். இந்நிலையில் மீண்டும் கான்ஜுரிங் கண்ணப்பன் படத்தின் மூலம் தனது ஹீரோ அந்தஸ்தை நிலை நிறுத்தி இருக்கிறார். முதல் நாளே இந்த படத்திற்கு ஏகபோக வரவேற்பு கிடைத்தது.

அதன்படி இந்த படம் முதல் நாளில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடியை தாண்டி கலெக்‌ஷன் செய்துள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. சதீஷின் படத்திற்கு இப்படி ஒரு ஓபனிங்கா என பலரும் ஆச்சரியமடைந்துள்ளனர். நயன்தாராவையே இதன் மூலம் சதீஷ் ஓரம் கட்டிவிட்டார்.

'விடாமுயற்சி'



## கைவிட்ட கமலால் எச் வினோத் செய்த ராஜதந்திரம்

சதுரங்க வேட்டை, தீரன் அதிகாரம் ஒன்று போன்ற படங்களின் மூலம் தன் திறமையை நிரூபித்த ஹச் வினோத்திற்கு அஜித்துடன் ஆன கூட்டணி மேலும் பலத்தை சேர்த்தது. அஜித்துடன் நேர்கொண்ட பார்வையில் இணைந்த வினோத், நோ என்றால் நோதான் என்று அஜித்தின் பிம்பத்தை அப்படியே திரையில் காட்டினார்.இதனை தொடர்ந்து வலிமையில் இந்த கூட்டணி கொஞ்சம் வலிமை இழந்து போனாலும் தோல்விக்கான காரணத்தை அலசி ஆராய்ந்து நேர்த்தியான கதை அம்சத்துடன் மீண்டும் துணிவில் பிளாக் பஸ்டர் ஹிட் அடித்தது. இதன் பின் இருவரும் இரு வேறு பாதையில் வெவ்வேறு கூட்டணியுடன் பயணப்பட தொடங்கினர்.துணிவிற்கு பின் சிறிது பிரேக் எடுத்த அஜித் பைக்கில் சில லாங் ரைடுகளை முடித்துவிட்டு மகிழ்திருமேனியின் இயக்கத்தில் விடாமுயற்சியில் நடிக்க ஒப்புக்கொண்டார். இதற்காக விடாமுயற்சி டீம் தற்போது இரண்டாம்கட்ட படப்பிடிப்புக்காக அஜர்பைஜானை முற்றுகையிட்டுள்ளது. மேலும் வினோத்தோ கமலுடன் KH233 இல் கமிட் ஆனார்.

உலக நாயகன் கமலுக்கு சங்கரின் இந்தியன் 2, மணிரத்தினத்தின் தக்லைப் முதலான படங்களில் திட்டமிட்டபடி வேலை முடியாததால் இப்போதைய சூழ்நிலையில் உலக நாயகனுக்கு வினோத்துடன் படம் தொடங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்று ஏற்பாடாக அஜித்துடன் மீண்டும் இணையலாமா என்று அஜித்தை அணுகியுள்ளாராம். ஏற்கனவே அஜித்துடன் இணைய விக்னேஷ் சிவன், வெற்றிமாறன் மற்றும் சிறுத்தை சிவா என வரிசை கட்டி நிற்கையில் இவர்களின் கூட்டணி சாத்தியப்படுமா என்பது சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

மேலும் ஏற்கனவே தயாராகியுள்ள தீரன் அதிகாரம் 2 கதையை கார்த்தியிடம் சொல்லி இருக்கிறார். தீரன் அதிகாரம் ஒன்றின் வெற்றியை ருசித்த கார்த்தியும் இக்கதைக்கு ஆர்வமாக உள்ளதால் கார்த்தி ஓகே சொன்னதும் படப்பிடிப்பு தொடங்க திட்டமிட்டு வருகிறார் ஹச் வினோத்.



## 'எஸ்கே 21



நடிகர் சிவகார்த்திகேயன், இப்போது ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் படத்தில் நடித்து வருகிறார். அவரது 21வது படமான இதை, கமல் ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் , சோனி பிக்சர்ஸுடன் இணைந்து தயாரிக்கிறது. இதில் அவர் ராணுவ வீரராக நடிக்கிறார். அவர் ஜோடியாக சாய் பல்லவி நடித்து வருகிறார். ஜி.வி.பிரகாஷ்குமார் இசை அமைக்கிறார். இதன் படப்பிடிப்பு இந்த மாதத்துக்குள் நிறைவடையும் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், இந்தப் படத்தின் காட்சிகள், இணையத்தில் கசிந்துள்ளது. சாய்பல்லவி மற்றும் அவர் குழந்தை, சிவகார்த்திகேயனுக்காக காத்திருப்பது போல அந்தக் காட்சிகள் உள்ளன. இதற்கிடையே, இந்தக் காட்சிகளை சமூக வலைதளங்களில் பகிர வேண்டாம் என்று சிவகார்த்திகேயனின் ரசிகர்கள் கேட்டுள்ளனர்.

செக்கச்செவந்த அழகின்னாலே கிராமப்புறங்களில் பார்ப்பதற்கும் மப்பும் மந்தாரமுமாக கொப்பும் குலையுமாக இருப்பாள் என்று சொல்வார்கள். அதை நிரூபிக்கும் விதத்தில் பேரழகி என்றால் அது ராஷ்மிகா மந்தனா தான். அவர் தற்போது ரன்பீர் கபூர் உடன் இணைந்து நடித்த அனிமல் படத்தால் பல சிக்கல்களைச் சந்தித்துள்ளார். என்னன்னு பார்க்கலாமா□

கர்நாடகாவைச் சேர்ந்தவர் ராஷ்மிகா மந்தனா. 2016ல் க்ரிக் பார்ட்டி என்ற கன்னட படத்தில் நடித்து அறிமுகமானார். முதல் படத்திலேயே மாஸானார். 2018ல் கீதகோவிந்தம் என்ற தெலுங்கு படத்தில் விஜய் தேவரகொண்டாவுடன் நடித்து பிரபல நடிகையானார். தமிழில் சுல்தான் என்ற படத்தில் கார்த்தியுடன் ஜோடி சேர்ந்தார். படம் சுமாராகப் போனது.

அனிமல் படத்தில் நடித்ததே நடித்தார். ஏன்தான் இப்படி நடித்தோமோ என்று சொல்லும் அளவுக்கு அவருக்கு போதும் போதும் என்றாகிவிட்டது. எங்கு சென்றாலும் இதே பேச்சுதானாம். திரையுலகைப் பொருத்தவரை ஹீரோ ஒரு முத்தக்காட்சியில் நடித்தால் அவரை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடுவார்கள் ரசிகர்கள். அதே நேரம் ஒரு ஹீரோயின் முத்தக்காட்சியில் நடித்தால் அவரைத் தீண்டத்தகாதவர் போல பார்ப்பார்கள்.

ராஷ்மிகா மந்தனாவுக்கும் தற்போது இந்த நிலைமை தான். நேற்று வரை அடக்கம் ஒடுக்கமா இருந்த இந்த பொண்ணா இப்படி எல்லாம் நடிச்சதுன்னு தான் பார்க்குறவங்க எல்லாருமே சொல்றாங்களாம். அவங்களே இப்படி சொல்லும் போது அவரோட உறவினர்கள் மட்டும் விட்டு வைப்பார்களா என்ன?

அனிமல் படத்தில் துணிந்து நடித்து இருக்கிறார் அவர். முத்தங்கள், சூடான டயலாக்குகள், சூடான இதழ் முத்தம், படுக்கை அறைக் காட்சிகள் என அவருடைய விருந்து தான் படத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதையடுத்து ராஷ்மிகாவின் குடும்பத்தினர் அவரையே குறி வைத்து அவரது குடும்பத்தை அவமதித்து வருகிறார்களாம்.

அவரது தங்கை கூட 'இப்படி ஒரு படத்தில் எப்படி நடித்தாய்?' என கேள்வி கேட்டாராம். ராஷ்மிகாவோ இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தலைகுனிந்து எதுவும் பேசாமல் அமைதியாக வெளியே சென்றுவிட்டாராம்.

இந்த செய்தி பாலிவுட் முழுவதும் வைரலாகி வருகிறது. இந்நிலையில் ராஷ்மிகாவின் ரசிகர்களும் நீங்க தப்பு பண்ணிட்டீங்க□ பணத்துக்காக இப்படி எல்லாம் நடிச்சிருக்கக்கூடாது. கேரியர் பாழாய் போகும்னு சொல்லி வெந்த புண்ணில் வேல்பாய்ச்சி வருகிறார்களாம்.



## காசு கொடுத்தா இப்படியெல்லாம் நடிக்கணுமா?

## 68 வயது நடிகருடன் ஜோடி சேரும் த்ரிஷா

தமிழ் சினிமாவின் 20 வருடங்களுக்கும் மேலாக கதாநாயகியாக நிலைத்து நிற்கிறார் திரிஷா. இடையில் கிட்டத்தட்ட ஒரு ஐந்து வருடங்களுக்கு மேல் த்ரிஷாவின் இடம் மொத்தமாய் சரிந்து விட்டது. இனி த்ரிஷா அவ்வளவுதான், அவருடைய கேரியர் முடிந்து விட்டது என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். நயன்தாராவின் வரவு தான் இதற்கெல்லாம் காரணம் என த்ரிஷா பொங்கி போய் உட்கார்ந்து இருந்தார்.

ஒரு நடிகை ஒரு முறை மார்க்கெட்டை இழந்துவிட்டால் மறுபடியும் பிடிப்பது என்பது நடக்காத விஷயம். ஆனால் திரிஷாவுக்கு அந்த அதிசயம் நடந்தது. பொன்னியின் செல்வன் படத்தில் மணிரத்தினம் குந்தவை கேரக்டரில் திரிஷாவை நடிக்க வைத்திருந்தார். அதன் பின்னர் நடிகை திரிஷாவுக்கு சினிமாவில் மார்க்கெட் உச்சாணி கொம்புக்கு சென்று விட்டது. கிட்டத்தட்ட நயன்தாராவின் இடத்தையே பிடித்து விட்டார்.இப்போது திரிஷாவின் சம்பளம் எட்டிலிருந்து பத்து கோடியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. விஜய், அஜித் என அடுத்தடுத்து டாப் ஹீரோக்களுடன் இணைந்து விட்டார். சரி இப்படியே தன்னுடைய ஸ்டேட்டஸை நம்பர் ஒன் இடத்தில் வைத்துக் கொள்வார் என்று பார்த்தால், அடுத்தடுத்து திரிஷா எடுக்கும் முடிவுகள் எல்லாம் மீண்டும் அவரை அதல பாதாளத்திற்கு கொண்டு சென்று விடும் போல இருக்கிறது.

ஏற்கனவே த்ரிஷா நடித்த தி ரோடு படம் அவருக்கு காலை வாரிவிட்டது. இனி அஜித்துடன் அவர் இணைந்து நடிக்கும் விடாமுயற்சி படம் தான் மீண்டும் அவரை தூக்கி விட வேண்டும். வாய்ப்பு வரும் பொழுது மொத்தமாக சம்பாதித்து விட வேண்டும் என்று முடிவெடுத்து திரிஷா அடுத்து நடிகர் சிரஞ்சீவியின் படத்தில் நடிக்க இருக்கிறார். ஒஹோ என்று வந்து கொண்டிருக்கும் சமயத்தில் இப்படி 68 வயதில் நடிகருடன் அவர் ஜோடி சேர்வது பெரிய நெகட்டிவாக பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே போலோ சங்கர் படத்தில் சிரஞ்சீவியுடன் இணைந்து நடித்த தமன்னா மற்றும் கீர்த்தி சுரேஷை நெட்டிசன்கள் பங்கமாக கலாய்த்து விட்டார்கள்.

தற்போது அந்த லிஸ்டில் சேர இருக்கிறார் த்ரிஷா. வாய்ப்பு வருகிறது என்பதற்காக இப்படி எல்லாமா முடிவெடுப்பது என இப்போதே த்ரிஷாவை இணையவாசிகள் கேலி செய்து வருகிறார்கள்.

தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியின் 157 வது படத்தில் திரிஷா ஜோடி சேர இருக்கிறார். இந்த படம் பேண்டஸி திரைப்படம் ஆக வெளியாக இருக்கிறது. அடுத்தடுத்து தோல்விகளை சந்தித்து வரும் சிரஞ்சீவிக்கு இந்த படம் மிகப்பெரிய திருப்புமுனையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மெகா 157 என தற்போதைக்கு பெயர் வைக்கப்பட்டிருக்கும் இந்த படத்தை இயக்குனர் மல்லிகை வசிஷ்டா இயக்குகிறார்.

# பரீட்சை பெறுபேறும் பெற்றோர் பிள்ளைகளின் மனநிலையும்

பிச்சை புகினும் கற்க நன்றே இன்றைய காலத்தில் கல்வி கற்றுக்கொள்வதில் பிள்ளைகள் வெகும் ஆர்வமாக இருக்கிறார்கள். பெற்றோரும் அதிகளவு அக்கறை எடுக்கிறார்கள். கற்கையில் கல்வி கசப்பு. கற்றபின் அதுவே இனிப்பு. அரைகுறை அறிவு ஆபத்தில் முடியும். கல்வி இல்லாச் செல்வம் கற்பில்லா அழகு! என்று கல்வியைப் பற்றிய பழமொழி சொல்லிக் கொண்டே செல்லலாம். கல்வி என்பது ஒரு தனி மனிதனின் அறிவு மட்டுமல்ல அவரின் நல்லொழுக்கம், உடல், மனது மற்றும் சமுதாயத்தின் மதிப்பு, நல்ல சிந்தனைகள் இவை அனைத்தையும் உயர்த்தும் ஒரு சமூக அமைப்பாகும்.

கல்வி கற்பதனால் ஒரு சமூக நிறுவனம் அறிவு திறமைகள் போன்ற அனைத்தும் நமக்கு தந்து ஒரு புதிய சமூகத்தை உருவாக்கி பயன்பெற உதவுகிறது. கல்வியை நாம் வாழ்வு முடியும் வரை கற்றுக்கொண்டே இருக்கலாம். இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து என்பார்கள். ஆம்! பருவத்தே பயிர் செய்வது சிறப்பல்லவா. நாம் கற்றாலும் எம் பரீட்சை முடிவுகளே நாம் அடுத்த கட்டத்திற்கு செல்ல உதவுகிறது. அண்மையில் கல்வி பொதுத் தரா தர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. முன்னையக் காலத்தை விட மிகச் சிறப்பான பெறுபெறுகளை நம் பிள்ளைகள் எடுத்து இருக்கிறார்கள். கல்வி கற்பதின் அவசியத்தை நம் பிள்ளைகள் உணர்ந்ததாலே இந்த வளர்ச்சி. பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள், ஒருபுறமிருக்க சித்தியடையாத பெற்றோர் பிள்ளைகளின் மனநிலை பற்றிய அலசலே இந்தக் கட்டுரை. காரணம் பரீட்சை தோல்விகள், வாழ்வின் எல்லையென நினைத்து எம் பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்வது சாதாரணமான விடயமாக இருப்பது வேதனையே. முதலில் பெற்றோர்களின் எதிர்பார்ப்பும் அவர்களின் மனநிலையும் நாம் உற்று நோக்குவோம்.

ஒவ்வொரு பெற்றோரும் தான் எத்தனை சிரமப்பட்டாலும் தன் பிள்ளைக்கு நல்ல கல்வியை கொடுக்க வேண்டும் என்கிற சிந்தனையில் இருக்கிறார்கள். அதற்காக எத்தனை கஷ்டப்பட்டாலும் தன் பிள்ளையின் மீது நம்பிக்கை வைத்து அவர்களின் வெற்றி தன் வெற்றியாக கருதி பரீட்சை முடிவுகளுக்காக காத்திருக்கிறார்கள். அந்த முடிவில் பிள்ளைகள் ஏமாற்றத்தை தரும் போது கடின சொற்களால் வசை பாடுதல், சுற்றி உள்ளவர்கள் பிள்ளையின் பெறுபேறு கேட்கும் போது கூனிக் குறுகிப் போகிறார்கள்.

தாங்களே தோற்றுப் போனதாய் நினைத்து தங்களுக்குள் அவமானப் பட்டு நிற்கிறார்கள். பிள்ளைகளின் மனநிலை பிள்ளைகள் சிலர் கற்க வேண்டிய காலத்தில் கல்விக்கான முன்னுரிமை கொடுக்காமல் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் மனநிலையும் புரியாமல் அவர்கள் சொல்வதை காதில் வாங்காமல் இருப்பதும் பெறுபேறுகள் வந்தவுடன் மற்றவர்கள் திட்டும் போது தான் அவமானப் பட்டதாக நினைத்து மற்றவர்களின் உதாசீனத்தை தாங்க முடியாமல் தற்கொலையை நாடுகிறார்கள். பெற்றோர் பிள்ளைகள் இருவர் மனநிலையிலிருந்து அவர்களின் முடிவு சரியானதாக அவர்களுக்குத் தோன்றலாம். உண்மையில் நாம் ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு கல்வி மிகவும் அவசியம். கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பல்லவா.

அதற்காக பரீட்சை முடிவுகளும் உயர் கல்வியும் மட்டுமே வாழ்க்கையை தீர்மானிப்பதில்லை. மாணவர்களின் திறமைக்கேற்ப தொழில் நுட்பக் கல்விகளை பெற்றுக்கொள்ள அரசு வாய்ப்புகளை வழங்கியுள்ளது. எல்லோருக்கும் கல்வியின் மீதான ஆர்வம் இருந்துவிடும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும்.

அதை புரிந்துகொண்டு பிள்ளைகளும் மனம் சோராமல் பெற்றோக்கு விளங்கப் படுத்தவேண்டும். பெற்றேரும் பிள்ளையின் தோல்வியில் அவர்களை நிராகரிக்காமல் அவர்களை அணைத்து அவர்களுக்கான தீர்வை முன் வைக்க வேண்டும். இந்த சமூகத்திற்கு பயந்து வாழ்ந்தால் இழப்பு உங்களுக்கே. வாழ்ந்தாலும் ஏசும். தாழ்ந்தாலும் ஏசும் வையகம் இது.

எனவே அடுத்தவரைப் பற்றி சிந்திக்காமல் உங்கள் பிள்ளைப் பற்றி பெற்றோரும் பெற்றோரைப் பற்றி பிள்ளைகளும் சிந்தித்தால் தோல்விகள் அனைத்தையும் வெற்றியாக மாற்றும் வித்தை உங்கள் வசம். இனியென்ன வெற்றி உங்களுடையதே.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...



# தாய்மை தரும் புதிய அழகு!

தாய்மை தருகிற அழகுக்கு முன் வேறு எதுவுமே அழகில்லை. தாய்மை உறுதியாகி, கருவை சுமக்கும் அந்த நாள்களில் அதுவரை இல்லாத பொலிவையும் களையையும் ஒரு பெண்ணிடம் பார்க்கலாம். இயற்கை யான இந்தப் பூரிப்பும் பொலிவும் ஒரு பக்கமிருக்க, கர்ப்பத்தினால் உண்டாகும் ஹார்மோன் மாற்றங்கள், பெண்களின் புறத்தோற்றத்தில் சிலபல மாறுதல்களைக் காட்டத் தவறுவதில்லை. அதனால், கர்ப்ப காலத்தில் கூந்தலையும் சருமத்தையும் பராமரிக்க வேண்டியதும் அவசியம். மெலிந்திருந்த இடை பருத்து, உடல் முழுக்க பூசினாற் போன்ற ஒரு பூரிப்பு உண்டாகும். நகங்களும் கூந்தலும் வழக்கத்தைவிட நீளமாக வளரும். இது எல்லாமே கர்ப்பிணிக்குத் தனி அழகைக் கொடுக்கும். கர்ப்பமாக இருக்கும்போது, சில பெண்கள், புருவங்களைக் கூட ஷேப் செய்ய பயந்து கொண்டு, எந்த அழகு சிகிச்சையும் வேண்டாம் என ஒதுங்கியிருப்பார்கள். இன்னும் சிலருக்கோ, பார்லர் போகாமல் இருக்கவே முடியாது. மற்ற நாள்களில் எப்படியோ கர்ப்பமாக இருக்கும் போது செய்து கொள்கிற ஒவ்வொரு அழகு சிகிச்சையிலும் அதீத எச்சரிக்கை அவசியம்.

கூந்தல் அடர்த்தியாக, அழகாக வளரும் என்பதால், இந்தக் காலத்தில் கர்ப்பிணிப் பெண்கள் புதிய ஹேர் ஸ்டைல், புதிய ஹேர் கட்டை முயற்சி செய்யலாம்.

தலை முழுக்க கலரிங் செய்வதைத் தவிர்த்து, ஹைலைட்ஸ்' எனப்படுவதைச் செய்து கொள்ளலாம். அதாவது கூந்தலின் சில பகுதிகளை மட்டும் கலரிங் செய்வது. இதற்கு உபயோகப்படுத்தப்படுகிற பொருள்கள் எதுவும் ஆபத்தற்றவை. மண்டைப் பகுதிக்குள் ஊடுருவாதவை. அதே நேரம், பெர்மிங், ஸ்ட்ரெயிட்டனிங் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். இதுபோன்ற சிகிச்சைகளில் கெமிக்கல்களின் ஆதிக்கம் மிக அதிகம் என்பதால், கர்ப்பிணிகளுக்கு நல்லதல்ல. தவிர, கர்ப்பத்தின் போது ஏற்படுகிற ஹார்மோன் மாற்றங்களும், இந்த சிகிச்சைகளை பாதிக்கலாம். அதன் விளைவாக எதிர்பார்த்த பலன் கிடைக்காமல், கூந்தலின் அழகே மாறிப் போகும். மட்டுமின்றி, இந்த சிகிச்சைகள் கூந்தலின் நீளம், அடர்த்தியைப் பொறுத்து 4 முதல் 6 மணி நேரம் எடுப்பவை என்பதால், கர்ப்பிணிகளுக்கு முதுகுவலியை ஏற்படுத்தலாம்.

ஆயில் மசாஜ் செய்து கொள்வது, கர்ப்பிணிகளுக்கு இதமாக இருக்கும். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜென் அளவு அதிகமாக இருப்பதால், சருமம், அதன் மீள் தன்மையை இழக்கும். அதனால் சருமம் தளர்ந்து போனது போலவும், சுருக்கங்கள் விழுந்த மாதிரியும் உணர்வார்கள். கூந்தலுக்கும் நல்லது. பாட்டி காலத்து எண்ணெய் குளியல்தான் பார்லர் போக முடியாதவர்கள் வீட்டிலேயே செய்து கொள்ளலாம். எண்ணெய் குளியல் பிடிக்காதவர்கள், அதன் இன்றைய நவீன வடிவமான ஸ்பா சிகிச்சையை எடுத்துக் கொள்ளலாம். அதன் வாசனையும், மென்மையான மசாஜும் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிச்சயம் பிடிக்கும். ஸ்பா என்பது தண்ணீரை அடிப்படையாகக்கொண்ட சிகிச்சை, கெமிக்கல் கலப்பில்லை என்பதால், அதில் பக்க விளைவுகளும் இருக்காது.



# முகம் பொலிவுற

ஏதாவது ஒரு விசேஷம், விழா என்று வரும்பொழுது முன்கூட்டியே நம்முடைய முகத்தை ஃபேசியல் செய்து கொள்வோம். இதனால் விசேஷங்களின் பொழுது நம்முடைய முகம் பொலிவான மற்றும் ஜொலிஜொலிப்புடன் காணப்படும். ஆனால் சில சமயங்களில் நமக்கு இதற்கெல்லாம் நேரமே இருக்காது. அப்படிப்பட்டவர்கள் இன்ஸ்டன்ட் ஆக பேஷியல் செய்த ஒரு பொலிவை பெறுவதற்கு என்ன செய்யலாம்? என்கிற அழகு குறிப்பை தான் இந்த பதிவின் மூலம் நீங்கள் இனி தெரிந்து கொள்ள இருக்கிறீர்கள். இன்ஸ்டண்டாக ஒருவருடைய முகம் ஜொலிப்பு தன்மை பெறுவதற்கு அதிக அளவு பணம் செலவு செய்து பேசியல் செய்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. நம் வீட்டில் கிடைக்க கூடிய சின்ன சின்ன சாதாரண பொருட்களை வைத்தே எப்படி ஆச்சரியத்தகும் வகையில் நம்முடைய முகத்தை பொலிவுடன் வைத்துக் கொள்ள முடியும்? முதலில் நம் வீட்டில் இருக்கும் கடலை மாவை எடுத்துக் கொள்ளுங்கள். கடலை மாவுக்கு ஈடு இணையான சரும பராமரிப்பு எதுவுமே இருக்க முடியாது. கடலை மாவு அரை ஸ்பூன் மட்டும் எடுத்து ஒரு பவுலில் போட்டுக் கொள்ளுங்கள். அதுபோல எல்லோருடைய வீட்டிலும் முல்தானி மெட்டி இருக்கும். இந்த முல்தானி மெட்டி முகப்பொலிவை அதிகரித்து எண்ணெய் பசையை இன்ஸ்டன்ட் ஆக நீக்கக்கூடிய ஆற்றல் கொண்டுள்ளது. எனவே முல்தானிமட்டி அரை ஸ்பூன் அளவிற்கு பவுலில் சேர்த்துக் கொள்ளுங்கள். கடலை மாவு மற்றும் முல்தானி மெட்டியுடன் இப்பொழுது நாம் சேர்க்க இருக்கும் பொருள் சுத்தமான தேன் ஆகும். தேன் இல்லை என்றால் கற்றாழை ஜெல் பயன்படுத்துங்கள். தேன் அல்லது கற்றாழை ஜெல் ஒரு ஸ்பூன் அளவிற்கு சேர்த்துக் கொள்ளுங்கள். பின்னர் இதனுடன் அரை ஸ்பூன் அளவிற்கு தேயிலை தூள் சேர்க்க வேண்டும். பச்சை தேயிலை தூள் அல்லது நீங்கள் சாதாரணமாக டீ போட பயன்படுத்தும் தேயிலை தூள் எது உங்களிடம் இருக்கிறதோ, அதை பயன்படுத்திக் கொள்ளலாம். பச்சை தேயிலை பயன்படுத்தினால் அதில் இருக்கும் ஆன்ட்டி ஆக்சிடென்ட்கள் உடனடியாக நம்முடைய சருமத்திற்கு ஒரு க்லோ கொடுக்கும்.



தொடரும்...

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவின் ட்ரான்ஸ்கியில் கிட்டத்தட்ட 35 இலட்சம் கோஸா பழங்குடி மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்தப் பழங்குடி இனத்தின் ஒரு பிரிவினர் “தெம்பு” மக்கள் என அழைக்கப்பட்டனர். தெம்பு மக்களின் தலைவராக காட்லா என்பவர் இருந்தார். தெம்பு இன அரசர் காட்லாவை ஒரு கிராமத்திற்கு தலைவராக நியமித்திருந்தார். நியமனம் செய்த அரசர் பிரிட்டனால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டவர்.

காட்லா என்பவர் செல்வாக்குள்ள மனிதர். தன் இன மக்களோடு நெருக்கமான உறவு கொண்டிருந்த தலைவர். பழங்குடி கோஸாவின் வரலாறு குறித்து முழுமையாக தெரிந்து வைத்தவர் என்ற வகையில் காட்லாவுக்கு ஊரில் தனி மரியாதை அளிக்கப்பட்டது. என்றாலும் பிரிட்டனுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டிய நிலைமையிலேயே அவர் இருந்தார். அவருக்கு நான்கு மனைவிகள் இருந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் ஒரு ஆபிரிக்கர் பல பெண்களை மணந்து கொள்வது ஆபிரிக்காவின் வழமையாக இருந்தது. அவர்களது இன வழக்கப்படி முதலாவது மனைவி மதிப்பிற்குரிய மனைவி என்றும் இரண்டாவது மனைவி வலதுகை மனைவி என்றும் மூன்றாவது மனைவி இடதுகை மனைவி என்றும் நான்காவது மனைவி பணி செய்யும் மனைவி என்றும் அழைக்கப்பட்டனர். காட்லா தன் மனைவிகளை தனித்தனியே தங்க வைத்திருந்தார். அவர்களுக்கு தனிக் குடிசைகள் அளிக்கப்பட்டன. வாரம் ஒருவரது வீட்டில் தங்கும் பழக்கத்தை அவர் வழமையாக்கிக் கொண்டிருந்தார்.



1918 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18 ஆம் திகதி காட்லாவுக்கும் அவரது இடது கை மனைவிக்கும் அருஞ்சொத்தாகப் பிறந்த முத்துதான் கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய “நெல்சன் மண்டேலா”. காட்லா அவர்கள் மகனுக்கு வைத்த பெயர் “ரோலிலாலா மண்டேலா” என்பதாகும். (பாட்டனார் பெயர் மண்டேலா)காட்லா “வெஸோ” எனும் கிராமத்திற்கு தலைவராக இருந்த கட்டத்தில் அவருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டது. எருது ஒன்று திருடப்பட்டது குறித்த வழக்கு அவரிடம் விசாரணைக்கு வந்தது. வழக்கப்படி அவர்தான் அப்பகுதி வழக்குகளை விசாரித்து தீர்ப்பு அளிக்க வேண்டும். ஆனால், அரசரின் தலையீட்டால் சில தடங்கல்கள் ஏற்பட்டுவிட்டன.

நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று மேலிடம் சொல்லிவிட்டது. உத்தரவு தலைவரே என்று விலகிவிடும் சுபாவம் காட்லாவுக்கு இல்லை. எதிர்த்து கேள்விகள் கேட்டார். என்னை எப்படி அவமரியாதை செய்யலாம் என்று உதடுகள் துடிக்க நியாயம் கேட்டார். அதிகாரத்துக்கு எதிராக செயற்பட்டதால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதன் பின்னர் குனு எனும் கிராமத்திற்கு அவர்கள் இடம்பெயர்ந்து வந்தனர். அங்கு மலைகளும் நீர்நிலைகளும் பசுமை நிலங்களும் கொண்ட பகுதியாகும். சில நூறு குடிசைகள் மட்டுமே அங்கிருந்தன. அருகே விளைச்சல் நிலம். புற்களையும் குறுஞ்செடிகளையும் கடந்து ஒற்றையடிப் பாதையில் நடந்து செல்ல வேண்டும்.

கால்நடைகள் பொதுவான ஓரிடத்தில் அடைக்கப்பட்டிருக்கும். தேன்கூடுகள் போன்ற குடியிருப்பில் மண்டேலாவின் குடும்பம் வசித்து வந்தது.


மண்டேலாவின் தாயாரிடம் மூன்று குடிசைகள் இருந்தன. மூன்றும் உறவினர்களாலும் அவர்களின் குழந்தைகளாலும் எந்நேரமும் நிரம்பியிருக்கும். ஒருவர் பல பெண்களை மணந்துகொள்வது இயல்பானது என்பதால், ஒவ்வொருவருக்கும் உறவினர் வட்டம் மிகப் பெரியதாக அமைந்திருந்தது.

மண்டேலாவின் தாயின் சகோதரி மண்டேலாவுக்கும் தாயாக இருந்தார். ஒரு குடிசை சமையலுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஒன்று உறங்குவதற்கு, மற்றொன்றுகிடங்காகப்பயன்படுத்தப்பட்டு வந்தது.

தானியங்களும், வேண்டிய, வேண்டாத பொருட்களும் அங்கே சேமிக்கப்பட்டிருந்தன. உறங்கும் அறையில் நாற்காலி, கட்டில் எதுவுமிருக்காது. பாயில் படுத்துக்கொள்ளலாம், தரையில் அமர்ந்து உண்ணலாம்.

**தொடர் – 01**

எதை விளைவித்தார்களோ அதையே உண்டார்கள். மக்காச்சோளம் பிரதான உணவாகக் கருதப்பட்டது. ஆடு மாடுகளின் பால், இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டன.



**தொடரும்...**

கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# எவ்வித பாத்திரமானாலும் இயல்பான நடிப்பால் வியாபித்தவர்

## சௌகார் ஜானகி

ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் 1931.12.12இல் பிறந்தவர் சௌகார் ஜானகி. தந்தை காகித மில் அதிபர். இவரது தொழில் காரணமாக பல்வேறு இடங்களில் வசிக்க நேர்ந்தது. சென்னையில் வசித்தபோது, சாரதா வித்யாலயாவில் படித்தார். குழந்தைகளுக்கான வானொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

வானொலி நாடகங்களிலும் பங்கேற்றார். இவரது வானொலி நாடகத்தைக் கேட்ட சினிமா தயாரிப்பாளர் பி.என்.ரெட்டி, ‘குணசுந்தரி கதா’ என்ற தெலுங்கு படத்தில் நடிக்க அழைத்தார். இதில் பெற்றோருக்கு விருப்பம் இல்லாததால், உறவுக்காரப் பையனுக்கு இவரை மண முடித்து வைத்தனர்.

கணவருடன் ஆந்திர மாநில விஜயவாடாவில் வசித்தார். அவர் வேறு நல்ல வேலை தேடி, சென்னைக்கு வந்தார். சினிமா ஆசை துளிர்த்ததால் இவரும் சென்னை வந்து, தயாரிப்பாளர் பி.என்.ரெட்டியை சந்தித்தார். தன் தம்பி நாகிரெட்டியிடம் அவர் சிபாரிசு செய்தார்.



விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் என்.டி.ராமாராவ் நடித்த ‘சௌகார்’ என்ற தெலுங்கு படத்தில் 19வது வயதில் கதாநாயகியாக அறிமுகமானார். தோற்றமும், நடிப்பும் இயல்பாக இருந்ததால் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றார். இதனால் வெறும் ஜானகி‘சௌகார் ஜானகி’ ஆனார். மாடர்ன் தியேட்டர்ஸின் ‘வளையாபதி’ படத்தில் பாரதிதாசன் எழுதிய வசனத்தைப் பேசி நடித்தார். தொடர்ந்து ஜெமினி, ஏவிஎம் என முன்னணி நிறுவனங்களின் படங்களில் வாய்ப்புகள் குவிந்தன. அற்புத நடிப்பாற்றல், அபாரமாக வசனம் பேசும் திறன் கொண்ட இவர், ‘பாக்கியலட்சுமி’ 'படிக்காத மேதை’, ‘பாலும் பழமும்’ என பீம்சிங்கின் பல வெற்றிப் படங்களில் நடித்தார். 'பார் மகளே பார்’, ‘புதிய பறவை’, ‘நீர்க்குமிழி’, ‘பாமா விஜயம்’, ‘எதிர் நீச்சல்’, ‘இரு கோடுகள்’, ‘தில்லுமுல்லு’ உள்ளிட்ட திரைப்படங்கள் இவருக்குப் பெயர் வாங்கிக் கொடுத்தன. சோகக் காட்சியில் நடிக்கும் வாய்ப்பே அதிகம் கிடைத்தாலும், காதல், வீரம், பாசம், கோபம், நகைச்சுவை என அனைத்து பாவங்களையும் சிறப்பாக வெளிப்படுத்தக் கூடியவர் சௌகார் ஜானகி.

தமிழில் எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி, தெலுங்கில் என்.டி.ராமாராவ், நாகேஸ்வர ராவ் என முன்னணி நாயகர்களுடன் நடித்தார்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

சிவாஜி...! இந்தப் பெயர் தமிழகத்தில் பல வருடங்களாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு மட்டுமே பெருமை கொண்டிருந்தது. இன்று அந்தப் பெயருக்கு ஒரு புதுப்பரிணாமம் தோன்றியுள்ளது. அப்பரிமாணத்திற்கு உரிமையானவர் வேறு யாருமல்ல சிவாஜி ராவ் என்ற "சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்".

மலையாள மாநிலத்திலிருந்து மக்கள் திலகம் எம்ஜியார் எவ்வாறு தமிழக மண்ணில் தடம் பதித்து உலகம் போற்றிய சிகரம் கண்டாரோ அவ்வழியில் கர்நாடக மாநிலத்திலிருந்து ஓர் கறுப்பு வைரம் தமிழகம் நோக்கி முட்கள் நிறைந்த பாதையில் நீண்ட பயணமாக வந்தடைந்து தமிழ்த் திரையின் கதவுகளை பல தடவை தட்டிக் கொண்டேயிருந்தது. ஓர் நாள் இயக்குனர் சிகரம் கே.பாலச்சந்தர் எனும் திரைச்சிற்பியின் வீட்டுக் கதவைத் தட்டிய போது இக்கறுப்பு வைரத்தின் ஒளி அந்தச் சிற்பியின் விழித்திரையில் பிரகாசமாக ஒளிர்ந்தது. சிவாஜிராவ் என்ற அக்கறுப்பு வைரம் நன்கு பட்டைத் தீட்டப்பட்டு "ரஜினிகாந்த் "ஆக வடிவம் பெற்றது.



# கர்நாடக மாநிலத்தின் கறுப்பு வைரம் சிவாஜிராவ்

1975 இல் இயக்குனர் சிகரம் கே பாலச்சந்தரின் இயக்கத்தில் உருவான "அபூர்வராகங்கள்"படம் மூலம் "பாண்டியன்"என்ற பாத்திரத்தில் அறிமுகமானார் ரஜினிகாந்த். ஒரு வீட்டின் நுழைவாயிலைத் திறந்தவாறு "பைரவி வீடு இதானா" என்ற வசனமே ரஜினிகாந்த் பேசிய முதல் வசனம். இக்காட்சி அறிமுகத்துடன் இந்த ஸ்டைல் மன்னனை தமிழகம் வரவேற்றது. யுகபுருஷர்கள் ஒரு சிலரே அகிலத்தில் தோன்றி மக்கள் மனதில் நிரந்தரமாக தடம் பதிப்பர்.

அவ்வண்ணமே யுகக்கலைஞர்களும் இப்புவிதனில் ஜனனம் கொள்வர். அந்த ரீதியில் உலக வாழ் அனைத்து தமிழர்களுக்கும், தமிழை அறிந்தோர்களுக்கும் கலை ரீதியான பிறப்பிடமும், இருப்பிடமும் தமிழகம்தான்.

# மாவடிப்பள்ளி அஷ்ரபில் கசகர்ணம் சஞ்சிகை வெளியீடு



கல்முனை கல்வி வலய மாவடிப்பள்ளி கமு/ கமு/ அல்அஸ்ரப் மகா வித்தியாலய மாணவர்களின் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் முகமாக 2023 தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 2023.12.11 ஆந் திகதி "கசகர்ணம்" எனும் நாமம் சூடிய சஞ்சிகை பாடசாலை முதல்வர் வீ. முஹம்மட் ஸம்ஸம் தலைமையில் வெளியிடப்பட்டது. சஞ்சிகை பொறுப்பாசிரியை சித்தி மசூறா சுகூர்தீனின் நெறிப்படுத்தலில், பாடசாலை பிரதி முதல்வர் ஏ.எல். றஜாப்தீன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.என். சஞ்சிதா பர்ஹத் அவர்களை சஞ்சிகை ஆசிரியராகக் கொண்ட பெரும் முயற்சி எனும் அர்த்தம் கொண்ட "கசகர்ணம்" நூல் வெளியீட்டின் இணைப்பாளரான தமிழ் பாட சிரேஷ்ட ஆசிரியர் எம்.ஐ.எம். காஸிம் சஞ்சிகை பற்றிய சிறப்பான நயவுரையை மேற்கொண்டதுடன், இச்சஞ்சிகை வெளிவருவதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியைகளான ஏ.கே. எப்.நுஷைறா, திருமதி எஸ்.சஹாப்தீன், திருமதி ஏ.எஸ்.எஸ். சமியா மற்றும் திருமதி. ஏ.எல்.எப்.பவாஸா ஆகியோர் தமது முழுமையான பங்களிப்புக்களை வழங்கியிருந்தமை பாராட்டுக்குரியது. இந்நிகழ்வில் பாடவிதான பிரதியதிபர் எம்.சி.எம். தஸ்தகீர், உதவியதிபர் எஸ்.எம். அஹமட் லெவ்வை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

**நூருல் ஹுதா உமர்**




அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின் பிரகாரம்காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலயத்தில் வரலாற்றுத்தடம் பதித்துள்ள மாணவர்களுடன் குழுப்படம் **மூன்றாம் வரிசையில் மாணவர்கள் இடமிருந்துவலமாக** ஏ.எம். அன்ஸப், ஏ.ஜே.ஏ ஷம்லி,எம்.ஜே. அப்துல்லாஹ், எம்.ஆர். றுஸைட்அஹமட், எம்.எஸ்.ஏ ஷிம்றாஸ்,எம்.எப்.ஏ. அஷ்பாக்அஹ்மத்,எம்.ஏ.எம். அப்ரிட்ஆஷ், எம்.ஏ.ஏ. அன்பாஸ். ஏ.எச். அஹமட்ஸஹ்ரி, வை.ஏ. அன்பாஸ்அஹமத், எம்.எம். அப்துல்லாஹ்,எம்.ஏ. உமர்,ஏ.ஆர். றிப்திஅஹமத்,எம்.எஸ்.எம். ஷாபி **இரண்டாம்வரிசையில்ஆசிரியைகள்இடமிருந்துவலமாக** திருமதி ஐ.எச்.ஏ. கரீம் (பகுதித்தலைவர்),திருமதி எஸ்.ஏ. முகம்மட் (ஆசிரியை),திருமதி ஏ.எம். றைஸ்தீன் (ஆசிரியை),திருமதி ஏ.ஏ.எப். மபாஹிறா (ஆசிரியை),திருமதிஎஸ்.என்.எம்.ஷாபி (பிரதிஅதிபர்), திருமதி கே.எஸ். ஷானாஸ்பர்வீன் (பகுதித்தலைவர்), திருமதி ஏ.எம். முஸம்மில் (ஆசிரியை), திருமதிஎப்.எம். அஜ்மல் (ஆசிரியை) திருமதி என்.எம். நஸ்பர் (பகுதித்தலைவர்) **முதலாம்வரிசையில்இடமிருந்துவலமாக** கே. சசிகுமார் (ஆசிரியர்), எம்.ஐ.எம். இஹ்ஸான் (ஆசிரியர்),எம்.ஏ.சீ.எம். நௌபல்பொறியியலாளர் (எஸ்டிஈசீ), எஸ்.ஐ. யஸீர் அறபாத் (அதிபர்) எஸ்.எம்.எம். அமீர் (வலயக்கல்விப்பணிப்பாளர்), எம்.ஐ.எம் . ஜௌபர் (செயலாளர் எஸ்டிஈசி), எம்.ஐ. நஜிபுல்லாஹ் (எஸ்டிஈசீ) எப்.எம். முனீர் (எஸ்டிஈசி) ஏ.பி.எம். நதீர் (எஸ்டிஈசீ) சீ.எம்.எம். பாயிஸ் (எஸ்டிஈசி)

(ஏறாவூர் நிருபர் நாஸர்)



கொழும்பு 15 இல் இயங்கி வரும் Champion Kids Pre School பாலர் பாடசாலையின் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24ம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழா கொழும்பு 15 இல் உள்ள கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலையில் இடம்பெறவுள்ளது. தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையில் இவ்விழா நடத்தப்படவுள்ளது. Champion Kids Pre School பாலர் பாடசாலையில் பயிலும் மாணவ மாணவிகள் சிலருடன் ஆசிரியர்கள் சிலரும் பெற்றோர்கள் சிலரும் காணப்படுகின்றனர்.

## பிறந்த நாள் வாழ்த்து



மஹ்சின்
நப்ரீஸ் –பாத்திமா சுஜானா
நிந்தவூர்





# ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக நடைபெற்ற 'சூல்சோறு' நூல் வெளியீட்டு விழா!

தன்னை மிகைப்படுத்திக் கொள்ளாத மிகப் பெரிய ஆளுமையான கொழும்பு எம்.ஏ.ரஹீமாவின் "சூல்சோறு" சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு நிகழ்வு மிக நேர்த்தியாகவும் தரமான நிகழ்வுகளுடனும் அண்மையில் கொழும்பு அல்ஹிதாயா மஹா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

எழுத்து உலகிற்கு தன்னை வழி வகுத்த மர்ஹூம்களான எம்.எச்.எம். ஷம்ஸ், இக்பால் அவர்களுக்குமான நன்றி நவிலலாக இந்த நூல் வெளியீடு அமைந்திருந்தது. அதேபோல நன்றி மறவாமைக்கு இன்றைய சமூகத்துக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாகவும் இந்த விழா அமைந்திருந்தது.




எழுத்தாளர் நஜ்முல் ஹுசைனின் வரவேற்புரையுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. கொழும்பு பாத்திமா மகளிர் கல்லூரியின் அதிபர் மும்தாஜ் பேகம் எம். ஏ ரஹீமா இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆசிரியையாக அவர் ஆற்றிய சேவைகள் பற்றியும் அவரின் ஆளுமை பற்றியும் இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைத்தார்.




சிறந்த எழுத்தாளர் ஒருவர் காணாமல் போனால் சிறந்த எழுத்தாளரை தேடும் ஒருவரின் நிலை எப்படி இருக்கும் என்பதை மூத்த படைப்பாளர் அசுமதின் பேச்சில் உணர்த்தப்பட்டது. காணமல் போன எழுத்தாளர் பல மடங்கு உத்வேகத்துடன் வந்துள்ளதாக அவர் தனதுரையில் மகிழ்வுடன் குறிப்பிட்டார்.

கொழும்பு எழுத்தாளராக ரஹீமா எழுத்துத் துறையில் தடம் பதித்து வெளிப்படுத்திய ஆற்றல் பற்றி எடுத்துரைத்த மூத்த அறிவிப்பாளர் புர்கான் பீ இப்திகார், வானொலியில் ரஹீமா காத்திரமான பல ஆக்கங்களை எழுதியது தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

பன்னூலாசிரியர் அஷ்ரப் ஷிஹாப்தீன் தனது நூல் திறனாய்வில், கதைகளின் ஆழத்தை மிக நேர்த்தியாக குறிப்பிட்டதுடன் அவரின் கதைகள் திணிப்புகள் அற்ற மனதில் ஊடுருவிச் செல்லக்கூடியவை என்பதை மிக அழகாக எடுத்துரைத்தார்.

திக்குவல்லை கமால் உரையாற்றும் போது, 1977இல் எழுத ஆரம்பித்து 1978 ஆம் ஆண்டு ரஹீமாவின் கதை உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு நூலில் முன்னணி எழுத்தாளர்களின் கதைகளுடன் அவரின் கதை இடம் பிடித்து எல்லோராலும் பேசப்படும் கொழும்பு ரஹீமாவானதாக குறிப்பிட்டார். கவி வாழ்த்தினை திருகோணமலை அஷ்ரஃபா நூர்தீனும் வாழைத்தோட்டம் வஸீரும் சபையோரின் மனங்களை மென்மையாக தடவிச் செல்லும் வகையில் முன்வைத்தார்கள்.

நூலாசிரியையின் உரையில், தன்னை வளர்த்துவிட்ட மர்ஹூம்களான ஷம்ஸ் அவர்களையும் இக்பால் அவர்களையும் பற்றி மிகுந்த நன்றி உணர்வுடன் தெரிவித்தார். தான் எழுதிய கதைகள் எல்லாம் கரையான் அரித்துப் போன நிலையில் திக்வல்லை கமால் தன்னிடமிருந்த சில கதைகளை வழங்கியதாகவும் சில கதைகளை தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவரின் உதவியுடன் பெற்றதாகவும் சொன்னார்.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் உறுதியுடன் மீண்டும் எழுத ஆரம்பித்துள்ள ரஹீமா ஆசிரியையை நிச்சயமாக பாராட்ட வேண்டும். ஓய்ந்து விடாமல் நான் மீண்டும் எழுவேன் என்ற உறுதி இன்று எம்மத்தியில் எல்லோருக்கும் அவசியமானது.

இந்த நிகழ்வில் மர்ஹூம் எம்.எச்.எம் ஷம்ஸ் அவர்களின் புதல்வரும் தினகரன் பத்திரிகை சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஷம்ஸ் பாஹிம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டதோடு எம்.ஜே.எம் மலீஹா (மர்ஹூம் இக்பால் அவர்களின் புதல்வி) மற்றொரு விசேட அதிதியாக கலந்து சிறப்பித்தார். நிகழ்ச்சிகளை கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் சிறப்பாக தொகுத்தளித்திருந்தார்.

பல பொழுதுகள் மேகம் சூரியனை மூடினாலும் சூரியன் தன் சுயத்தால் மீண்டும் தன் ஒளியால் வெளியாகும் என்பதை போல எம்.ஏ ரஹீமா மீண்டும் தனது பழைய வீச்சுடன் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி எம்மை தனது படைப்புகளால் மகிழ்விப்பார் என்பது உறுதி.

**ஊதாப்பூ சிமாரா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

Whatsap: 0714901181





# எழுத்துத்துறவி; ஸர்ப்பயா என்கிற சமன்குமார



ஈழுத்து சிங்கள எழுத்து முறை நவீனத்துவமடைந்து விட்டது. கவிதையில்; கதையில்; நாவலில்; மொழிபெயர்ப்பிலென எழுத்தின் வீச்சம் சமகாலச் சிங்கள எழுத்தில் மிளிர்கிறது.

சிங்கள மொழி வாசிப்பு மொழிபெயர்ப்பின் வழி உச்சந்தொட்டு விட்டதென்பது உண்மைக் கூற்றேயாகும்.

சிங்கள மொழிவழி நவீன எழுத்தின் கூர்ப்பாளர்களில் குறிப்பிடும்படியானவர் சமன் குமார(1963).

மாற்றுச் சிந்தனைத்தளத்தில் இயங்கவல்ல சமன்குமார பிறழ்வெழுத்தில் கரிசனை கொண்டவர். மாய யதார்த்தவாத பின் நவீன எழுத்து வகையில் தன் பேனாவைச் செலுத்தும் சமன் குமாரவின் பிரதிகள் குறித்த நீள் பார்வை அவசியமாகிறது.

சமன் இதுவரை ஐந்து கவிதைப்பிரதி, நான்கு சிறுகதைப் பிரதி, ஐந்து நாவல் என எழுதியிருக்கிறார்.

இவரது 'ஸர்ப்பயெக்கு ஹா சட்டன் வெத்' 'ஒரு பாம்புடன் சண்டையிட்டு '(1988) நாவல் சிங்கள சமூகத்தின் பொதுக் கருத்துக்கு எதிரான புரட்சிகர மாற்றுச் சிந்தனையை மையமாகக் கொண்டது. 'நெரஞ்சனே ஸ்நானே'(2000) பெண்களின் பரிநிர்வாணம் பற்றியது.

பெண்களும் புத்தத்துவம் அடையலாம் என்ற மாற்றுச் சிந்தனையை முன்னெடுத்தது. கண்டனங்களுக் குள்ளான நாவலெழுத்தாளர் சமன்குமார.

இவரது 'அர்த்த நாரி'(2017) மாற்றுப் பாலீர்ப்பாளர்கள் பற்றியது.

இவரது எழுத்துக்கள் வழி மாற்றுச் சிந்தனை மேலெழுவதைக் காணலாம்.

இவரது 'நெபொகோவின் லொலிறா 'நாவல் மொழிபெயர்ப்பு மற்றும்' பின் நவீனத்துவம் ஓர் அறிமுகம்' கட்டுரை மொழி பெயர்ப்பு என்பன குறிப்பிடும்படியானவை.

நவீன சிங்கள இலக்கியத்தின் பாய்ச்சல் சமகால ஈழச் சூழலில் பெரும் பெறுமானமெனலாம். இந்தப் பெறுமானத்தின் ஒரு புள்ளியாகக் கருதத்தக்க சமன்குமார பால்ய பருவத்திலே சிங்கள நாடகம் மற்றும் உலக சினிமா மீது பரிச்சயம் கொண்டார். இந்தப் பரிச்சயம் மாற்றுச் சிந்தனைத் தளத்தில் பயணிக்க வழிகாட்டியது.

கீர்த்தி பாலசூரிய, சுச்சரித்த கம்லத், பியசீலி விஜேகுணசிங்க ஆகிய அரசியல், கலை இலக்கிய செயற்பாட்டாளர்களின் கருத்து நிலைப்பட்ட சமன் பிற்காலத்தில் அக்கருத்தை நிலையிலிருந்து மீறினார்.

நவீன சிங்கள இலக்கிய முன்னோடிகளையும், யதார்த்தவாதிகளையும் மீறிய சமன், பொதுச்சமூக நியதிகளை மீறிய கலகக்காரனான சைமன் நவகத்தேகம தனது முன்னோடி என்கிறார்.

'ஸர்ப்பயெக்கு ஹா சட்டன் 'நாவலூடாக "ஸர்ப்பயா" என வாசகர்களால் அழைக்கப்பட்ட சமன்குமார அதீத புதிர்த்தன்மை மிக்க சிக்கனமான மொழியைக் கையாண்டவர்; இதனால் வாசகர் அலுப்பும் எரிச்சலுமடைந்ததாக விமர்சமமுண்டு.

எழுத்துக்களுக்காக வாழும் ஸர்ப்பயா எழுத்தை தவமாகக் கொள்பவர்; எழுத்துத் துறவியாக விளிம்புநிலை வாழ்வை அனுபவிக்கிறார்.

"எனக்குத் தெரிந்த தொழில் கலைப்படைப்புகளை உருவாக்குவதே"என்று கூறும் ஸர்ப்பயா, நமக்குத் தொழில் எழுத்து; நாட்டுக்கு வைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தலாக இயக்குகிறார்.

## மஹ்தி வருகை

பள்ளத்தாக்கில்
இளங்குருதியின்
பூக்கள் மலர்கின்றன
மண்ணின் துகள்களில்
குழைந்த குருதி நிறம்
வேருக்குள் பீறிடும் ஆதி
நம்பிக்கையின்
சொற்களால்
எறியப்படும் கற்களில்
சாத்தானின் தலை
நொருங்கும்
கபன் துணிகளிலும்
துணிவு பூக்கும்
மையியத்துகளில்
அபாபீல்களின் வீரியம்
ஒலிவம் சிறகுகளில்
புதுத்தெம்பு
சைத்தூன்
விதைகளிலும்
கலிமாவின் முளை
முளைத்தெழும்
வெண் நாளில்
யூதப்பிண்டம்
முகமெரியுண்ட
சாம்பலுறையும்
குருவி புகாதென்ற
அவாச் சிதறி
வான் பரப்பெங்கும்
பிண்டப் பிராண்டம்
மாண்டழியும்
மஹ்தி வருவார்
ஈமானின் கணங்கள்
அழிவதில்லை

2023 ஒக்டோபர் 15

முல்லை முஸ்ரிபா

# கொழும்பு மாவட்ட ஆடற்கலைப் போட்டி இன்று

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம், இந்து கலாசாரத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆடற்கலைப் போட்டி இன்று 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கொழும்பு, கொட்டாஞ்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இன்றைய போட்டியில் கொழும்பு மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன. இப்போட்டியில் இருந்து ஒரு அறநெறிப் பாடசாலைப் பாடசாலை தெரிவு செய்யப்படும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் அறநெறிப் பாசாலையில் பங்குபற்ற வாயப்பு வழங்கப்படும். இறுதிப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் அறநெறிப் பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படும்.

மஜலால்

முல்லை முஸ்ரிபா

# கொழும்பு எழுத்தில் சூல் கொண்ட எம்.ஏ. றஹீமாவின் சூல் சோறு

ஈழுத்து முஸ்லிம் பெண் எழுத்துப் பரப்பின் இயங்குநிலை குறித்து ஆய்வுகள் வேண்டி நிற்கும் நிலையில் தொடக்கஞும் காலத்தாலும் முந்தி நிற்கும் றஹீமா அவதானத்துக்குரிய கதை சொல்லி.

பெண் பாத்திர மையங்களில் சுழலும் றஹீமா கதைகள் வேண்டி நிற்கும் கருதி இரண்டு கட்டமாக் கலாம்

1. 1978 – 1986
2. 2023– 1986 – 2023

இடைக் காலத்தில் தான் றஹீமா இடைவேளை எடுத்துக் கொண்டார்.

கொழும்பு எம்.ஏ. காலச் செயற்பாடுகள் மற்றும் பிரதேசக்கங்கள் குறித்த விரிவு தேடலுக்குரியது.

இந்தப் பின்புலத்தில் தான் கடந்த வாரம் கொழும்பில் வெளி வந்த சூல் சோறு இலக்கியப் புலத்தை வந்தடைந்துள்ளது.

எழுபதுகளில் கதைக்குள் நுழைந்த கொழும்பு எம்.ஏ.றஹீமா கதைகள் பதினான்கின் திரட்டு சூல்சோறு.


றஹீமா கதைகளின் முதற்கட்டக் கதைகளிலிருந்து மூன்று தசாப்த இடைவேளை எடுத்துக் கொண்டு மீண்டு எழுதிய கதைகளும் இதிலடங்குகின்றன. எழுத்தா மானுட நேயம் மிகுந்த அவதானிப்புக் குரியது.

ஜீவநதியின் 296வது வெளியீடாக 100 பக்கங்கள் கொண்டலைந்த சூல் சோறு றஹீமா சிறுகதையாசிரியையாகத் திகழ வழிகாட்டிய ஆசான் மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

புனைவுத் திறனின் முதல் வெளிப்பாடாக சூல் சோறு என மூத்த கதை சொல்லி திக்குவல்லை கமால் அணிந்துரைக்கிறார்.

கனவுகள் கலைகின்றன முதல்

அந்த நீர்ப்பாத்திரம் வரையிலான 14 கதைகளைக் கதைக் காலம்




றஹீமாவின் கதைகள் யதார்த்தமானவை; நடப்பில் சார்ந்தவை; கீழ்மட்ட மக்கள் பிரச்சினையைப் பேசுபவை; வீச்சமான மொழியாளுகை கொண்டவை; பிரதேச வழக்காறு சார்ந்தவையென அமைந்துள்ளன.

கொழும்பு எம்.ஏ. றஹீமாவின் கதைகள் யதார்த்தமானவை; நடப்பில் சார்ந்தவை; கீழ்மட்ட மக்கள் பிரச்சினையைப் பேசுபவை; வீச்சமான மொழியாளுகை கொண்டவை; பிரதேச வழக்காறு சார்ந்தவையென அமைந்துள்ளன.

# சிருஷ்டி எழுத்துக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறை



இலங்கை எழுத்தாளர் அமைப்பினால் சிருஷ்டிக்கான பாதை என்ற மகுடத்தின் கீழ் சிருஷ்டி எழுத்துக்கான மூன்று நாள் பயிற்சிப்பட்டறை நவம்பர் 282930 ஆகிய மூன்று நாட்களில் கொழும்பு பொது நூலகத்தின் கேட்ப்போர் கூடத்தில் நடைபெற்றது.

மூன்று நாட்கள் தொடர்ந்து இப்பயிற்சிப் பட்டறைக்கு இரா.சடகோபன், மேமன்கவி ஆகியோர் இணைப்பாளர்களாகச் செயற்பட்டார்கள். சிறுவர் இலக்கியம், இளைஞர் இலக்கியம், சிறுகதை, நாவல், கவிதை, பாடல் எனப் பல தலைப்புக்களில் முறையே சேவுகன் இராஜேந்திரன், R.C.பிரதீப் குமார், வினோதினி அறிவழகன், ஹேமசந்திர பதிரன, பவானி சிவகுமாரன், பதுளை சேனாதிராஜா, தி.ஞானசேகரன். இரா. சடகோபன், சு.முரளிதரன், முல்லை முஸ்ரிபா, வதிரி. சி. ரவீந்திரன் போன்றவர்கள் மிகச் சிறப்பான முறையில் தாங்கள் எடுத்துக் கொண்ட விடயதானங்கள் பற்றிப் பல கருத்துகளை முன் வைத்தார்கள், எல்லா வளவாளர்களும் பயிற்சிப்பட்டறையில் பங்கேற்றவர்களுடன் ஆழமாக உரையாடியது சிறப்பாகவும் பயிற்சியாளர்களுக்குப் பயன்மிக்கதாகவும் அமைந்தது.

இவற்றில். கவிதை, பற்றிப் பயிற்சிப்பட்டறை நடத்திய சு.முரளிதரன், முல்லை முஸ்ரிபா ஆகியோர் பயிற்சியாளர்கள் நேரடியாகப் பங்கு பெறும் வகையில் தனிப்பட்ட முறையிலும், குழு நிலையிலும் கவிதைகள் எழுத வைத்தமை மூலம் பயிற்சியாளர்களின் திறன்களை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது, இறுதி நாள் இறுதி அமர்வின் பொழுது பயிற்சியாளர்களுக்குப் பின்னூட்டல் படிவம் வழங்கப்பட்டு எழுத்து வடிவிலும், நேரடியாகவும், மூன்று நாட்கள் நடந்த பயிற்சிப் பட்டறை பற்றிப் பயிற்சியாளர்களிடமும் கருத்துகள் திரட்டப்பட்டன. மற்றும் பங்கேற்ற பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இப்பயற்சிப் பட்டறை மூலம் சிறுவர் இலக்கியம், இளைஞர் இலக்கியம், நாவல், சிறுகதை, நாவல், கவிதை, பாடல் எனப் பல்வேறு கலை இலக்கிய வடிவங்களைப் பற்றிப் பல புதிய தகவல்களை அறிந்து கொண்டதாகவும், பல புதிய நண்பர்களையும் அறிமுகப்படுத்திக் கொண்டதையும் சிங்கள எழுத்தாளர்கள் பலரின் அறிமுகமும் இப்பயிற்சிப் பட்டறை மூலம் கிடைத்தமை பயன்மிக்கதாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது என பயிற்சியாளர்கள் குறிப்பிட்டார்கள், இப்பயிற்சிப் பட்டறையில் சிங்கள, தமிழ் சமூகத்தைச் சார்ந்த இளம் எழுத்தாளர்கள், பல்கலைக்கழக மாணவ,மாணவிகள், பாடசாலை மாணவர்கள், இளம் ஆண் பெண் எழுத்தாளர்கள் என பெரும் தொகையினர் கலந்து கொண்டமை. இலங்கை எழுத்தாளர் அமைப்பினருக்கு மகிழ்ச்சி அளித்தது.

# Sri lankan Western Lions Sarong Night in Melbourne





மேற்கு புறநகரில் வசிக்கும் இலங்கை சமூகம் அதன் "வருடாந்த சரோங் இரவை" 2023 டிசம்பர் 2 ம்தகதி அன்று விக்டோரியா, மெல்போர்னில் உள்ள ஃப்ரேசர் ரைஸ் குழந்தைகள் மற்றும் சமூக மையத்தில் ஏற்பாடு செய்தது. வெஸ்டர்ன் லயன்ஸ் என்பது அவுஸ்திரேலியாவின் மேற்கு புறநகர்ப் பகுதியான மெல்போர்னில் உள்ள இலங்கை முஸ்லிம் சமூகத்திற்காக பல்வேறுபட்ட சேவைகளை செய்யும் நன்மதிப்பைப் பெற்ற அமைப்பாகும். "சரோங் இரவு" தங்கள் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுடன் நேரத்தை செலவிட ஆஸ்திரேலியா வந்த ஏராளமானோர் அவர்களது குடும்பத்தினருடன் கலந்து கொண்ட நிகழ்வாக இருந்தது.

குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் கலந்து கொண்ட ஆண், பெண் அனைவருக்கும் பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அதைத் தொடர்ந்து வருகை தந்த அனைவருக்கும் இலங்கையின் பாரம்பரிய உணவு வகைகளை கொண்ட இரவு உணவும் வழங்கப்பட்டது .

# சம்மாந்துறையில் டேலண்ட் ப்ளஸ் ஊடக விருது : பிராந்திய நிருபர்களுக்கும் கௌரவம்











சம்மாந்துறை டேலண்ட் ப்ளஸ் கலை, இலக்கிய, ஊடக வலையமைப்பினால் சாதனையாளர்கள், திறமையானவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வலையமைப்பின் ஸ்தாபகர் அல்ஹாபிழ் ரிஷான் முஹம்மட் சில்ஹான் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை டேலண்ட் ப்ளஸ் கலை, இலக்கிய, ஊடக வலையமைப்பினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள், ஏனைய கல்விசார் சாதனையாளர்கள், ஊடகவியலாளர்கள், கலை, இலக்கிய ஆளுமைகள் என பலரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு செயலாளர் ஏ. மன்சூர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) எம்.எம். நஸீர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மேலும் கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம்.ஹனீபா, இறக்காமம் பிரதேச செயலாளர் எம். எஸ்.எம். ரஸ்ஸான், சம்மாந்துறை நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ். எம். நவாஸ், சம்மாந்துறை வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். எச்.எம். ஆஸாத், இலங்கை உயர்தொழிநுட்பவியல் நிர்வாக பணிப்பாளர் எஸ். எல். முஸ்தபா, இலங்கை உயர்தொழிநுட்பவியல் நிர்வாக பிரதம கணக்காளர் எஸ்.ஏ. ஜிப்ரி உட்பட முக்கிய அரச உயரதிகாரிகள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள், சம்மாந்துறை முச்சபை நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது பிராந்தியத்தின் முன்னணி ஊடகவியலாளர்களான நூருல் ஹுதா உமர், பாரூக் ஷிஹான், றியாத் ஏ மஜீத், ஐ.எல். எம். நாஸிம், எம். பி.எம். ரிம்ஸான், ஏ.கே. ஜௌபர் ஆகியோருக்கு ஊடகத்துறைக்கான கௌரவமும் தாருஸபா ஊடகவலையமைப்புக்கு ஊடக நிறுவன விருதும், பிரதேச அறிவிப்பாளர்களுக்கு அறிவிப்பாளர் கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டது.

# வாழ்நாள் சாதனையாளர் ஐவருக்கு கௌரவம்



ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கல் விழா கடந்த 12ஆம் திகதி கல்கிஸை ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. இவ்விழாவில் பத்திரிகைத்துறையில் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன. ஸ்டான்லி சமரசிங்க, எப்.எல்.டீ.மஹிந்தபால, சீதா றஞ்சனி, எஸ்.தில்லைநாதன் மற்றும் ஏ.எல்.எம்.நிலாம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றுக்கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.